Vol. 24] OCTOBER 1935 [Part 4
Editor : V. V. SRINIVASA AIYANGAR

464

# ஸ்ரீ
# வேதாந்த தீபிகை

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால்
ப்ரசுரிக்கப்படும் மாதத்
தமிழ்ப் பத்ரிகை.

OFFICE OF THE
17 JAN 1936
MADRAS

யுவ ௵



புரட்டாசி ௴

பத்ராதிபர் :
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

CONDUCTED BY
**Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,**
MADRAS.

## விஷய ஸூசிகை.


1. ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனுடைய உபகார விசேஷம் 137
[ஸ்ரீ. உப. தி. இ. சடகோபாசார்யர், அட்வொகேட், கடலூர்]
2. ஸ்ரீ வேதாந்த தேசிகனுடைய ந்யாய ஸித்தாஞ்ஜநமும் அதன் அருமையான விஷயங்களும் 146
[ஸ்ரீ. உப. வேதாந்தசிரோமணி தோட்டாலம் வேணு கோபாலாசார்யர்]
3. ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத் 152
[ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யர், அட்வொகேட், திருச்சி]
4. ஸ்ரீ க்ருஷ்ண தாதார்ய மஹா தேசிக சரிதம் 160
[ஸ்ரீ. உப. வித்வான் ஐயா. க்ருஷ்ணதாதாசார்யர்]
5. வள்ளுவரும் வருணச்சிரம தருமமும் 165
[பந்தல்குடி: பாரத்வாஜ மாடபூசி: ஸ்ரீ. உப. ரெ. திருமலை ஐயங்கார்]
6. ஆயுர்வேதமும் ஆரோக்ய ஸாதநமான ஆசாரங்களும் 170
[ஸ்ரீமான் உ. வே. வைத்யரத்நம் வித்வான் மே. துரைஸ்வாமி அய்யங்கார்]
7. மீமாம்ஸா ஸங்க்ரஹம் 183
[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜசார்யர்]
8. வித்யா விஷயத்தில் ஸ்த்ரீகளின் அதிகாரம் 189
[ஸ்ரீமான் உ. வே. வித்வான். வி. அநந்தாசார்யர், பச்சையப்பன் காலேஜ் ஸம்ஸ்க்ருத பண்டிதர்.]
9. பத்ராதிபரின் அறிக்கைகள் 192



### ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ பஞ்சஸ்தவம் : ஸ்ரீஸ்துதி—
ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால் இயற்றப் பெற்ற ஒரு தமிழ் உரையுடன் கூடியது .... ... ரூ 0 2 0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ரஹிக்கப்பட்டது ; ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடன் கூடியது] .... ... ரூ 0 8 0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடனும் புத்தங்கோட்டகம் வித்வாந் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய வ்யாக்யாநத்துடனும் கூடியது] .... .... ரூ 0 6 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ், ராமஸ்வாமி தெரு,
புதுமாம்பலம், தியாகராயநகர் போஸ்ட், மதராஸ்.


ஸ்ரீ:

ஸ்ரீயை நம:

த்ரைலோக்யவநதக்ஷம் தமோபஹம்
ப்ரவிகஸந்மாநஸவாஸ்யம் ப்ரயாதே ।
வைராக்யஜ்ஞாநதாநாயை
விஜயஸே ஸதீர்த்யாஸ்து தேஶிகேந்த்ர ॥

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.


ஸம்புடம். 24] யுவ—புரட்டாசி [ஸஞ்சிகை 4


## ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனுடைய உபகார விசேஷம்


[ஸ்ரீ. உ. வே. தி. ஈ. சடகோபாசார்யர், அட்வொகேட், கடலூர்.]


ஸ்ரீகாந்தோ நிகிலம் திஶத்யபயமே யம் வேதவாதா வதந்தா
யம் ஜ்ஞாத்வாதிக ஸ்வயம் ஸத்யகாமம் ஶ்ரேயஸ்ஸம்பதமீஹந்தே ।
தம் யச்சம் கத்தி ப்ரபோதகமஶேஷம் யஸ்யாஸ்ஸரஸ்வத்யஹோ:
வாணாவாரணகம் யதா நிரதிஶயம் தம் தேஶிகேந்த்ரம் பஜே ॥

ஸ்ரிய:பதியான் பகவான் ஸ்ரீமந்நாராயணன்,

‘ சித்விஶிஷ்டாந் ப்ரளயே ஜந்தூநவலோக்ய ஜாதநிர்வேதா ।
கரணகளேபரயோகம் விதரஸி வ்ருஷஶைலநாத கருணே த்வம் ॥ ’

என்கிறபடியே ப்ரளய தசையில் அசித்ஸமஷ்டியோடு வாசியற ஒளியற்று நிர்வ்யாபாரமாய்க் கலந்துகிடக்கும் பத்தசேதநர் திறத்தில் மனமிரக்கங்

158958

கொண்டு, அவர்களது துர்த்தசையைப் போக்கி, உஜ்ஜீவநோபாயம் கல்பிக்க வேண்டுமென்று ஸங்கல்பித்துத் தனது அகடித கடநா ஸாமர்த்யத்தால் எந்த ஒரு தமஸ்சப்த வாச்யமான மூலப்ரக்ருதி அவர்களது ஜ்ஞாந ப்ரபையை ப்ரஸரிக்கவொட்டாமல் தடைசெய்து அமிழ்த்திக்கொண்டிருந்ததோ, அது தன்னையே விகரிக்கச் செய்து, தத்ம்சங்களாலேயே அச்சேதநர்கட்கு ப்ரத்யேகம் ப்ரதிநியதமான சரீரங்களை அமைத்து, அவைகளைக் கொண்டு அவர்கள் நற்கதி யடைவதற்கு வழிகாட்டுகிறான் என்பது சாஸ்த்ர ஸித்தம். அவ்விதம் வழி காட்டுவதற்காகவே ஸர்வேஶ்வரன்,

‘யொஸ்ஹாணாம்விஷயாதீ பெஷவஷம்
யொவெவெஷாம்ஸு பூஹிணோதிதஸெ ।’

என்றோதப்பட்டபடி, ஆதி ஸ்ருஷ்டிகாலத்தில் தன் நாபீகமலத்தில் ப்ரஹ்மாவை உத்பத்தி செய்து, நித்யமான வேதங்களைத் அவருக்குத் தோன்றும்படி அநுக்ரஹித்து, அவ்வேதங்களில் கூறப்பட்டுள்ள கர்மங்களை அவ்வோவதிகாரிகள் யதாக்ரமம் அநுஷ்டித்தால் மேன்மேலும் நன்மைக்கு ஹேதுவாகும் என்று நியமித்தருளினான். இதைத்தான் கீதாசார்யன்,

‘ஸஹயஜ்ஞா: ப்ரஜாஸ்ஸ்ருஷ்டா புரோவாச ப்ரஜாபதி: ।
அநேந ப்ரஸவிஷ்யத்வம் ஏஷ வோऽஸ்த்விஷ்டகாமதுக் ॥’

என்று ஸங்க்ரஹித்தார்.

இப்படி அவரவருக்கு ச்ரேயஸ் ஸாதநமாக வேதோக்தமான கர்ம வர்க்கமே தர்மமென்று வ்யவஹரிக்கப்படும்.

‘வெதொऽகிலொ தர்மமூலம் ஸ்ம்ருதிஶீலெ ச தத்விதாம் ।
ஆசாரஶ்சைவ ஸாதூநாம் ஆத்மநஸ்துஷ்டிரேவ ச ॥’

என்கிற ஸ்ம்ருதி வசநத்திலும் வேதமே ஸர்வ ப்ரதாநமான தர்மாதாரமென்பதும், அதனை அநுஸரித்து அதற்கு விவரணமாகவும் உபப்ரஹ்மணமாகவும், பரமர்ஷிகளின் ஸ்ம்ருதிகளும் பெரியோர்களின் ஆசாரமும் துல்ய விகல்ப ஸ்தலங்களில் ஸத்வ ப்ரசுரமான தன் மநஸ்ஸின் அபிருசியும் நியாமகமாகும் என்பதும், அந்வாசயார்த்த முள்ள ‘ச’ காரத்தாலும் அர்த்த ஸ்வாரஸ்யத்தாலும் சப்த க்ரமத்தாலும் விளங்குகிறது. மேலும் ‘அநந்தா வை வேதா:’ என்றபடி அளவற்ற வேதங்களில் ச்ருதிகள் ஏகதேசமா யிருப்பதாலும், சிலங்களாக உதாஹரிக்கப்படும் ச்ருதிகள் தவிர அநேக ச்ருதிகள் அத்யந்தம் லுப்தமாய்விட்டபடியாலும், அவைகளின் தாத்பர்யத்தை யோக மஹிமை வாய்ந்த மந்த்ர த்ரஷ்டாக்களான மஹர்ஷிகளின்


41

ஸ்ம்ருதிகளி லிருந்தும் அவர்கள் முதலாகப் பாரம்பர்யமாய் வந்துகொண்டிருக்கும் சிஷ்டாசார மடியாகவும் அறிந்துகொள்ளவேணு மென்பதும், மேற்கூறிய தர்மாதாரங்களில் ஒன்றுக்கொன்று விரோதம் தோன்று மிடங்களில் பூர்வ பூர்வத்துக் கநுகுணமாக உத்தரோத்தரத்தை நயநம் பண்ணவோ அல்லது அப்படி ஸாத்யப்படாவிட்டால் உபேக்ஷிக்கவோ ப்ராப்தமென்பதும் தர்மஜ்ஞர்களின் நிர்ணயம். ‘ஶ்ருதிரிவார்த்தம் ஸ்ம்ருதி:’ என்று சொல்லியிருப்பதை,

‘ஸதாம் ஹி ஸந்தேஹ பதேஷு வஸ்துஷு
ப்ரமாணமந்த:கரணப்ரவ்ருத்தய: ।’

என்று மஹாகவி ஸர்வ ஹ்ருத்யமாய் வ்யாக்யாநம் பண்ணியிருப்பது அபிஜ்ஞர்கள் அறியத்தக்கது. மேலே கூறியபடி சாஸ்த்ரங்களில் துல்ய விகல்பமாகச் சொன்னவிடங்களில், அதாவது: வ்ரீஹியாலாவது யவத்தாலாவது யாகம் செய்யலாம் என்று இரண்டு த்ரவ்யங்களையும் ஸமமாகச் சொன்னவிடத்தில் மீமாம்ஸா ந்யாயங்களைக்கொண்டும் ஸ்ம்ருத்யாசாரங்களைக்கொண்டும் விஷய வ்யவஸ்தை செய்யப்படாதபோது, அவரவர் அந்த:கரணத்தின் அபிருசிக்கு அநுகுணமாக யாதாமொன்றைப் பரிக்ரஹிக்கலா மென்று தாத்பர்யமே தவிர, யாவர்க்கும் எல்லா விஷயங்களிலும் மனம்போன போக்கே மார்க்கமென்று சொன்னதல்ல. ‘தாரணாத் தர்ம:’ என்று வ்யுத்பந்நமான தர்ம சப்தம் ஒவ்வொருவருக்கும் தந்மூலமாக லோகத்துக்கும் தாரகமாயிருக்கும் கர்ம வர்க்கத்தை விவக்ஷிக்கிறது. இதைத்தான் ‘தாரணாத் தர்மமித்யாஹு: தர்மோ தாரயதி ப்ரஜா:’ என்று விவரித்தார்கள். இத்தால், தர்மாநுஷ்டாநம் ஜகத்தின் ஸ்திதிக்கு அவசியமென்பதும், அது யதாக்ரமம் நடைபெறுமற்போனால் லோகத்தின் ஸ்திதிக்கு லோப முண்டாகுமென்பதும் ஸ்பஷ்டமாகிறது. இதன் தத்வம் பூர்வ சரித்ரங்களாலும் தற்போதிய அநுபவத்தாலும் நன்கு விளங்கும்.

இப்ரபஞ்சத்தில் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு வஸ்துவுக்கும் ப்ரதிநியதமான குணமும் கர்மமும் அமைந்திருப்பது எல்லோருக்கும் ப்ரத்யக்ஷ ஸித்தம். அக்நிக்கு ஔஷ்ண்யம் குணம்; தஹிப்பது கர்மம்; ஜலத்துக்கு சைத்யம் குணம்; நனைப்பது கர்மம்; இதேமாதிரி ஒவ்வொரு வஸ்துவுக்கும் இன்றியமையாத குணமும் அதற்கிசைந்த கர்மமும் இயற்கையில் ஏற்பட்டிருக்கிற தென்பதும் நிர்விவாதமான விஷயம். இவ்விதமான குணகர்ம விபாகந்தான் ப்ரபஞ்சத்தின் வைவித்யத்துக்கும் வைசித்ர்யத்துக்கும் ஹேதுவாய் நின்று, லோகயாத்ரையை நடைபெறச் செய்கிறது. இப்படிப் பேதமில்லாமல் எல்லாம் ஏகரூப

மாவதுதான் ப்ரளய தசையாகும். த்ரிகுணாத்மகமான இப்ப்ரக்ருதி மண்டலத்தில் ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்களின் தாரதம்யத்தால் தேவ திர்யங் மநுஷ்ய ஸ்தாவர ரூபமான ப்ரதாந பேதங்களும், தத்தத்-அவாந்தர பேதங்களும் ஏற்படுகின்றன வென்பதும், குணத்ரய ஸாம்யம்தான் ப்ரளயமென்பதும் சாஸ்த்ர ஸித்தம். இப்படி, குணகர்ம விபாகத்தையிட்டே ஜகத்ஸ்ருஷ்டி நடைபெறுகிற தென்கிற விஷயம், 'சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்ம விபாகஶ:' என்று கீதாசார்யனால் சுருங்க உரைக்கப்பட்டது. இதனால் ப்ராக்ருத ப்ரளயாநந்தரம் சதுர்முகாதியான ப்ரதம ஸ்ருஷ்டியில் கூட ஏற்கனவே அந்தந்தச் சேதநனுக்கு ஏற்பட்டிருக்கும் கர்மவாஸநாநுபவமாகவே ஸத்வ ரஜஸ் தமோ குணங்களின் விபாகமும் ததநுகுணமான கர்மவிபாகமும் அமைந்த சரீரங்களைப் பகவான் அநுக்ரஹிக்கிறான் என்று ஏற்படுகிறது. பிறகு அதே கணக்கில், ஒவ்வொரு சேதநனும் அவித்யா கர்மவாஸநா ருசி ப்ரக்ருதி ஸம்பந்தம் என்கிற க்ரமத்தில் தம்தம் ஸ்வபாவத்துக் கிசைந்த கர்மங்களைச் செய்வதும், அக்கர்மங்களுக்கு அநுகுணமான வாஸனையையும் ருசியையும் அடைவதும், பிறகு அதற்கிசைந்த ஜந்மாந்தரம் அவனுக்கு ஏற்படுவதுமாக, இப்படியிலே சங்கிலித் துவக்காய் ஸம்ஸார சக்ரம் சுற்றிக்கொண்டே வருகிறது. இவ்விதமான பீஜாங்குர ந்யாயத்தை யொட்டி 'ஜந்மாநுகுணமான கர்மம், கர்மாநுகுணமான ஜந்மம்' என்று பிணைக்கப்பட்டிருந்தால் மநுஷ்யனுக்குச் சிறிதும் ஸ்வாதந்த்ர்ய மில்லாமல் அவன் அத்யந்த பராதீநனா யிருப்பதுபற்றி, அவன் உஜ்ஜீவநார்த்தம் தர்மாநுஷ்டாநம் பண்ணவேண்டு மென்கிற சாஸ்த்ரம் வ்யர்த்தமாகுமே என்கிற சங்கை ஏற்படுவதால், அதைப் பரிஹரிப்பதற்காகவே பகவான் பாதராயணன் ப்ரஹ்ம ஸூத்ரத்தில் மநுஷ்யனுக்குக் கர்மங்களின் கர்த்ருத்வ முண்டென்றும், அதுகாரணமாகத்தான் அவன் சுபாசுப பலங்களுக்குப் போக்தாவாகிறான் என்றும், தத்தத் கர்மாநுகுணமாகப் பலங்களைக் கொடுப்பதால் தான் பலப்ரதாதாவான ஸர்வேஸ்வரனுக்குப் பக்ஷபாதம் முதலிய தோஷங்கள் இசையா வென்றும் நிர்ணயம் செய்தருளினார். ஸ்ரீகீதாசார்யனும், மநுஷ்யன் செய்யும் ஒவ்வொரு கர்மமும் ஐந்து ஹேதுக்கள் சேர்ந்து ஏற்படுகிறதென்று சொல்லுமிடத்தில், கர்த்தாவை ஒரு முக்ய ஹேதுவாகக் கூறியிருக்கிறார். ஆகையால் கர்மம் செய்யும் விஷயத்தில் கர்த்தாவான சேதநனுக்கு ஒருவாறு ஸ்வாதந்த்ர்ய மிருக்கிற தென்பதற்கு ஆக்ஷேபமில்லை. ஒரு ரதத்தை ஓட்டும் விஷயத்தில் ரதீ, ஸாரதி, ரதம், அச்வம், பூமி, இவ்வைந்தும் ஹேதுவா யிருந்தபோதிலும், ரதம் வழி தப்பாமல் ஸரியான மார்க்கத்தில் செல்வதற்கு ஸாரதி உத்தரவாதியாவதுடன், ரதியினுடைய பஹுமாநாவமாநங்களுக்குத் தான் கர்ம நிர்வாஹாநுகுணமாகப் பாத்ரமாவது போல், இங்கும் கர்த்தாவுக் கென்று கண்டு கொள்வது. இதன் உண்மைக்கு ஒவ்வொருவரும் ஸ்வேச்சா பூர்வகமாகக் கர்மங்களில் ப்ரவர்த்



திக்கிற ஸ்வாநுபவமே நிதர்சநமாகும். இவ்விதமாக உத்தரவாதமுள்ள கர்த்ருத்வம் மநுஷ்யர்களுக் கமைந்திருப்பதால் தான் 'புத்திமத்ஸு நரா: ஶ்ரேஷ்டா:' என்று அவர்களுக்கு ச்ரைஷ்ட்யம் சொல்லப்பட்டது. ஹேயோபாதேய விவேகம் மநுஷ்யனுக்குப் பகவானால் கொடுக்கப்பட்டிருப்பதால், அதைக்கொண்டு அவன் கார்யாகார்ய நிர்ணயம் பண்ணிக்கொண்டு, செய்ய வேண்டியதைச் செய்தும், விலக்க வேண்டியதை விலக்கியும், ஜாகரூகனாய் நடக்கும் பக்ஷத்தில் மேன்மேலும் ச்ரேயஸ்ஸுக்குப் பாத்ரமாகிறான். அப்போதுதான் அவனுக்குப் பகவான் அநுக்ரஹித்த கரணகளேபரங்களுக்கு ஸார்த்தக்ய முண்டாகிறது. அப்படிக்கல்லாது விபரீதாசரணம் பண்ணும் பக்ஷத்தில், பாகம் செய்வதற்காகக் கொடுத்த அக்நியைக் கூரையி லிடுவது போல் அநர்த்தாவஹமாகும். இம்மாதிரி வைபரீத்யத்துக் கிடமுண்டாக்கக் கூடாதென்று நினைத்தே பரமகாருணிகனான பகவான், ஒவ்வொரு மநுஷ்யனும் தனக்குக் கிடைத்திருக்கும் சரீரத்தைக் கருவியாகக் கொண்டு, அநுஷ்டிக்க வேண்டிய கர்மங்களையும் நியமித்திருக்கிறான். அந்தக் கர்ம கலாபமே தர்ம மெனப்படும்; அதற்கு விருத்தமாயிருப்பது அதர்மமாகும். இதனால் தர்மம் ஒவ்வொருவருக்கும் ஸ்வரூப ப்ராப்தமும் ஸ்வோஜ்ஜீவந ஸாதநமுமான கர்ம விசேஷம் என்பதும், அதர்மம் என்பது ஸ்வரூப விருத்தமானதும் அத:பதந ஹேதுவாகவு மிருப்பதென்பதும் ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. இம்மாதிரியான தர்மத்தின் ஸ்வரூபமும் அதை அநுஷ்டிக்கவேண்டிய ப்ரகாரமும் நமக்குத் தெரியவேண்டியதற்காகவே, பகவான் ஆதியில் வேதங்களைச் சதுர்முகனுக்கு உபதேசித்து, தந்மூலமாகப் பரம்பரா க்ரமமாய் லோகத்தில் வேதப்ரவசநமும் தர்மாநுஷ்டாநமும் நடைபெறச் செய்தான். இப்படித் தான் லோகோஜ்ஜீவநார்த்தம் ப்ரவர்த்திப்பித்த தர்மத்துக்கு ப்ரபலமான அபாயம் நேரிடும் ஸந்தர்ப்பங்களில் அதை நீக்குவதற்காக ஸ்திதி கர்த்தாவாகிய தானே,

'யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத ।
அப்யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம் ॥'

என்றபடி அப்போதைக் கப்போது இம்மண்ணுலகில் அவதரித்து முன்போல் தர்மத்தை ப்ரதிஷ்டாபநம் செய்கிறான்.

தர்மத்துக்கு உபகாதம் இரண்டு விதமாக நேரிடுவதுண்டு. அவைகளைப் பாஹ்ய மென்றும் ஆப்யந்தர மென்றும் கூறலாம். தங்களுடைய பூர்வ கர்ம வைரூப்யத்தால் ஸ்வபாவத்திலேயே தர்ம விரோதிகளாயிருக்கும் அஸுர ராக்ஷஸாதிகளால் தர்மாநுஷ்டாதாக்களான ஸாது ஜநங்களுக்கு இடையூறுகள் நேரும் ஸந்தர்ப்பங்கள் பாஹ்ய கோடியில் சேர்ந்தவை. அப்போது

அவைகள் அநந்ய நிவர்த்யமா யிருந்தால் ஸர்வேஸ்வரன் தானே அவதரித்துத் தர்ம கண்டகரா யிருக்குமவர்களை யதார்ஹம் சிக்ஷித்து, ஸாது ரக்ஷணம் பண்ணித் தர்மத்தை முன்போல் ஓங்கச் செய்கிறான். இவ்விதம் பாஹ்யோ பத்ரவ நிவாரணம் தவிர, ஆப்யந்தரோபரோத நிவாரண ப்ரகாரமு முண்டு அதாவது: கால வைகுண்யத்தால் உபதேச விச்சேதம் நேர்ந்து, தர்மஸ்வரூபத்தில் ப்ரபலமான அஜ்ஞாந ஸம்சய விபர்யயங்கள் ஏற்பட்டால், அவற்றைத் தீர்த்துத் தர்ம மார்க்கத்தை விசதமாக ப்ரகாசிப்பிக்க வேண்டியது பரமாசார்யனை பகவானுக்கு அவச்ய கர்த்தவ்யமானது பற்றி, அதற்காகவும் அவன் பலவாறு அவதரித்துத் தர்ம தத்வத்தை யதாவத்தாகத் தக்க அதிகாரிகளுக்கு உபதேசித்துக் கலக்கங்களைத் தெளிவிக்கிறான். இதைதான்

‘ஸாக்ஷாந் நாராயணோ தேவ꞉ க்ருத்வா மர்த்யமயீம் தநும் ।
மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா ॥’

என்று பகவச் சாஸ்த்ரம் கூறியது. இந்த சாஸ்த்ரோபதேச ரூபமான உபகாரம் சில அவதாரங்களில் கீதோபதேசம்போல் ஆநுஷங்கிகமாகவும் ஸித்திக்கிறதுண்டு; அல்லது இதற்காகவே ஐதம்பர்யேண பகவான் நேரில் அவதரித்தும்,

‘கலௌ புந꞉ பாபரதாபிபூதே தத்வம் ப்ரதர்சயிஷ்யதி’

என்கிற கணக்கிலே தன் சொல்லைக் காட்டிலும் ஆப்தவசந ஸத்யவசந சிலர்களும்,

‘லிகிதம் ஹி வதந்த்யேதே ஸம்ஸயோச்சேதகாரிண꞉ ।
ஸம்ஸயோத்ஸாரிணீ ... ॥’

என்று மஹாமோக்ஷோத்கோஷம் பண்ணப்பெற்றவர்களுமான தமது நித்ய கைங்கர்ய ஸாம்ராஜ்ய மூர்த்தாபிஷிக்தர்களான நித்யஸூரிகளை அவதரிப்பித்தும் தர்ம வ்யாமோஹ ப்ரசமநம் பண்ணுவது முண்டு. இவ்வவதாரங்களில் ஸ்ரீப்ராசேதஸ பராசர பாராசர்ய ப்ரப்ருதிகளான ஸச்சாஸ்த்ர ப்ரவர்த்தகர்களான மஹர்ஷிகளும், அவர்களுக்குப் பிற்பட்டு அவர்கள் அபிப்ராயத்தை யதாவத்தாக அறிந்து வெளியிட்ட ஸ்வயம் ஆவிர்ப்பூத ஜ்ஞாநர்களான ஸ்ரீ பராங்குச பரகாலாதிகளான ஆழ்வார்களும், அவர்களுடைய பாவத்தை யதார்த்தமாய்த் தெரிந்துகொண்டு உபய வேதாந்த ப்ரவசநம் பண்ணின ஸ்ரீ நாதமுனி, ஆளவந்தார், ஸ்ரீ பாஷ்யகாரர், ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் முதலிய ஆசார்யர்களும் ப்ரதாநமாய்க் குறிக்கத்தக்கவர்கள். இவர்களில் ஒவ்வொருவரும் ஸந்தர்ப்பங்களுக்குத் தகுந்தபடி ஜகத்தில்



யதார்த்த ஜ்ஞாநம் ப்ரகாசமாவதற்காக மஹோபகாரம் பண்ணியிருக்கிறார்கள் என்பது ப்ரஸித்தமான விஷயம். இவ்வாசார்யாவதாரங்களில் ஸர்வதோமுகமாக பஹு க்ரந்த நிர்மாணம் பண்ணி, ஸர்வாதிகாரிகளுக்கும் பரமோபகாரம் செய்தருளி, தர்ம ஸ்வரூபத்தைப் பற்றி ஏற்படும் ஸமஸ்த ஸம்சயங்களையும் சமிப்பித்த விஷயத்தில்,

‘கோ ஹ்யந்ய꞉ புண்டரீகாக்ஷாத் மஹாபாரதக்ருத் பவேத்’

என்று தம் தந்தை உகந்த வேதவ்யாஸரும், ‘வேதாந்தாசார்யர்’ ‘ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்’ என்று ஜகத்பிதாவும் ஜகந்மாதாவும் அந்வர்த்தமான பிருதம் சாத்தப்பெற்ற அஸ்மதாசார்யவர்யரான ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனும், தத்வாந்வேஷிகளான ஸாத்விக ஜநங்களின் க்ருதஜ்ஞதாநுஸந்தாநத்துக்கு விசிஷ்ய விஷயமாகிறார்கள் என்பது தடஸ்த புத்திகளுக்கு ஸ்பஷ்டமாய்ப் புலப்படும். ஆனது பற்றி,

‘ஸம்ஸ்ருதிஸாகரமக்நாநாம் ... ।
உபகாராய ... வ்யாஸாய விஷ்ணவே ॥’

என்று ஸ்ரீ வேதவ்யாஸர் விஷயத்திலும்,

‘வேதே ஸஞ்ஜாதகேதே முநிஜநவசநே
ப்ராப்தநித்யாவமாநே
ஸங்கீர்ணே ஸர்வவர்ணே ஸதி ததநுகுணே
நிஷ்ப்ரமாணே புராணே ।
மாயாவாதே ஸமோதே கலிகலுஷவசாத்
சூந்யவாதே விவாதே
தர்மத்ராணாய யோபூத் ஸ ஜயதி
பகவாந் விஷ்ணுகண்டாவதார꞉ ॥’

என்று ஸ்ரீ வேதாந்த தேசிகன் விஷயத்திலும் பெரியோர்கள் அநுஸந்தித்ததன் உண்மை ப்ரத்யக்ஷாவஸேயமென்பதில் ஸந்தேஹமில்லை.

தர்ம மென்பது அவரவருடைய ஜந்மஸித்தமான அதிகாரத்துக்குத் தக்கபடி பகவான் நியமித்திருக்கும் கர்ம விசேஷம் என்பது ஏற்கெனவே கூறப்பட்டது. இது நித்யம், நைமித்திகம், காம்யம் என்று மூன்று வகைப்பட்டிருக்கும். ஸாதாரணமாக ஒவ்வொருவரும் தம்தம் வர்ணத்துக்கும் ஆச்ரமத்துக்கும் தக்கபடி குறிப்பிட்ட காலங்களில் அநுஷ்டிக்க வேண்

டிய ஸந்த்யாவந்தநம் பஞ்சமஹா யஜ்ஞங்கள் முதலியவை நித்யகோடியில் சேர்ந்தவை. ஏதாவது ஒரு நிமித்தத்தை முன்னிட்டுச் செய்யும்படி நேரிடும் ப்ராயஸ்சித்தாதி கர்மங்கள் நைமித்திகங்கள். ஒரு பலத்தை உத்தேசித்துச் செய்யப்படும் சாஸ்த்ரோக்தமான ஜ்யோதிஷ்டோமாதி கர்மங்கள் காம்யங்களாகும். இப்படி விபஜிக்கப்பட்ட தர்மத்தின் ஸ்வரூப ப்ரகாராதிகள் ஏற்கெனவே ச்ருதி ஸ்ம்ருத்யாதிகளில் கூறப்பட்டிருந்த போதிலும், கால வைபரீத்யத்தால் ஸத்ஸம்ப்ரதாய விச்சேதம் நேரிடும் அவஸரங்களில், பகவான் ஸ்வயமாகவோ ஸதாசார்ய ரூபியாகவோ அவதரித்து, நஷ்ட ப்ராயமான தர்ம மார்க்கத்தை யதா பூர்வம் ப்ரதிஷ்டாபநம் பண்ணி வருவதால் தான் லோகத்தில் ஆத்யந்திகமான தர்மலோபம் இல்லாமலிருக்கிறது. இத் தர்மம் புருஷனால் கர்த்தவ்யமாயும் ச்ரேயஸ் ஸாதநமாயுமிருப்பதால் அது ஹிதமென்று வ்யபதேசிக்கப்படுகிறது. இந்த ஹிதத்தின் ஸ்வரூபத்தையும் அதை அநுஷ்டிக்க வேண்டிய ப்ரகாரத்தையும் யதாவத்தாக அறிய வேண்டுமானால், அதனை அநுஷ்டிக்கும் அதிகாரியின் ஸ்வரூபமும் அதனால் அவன் அடையக்கூடிய பலத்தின் ஸ்வரூபமும் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும். புறப்படும் இடத்தையும் போய்ச் சேரவேண்டிய ஸ்தலத்தையும் குறிப்பாய்த் தெரிந்து கொள்ளாவிட்டால், எந்த வழி செல்லவேணுமென்கிற நிர்ணயம் பிறக்கமாட்டாதன்றோ?

இம்மூவகை விஷயங்களைத்தான் தத்வ ஹித புருஷார்த்தங்கள் என்று சாஸ்த்ரஜ்ஞர்கள் வ்யவஹரிப்பார்கள். அவற்றில் தத்வமென்பது அநுஷ்டாதாவான அதிகாரியின் ஸ்வரூபமும், அவனுக்குக் கர்மாநுஷ்டாநத்தில் கரணமாயுள்ள தேஹத்தின் ஸ்வரூபமும், இக்காரணத்தை இவனுக்கு அமைத்துக் கர்மபல ப்ரதாதாவாய் நிற்கும் பகவானுடைய ஸ்வரூபமுமேயாம். இவ்வதிகாரி தனக்குக் கிடைக்க வேண்டுமென்று கோரும் பலமே புருஷார்த்தம். அப்புருஷார்த்தத்தை அடைவதற்கு அவன் செய்ய வேண்டிய கர்மமே ஹிதமாகும். இந்தத் தத்வ ஹித புருஷார்த்தங்களின் விஷயத்தில் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் ஸ்ரீஸூக்தி நிர்மாணமுகமாய்ச் செய்தருளியிருக்கும் உபகாரங்களைப் பஹிரங்கமென்றும் அந்தரங்கமென்றும் இருவகையாகப் பிரிக்கலாம். அவற்றுள், பஹிரங்கோபகாரமாவது: ப்ரதிபக்ஷி மதங்களைப் பூர்வபக்ஷமாக்கி, அவைகளின் ஸ்வரூபத்தைச் சோதித்து, அவற்றில் தோஷங்களை வெளியிட்டு நிரஸநம் பண்ணுவதும், பிறகு தமது மதத்தை ஸித்தாந்தம் செய்து ப்ரதிபக்ஷிகள் அதில் ஆரோபிக்கும் தோஷங்கள் ஒன்றும் வஸ்துகதியைப் பராமர்சித்தல் கிடையாது' என்றும் ஸ்தாபிப்பதுமாகும். இதைத் தான்,



'ஸவ்யாஸவ்யவலீஸி: சததூஷணீ ச
க்ஷேத்ராந்தர்ய ஸம்ப்ரதாயச்ச
ப்ரத்யூஹம் ஸம்யக் உத்ஸாதயத்யத்ர யோகீ ॥'

என்று அநுஸந்தித்தார்கள். ஒரு நரபதி தன்னுடைய ப்ரஜைகளை ரக்ஷிப்பதற்காக முதலில் சத்ரு ஸைந்யங்களையெல்லாம் தூல ப்ராயமாய்க் காந்திசீகங்களாக ஓடும்படி நிரஸநம் பண்ணிப் பிறகு தன் தேசத்துக்குள் சத்ருக்கள் ப்ரவேசிக்காதபடி கோட்டைகள் கட்டி, இவ்வித பஹிரங்கோபகாரம் செய்த பிறகு, தன் ஜனங்களுக்கு அந்தரங்காநுகூல்யத்தைக் கருதி அவர்களின் யோகக்ஷேமோபயோகியான சட்டதிட்டங்களை ஏற்படுத்தி, அவர்களுக்குத் தந தாந்யாதி ஸம்ருத்திக்கு வேண்டியபடி ஜீவநோபாயமான வார்த்தா மார்க்கங்களைக் கல்பித்து, மற்றும் பல விதத்தில் அவர்களது ஸௌகர்யத்துக்கும் ஸுகத்துக்கும் ஹேதுவான ஸம்விதாநங்கள் செய்வது போல், நமது ஆசார்ய புங்கவர் சததூஷணீ முதலிய க்ரந்தங்களால் பரமத நிரஸநம் பண்ணி, ஸர்வார்த்தஸித்தி முதலிய க்ரந்தங்களால் ஸ்வஸித்தாந்தத்தின் ஸாதுத்வத்தை ப்ரதிஷ்டாபநம் செய்து, இவ்விதம் பஹிரங்கோபகாரத்தைத் தலைக்கட்டிப் பிறகு ஸ்வஸித்தாந்த ப்ரவணர்களான பாக்யசாலிகளுக்கு அந்தரங்கோபகாரார்த்தம் முமுக்ஷுக்களால் அநுஷ்டேயமான தர்மத்தின் ஸ்வரூபம் ததநுஷ்டாந ப்ரகாரம் முதலிய ஜ்ஞாதவ்யாம்சங்களை ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம், நிக்ஷேபரக்ஷை, ஸச்சரித்ரரக்ஷை, ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷை முதலிய க்ரந்தங்களில் விஸ்தாரமாகவும் ஸம்க்ஷேபமாகவும் பஹுப்ரகாரமாய் அதிவிசதமாய் ப்ரதிபாதித்துத் தமது பகவதநுபவ விசேஷத்தின் பரீவாஹ ரூபமான

'நிவ்ருத்தவைஷ்ணவ ஸம்ப்ரதாயா
ஹவ்யஷ்யாந்நாதஸ்தோத்ர ஸம்பூர்ணா '

என்கிறபடி ஸம்ஸார ஸர்ப்ப விஷாபஹமாகவும் கர்ண ரஸாயநமாகவும் ஜ்ஞாநோத்தீபகமாகவும் ஹ்ருதயாப்யாயகமாகவும் இருக்கும் ஸ்தோத்ரங்களாலும் அருளிச்செயல்களாலும் பண்டித பாமர ஸாதாரணமாய் எல்லோரும் பகவத் குணாநுபவம் பண்ணி உஜ்ஜீவிப்பதற்குப் பரமஸுகாவஹமான கண்டாபதம் ஏற்படுத்தி லோகத்துக்கு மஹாநுக்ரஹம் பண்ணியிருக்கிறார்.

(தொடரும்)

ஸ்ரீ:

# ஸ்ரீ வேதாந்த தேசிகனுடைய ந்யாய ஸித்தாஞ்ஜநமும் அதன் அருமையான விஷயங்களும்

[ஸ்ரீ. உப. வேதாந்தசிரோமணி தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்]

---

'ஸ்ம்ருதி வெதாஸ்ஸாஙெ ஸீக்ஷாஸா ந்யாயவிஸ்தர: ।
வ்யாகரணம் யத்புராணம் அ விதி ஸ்ரோத்ருதாஸ்ஸதுர்தஸ ॥"

என்றபடி பதினான்கு வித்யாஸ்தாநங்களில் ந்யாய விஸ்தரமும் ஒன்றாகும். இது ப்ரமாண பாகமென்றும் ப்ரமேய பாகமென்றும் இருபாகங்கள் அடங்கியது. ஸர்வ சாஸ்த்ர ஜ்ஞாநமும் ஸந்தேஹத்திற்கோ அல்லது விபரீத ஜ்ஞாநத்திற்கோ இடமாகில், பெருங் காற்றில் அகப்பட்ட புற்போல அது நிலை கொள்ளாதன்றோ? அவைகளைத் தீர்க்க இந்த ந்யாய விஸ்தரமே அபேக்ஷிதமாதலால், இதுவே வித்யா ஸ்தாநங்களுக்குள் முதன்மை வஹிக்கக்கூடியதெனச் சொல்லவேண்டும். ப்ரமாணங்களைக்கொண்டு ப்ரமேயத்தை ஆராய்வதற்கு முன், அப்ரமாணங்களையும் முதலில் நன்கு பரீக்ஷித்துக்கொண்டு, அவற்றால் அறியப்படவேண்டியவற்றை அதன்பின் சோதிக்கவேண்டும். ஆக, இந்யாய விஸ்தரம் ப்ரமாண பரீக்ஷையை முன்னிட்டுக்கொண்டே தொடங்குவதால், இதற்கு ப்ரமாண சாஸ்த்ர மென்றும் மற்றொரு பெயருண்டு. காவ்ய வ்யாக்யாதாக்களில் சிலருக்கு ஏற்பட்டிருக்கும் 'வதிவாக்யப்ரமாணபாராவாரபாரீண' என்கிற பிருதத்திலிருக்கும் ப்ரமாண சப்தமும், இந்த ந்யாய விஸ்தாரத்தையே குறிப்பிடுகின்றது என்பது எல்லோரும் அறிந்ததே. அதில் 'பத' என்பதால் வ்யாகரணமும், 'வாக்ய' என்பதால் இரண்டு விதமான மீமாம்ஸையாகிற பூர்வ மீமாம்ஸையும் வேதாந்தமும், 'ப்ரமாண' என்பதால் ந்யாய சாஸ்த்ரமும் சொல்லப்படுகின்றன.

வேதார்த்தத்தை (வேதாந்தார்த்தத்தை) மனத்தில் ஸம்சய விபர்யயமில்லாமல் நிலைக்கச்செய்யக் கருவியாயிருக்கும் இச்சாஸ்த்ரமானது, முற்காலத்தில் அங்கங்கு வேதங்களிலும் விஷ்ணுபுராணம் பகவத்கீதை மநுஸ்ம்ருதி முதலிய நூல்களிலும் பதுங்கியிருந்தது. அதனைத் தனியே எடுத்து ஒரு க்ரந்தமாக வெளியிடவேண்டி, கௌதமர் என்றும் கணாதர்



என்றும் இரு ப்ராசீநர் ந்யாய ஸூத்ரம் என்றும் வைசேஷிக ஸூத்ரமென்றும் இருக்ரந்தங்களை வெளியிட்டார்கள். *ஆனால் எக்காரணம்பற்றியோ அவைகள் இரண்டும் வேதங்களுக்கும் வேதாநுஸாரியான க்ரந்தங்களுக்கும் விரோதமாயிருந்தது பற்றியும், அவ்விரோதங்களைப் போக்கி அவைகளைச் சுத்தமாக்கி எடுத்துக்கொள்வது அசக்யமானது பற்றியும், தனியாகவே ந்யாய விஸ்தரம் எடுத்துரைக்க வேண்டுவது அவஶ்யமாயிற்று. ஸ்ரீவேதாந்த தேசிகனுக்கு முற்பட்டவர்களும் 'ந்யாயதத்வம்' என்றும் 'தத்வரத்நாகரம்' என்றும் 'ந்யாயஸுதர்சநம்' என்றும் மற்றும் சில க்ரந்தங்களை இயற்றி யிருந்தார்களென்பது ஸ்ரீ வேதாந்த தேசிகனுடைய ஸ்ரீஸூக்தியிலிருந்தே தெரியவருகிறது.

இப்படி இருபாகங்கள் அடங்கிய ப்ரமாண சாஸ்த்ரத்தில் ப்ரதாந ப்ரதிபாத்யம் ப்ரமேயந்தான். அதற்கு ஸஹாயமாகவே ப்ரமாணபாக விசாரம் வந்தது. வேதாந்தத்தில் தத்வஜ்ஞாநம் மோக்ஷஸாதந மெனச் சொல்லப்பட்டிருக்கிறது. அத்தத்வங்களையே இங்கு ஸகல ப்ரமாணங்களுக்கும் ப்ரமேய மென்றது. சேதநா சேதநங்களைத் தனக்கு ப்ரகாரமாகக் கொண்ட ஈஶ்வரன் ஒருவனே தத்வம் என்பது வேதாந்திகளின் ஸித்தாந்தம். அதைப் பிற மதஸ்தர்கள் பலவாறாகச் சொல்லி, வேத விருத்தமான நிலையில் கொண்டு வைத்துவிட்டார்கள். அவைகளைப் பரிஹரித்து, சரிவர தத்வங்களை எடுத்துரைத்து, முமுக்ஷுக்களை வேதவிருத்த மார்க்கத்தில் செல்லவொட்டாமல் தடுத்துக் காக்கவேண்டிய நிமித்தம், இந்த ந்யாய ஸித்தாஞ்ஜந மென்னும் க்ரந்தத்தை நம் ஸ்ரீ வேதாந்த தேசிகன் இயற்றத் திருவுள்ளம் பற்றினர். 'ஸாதநீநாயேஸிதி:' என்றபடி ப்ரமேய ஸித்தி ப்ரமணாதீந மாதலால், அப்ரமாண விஷயங்களிலும் பிறர் செய்த கலக்கங்களைப் போக்கவெண்ணி, முதலில் ந்யாய பரிசுத்தி என்கிற க்ரந்தத்தைச் செய்தருளி, அதன் கடைசியிலேயே ப்ரமேய தத்வத்தையும் ஸங்க்ரஹமாகக் காட்டி யருளியபோதிலும், மதாந்தரஸ்தர்களால் ப்ரமேய தத்வத்தில் ஏற்பட்டிருக்கும் பெருங்கலக்கங்களைத் தனியாகியதொரு பெரிய ப்ரபந்தத்தால் சமிப்பித்தாலல்லது தத்வ விஷயத்தில் ஸமீசீநமாக ஜ்ஞாநம் பிறவாதென நினைத்து, ந்யாய ஸித்தாஞ்ஜநம் என்கிற ஒரு தனி க்ரந்தத்தைச் செய்தருளினர். ஸித்தாஞ்ஜநம் எவ்வாறு, தினந்தோறும் ஸஞ்சரித்து வந்தபோதிலும் ஜநங்களால் அறிய முடியாமல் உள்ளே மறைந்

---

*காணாத ஸூத்ரத்தை முற்றிலும் தள்ளிவிட்டுக் கௌதம ஸூத்ரத்தில் விரோதமில்லாத சில விடங்களை எடுத்துக்கொள்ளலா மென்பது ஸ்ரீ தேசிகனுடைய அபிப்ராயமாகத் தெரியவருகிறது.

திருக்கும் மஹாநிதியைக் காணக் கண்ணுக்குச் சக்தியைக் கொடுக்கவல்லதா யிருக்குமோ, அவ்வாறே இக்ரந்தமும் பகவத் கடாக்ஷம் பெறாதவர்களுக்குக் காணமுடியாமல் வேதத்தில் மறைந்திருக்கும் தத்வங்களைக் கண்டறிய உபகாரமா யிருக்குமென்று இப்பெயர் வைத்ததின் தாத்பர்யமா யிருக்கலாம்.

ஒவ்வொரு விதமான விபாகங்களை மனத்தில் வைத்துத் தத்வங்களை முதலில் ஒன்றென்றும், இரண்டென்றும், மூன்றென்றும், ஏழென்றும், பதினாறு என்றும் அவ்வோ சாஸ்த்ரங்களில் பிரிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய ராமாநுஜ ஸித்தாந்தஸ்தர்கள் கேவலம் வேதமார்க்கத்திலேயே செல்லுகின்றவர்களானபடியால் ‘போக்தா போக்யம் ப்ரேரிதாரஞ்ச மத்வா’ என்கிற ச்ருதியை அநுஸரித்து மூன்று தத்வங்களென்றும், இம்மூன்றிலுங்கூட ஈச்வரன் மற்ற இரண்டையும் தனக்கு ப்ரகாரமாகக் கொண்டிருப்பதால் அவ்விரண்டுடன்கூட ஈச்வரன் ஒருவனே ‘ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம’ என்கிற ச்ருதியை அநுஸரித்துத் தத்வமென்றும் சொல்லுவதுண்டு. அவ்வாறே த்ரவியம் அத்ரவியம் என்று கணக்கிட்டு இரண்டு என்றும் சொல்வதுண்டு. இக்ரந்தம் இவ்விரண்டாவது பக்ஷத்தையே உபக்ரமித்து, மற்ற விபாகங்களுடன் விரோதத்தையும் சமிப்பித்துக்கொண்டு தலைக்கட்டுகின்றது. இத்தத்வ ஜ்ஞாநத்திற்குப் ப்ரயோஜநமாவது: ‘முதலில் அசேதந தத்வத்தையும் சேதந தத்வத்தையும் நன்கு அறிந்துவிட்டால், சேதநனை தனக்கும் அசேதநமான வஸ்துவுக்கு முள்ள வேற்றுமை புலப்படுமாதலால், தன்னை ஒருக்காலும் சரீரத்துடன் ஒன்றுபடுத்தி, சரீரமே ஆத்மா வென்னும் ப்ரமம் பிறக்காது. இந்த ப்ரமம் நிவ்ருத்தமானாலல்லது புண்ய பாபங்களில் ப்ரீதியும் அப்ரீதியு முண்டாகமாட்டா. அவ்வாறே தன்னைவிட ஈச்வரன் வேறானவன் என்று அறிந்துவிட்டால், ‘நானே ஸ்வதந்த்ரன்’ என்கிற ப்ரமம் நீங்கி நிரீச்வர வாத ப்ரஸக்தியும் நீங்கும். இவ்விரண்டு விதமான ஜ்ஞாநம் உண்டானாலல்லது மோக்ஷேச்சை ஜனியாது’ என்பதே. தன்னுடைய சிறுமையையும் ஈச்வரனுடைய மேன்மையையும் அறியாதவன் பரமபுருஷாநுபவத்தில் எப்படி ருசியுள்ளவனாவன்?

இக்ரந்தம் சார்வாக ஜைந கபில காணாத கௌதம பாசுபத மதங்கள் மூலம் ஏற்படும் கலக்கங்களை யெல்லாம் சமிப்பிக்கக் கூடியதா யிருந்தபோதிலும், முக்யம் அத்வைத மத நிராகரணத்திலேயே நோக்குள்ளதா யிருக்குமென்பது இதை அடிமுதல் நுனிவரையில் ஒரு தரமாவது படிக்குமவர்களுக்கு விசதமாகாமலிராது. ஏனெனில்: ஒவ்வொரு பிற மதத்திலிருந்து ஒவ்வொரு அம்சத்தை எடுத்துக் கோத்து அத்வைத மதம் உண்டாக்கப் பட்டிருக்கிறது என்பது,



‘ஸாம்வ்ருத்யபூதம் ஆவரணஸாங்கர்யாத் ஸங்கோசதோஷ:
ப்ரக்ஷாநத்யவிதாநத்ர ஸம்யக்தோஷயிகாநி ச ॥’ [பக்கம்—206.]

என்னும் ஸ்ரீ தேசிகனுடைய ச்லோகத்தால் விசதமாகும்.

அதெப்படியெனில்:— ‘ஸ்தூலோஹம்’ ‘க்ருசோஹம்’ என்கிற அநுபவத்தையொட்டிச் சார்வாகர்கள் தேஹமே ஆத்மாவென்று சொன்ன ரீதியில் அத்வைதிகள் ‘அஹம் ப்ரஹ்மாஸ்மி’ ‘தத்த்வமஸி’ என்ற அநுபவத்தை யொட்டி ஜீவனே ப்ரஹ்மம் என்றும், அப்படியே ஆத்மா சைதந்ய ஸ்வரூபம் என்றும், இதற்கு ஜ்ஞாநம் என்கிற தர்மமுமில்லை என்றும், அந்த:கரணத்திற்குத் தான் அது உண்டு என்றும், அந்த அந்த:கரணம் பளபளப்பான வஸ்துவாதலால் அதில் சைதந்ய ஸ்வரூபமான ஆத்மா ப்ரதிபலித்தவுடன் ‘அஹம் ஜாநாமி’ என்று தோன்றுகிறது என்றும் சொல்லுகிறார்கள். ‘முகத்தின் ப்ரதிபிம்பத்தை க்ரஹிக்கும் கண்ணாடி முகத்திற்கு ஆதாரமாகத் தோன்றுவதுபோல்’ என்று ஸாங்க்யர்கள் சொல்லும் பக்ஷத்தை அவலம்பித்து அத்வைதிகள் ப்ரஹ்மம் சைதந்யமாத்ர ஸ்வரூபம் என்றும், அந்த:கரணம்தான் ஜ்ஞாதா என்றும், அவ்வாறே ஜ்ஞாநம் என்கிற ஒரு வஸ்துவை அங்கீகரித்து அதில் ஸகலமான பாஹ்ய பதார்த்தங்களும் கல்பிதம் என்கிற பௌத்த மதத்தை அவலம்பித்து இவர்களும் ‘ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம்; மற்றவையெல்லாம் அதில் கல்பிதமாய் மித்யையானது’ என்றும் அத்வைதிகள் அங்கீகரித்திருக்கிறார்கள் என்றும் நிருபிக்கப்பட்டிருக்கிறது.

பிற மதஸ்தர்களால் நம் மதத்தின்பேரில் சொல்லப்படும் முக்ய தூஷணங்களையும், நமக்குள்ளேயே சிலவற்றின் நிர்வாஹம் அசக்யம் எனக் கருதப்படும் பாகங்களையும் எளிதிலேயே ஸ்ரீ தேசிகன் நிராகரித்தும் நிர்வஹித்துமிருக்கு மிடங்களைச் சற்று கவனிக்குங்கால், அவை மஹாநந்தத்தை உண்க்கக்கூடியவைகளா யிருக்கின்றன. அவைகளில் சிலவற்றை இங்குச் சுருக்கிச் சொல்வோம்.

[பக்கம்-12-ல்] பௌத்தனுடைய க்ஷணிக வாதத்தை நிராகரிக்கும்போது, பானையிலிருக்கும் விதைக்கும் பூமியில் போட்ட விதைக்கும் முளையை உண்டாக்கக்கூடிய ஸாமர்த்யம் ஒன்றுக்கும், அதில்லாமை மற்றொன்றுக்கும் காண்பதால், அதற்கும் இதற்கும் பேத மிருக்கவேண்டும். அவ்வாறே எந்த க்ஷணத்தில் முளையை உண்டாக்குகின்றதோ அந்த க்ஷணத்திய விதைக்கும் அதற்கு முன் க்ஷணத்திய விதைக்கும் (பூமியில் போடப்பட்டவைகளுக்குள்ளேயே) ஸாமர்த்ய அஸாமர்த்ய ரூபமான விருத்த தர்மங்கள் காண்பதால் பேதம் அவசியமானதால் ஒவ்வொரு வஸ்துவும் க்ஷணிகமேதான் என்பதை நிராகரிக்கும்பொழுது க்ஷணிக வாதியான பௌத்தனுக்கு

எல்லாம் க்ஷணிகமானபடியால் வ்யாப்தி ஜ்ஞாந ஸ்மரணங்கள் ஏற்படக் கூடாததலால் அநுமாநமே நிர்வஹிக்க வழியில்லை என்று ஸாதிக்கிறார்.

[பக்கம்—99-ல்] பிறர் சரீர லக்ஷணத்தைத் தங்கள் மனம்வந்தபடி செய்துகொண்டு, அது ச்ருதியில் சொன்ன 'யஸ்யாத்மா சரீரம்' என்றிது முதலிய ஸ்தலங்களுக்கு அநுரூப மல்லாமையால், ச்ருதியின் கருத்தையே மாற்ற முயல்வதை ஸ்ரீதேசிகன் ஸர்வப்ரமாணாநுகுணமாக சரீர லக்ஷணத்தைப் பரிஷ்கரித்து, ப்ரமாணங்களின் அநுக்ரஹத்தை ஸம்பாதித்திருப்பது சாஸ்த்ர பரிசய மில்லாதவர்களும் போற்றக்கூடியதா யிருக்கும்.

[பக்கம்—166-ல்] மோக்ஷத்தில் ஈச்வர ஸேவையைப்பற்றி 'ஸேவை யென்றால் துக்க ஹேதுவாகாதோ? ஸேவை ச்வவ்ருத்தி (நாய்த்தொழில்) என்றல்லவோ இகழப்பட்டது' என்னும் ஆக்ஷேபத்திற்கு மிகவும் சாஸ்த்ரீய முறையில் ஸாதித்திருக்கும் ஸமாதாநம் மிகவும் ஸ்வரஸமானது.

[பக்கம்—227-ல்] ஈச்வரனே நிமித்த காரணமாயும் உபாதாந காரணமாயும் இருக்கிறான் என்பதில் பிறர் செய்த கலக்கங்களைப் பரிஹரிக்க,

'[illegible]'

என்று தொடங்கி

'[illegible]'

என்று எல்லோரும் அங்கீகரிக்கவேண்டிய ஒரு ஸ்தலத்தை உதாரணமாக்கி, பிறர் வாய் பொத்திக் கிடக்கும்படி செய்தது யாருக்குத்தான் ச்லாகாஸ்பதமாகாது?

[பக்கம்—283-ல்] ஜீவாத்மகதமான தர்மாதர்ம ரூபமான அத்ருஷ்டம் ஈச்வரனுடைய ப்ரீதி கோப ரூப மென்று பிறரால் சொல்லப்படும் பலவித தூஷணங்களுக்கு ஸமாதாநமாவதுடன்,

'[illegible]'

என்ற பகவத்கீதை முதலிய வேதமார்க்கத்தை யொட்டியிருக்கும் ரீதி வைதிகர்கள் கவனிக்கத்தக்கது.

[பக்கம்—259-ல்] ஜ்ஞாநம் த்ரவ்யமோ குணமோ என்று விசாரித்துக் கொண்டு, த்ரவ்யம் என்றும் ஆனாலும் ஆத்ம குணந்தான் என்றும் ஸாதிக்



கும்போது, '(1) ஜ்ஞாநம் நித்யமானதென்றால் தூக்கம் விழிப்பு என்கிற பேத மெப்படி? (2) ஆத்மகுணமான ஜ்ஞாநத்தை த்ரவ்ய மென்பது எவ்வாறு? (3) ஜ்ஞாநம் பரவுகின்ற தென்பதற்கு ப்ரமாணம் யாது? (4) ஒன்றுக்குத் தர்மமாகில் தன் இருப்பிடத்தை விட்டுச் செல்வது பொருந்துமோ? (5) பருப்பது சிறுப்பது இல்லாமல் அதற்குப் பரிமாணம் உண்டு என்னலாமோ? (6) கடந்த அல்லது வரப்போகும் வஸ்துக்களுடன் ஸம்பந்தம் எப்படி? (7) பரவுகிறதென்றால் நடுவிலிருக்கும் வஸ்துக்களை விட்டுத் தூரத்திலிருக்கும் ஒன்றை மாத்ரம் விஷயீகரிப்பானேன்?' என்றிவை முதலிய பன்னிரண்டு கேள்விகள் கேட்டுக்கொண்டு, மிகவும் யுக்தியுக்தமாயும் சாஸ்த்ராநுகுணமாயும் ஸமாதாநம் கூறி, ப்ராசீநர்களின் வைதிக ஸித்தாந்தத்தை நிர்வஹித்திருப்பதைக் கேட்குங்கால், சாஸ்த்ர ஜ்ஞாந மில்லாதவர்களுக்குங்கூட ந்யாய ஸித்தாஞ்ஜநத்தைப் படிக்கவேண்டுமென்ற அவா உண்டாவதுடன், ஸ்ரீதேசிகனுடைய வேதமார்க்காநுஸாரித்வமும் ந்யாய சாஸ்த்ர ப்ரவீணதையும், வாதங்களில் விஷயத்தை நிஷ்பக்ஷபாதமாக விசாரிக்கும் ரீதியும் நன்கு புலப்படும்.

இந்த க்ரந்தம் ஸம்ஸ்க்ருத பாஷையில் எழுதப்பட்டும் மிகவும் தர்க்க ஜடிலமாயு மிருப்பதாக நினைக்கக்கூடும். ஆனாலும் சாஸ்த்ரீயமான பரிபாஷையால் சொல்லப்படவேண்டிய விஷயங்களை வேறு பாஷையில் சொல்வது அஸாத்யமாயும், பூர்ண ப்ரயோஜநம் ஏற்படாமற்போகு மாதலாலும், நவீந தர்க்க சாஸ்த்ரம்போல் அவ்வளவு கடிநமாக இல்லாமல் எளிய நடையில் எழுதப்பட்டிருப்பதாலும், ஒரு குருவின் மூலம் ஒரு தடவை சுருக்கமாக விஷயங்களைக் கேட்டவர்களுக்கும் எளிதில் புலப்படக்கூடியதா யிருப்பதாலும், ஸம்ஸ்க்ருத பரிசய மில்லாதவர்களுங்கூட இதை வாசித்து வசப்படுத்தி ஸமீசீநமான தத்வ ஜ்ஞாநத்தைப் பெறுவார்களென நம்புகிறோம்.

॥ ஸ்ரீ: ॥

# ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்யர், M. A., B. L அட்வொகெட், திருச்சி.]

---

𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌂 𑌮𑌯𑌾 𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑌂 𑌤𑍍𑌵𑌦𑌧𑍀𑌨𑌵𑌾𑌚𑌾
𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑍀𑌤𑌯𑍇 𑌵𑌰𑌦 𑌯𑌤𑍍𑌤𑌦𑌿𑌦𑌂 𑌨 𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 ।
𑌆𑌵𑌰𑍍𑌜𑌯𑌨𑍍𑌤𑌿 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌖𑌲𑍁 𑌶𑌿𑌕𑍍𑌷𑌕𑌾𑌣𑌾𑌂
𑌮𑌞𑍍𑌜𑍂𑌨𑌿 𑌪𑌞𑍍𑌜𑌰𑌶𑌕𑍁𑌨𑍍𑌤𑌵𑌿𑌜𑌲𑍍𑌪𑌿𑌤𑌾𑌨𑌿 ॥ 6.

स्तोत्रं मया विरचितं त्वदधीनवाचा
त्वत्प्रीतये वरद यत्तदिदं न चित्रं ।
आवर्जयन्ति हृदयं खलु शिक्षकाणां
मञ्जूनि पंजरशकुन्तविजल्पितानि ॥ ६ ॥

இந்த ஸ்தோத்ர ரசநத்தில் இருவருக்கும் கூட்டாகக் கர்த்ருத்வ மென்று சாஸ்த்ரம் சொல்லுகிறது தவிர நீரும் ஒருவாறு சொல்லுகிறீர். அந்த விஷயத்தில், ‘என்னால் என்ன சக்யம் உளது? என்னால் நீர் இதை ஸாதித்துக் கொள்ளும்; அல்லது உம்மாலேயே ஸாதித்துக் கொள்ளும்’ என்று ந்யாய மில்லாமல் பேசுகிறீர். இந்த ஸ்தோத்ரத்தால் ஸந்தோஷம் என்னும் ப்ரயோஜநம் உமக்கா எமக்கா என்று கேட்டால், ‘எனக்கு இந்த ஸ்தோத்ரம் ஸ்வயம் ப்ரயோஜநம்; ‘𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌃’ என்றபடி உம்மைத் துதிப் பதிலும் எனக்கு வேறு மகிழ்ச்சி இல்லை; அதுவே எனக்கு ஸ்வரூப ப்ராப்த மான நிரதிசயாநந்த வ்யாபாரம்’ என்றும், ‘உமக்கு ஸாத்யமான ப்ரயோஜநம் இருந்தால் என்னாலேயோ அல்லது உம்மாலேயோ ஸாதித்துக் கொள்ளும்’ என்றும் பேசுகிறீர். இப்படி அவ்யவஸ்திதமாய்ப் பேசலாமா? ஐந்து ச்லோகங்க ளாகியும் இன்னும் நிஷ்கர்ஷம் ஏற்படவில்லையே. ‘𑌕𑌿𑌂, 𑌕𑌿𑌂’ என்றும், ‘𑌯𑌦𑌿’ என்றும், ‘வா’ என்றும் திகைத்தலும் ஊசலாடுதலுமாய் இருக்கிறதே. உமது புத்திக்கு இதென்ன டோலோத்ஸவம்? நிஷ்கர்ஷத்தை ஒரு நிகமநமாகச் சொல்லும்.

பிள்ளாய்! ஸ்தோத்ர ரசனை ஸித்திக்க வரம் கேட்கிறாய். இந்த ஸ்தோத்ர மென்னும் உத்தம காவ்யம் யாருடைய க்ருதியென்று பேர் வைக்





கிறது? ‘𑌵𑌰𑌦𑌰𑌾𑌜𑌕𑍃𑌤𑌸𑍍𑌤𑌵𑌃 𑌵𑌰𑌦𑌰𑌾𑌜𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌤𑍍’ என்று திருநாமம் வைக்கிறதா? ‘𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌕𑍃𑌤𑌸𑍍𑌤𑌵𑌃 𑌵𑌰𑌦𑌰𑌾𑌜𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌤𑍍’ என்று திருநாமம் சாத்துகிறதா? முதல் பேரை வைத்தால் ஊர் சிரிக்காதோ? அசடனைத் துதிக்க ஜகதீதலம் முழுவதும் யார் அகப்படுவார்? தன்னையே தான் ஸ்தோத்ரம் பண்ணிக்கொள்ளா விட்டால் துதிக்கப்படும் ஸந்தோஷம் அவனுக்கு எப்படித் தான் கிடைக்கும்?’ என்று சொல்லிக்கொண்டு,’ ‘நாடு நகரம் என்னைப் பரிஹஸிக்குமே உம்முடைய பெயரை வைத்தால்! அது ஸாத்யமாகுமோ? அல்லது “𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑍃𑌤𑍇 𑌮𑌿𑌥𑍁𑌨𑍀𑌕𑍃𑌤𑍍𑌯” என்பது போலக் கலப்பாகுமோ? அல்லது பொய்யாகுமோ?

‘𑌕𑌾𑌵𑍍𑌯𑌂 𑌯𑌶𑌸𑍇𑌽𑌰𑍍𑌥𑌕𑍃𑌤𑍇’ என்று அநேக ப்ரயோஜநங்களில் இரண்டு சொல்வர். இப்பொழுது ரசநமாகும் ஸ்தோத்ர காவ்யம் கவி யசஸ்ஸைக் கொடுக்கும். யசோலாபம் யாருக்கு? உமக்கா எமக்கா?

‘𑌅𑌰𑍍𑌥𑌕𑍃𑌤𑍇’ என்பதற்கு உம்மைப் போன்ற தாவகர் முதலிய ஏழைக் கவிகள் ஸ்ரீ ஹர்ஷர் முதலிய ராஜாக்களுக்குக் காவ்யங்களை ரஹஸ்யத்தில் பணத்தை வாங்கிக்கொண்டு எழுதிக் கொடுத்து, அரசன் செய்த காவ்யமென்று உலக ப்ரஸித்தியை உண்டாக்குவர். ஸ்ரிய:பதியான நாம் உண்மையான ஸ்ரீ ஹர்ஷரா யிருப்பினும் எம்மை யல்லவோ இக் காவ்யத்தைச் செய்து, தாவகர் போன்ற ஏழையான உம்முடைய பேரால் வெளிவரும்படி உமக்குக் கொடுக்கச் சொல்லுகிறீர். இது உலகத்தில், காண்பதற்கு விபரீதமா யிருக்கிறதே! அரசன் காவ்யத்தைச் செய்து ஏழைக் கவிக்குக் கொடுத்து அந்த ஏழையின் பேரால் காவ்யத்தை ப்ரசுரம் செய்வனோ? ஸ்ரிய:பதிக்குத் தநாபேக்ஷை உண்டோ? தநாபேக்ஷையை நாம் நடித்தாலும், எனக்கு இக்காவ்யத்திற்காகக் கொடுக்க உம்மிடம் ஒரு காசுமுண்டோ? பைதாமஹமான தநம் உமக்கு உண்டென்று நீர் ஒருகால் பேசினாலும், எம்மைத்தானே அந்தத் தநமாக நீர் ப்ரதிஜ்ஞை செய்வீர்? லௌகிகமான தநத்தை யல்லவே?

ஜகத் காரணத்வத்திற்கு என்ன ப்ரயோஜந மென்று கேட்பது போல, இந்த ஸ்துதி காரணத்வத்திற்கும் என்ன ப்ரயோஜந மென்று கேட்பதோ? ஸ்தோத்ரத்தை நானே செய்து உமக்குச் சொல்லிவைத்து, உம்மைக் கொண்டு ப்ரஜல்பநம் செய்வித்துக் கேட்பதில் எனக்கு என்ன ப்ரயோஜநம் இருக்கக் கூடும்? ஜகத் ஸ்ருஷ்டியில் ‘ப்ரயோஜந மில்லாமை எது?’ என்கிற கேள்விக்குப் பரிஹாரம் சொல்லுவதைப் போல, இங்கு ஏதேனும் பரிஹாரம் உண்டோ? இப்படி ஆக்ஷேபங்கள் வர ஸாதிக்கிறார்.

𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌂 𑌮𑌯𑌾 𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑌂—இது வேங்கடேச கர்த்ருக வரதராஜ ஸ்தோத்ரமாகவே இருக்கட்டும். முன் ஐந்து ச்லோகங்களால் ஸ்வாமி தம்

முடைய ஆகிஞ்சிந்யத்தை அநுஸந்தித்து, 'நீரே மதியையும் ஸரஸ்வதியையும் அளித்து ஸ்தோத்ரத்தைச் செய்து வைத்துக் கொள்ளவேண்டும்' என்று ப்ரார்த்தித்தார். பின்பு பேரருளாளன் அருளால் உடனே திருவுள்ளத்தில் ஸ்தோத்ர மென்னும் அவயவி முழுவதும் ரசிதமாய்விட்டது. அப்படி முழுவதும் அமைந்து ஸித்தமான ஸ்தோத்ரத்தை உடனே 'ஸ்தோத்ரம் விரசிதமாய் விட்டது' என்று பேசுகிறார். '[illegible]' என்பது வரதன் விஷயத்தி லல்லவோ ஸத்யமாகும்? என்றால் ரசிதமென்றே பேரிருக்கட்டும்.

'मयैवैते निहताः पूर्वमेव', 'निमित्तमात्रं भव सव्यसाचिन्'

என்று ப்ரதாந வீரனான அர்ஜுநனும் குரு பாண்டவ யுத்தத்தில் நிமித்த மாத்ரமே யானான். கண்ணாலே முன்பே நிஹதர்களைத்தான் அவன் கொன்றான். ம்ருத ஸர்ப்ப மாரணம் தான் அவன் கார்யம்; யசோலாபம் மட்டும் அவனது.

स्वाधीन वरद—'त्वया' (என்னாலே) என்கிறீரே. ஸ்வதந்த்ரமாக உம்மாலே தானே என்று ஸ்வாதந்த்ர்ய சங்கையை அடியோடு பரிஹரிக்க, என் வாக்கு முதலியன எல்லாம் த்ருவருக்குப் போல நீர் இட்டது சட்டமாக இருந்து, அத்யந்தம் த்வததீநத்வத்தாலே உம் அருளாலேயே அமைந்தது.

'[illegible]
[illegible] ॥'

என்று தத்வ முக்தா கலாபத்தில், ஜீவர் கர்த்ருத்வம் பராதீந கர்த்ருத்வம் என்று ஸாதித்ததை நினைக்கவேணும். இந்த ஸ்தோத்ர விஷயத்தில் எனக்கு யசஸ் வரவேண்டுமென்று தாம் திருவுள்ளம் பற்றியும், என் வாயிலிருந்து அவசமாகவாவது ஓர் உத்தம ஸ்தோத்ரம் என் பெருமாள் விஷயமாய் உதிக்க வேண்டுமென்ற என் தீவ்ர மநோரதத்தைப் பூர்த்தி செய்யவும், எனக்குக் கர்த்ருத்வத்தில் ஔபசாரிகமாகவேனும் கொஞ்சம் அந்வயம் கொடுத்திருக்கிறீர்.

'[illegible]' ॥

என்று பரம ப்ரியன் விஷயத்திலும் '[illegible]' ஈச்வரனுக்கென்று ஸ்ரீ ஸுதர்சந ஸூரியின் பணிப்பு.

'यं हि रक्षितुमिच्छन्ति बुद्ध्या संयोजयन्ति तम्'

என்கிற ப்ரமாணத்தையும் உதாஹரித்தார். அதை அநுஸரித்து, 'எனக்கு



மதியைக் கொடுத்து என் தீவ்ரமான ஆர்த்தியை ஹரிக்க வேண்டும் என்று ப்ரார்த்தித்தபடி. 'परमापदमापन्नः' என்று கஜ ராஜருடைய ஆர்த்தி போன்றது என்னுடைய ஆர்த்தி. பராயத்த கர்த்ருத்வாதிகரணத்தில் ஸ்ரீ சங்காரும் '[illegible]' என்று பணித்தார். இங்கே 'உமக்கு அத்யந்தம் அதீநமான வாக்கு புத்தி முதலியவற்றால் இந்த ஸ்தோத்ரம் ரசிதமாயிற்று' என்று பேசுகிறீரே. முடிவில்,

'इति विहितमुदारं वेङ्कटेशेन'

என்று இந்த உதார ஸ்தோத்ரம் விஹிதமாயிற்றென்று பேசுகிறாரே யென்றால், அதற்குப் பரிஹாரத்தை அங்கேயும் 'कर्त्रा' என்னும் பதத்தால் காட்டியிருக்கிறார். அது, 'உபசார வார்த்தையாக' என்றும் பொருள்படும். வேங்கடேசர் ஔபசாரிகமாகக் கர்த்தாவே யொழிய உண்மையில் ஸ்வயமாகக் கர்த்தாவல்லர்.

'[illegible]'

என்பதை அநுஸரித்து அங்கே 'कर्त्रा' என்பதற்கு 'ஔபசாரிகமாக' என்றும் பொருள் கொள்ளவேணும். அப்படியே தான் தயா சதகத்தின் முடிவிலும்,

'वेङ्कटेश्वर कविना कर्त्रा दयाशतकम्'

என்று இந்த சப்தத்தையே ப்ரயோகித்தார். வரத சரீர வேங்கடேசனால் ப்ரணீதமானதை, வரதனென்கிற ஆத்மாவை ஒளித்து, சரீரமாகிய என்னை மட்டும் பிரித்தெடுத்துப் பேசினபடி. 'ப்ரேம பக்தியினாலே' என்கிற அர்த்தமும் க்ராஹ்யம்தான். ஆவ்ருத்தியால் இரண்டையும் கொள்ளவேணும் ப்ரயோஜந விசேஷத்திற்காக.

स्वप्रीतये—உம்முடைய ப்ரீதிதான் இதில் முக்ய ப்ரயோஜநம். என் ப்ரயோஜநமும் சேஷியாகிய உமக்கு அதிக ஸந்தோஷகரம். 'பரம புருஷனே யென்றால் ஸ்வகீயனான ஜீவாத்மாவைக் கொண்டு, ஸ்வகீயமான கரண களேபரங்களால் தன் லீலா ப்ரயோஜநத்திற்காகக் கார்யங்களை ஆரம்பிக்கிறான். ஆகையால் ஜீவாத்மாவுக்கு வரும் பசித்தீர்வு முதலிய ப்ரயோஜநமும் அதற்கு ஸாதநமான கர்மமும் பரம புருஷனுடையதே' என்று கீதா பாஷ்யத்தில் அருளிச் செய்ததை அநுஸரித்து இந்த ச்லோகத்தைப் பணித்தபடி. அந்த இடத்தில் சந்த்ரிகையில், 'எப்படிப் பஞ்ஜர சகுந்த போஷணம் முதலியனவும், அவற்றால் உண்டாகும் ஸுகம் முதலியனவும் ஸார்வ பௌமனுக்குச் சேஷபூதமோ அப்படியே இங்கும்' என்று ஸாதித்த

த்ருஷ்டாந்தத்தையே இங்கே பிற்பாதியில் அதே பதங்களாலே பேசுகிறார். முற்பாதி யதிராஜ பாஷ்யமும் பிற்பாதி தம் சந்த்ரிகையுமாக இந்த ச்லோகம் அமைந்தது. ஆனால் ஒன்று மட்டும் பேதமுண்டு. அங்கே வயிற்றுக் குணவைப்பற்றிப் பேச்சு ; இங்கே செவிக்குணவைப் பற்றிப் பேச்சு. செவிக்குணவே ப்ரதாநம்.

வரத—"உமது ஸ்தோத்ரத்தை நீரே இயற்றிக் கொடுத்து, என் பேரை வைத்து ப்ரசுரம் செய்வது லஜ்ஜாகர மல்லவோ என்று கேட்டீர். உமக்கு லஜ்ஜாகரமா யிருப்பினும் நான் உம்மைப் பற்றி ஸர்வோத்க்ருஷ்டமான ஸ்தோத்ரத்தை, உம்முடைய க்ருபையால், உமக்கு அதீநமாய், நீரிட்ட வழக்கான புத்தி முதலியவற்றைக் கொண்டு உடனே செய்யாவிடில், ஒரு க்ஷணமேனும் தரிக்கக் கூடாதபடி ப்ராண ஸம்சயமான பரமமான ஆர்த்தியை அடைந்து, உம்மை ஸ்தோத்ரம் இயற்றிக் கொடுக்கும்படி யாசிப்பேன்; அப்போது நீர் அந்த வரனைக் கொடுக்காவிட்டால் உமக்கு அஸாதாரணமான வரதனென்னும் திருநாமம் போய்விடும். உம்முடைய திருநாமத்திற்கும், உமது வரத ஸ்வபாவத்திற்கும் அபாயம் வரலாமோ ? சரணாகதர்களை ஸம்ரக்ஷிக்கிறவ ரென்ற உம்முடைய வரத பிருதம் வெகு அழகாகுமே!" என்று மேலே கேட்கப்போகிறார். 'இது தான் என் ஸ்தோத்ரமாயிற்றே; இதின் ரசனையில் நான் ஒதுங்கி உதாஸீநனாய் இருக்க வேண்டாமோ ?' என்று நீர் வெட்கப்பட்டு ஒதுங்கி யிருந்தால், யார்தான் எந்த ஸ்தோத்ரத்தை உம் விஷயமாக ரசனை செய்து உஜ்ஜீவிக்கக் கூடும் ? ப்ரணதனான என் ஆர்த்தியை நீர் ஹரியாமல் நான் முடியலாமோ? உம்மாலல்லது இந்த ஸ்தோத்ரம் அஸாத்ய மாகையாலும், ஸ்தோத்ரம் செய்யாமல் நான் ஒரு க்ஷணமேனும் தரிப்பது அஸாத்ய மானதாலும், என்னுடைய ஆர்த்தியை ஹரித்து என் கோரிக்கையை நீர் அளிக்கவேண்டியது உமக்கு நழுவக்கூடாத ஸ்வபாவ மாகையாலும், உம்முடைய வரதத் திருநாமத்திற்கே ஹாநி வருமாகையாலும், வேறு கதியில்லாத இந்த விஷயத்தில் இந்த ப்ராணாபத்து ஸமயத்தில் லஜ்ஜைப்பட்டு நீர் ஔதாஸீந்யத்தை வஹிக்க ந்யாயமில்லை.

'தஸ்மாத் வரிஹாய வ்ரீடாம் ந க்ஷமம் ஜிஹ்மம் உஹ்யஸி'

என்று இங்கே சொல்லவேணும். உம்மைத் தவிர இன்னொரு கர்த்தாவும் காரயிதாவுமான அந்தர்யாமி இருந்தா லல்லவோ உம் லஜ்ஜையைப் பரிஹரித்து, அவரைக் கொண்டு உம் ஸ்தோத்ரமான இந்தக் கார்யத்தைச் செய்துகொள்ளலாம். வரத என்பது ப்ரணதார்த்திஹரன் என்கிற திருநாமத்துக்கும் உபலக்ஷணம். சேஷனுக்கு உயிர் போகும் அவஸ்தையில் சேஷி லஜ்ஜையால் ஔதாஸிந்யத்தை அவலம்பிக்கலாமோ ?



யத்த்விதம் ந சித்ரம்—உம்மாலே உம் ப்ரீதிக்காக உம் ஸ்தோத்ரம் செய்விக்கப்பட்டு, என் வாயினின்று கேட்டு இன்புறுவ தென்னு மிது சித்ரம் (ஆச்சர்யம்) அல்ல. உம்மாலே செய்விக்கப்பட்ட இந்த ஸ்தோத்ரம் சித்ரமாயிருப்பினும், நீர் அதை எனக்குச் சிக்ஷித்துக் கொடுத்து என் வாயினால் பிதற்றக் கேட்டு மகிழ்வதும் சித்ரமல்ல. எது சித்ரமென்றால், ஸ்தோத்ரம் தான் சித்ரம்.

ஆவர்ஜயதி ஹ்ருதயம் வசனம் சிக்ஷகாணாம்—பெருமாள் இயற்றி வைத்த ஸ்தோத்ரம் கவி நெஞ்சில் லிக்தமாய் விட்டது. அது கவியின் ஹ்ருதயத்தை ஆவர்ஜநம் செய்கிறது. ஸ்துதி பதங்கள் ஆவர்ஜகமா யிருக்கின்ற அநுபவமும் நெஞ்சில் ஓடுகிறது. 'சிக்ஷகர்' என்னும் பதம் குரு மாணவகர் இருவரையும் சொல்லும். நீர் இயற்றிய ஸ்தோத்ரத்தை என்னைக்கொண்டு பேசச் சொல்லிக் கேட்பதில் என்ன ஸுகமென்றும், அதற்கு ஏதேனும் ஓர் லோக ந்யாயம் உண்டோ வென்றும் கேட்டீர். 'லோகவத்து லீலா கைவல்யம்' என்று இங்கேயும் சொல்லலாம். ஜகத்-ஸ்ருஷ்டியிலுள்ள ப்ரயோஜந ந்யாயம் இங்கேயும் ஸமாநம். ஜகத் ரசனையில் உள்ளது ஸ்தோத்ர ரசனையிலும் ஸமாநம்.

ஸம்வர்த்ய வர்ணான் ஸுகானாம் விஜல்பிதானி—கிளிப்பிள்ளைக்கு வார்த்தைகளைச் சொல்லிக் கொடுத்து, அது திருப்பி அவ்யக்தமாகப் பிதற்றுவதைக் கேட்டு, அதுவே ப்ரயோஜநமாக மகிழ்வது ஸார்வத்ரிக மல்லவோ ? இந்த ஸ்தோத்ரத்துக்கு ஜகத் குருவே எனக்குச் சிக்ஷகராக வாய்த்தார். 'பெருமாள் இயற்றிக் கொடுத்த ஸ்தோத்ர பதங்களின் பொருள் கூட நான் அறியேன்; வ்யக்தமாக உச்சரிக்கக் கூடாமல் கிளிப்பிள்ளையைப் போல் அவ்யக்தமாய்ப் பிதற்றுவேன்' என்னும் நைச்ய காஷ்டையை இந்த த்ருஷ்டாந்தத்தால் ஸூசிக்கிறார்.

தேஹம் என்னும் கூட்டில் நீர் அடைத்து வைத்திருக்கும் ஒரு பிள்ளை தானே நான். கல்ப வ்ருக்ஷமான உம்முடைய திருக்கைகளாகிய சாகைகளில் விளையாடுவதைப் பேரின்பமாக நினைக்கும் கிளி. கண்ணனாகிய தேவப் பெருமாளைப் பாடுமவர் சுக ஸஜாதிய ராவர். சுக முகத்திலிருந்து அம்ருத த்ரவத்தோடு கூடியது பாகவத மென்னும் ரஸம். 'நிஹாரே ஸங்கதா:' என்று ப்ரத்யஹம் நாங்கள் ஆசாஸிப்பது. 'ஸம்ஜல்பிதா: ஸுகா:' என்று தண்டி பணித்தபடி தேன் மொழியுள்ள சுகமாதலாவது மெய்யாகட்டும்.

'அஸ்து தவாஸ்மி தேவராஜனோ ஸம்யாவம்'

என்று ஆசாஸிப்பதும் தேவராஜனாகிய உம் விஷயத்தில் உண்மையாகட்டும்,

தம்பதிகளாகிய உங்கள் இருவருக்கும், பூதேவி முதலிய தேவிமாருக்கும், எனக்குப் பழக்கி வைத்த சொற்களை என் வாயால் பிதற்றக் கேட்பது லீலா ரஸத்தையும் போக ரஸத்தையும் கொடுக்கவேயன்றோ ?

‘ஸயூத வத்யதாம் ஸாரிகாம் பஞ்ஜரஸ்தாம்’

என்பதையும் இங்கே நினைக்கவேணும். ‘**பரீக்ஷகாணாம்**’ என்கிற பஹுவசநத்தால், ப்ரக்ருதத்திலும் பெருமாளையும் ஸ்ரீ பூதேவிகளையும் வாங்கிக் கொள்ளலாம். தனிமையில் லீலா ரஸத்தைஎவர் அநுபவிப்பர்? கிளிப்பிள்ளை கூட்டில் அடைபடும்படி நேர்வது அதின் இனிய வாக்கின் குற்ற மென்பர். கிளி கூட்டில்அடைபட்டதால் அதன் காம சாரத்துக்கும், விஷ்ணுபத மென்னும் ஆகாசத்தில் ஸ்வச்சந்த விஹாரத்துக்கும் அதற்குத் தடையுண்டு. நானோ சரீரமென்னும் கூட்டில்அடைக்கப்பட்டு, திவ்ய தம்பதிகளால் வளர்க்கப்பட்டு, திவ்யமான ஸ்தோத்ர பதங்களால் சிக்ஷிக்கப்பட்டு, என் வாயால் பிதற்ற அவர்கள் செவியேற்று இன்புற்று, எனக்கு ஸர்வ லோகங்களிலும் காமசாரத்தை அளித்தும், தம்மையே ஷட்குண ரஸமான அன்னமாக எனக்குக் கொடுத்து என்னை அந்நாதனுக்கியும், ‘ஹாவு ஹாவு ஹாவு’ என்று என்னைப் பக்ஷியைப் போல் அவ்யக்த மதுரமாய் முக்தகீத மென்று பேருள்ள அப்பாட்டைப் பாடி ரஸிக்கவும் ப்ரஹ்மாநந்த பாக்யத்தை எனக்கு அளிப்பர்.

‘ச்ருதி பரிஷதி கீதம் மதநீ ரக்ஷணம் தே
ஸஹ்ருதய கருணயோ ஸஞ்சாராய பாதுகாத்ர: ।
உஷஸி நிஜ கஷாயா ஹ்ருத்தா ஊர்ஜஸேஷூ
ரஸவதி பதரக்ஷே ஸௌரதாயே ப்ரஜயஸி ॥’

என்கிற அத்புதமான பாதுகா ச்லோகத்தை இங்கே அநுஸந்திக்கவேணும். அச்யுத சதகத்திலும் இப்படியே ‘பஞ்ஜரஸ்த ஸுகவிஹம்’ என்று ஸாதித்தார். சததூஷணி ஆரம்பத்தில் ‘இந்த வாதங்களை பாலகவத்ஸங்க:’ கிளிப்பிள்ளையைப்போல் நீங்கள் அர்த்தம் தெரியாமல் உச்சரித்தாலும், வித்வானாகிய ப்ரதிபக்ஷி இதைக் கேட்டுப் பொருள் தெரிந்துகொண்டு ஆவர்ஜிதராய்த் திருந்துவர்’ என்று அழகாகக் காட்டினார். அதற்கு அப்பூர்வ பக்ஷமான வாசஸ்ரீ க்ரந்தத்தில் ‘கீரவச்ச’ என்று இருந்ததை அநுஸரித்து, அங்கே ‘பாலகவத்’ என்று ஸாதித்தார். ஸ்தோத்ரம் ஆரம்பிப்பதற்கு முன்னடி தமக்கு பாலகத்வத்தை அநுஸந்திக்கிறார்.*

---

* [“கூடுறை பசுங்கிளிக் கமுதமொழி சொல்லிக்
கொடுத்தந்த மொழியச் சுகந்



கூறுகா லையில்வினவி மகிழுமவர் போலவே
கோகனக ளுதியிமை யோர்
நாடுதற் கரியநீ யென்மனத் தாமரையி
னுடொறு மிருந்து தமிழ்நூல்
நலத்தையறி வித்தறப ளுகியவெ னைக்கொண்டு
நானுவி தக்கவி களைப்
பாடுவித் திருசெவிக் கொண்டுளங் களிகொள்வை
பலகாலு முன்விளை தம்
பகரவச மோகடவு ளன்னமே யென்னமே
பரிதியைக் கோபுர தலத்
தாடுகொடி தொடுகச்சி யருளாளர் கண்மணியி
னகலாது லாவு பாவாய்
அடியவர்க் காவியே யதுலசஞ் சீவியே
யழகிய பெருந் தேவியே.”

எனும் பாசுரம் மேற்கூறிய விஷயங்களை அடியொற்றி நிற்பது ரஸிகர்களால் உணரத்தக்கது.]

# ஸ்ரீக்ருஷ்ண தாதார்ய மஹாதேசிக சரிதம்

[ஸ்ரீ. உப. ஜயா. க்ருஷ்ண தாதாசார்யர்]

ஸ்ரீ ஸ்வாமி ப்ரபத்தி பரிகரங்களாயிருந்த ஆநுகூல்ய ஸங்கல்பாதிகளுக்கு 'ஸங்கிபத்யோபகாரகத்வ விசாரம்' என்றொரு க்ரந்த மருளிச்செய்தார். இந்தக்ரந்தம் திருக்குடந்தை தேசிகன் ஸ்ரீ நிக்ஷேப சிந்தாமணியில் 'ஆராதுபகாரக' மென்று பூர்வபக்ஷம் பண்ணி, ஸங்கிபத்யோபகாரக மென்று ஸித்தாந்தித்ததை, அநேக மீமாம்ஸா ந்யாயங்களையும் லௌகிக யுக்த்யந்தரங்களையும் கொண்டு த்ருடீகரிக்கிறது. இது ஸ்ரீ ரஹஸ்யத்ரய காலக்ஷேபத்திலே அந்தேவாஸிகளோடு விமர்சித்து அருளிச்செய்த நூலாத்தில் சரண சப்தார்த்த விசாரம் பண்ணுவது. இது, பிள்ளைலோகாசார்யர் அபிப்ராய மென்று சொல்லும் பரபக்ஷிகளுடைய சரண சப்தார்த்த விமர்ச கண்டந ரூபமாயிருக்கும்.

மநஸாலகட்டம் வேதாந்தாசார்ய ரென்னு மொரு பரமைகாந்தி வித்வான் ப்ரபந்நராயிருப்பார் தாங்கள் ஔர்த்வ தேஹிக உத்தர கர்ம கர்த்தாக்களாம்போது தர்ம சாஸ்த்ரோக்த ஸபிண்டீகரணம் அநுஷ்டிப்பது பாரமைகாந்த்ய பஞ்சகம் என்று கொண்டு, பித்ரு வியோகத்திலே தாமே அநுஷ்டித்திருக்கச் செய்தேயும், மாத்ரு வியோகத்திலே அதை அநுஷ்டியாதே நாராயண பலி என்று ஆகமோக்தமான கர்ம விசேஷத்தை அநுஷ்டித்து, இதுதான் ப்ராமாணிக மென்றும், ஸபிண்டீகரணாநுஷ்டாநம் ப்ரபந்நாதிகார விருத்த மென்றும் ஒரு க்ரந்தம் எழுதி, அதை ப்ரசாரம் பண்ணிக் கொண்டிருந்தார். ஸ்ரீ ஸ்வாமியும் அந்த க்ரந்தத்தை ஆமூலாக்ரம் கடாக்ஷித்து, இது ப்ரமாண சிஷ்டாசார விருத்த மென்று கொண்டு, அதற்குக் கண்டநமாக 'ஸந்மார்க்க கண்டகோத்தாரம்' என்றொரு க்ரந்தம் அருளிச்செய்தார். அந்த க்ரந்தத்தின் உபக்ரமத்தில்,

'வர்ணாதேஸ் த்வயுக்தமேஷாம் ஸம்யோகைஷாம் கரம்பிதம் |
வ்யாப விஷயாதோஷாந்திஷ்டா உபவர்ண்யதே ||'

என்று தொடங்கி,

'அத: ப்ரவக்ஷ்யே ஸம்க்ஷேபாத் நாராயண பலி க்ரியா |
உக்தம் ஸம்ப்ரதாயேவி ஸம்ஸாரே தோஷ தூஷணே ||
ஸ்வாத்யாயார்த்தி ப்ரமாணாந்ஸாத்ர ஸம்ஸ்தாபிதே |
ஸ்வதாப்ருதாஞ்சிதே ப்ரவக்ஷ்யே பரீக்ஷா தத்ராக்ருதாசதி: ||
ஸம்ப்ரதாயாத் ஸ்வதோஷ ஸம்ப்ருத் தைவதே ||
ஸுகஸ்வாதேவ ஸம்ஜ்ஞேஷு உதிதீர்யதே தத: ||'

என்று நிஷ்கர்ஷித்தருளினர். இந்த க்ரந்தத்தை அந்த வேதாந்தாசார்யரும் ஆமூலாக்ரமாகக் கடாக்ஷித்து அதிக கோபங்கொண்டு, யதாவஸ்தித க்ரஹணம் போல அதிக்ஷேபோக்திகளாலே பூரணம் பண்ணி, இந்த க்ரந்தத்துக்குக் கண்டநம் என்று பெயர் வைத்து ஒரு க்ரந்தம் அனுப்ப, ஸ்ரீ ஸ்வாமியும் அதைக் கடாக்ஷித்து, இவர் ப்ரமம் நிவ்ருத்தமாம்படி 'கண்டகோத்தார ஸங்க்ரஹம்' என்று முன் க்ரந்தத்தில் அருளிச்செய்து, அதன் முடிவிலே,

'அபிக்ஷேபைரஹோ வி நிதராம் அதப்ரவயம் |
ஸந்தாநாய த்ருதாபிக்ஷாதயாவஸ் ஸாஹஸ்ய வதத்யக: ||'

என்று அருளிச்செய்து அவர்க்கு அனுப்பி யருளினர். ஸ்ரீ தேசிகன் திருவடி ஸம்பந்திகளில் தங்கள் தங்கள் பூர்வாசார்யர்களால் அருளிச்செய்யப்பட்ட ஆஹ்நிகப்படி அநுஷ்டித்து வரும் தர்மங்கள் ஸ்ரீ வைஷ்ணவத்வ பஞ்ஜகம் என்று கொண்டு, 'ஸத்க்ரியா கல்ப மஞ்ஜரி' என்று நவீநமாக ஒரு ஆஹ்நிக க்ரந்தமும், ததநுகுணமாக இரண்டொரு க்ரந்தங்களும் எழுதி அந்த வேதாந்தாசார்யர் ப்ரவசநம் செய்ய, 'இவை ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷா ஸச்சரித்ர ரக்ஷா ஸ்ரீ ரஹஸ்யத்ரய ஸாராதிகளான ஸ்ரீ தேசிக திவ்ய ஸூக்திகளுக்கும் ததநுஸாரி ப்ராசீநாசார்ய ஸ்ரீ ஸூக்த்யாசாரங்களுக்கும் விருத்தமாயிருக்கிற தென்று கொண்டு, 'ஸ்ரீவைஷ்ணவத்வ நிரூபணம்' என்றொரு க்ரந்தம் அருளிச் செய்தார். தர்ச ச்ராத்தம் உத்தர வித்தையிலே தானே ப்ராத: காலத்தில் அநுஷ்டிக்கும் ஆதார சக்த்யாதி தர்ப்பண மத்யத்திலே புக்ந மில்லாமலே ஜல மத்யத்திலே நின்று கொண்டு, 'உதீரதாம்' இத்யாதி ருக்குக்களும் வஸுருத்ராதித்தேத்யாதிகளான பித்ராதி விசேணங்களுமில்லாமலே 'ப்ரத்யும்ந ஸங்கர்ஷண வாஸுதேவ ரூபாந்ய' என்று பித்ராதிகளை விசேஷித்துத் திருவஷ்டாக்ஷர மந்த்ரத்தாலே தானே உபவீதியாய்த் தேவதீர்த்தத்தாலே ப்ரபந்ந ஸ்ரீ வைஷ்ணவர்கள் தர்ப்பணம் செய்ய வேணும் என்று நிஷ்கர்ஷித்து ஒரு க்ரந்தம் எழுதித் தாமே அநுஷ்டித்தும் சிலரை அப்படி அநுஷ்டிப்பித்தும் வந்தார். அதை ஸ்ரீ ஸ்வாமி கடாக்ஷித்து, 'தர்ச ச்ராத்த ஸஞ்சிகை' என்றொரு க்ரந்தம் அருளிச்செய்து அவருக்கு அனுப்ப, அதற்கு மேலே அந்த வேதாந்தாசார்யர் அதற்குக் கண்டநமாக ஒரு க்ரந்தம் எழுதி அனுப்ப, ஸ்ரீ ஸ்வாமியும் 'தர்ச ச்ராத்த ஸஞ்சிகா ஸமர்த்தநம்' என்று மற்றொரு க்ரந்தம் அருளிச்செய்து அவருக்கு அனுப்பியருளினர். வஸ்த்ர யஜ்ஞோபவீதம் கர்ம காலங்களிலும் மற்றக் காலங்களிலுமாக 'தத்யஜ்ஞோபவீத வஸ்த்ர ஸமர்த்தநாயம்' என்றொரு க்ரந்தம் அவர் எழுதிஅனுப்ப, வஸ்த்ர யஜ்ஞோபவீதம் சில கர்மங்களில் அநியதம்; சில கர்மங்களில் நிஷித்தம்; மற்றக் காலங்களில் அநாவச்யகம் என்று திருவுள்ளத்தாலே 'யஜ்ஞோபவீத ஸஞ்சிகை' என்றொரு ஸஞ்சிகை அருளிச் செய்தார். ஸ்ரீ ஸ்வாமிக்கு ஸவம்ச்யரா யிருக்கும் கொண்டங்கி ஸ்ரீநிவாஸ தாதாசார்யர் என்பவர் ஸ்ரீ ஸ்வாமியின் பெருமையிலும் ஸம்ப்ரதாய ப்ரவசநத்திலும் அஸூயாவிஷ்டராயிருந்து முன்னமே ஸ்ரீ ஸ்வாமியினிடத்தில் அஸூயாவிஷ்டராய்த் தமக்குத் தேஹபந்துவாயும் இருக்கும் இளங்காடு ரகுநாதாசார்யர் என்பவருடைய துர்ப்போதனையாலுமாக ஸ்ரீ ஸ்வாமி அருளிச்செய்த கண்டகோத்தார தத்

ஸங்க்ரஹங்களுக்குக் கண்டநமாக 'முநிபாவ ப்ரகாசிகை' என்றொரு க்ரந்தம் எழுதி ஸ்ரீ ஸ்வாமிக்கு அனுப்ப, ஸ்ரீ ஸ்வாமியும் அதைக் கடாக்ஷித்து அஸூயையாலும் துராக்ரஹத்தாலுமாகப் பங்க்திகளுக் கெல்லாம் அந்யதாவாக அர்த்தம் க்ரஹித்து எழுதினரென்று கொண்டு, கண்டநோத்தாரத்துக்கு வ்யாக்யாநமாகக் 'கண்டநோத்தார டிப்பணி' என்றொரு க்ரந்தம் அருளிச் செய்தார். இவர் 'முநிபாவ ப்ரகாசிகை' பண்ணுங் காலத்திலே அந்த வேதாந்தாசார்யர் திருநாடு அலங்கரித்தார். ரகுநாதாசார்யர் அந்த வேதாந்தாசார்ய ஸம்ப்ரதாயாநுப்ரவிஷ்டர். அவர் துர்ப்போதனையாலே முநிபாவ ப்ரகாசிகையிலே ஸ்ரீ ஸ்வாமி விஷயத்தில் அதிக்ஷேபோக்திகள் பகு அதிகம். அந்த க்ரந்தத்தை அவர் நேரில் ஸ்ரீ ஸ்வாமிக்கு அனுப்பவில்லை. அது வேறொருவரிடம் இருக்கக் கண்டு, ஸ்ரீ ஸ்வாமியும் அதை க்ருச்ச்ராத் வாங்கித் தம் திருவடிகளில் ஒருவரை எழுதும்படி நியமிக்க, அவரும் யதாமாத்ரகம் லேகநம் பண்ணி, முடிவிலே தாமாகவே,

'[illegible] ஸ்வைர [illegible]ஹ்ருதாம்
ஸம்[illegible] தோஷவதீம் [illegible] விஷயாம் ।
ஸ்ரீ க்ருஷ்ணதாத [illegible]
ஸம்[illegible]ணகீ [illegible] ॥'

என்றொரு ச்லோகம் எழுதினர்.

ஸ்ரீ ஸ்வாமி ஸ்ரீ ரங்கராஜ வீதி ஆச்ரமத்திலே எழுந்தருளியிருந்து ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்தருளும்போது, கோயிலிலே தம் ஆசார்யர் திருமேனி தளர்ந்த தென்று தெரிந்திருக்கச் செய்தேயும், அப்படியே தம்முடைய திருமேனி தளர்ந்திருந்தபடியாலும், கோயிலுக்கும் பெருமாள் கோயிலுக்கும் நெடுந்தூரம் இருக்கையாலும், காலகதியாலே மார்க்கத்தில் நித்யாநுஷ்டாநங்கள் செய்துகொண்டு போவது அஸாத்யமாகையாலும், மார்க்காந்தரத்தாலே போவது அசாஸ்த்ரீய மாகையாலே ஆகாதென்னும் திருவுள்ளத்தாலும், தாம் எழுந்தருளாமல் திருமேனியை த்யானித்திருந்து, தம் ஆசார்யர் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளினரென்று தெரிந்தவாறே, தம் ஆச்ரமத்திலே தானே அநேக ஸ்ரீ வைஷ்ணவர்களுடனே திருப்பல்லாண்டு தொடக்கமாகப் பிள்ளையந்தாதி வரை திவ்ய ப்ரபந்தாநுஸந்தாந புரஸ்ஸரமாக ஸ்ரீ சூர்ண பரிபாலநம் செய்தருளி, விசேஷ தக்ஷிணாதாநங்களும் செய்தருளி, ஸ்ரீ வைஷ்ணவ ப்ருந்தத்துடனே ச்வேத தடாகத்திலே அவப்ருத ஸ்நாநம் செய்தருளி, அன்று உபவாஸ மிருந்து பதின்மூன்றாவது தினத்திலே நாலாயிரம் அருளிச்செயல், ஸ்ரீ தேசிக ப்ரபந்தம், வேதபாராயணம், ஸ்ரீபாஷ்யாதியாக ஸம்ப்ரதாய க்ரந்தங்கள், இதிஹாஸ புராணங்களோடு பஹுவிலக்ஷணமாகத் திருவத்யயநோத்ஸவம் பெருக அநுஷ்டித்து, அப்படியே ப்ரதி ஸம்வத்ஸரமும் தம்மடிச்சோதி அலங்கரித்த மாசிசுத்த த்வாதசியில் திருவத்யயநோத்ஸவமும் அநுஷ்டித்து வந்தார். தம் ஆசார்ய பத்நி அப்போது ஜீவித்திருக்கையாலே அவர் செய்யவேண்டிய திருவத்யயநோத்ஸவத்துக்கும் த்ரவ்ய ஸஹாயம் செய்து ப்ரதி ஸம்வத்ஸரமும் அதை நடத்தி வைத்தும் வந்தார்.



ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியிலே தர்க்க சாஸ்த்ரம் அதிகரித்து, வித்வானாய், சடகோப நிலயம் பாடசாலை ப்ரதாநோபாத்யாயரா யிருந்த பரவஸ்து வேங்கடாசார்யர், தேரூர் வரதாசார்யர், மற்றும் சில தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்கள், 'அடியோங்களுக்கும் ஸ்ரீ பாஷ்ய கீதாபாஷ்யங்கள் ஸாதித்தருளவேணும்' என்று ப்ரார்த்திக்க, ஸ்ரீ ஸ்வாமி 'ஸம்ப்ரதாய பேதமுண்டாகையாலே இந்தக் காலகதியில் தகுந்ததன்று' என்று விலக்கி விட்டார். இவர்களில் பரவஸ்து வேங்கடாசார்யர், ஸ்ரீ ஸ்வாமி திருவடிகளில் அதிப்ரவணராய் 'மற்றை எவரிடத்தும் நான் தலை குனிந்து புஸ்தகம் அவிழ்ப்பதில்லை' என்று ப்ரதிஜ்ஞையோடே சிரகாலம் இருந்தார். அவர் திருமேனி தளர்ந்து நோயோடு கொஞ்ச காலம் இருந்து, தம்முடைய தசையை ஸ்ரீ ஸ்வாமிக்கு விண்ணப்பிக்க, ஸ்ரீ ஸ்வாமியும் அவர் திருமாளிகைக்கு எழுந்தருளிக் குளிரக் கடாக்ஷிக்க, அவரும் ஸ்ரீ ஸ்வாமி திருவடிகளைப் பிடித்துக்கொண்டு, 'அடியேன் இந்தத் திருவடிகளிலே ஆத்மரக்ஷா பரஸமர்ப்பணம் பண்ணி விட்டேன்; ஆகையால் அடியேனுக்குப் புருஷார்த்த ப்ராப்தி ஸ்ரீ ஸ்வாமி கையதே' என்று கண்ணுங் கண்ணீருமாய் அருளிச் செய்ய, ஸ்ரீ ஸ்வாமியும் அவருக்குப் பூர்வமே தம்மிடத்திலே நிரதிசய பக்தி உண்டென்று அறிந்திருக்கையாலும், இனி இவர் சிர காலம் ஜீவித்திரா ரென்று திருவுள்ளத்திலே தோன்றினபடியாலும், அன்று முதல் நாலு நாள் அளவாகத் தத்வோபாய புருஷார்த்தங்களிலே ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகளாலே அவருக்குத் தெளிவை உண்டாக்கி, அவர் ப்ரார்த்தனையாலே உபாயாநுஷ்டாநமும் செய்தருள, அநந்தரம் இரண்டு நாட்களுக்குள் அவர் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளினர். ஸ்ரீ ஸ்வாமியும் அவர் வியோகத்திலே போர க்லேசித்திருந்தார்.

மற்றும் சில தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர் ஸ்ரீ பாஷ்ய கீதாபாஷ்யங்கள் ஸ்ரீஸ்வாமி ஸந்நிதியிலேதானே ஆகவேணு மென்று ப்ரார்த்திக்க, ஸ்ரீ ஸ்வாமியும் காலகதியை அநுஸரித்து, 'ஸம்ப்ரதாய பேதமுண்டு; அவரவர் அந்தந்த ஸம்ப்ரதாயத்திலே தானே அந்வயிப்பது அழகு; என்னிடத்தில் ஸாமாந்ய சாஸ்த்ராப்யாஸ நிபந்தநமாக விச்வாஸத்தாலே இந்த அபேக்ஷை தத்காலம் இருந்தாலும், மற்ற எம் ஆசார்யாளிடங்களிலே உங்களுக்கு விச்வாஸம் உண்டாகக் காரண மில்லாமையாலே வேண்டாம்' என்று நிஷேதிக்க, அவர்களும் ஸ்ரீ ஸ்வாமியைப் போலே நிஷ்க்ருஷ்டமாக அர்த்தம் ஸாதிக்கும் ஆசார்யர்கள் கிடைப்பது துர்லபம் என்றெண்ணிக் கிந்நராய் தங்கள் ஸம்ப்ரதாயஸ்தர்களிடத்திலேயே க்ரந்தாந்வயம் செய்துகொண்டார்கள்.

ஸ்ரீ ஸ்வாமி ஸ்ரீ பேரருளாளன் ஸ்ரீகார்ய நிர்வஹண கைங்கர்யத்தை, அதற்கு ப்ராப்தரானார் கையில் ஒப்புவித்து, துர்யாச்ரமிகள் துல்யமாகத் திருமாளிகையை விட்டு ஸ்ரீரங்கராஜ அக்ரஹார ஆச்ரமத்தில் எழுந்தருளியிருந்து, ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்தருளும்போது, மார்கழி மாஸத்தில் பெரிய திருவத்யயநோத்ஸவம் ப்ராப்தமாக, முதல் திருநாளில் நம் பேரருளாளன் திருமாமணி மண்டபத்திலே ஆழ்வாராசார்யர்களுடன் வீற்றிருந்து வேதாதிகள் உபக்ரமித்து, இதிஹாஸ புராணங்களும் ஸம்ப்ரதாய க்ரந்தங்களும் தொடக்கமாக ஸ்ரீ பாஷ்யம் உபக்ரமிக்கும்போது, ஸ்ரீ தாததேசிகன் திருவம்சத்திலே ஸ்ரீ ஸ்வாமிக்கு வயோ ஜ்யேஷ்டராய் ஸம்ப்ரதாய சுத்தராயுமுள்ள ஒருவர் ஸ்ரீ பாஷ்யம் உபக்ரமிக்கும் அளவிலே, ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியிலே தர்க்க சாஸ்த்ரம்

ப்ராமாண்ய வாதாந்தம் வாசித்து அதிவாக்மியாய் ஸ்ரீபாஷ்யம் அதிகரிக்க வேணு மென்று திருவுள்ளமிருக்க செய்தேயும், அது பெருத குறையோடிருந்த ஈச்சம்பாடி குண்டலம் நரஸிம்மாசார்யர் என்பவர் அந்தத் திருவோலக்கத்தின் நடுவிலே அஞ்ஜலி பந்தத்துடன் இருந்து, "திருவோலக்கத்தில் ஒரு விண்ணப்பம்; ஸ்வாமிகளெல்லாம் திருச்செவி சாத்தியருளவேணும்; இது அடியேன் ஒருவன் விண்ணப்பிப்பதன்று. உபய ஸம்ப்ரதாயத்திலும் அநேக ஸ்வாமிகள் திருவுள்ளத்தில் இருப்பதை அர்த்தி தார்த்த பரிதாந தீக்ஷிதனான நம்பெருமாளனுலும், மற்றும் அர்ச்சையாக எழுந்தருளி யிருக்கும் ஆழ்வார் ஆசார்யர்களாலும் அடியேனை விண்ணப்பிக்க நியமிக்கிறார்கள். அதாவது: இப்போது ஸ்ரீ ஸ்வாமி திருவாக்காலே தானே ஸ்ரீ பாஷ்யம் உபக்ரமிக்க வேணும்; ஸ்ரீஸ்வாமி எழுந்தருளியிருக்க மற்றொருவருக்கும் அதிகாரம் வராது. இது நிச்சயம். ஆகையால் ஸ்ரீஸ்வாமியே ஸாதித்தருள வேணும்" என்று நிர்ப்பந்தித்து, மற்றவரையும் அநுஸந்திக்கக் கூடாதென்று கட்டாயப்படுத்த, ஸ்ரீஸ்வாமியும், 'இது ஒரு பகவத் பாகவத நியமநம் இருந்தபடி' என்று கொண்டு **'அகில புவந'** என்று உபக்ரமித்து **'ஸமதி விசேஷண விசிஷ்ட** ஸூத்ரம்' அளவாக நிறுத்தி, அதற்கு மேலே அநுஸந்திக்கவேண்டும் முறையிலே எல்லாவற்றையும் அநுஸந்தித்து முடித்தவாறே, முன்போலே தானே அந்த நரஸிம்மாசாரியர் திருவோலக்கத்தின் நடுவே நின்று, **'ஸுஜ்ஞாநீ பத மாயயம்'** என்ற கணக்கிலே, இன்று தான் நமக்கெல்லாம் புருஷார்த்த ஸித்தி உண்டாயிற்று; இந்தத் திருவோலக்கத்தில் ஸ்ரீஸ்வாமி திருவாக்காலே ஸ்ரீபாஷ்யோபக்ரமம் பண்ணக் கேட்கும்படி பாக்யம் பெற்றோம்; இது தான் நமக்கு எல்லாருக்கும் ஸ்ரீபாஷ்யோபதேசம்; மற்றுள்ளாருக்கும் இத்தாலே தானே உபதேச சுத்தி உண்டாமென்னக் குறையில்லை; அப்படி இந்த உத்ஸவ அவஸாந திநத்தன்றும் இந்தத் திருவோலக்கத்திலே கடைசி ஸூத்ர பாஷ்யங்கள் அருளிச் செய்ய வேணும்' என்று விண்ணப்பம் பண்ண, ஸ்ரீஸ்வாமியும், 'நரஸிம்மாசார்யரே! ரொம்ப அதிவாதம் செய்கிறதே. அவ்வளவுக்கு நான் தகுந்தவனல்லனே' என்று அருளிச் செய்ய, அந்த நரஸிம்மாசார்யரும், 'இது ரொம்ப அழகு; ஆழ்வார், 'நீசனேன் நிறையொன்றுமிலேன்' என்றாற் போலே இருந்தது தேவர் ஸாதித்தது. ஸ்ரீ ஸ்வாமியே 'தகுந்தவனல்லேன்' என்றால், 'எம்பெருமானாரும் ஸ்ரீ பாஷ்யமிட்டருளத் தகுந்தவரன்று தான்' என்று சொல்ல, இவ்வார்த்தைக்குத் திருவோலக்கத்திலுள்ளாரெல்லாரும் வெகு ப்ரியப்பட்டுக் கொண்டாடினார்கள்.

(தொடரும்)

ஸ்ரீ:

# வள்ளுவரும் வருணாச்சிரம தருமமும்

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி, ஸ்ரீ உப. திருமலை ஐயங்கார், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்]

[இந்தக் கட்டுரையின் ஆசிரியர், இதில் 'தந்தெய்வ மெந்தெய்வம்' என்னும் பழமை வழக்கொக்க, தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் தங்கள் தங்கள் மதத்தைச் சார்ந்தவர் என்று வழக்கிடுவார்களுக்குப் பதில் உரைக்க வல்லாதவாறு நாயனார் ஆர்யமத ஸநாதன தர்மத்தைச் சார்ந்தவர் என்றே ஸித்தாந்தம் செய்துள்ளார்.—பத்ராதிபர்]

"தானே திசையொடு தேவருமாய் நிற்குந்
தானே யுடலுயிர் தத்துவமாய் நிற்குந்
தானே கடன்மலை யாதியுமாய் நிற்குந்
தானே யுலகிற் றலைவனு மாமே."

"அரிது அரிது மானிடராதல் அரிது." அதனினும் அரிது சான்றோன் என அறிஞர் ஆமோதனம் பெறல். மாந்தர்க் குறுதியென உயர்ந்தோரால் தொன்று தொட்டு எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை: அறம், பொருள், இன்பம், வீடு என்பன. இவற்றை வடநூலார் முறையே தருமம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பர். அவற்றுள் அறமாவது: மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும். அவற்றை வடமொழியில் ஆசாரம், வியவகாரம், பிராயச்சித்தம் என்ப. ஒழுக்கமாவது, அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற்கு ஓதிய அறங்களில் வழுவாது ஒழுகுதல். வருணம் என்பது ஜாதி; நிலை என்பது ஆச்சிரமம். இதன் விவரணங்களைத் திருக்குறள் உரையாசிரியர்களுள் தலைசிறந்தவராகக் கொண்டாடப்படும் பரிமேலழகர் உரைப் பாயிரத்தில் காண்க.

புருஷார்த்தம் நான்கனுள் அறம், இம்மைப் பயன் மறுமைப் பயன் வீடென்னு மூன்றையும், பொருள், இம்மைப் பயன் மறுமைப் பயனென்னு மிரண்டையும், இன்பம், இம்மைப் பயனொன்றையும் தருவதாக ஆன்றோர்

கூறுப. அற முதலியவற்றின் இலக்கணத்தை ஔவைப் பிராட்டியார்,

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காதலிருவர் கருத் தொருமித் —தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."

என்னும் செய்யுளாற் கூறிப் போந்தனர்.

அறத்தின் வகைகளான வழக்கும் தண்டமும் உலக வழியில் நிறுத்து தலாகிய பயனைத் தருவன வல்ல; மக்களுயிர்க்கு நன்மையைப் பயப்பதாகிய சிறப்புடையன வல்ல; நூலானும், அறிவு மிகுதியானும், தேச வியற்கையானும் அறியப்படுவன. எனவே மாந்தர்க்கு உண்மை உறுதி பயக்கத்தக்கதும், உலக நெறியில் நிறுத்துவதும், யாவரானும் சிரமமின்றி அப்பியசிக்கத் தகுந் ததுமாயது ஒழுக்கம் என்பது பெற்றாம்.

மாந்தர் முன்னேற்றம் அடைவதற்குக் கைகொடுக்கக் கூடியது நம் சனாதன தர்மமே. இதனையே வருணாச்சிரம தர்மம் என்பது மரபு. வருணங்கள் நான்கு. பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்பதே அவற்றின் பெயர்கள். பிரமசரியம், கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்பன ஆச்சிரமங்களின் பெயர்கள். எந்நாளும் எங்கும் சீரிய சிறப்புற் றோங்கிவரும் நம் சனாதன தருமத்தைச் செந்தமிழ்ச் செல்வராகிய திருவள்ளுவநாயனார், எங்ஙனம் பாராட்டியுள்ளார் என்பதைக் கூடியமட்டில் விசாரிப்பதே இக் கட்டுரையின் விசேட நோக்கு.

நாயனார் மன்னும் வடமொழியே வேண்டி, அந்நூலோர் செவ்விதில் அமைத்துள்ள வருணாச்சிரம தர்மங்களையும், கொள்கைகளையும், தெய்வங் களையும் தழீஇனார் என்பது அறிஞர் அபிமதம்.

"ஒழுக்க முடைமையாவது தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப் பட்ட ஒழுக்கத்தினையுடையராதல்" என்பர் பரிமேலழகர். நாயனார்,

"ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்"

எனக் கூறுகின்றார். ஒழுக்கம் என்பது ஆசாரம். அது உயர்ந்தார்க்கும் இழிந் தார்க்கும் ஒப்ப சிறப்பினைத் தரும். ஒருவற்கு உயிர்போலச் சிறந்தது யாதொரு பொருளுமில்லை. ஆயினும், அவ்வுயிர் நல்வினை தீவினைகட்குக்காரண மாய் நின்று, இன்ப துன்பங்களை வருவித்துக் கொள்ளுகின்றது. ஒழுக்கம்



அங்ஙனின்றி, இன்பத்தை யுண்டாக்குவதற்கே காரண மாயிருக்கும். ஆத லால் அவ்வொழுக்கம் உயிரினும் ஓம்பப்படும். உயிர் போகக் கூடியதாக நேரி னும், அதனினும் ஒழுக்கத்தையே ஓம்பல் வேண்டும் என்பதும் பெறப்படும். அறங்கள் பலவற்றையும் ஆராய்ந்து, அவற்றுள் இம்மை மறுமை என்ற இருமைக்குந் துணையாவது எவ்வற மென்று மனத்தை அடக்கித் தெளிந் தறிந்தாலும், சிறந்த துணையாயிருப்பது ஆசாரமே. ஆதலால் ஒழுக்கத்தினை ஒன்றானும் அழிவுபடாமல் பாதுகாத்து, வருந்தியும் காக்கக் கடவன். சத்சம் பிரதாயங்களுக்கு அடிப்படை சதாசாரமே. இதனையே மகான்கள் பழுது படாமல் பாதுகாத்தனர். தம் முயிர்போக நேர்ந்த காலத்தும் சம்பிரதா யத்தை நிலைநாட்டுதலிலேயே நாட்டங்கொண்டிருந்தனர் நம் பெரியோர். பெரிய நம்பிகள் கூரத்தாழ்வான் முதலானோர் நம் சம்பிரதாயத்திற்குச் செய்துள்ள அரியதொண்டு வேறு யாவரே இயற்றியுள்ளார்?

எல்லார்க்குந் தத்தம் வருணத்திற் கேற்ற ஒழுக்க முடைமை குல னுடைமையாம். அவ்வொழுக்கத்திற் றவறுதல் அவ்வருணத்திற் றாழ்ந்த வருணமாய் விடும் என்ற கருத்தை வள்ளுவர்,

"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்"

என விளக்குகின்றார். அவரவர் வருணத்திற் கேற்ற ஒழுக்கமுடைமையால் பேறு பெறலாம் என்பது நாயனார் கொள்கை.

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப் பொழுக்கங் குன்றக் கெடும்"

'கற்ற வேதத்தினை மறந்தா னாயினும் அவ்வருணங் கெடாமையிற் பின்னும் அஃ தோதிக்கொளலாம்; அந்தணனது உயர்ந்த வருணம் தன் னொழுக்கங் குன்றக் கெடும்' என்பது பரிமேலழகர் உரை. "மறந்தவழி இழி குலத்தனா மாகலின், மறக்கலாகா தென்னுங் கருத்தான் 'மறப்பினும்' என்றார்" என்ற குறிப்பும் இவ்வுரையி லிருத்தல் கவனித்தற்பாலதே. இக்குறளில், பிராம் மணர்கள் வேதத்தை மறந்தாலும், தங்கள் வர்ண தர்மங்களான ஒழுக்கத் தைக் கைவிட்டால் அன்னோர் கர்மசண்டாளர்கள் ஆவார்கள் என்ற வேதக் கொள்கை விளக்கப்பட்டிருத்தல் காண்க. 'அந்தணர்' என்னும் பதத்திற்கு 'அறவோர்' என்றும், 'செந்தண்மை பூண்டவர்' என்றும், பகவற்கீதையில் சொல்லியபடியே, அன்னோர் கர்மத்தாலும் (அறம்) குணத்தாலும் (தண்மை) மேன்மையுள்ளவர்கள் என்று பொருள் படுத்தியுள்ளார்,

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்"

என்பது இக்கருத்துப்பற்றிய குறட் பாசுரம்.

அறத்துப்பால் மூன்றும் அதிகாரம் 'நீத்தார் பெருமை' முதற் செய்யுள் பின் வருமாறு :—

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு"

இக்குறளுக்குப் பரிமேலழகர் இயற்றியுள்ள உரையையும் குறிப்பையும் ஈண்டு தருதும். அதைச் செவ்வனே நோக்குக.

'தமக்குரிய வொழுக்கத்தின் கண்ணே நின்று, துறந்தாரது பெருமையை விழுமிய பொருள்கள் பலவற்றுள்ளும் இதுவே விழுமிதென விரும்பும் நூல்களது துணிவு.'

"தமக்குரிய வொழுக்கத்தின் கண்ணே நின்று துறத்தலாவது:—தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் உரிய வொழுக்கங்களில் வழுவா தொழுக அறம் வளரும்; அறம் வளரப் பாவந் தேயும்; பாவந் தேய அறியாமை நீங்கும்; அறியாமை நீங்க நித்த அநித்தங்களது வேறுபாட் டுணர்வும், அநிதன் மாலையவாய இம்மை மறுமை யின்பங்களின் உவர்ப்பும் பிறவித் துன்பங்களுந் தோன்றும்; அவை தோன்ற வீட்டின்கண் ஆசையுண்டாம்; அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனில் முயற்சிக ளெல்லாம் நீங்கி வீட்டிற்குக் காரணமாகிய யோகமுயற்சி யுண்டாம்; அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றாகிய எனதென்பதும், அகப்பற்றாகிய யான் என்பதும் விடும்; ஆகலான், இவ்விரண்டு பற்றையும் இம்முறையே உவர்த்து விடுதலெனக் கொள்க."

மேலும் இல்லறவியல் முதல் அதிகாரம் ஆதிச் செய்யுளும் அதன் உரையும் உற்றுநோக்கற் குரியன.

"இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை."

"இல்லறத்தோடு கூடி வாழ்வா னென்று சொல்லப்படுவான் அறவியல்



பினையுடைய ஏனை மூவர்க்கும் அவர் செல்லும் நல்லொழுக்க நெறிக்கண் நிலைபெற்ற துணையாம்."

"ஏனை மூவராவார் ஆசாரியனிடத்தி னின்றோதுதலும், விரதங் காத்தலுமாகிய பிரமசரிய ஒழுக்கத்தானும், இல்லை விட்டுத் தீயொடு வனத்தின்கட்சென்று மனையாள் வழிபடத் தவஞ்செய்யும் ஒழுக்கத்தானும், முற்றத் துறந்த யோக வொழுக்கத்தானும் என இவர்."

இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், புதல்வரைப் பெறுதல், அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி யறிதல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினையச்சம், ஒப்புரவறிதல், ஈகை, புகழ், முதலிய இல்லறவியல் அதிகாரங்களும், அருளுடைமை முதல் அவாவறுத்தல் இறுதியாகவுள்ள துறவறவியல் அதிகாரங்களும், ஊழ் என்ற தனி அதிகாரமும், நம் சனாதன தர்மத்தை நன்கு விளக்குகின்றன. நல்லாசிரியர் வாயிலாகக் குருசுச்ரூஷையால் இவற்றின் விழுமிய பொருள்களைக் கேட்டுணர்க. விரிக்கிற் பெருகும்.

"காராயவண்ண மணிவண்ணகண்ண கனசங்குசக்ர தரநீள்
சீராயதூய மலர்வாயம்நேய சீராமராம னெனவே
தாராயவாழ்வு தருநெஞ்சுசூழ்க தாமோதராய நமவோம்
நாராயணாய நமவாமனாய நமகேசவாய நமவே"

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்."

ஸ்ரீ:

# ஆயுர்வேதமும் ஆரோக்ய ஸாதநமான ஆசாரங்களும்

[ஸ்ரீமான் உ. வே. வைத்யரத்நம் வித்வான் மே. துரைஸ்வாமி அய்யங்கார்]

[இந்தக் கட்டுரையை எழுதியிருக்கும் வித்வான், ஆயுர்வேதத்தில் விசேஷமான ஜ்ஞாநமுடையவரென்று எல்லோருக்கும் தெரிந்திருக்கக் கூடும். அவர், இதில், ஆயுர்வேதத்திற்கும் வேதாந்தத்துக்கும் உள்ள ஸமீப ஸம்பந்தத்தை அநேக மேற்கோள்களுடன் அழகாய் எழுதியுள்ளார். அவ் விஷயம் எல்லோராலும் மிகவும் கவனிக்கத்தக்கது.— பத்ராதிபர்]

## முன்னுரை

வேதாந்தாதி விஷயங்களை வ்யவஹரிப்பதற்கென்று வெளியாகும் இத் தீபிகை போன்ற பத்ரிகைக்கும், வைத்ய விஷயங்களில் ஈடுபட்டுள்ள என் போன்றவர் எழுதும் வ்யாஸத்திற்கும், அந்யோந்ய ஸம்பந்தம் அநுபவ ரீதியில் உண்டென்னும் உண்மையை உணர்ந்திருப்பவர் அருமை. விஷய தத்வங்களை விமர்சம் செய்யச் செய்ய வைத்ய சாஸ்த்ராதிகளில் விவரிக்கப்படும் பல் வேறு அம்சங்களும் வேதாந்தத்திற்கு அபிப்ரேதமான கோட்பாடுகளை அவலம்பித்தவைகளாகவே இருக்குமென்பது விவேகிகளுக்கு விளங்காமற் போகாது. ‘லோகமெங்கும் புத்திமான்கள் செய்துவரும் ஸமஸ்த ஆராய்ச்சிகளும், பராவர தத்வங்களை யதாவத்தாக அறிந்து கொள்ளவேண்டுமென்கிற உத்தேசத்தைக் கொண்டே செய்யப்பட்டு வருகின்றன’ என்று ஸ்ரீ. உப. தி. இ. சடகோபாசார்ய ஸ்வாமி, அதி ஸமீபத்தில் வெளியான ஆவணி மாதத்திய தீபிகையில் தமது விஜ்ஞாபநத்திற் சுட்டிக் காட்டியுள்ள விஷயம், நான் மேலே குறிப்பிட்டுள்ள விவேகிகளின் கொள்கைக்குச் சான்றாம். மேனாட்டு வைத்யமுறை மேற்கொள்ளும் தத்வங்கள் எவ்வாறிருப்பினும், ஸ்ரீ. உப. சடகோபாசார்ய ஸ்வாமி கூறும் ரீதியில் பராவர தத்வங்களை அறிந்திருந்த புத்திமான்களான ஆதி காலத்திய ஆயுர்வேதாசார்யர்கள், அநேக ஆராய்ச்சிகளைச் செய்து, ஆமுஷ்மிக்மான நிச்ரேயஸாதிகளுக்கு, ஐஹிகமான ஆரோக்யாதி ச்ரேயஸ் ஸாதநங்கள் அவஶ்யமானவை யென்கிற தம் அரிய அபிப்ராயங்களை விளக்கியிருந்தும், துரத்ருஷ்டவசமாய் நம் தென்னிந்திய வைதிகர்கள் அதைக் கவனித்தறியக் கருத்துக் கொள்ளவில்லை. பத்ராதிபத்யப் பொறுப்பு இப்பொழுது



தமக்கு வாய்த்திருப்பதைக் குறிப்பிட்டு, ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி விஷயதாநம் ஏதேனும் இப்பத்ரிகைக்குச் செய்யும்படி என்னிடம் ஆதரவுகாட்டி ஒருக்கால் ஆஜ்ஞாபிக்க நேர்ந்ததும் ஆயுர்வேதஜ்ஞர்களின் பாக்யமே. அவர்கள் என்னிடமிருந்து எதிர்பார்த்த விஷயம் வைதிக ஸம்ப்ரதாயத்தைப் பற்றியதா, அல்லது வைதிகமான வைத்ய முறையை அவலம்பித்ததாயிருக்கவேண்டுமா என்பதை நான் அப்பொழுது ஆலோசித்தவன் அல்லன். ஆகிலும், ஆதியில் ஆர்யர்கள் வேதாந்தம் என்கிற உபநிஷத்துக்களின் உபதேசங்களை அநுஸரித்து அறநெறிகளை அநுஷ்டிக்கவேண்டுமானால், ஆரோக்யமே அதற்கு அரும்பெரும் ஸாதநமாகு மென்றும், அவ்வாரோக்ய முறைப்படி அநுஷ்டாநமில்லையேல் வைதிக தர்மம் அனைத்தும் அலங்கோலமாய்விடு மென்றும் வற்புறுத்தித் தெளிவாக உரைத்திருப்பதை இத் தென்னாட்டிலுள்ள வைதிகர்களான நம் ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு ஒரு சிறிது விளங்கச்செய்ய, நம் பத்ராதிப ஸ்வாமியின் நியமநம் வ்யாஜமாயிற்றென்று வாசகர்களுக்கு விஜ்ஞாபித்துக் கொள்கிறேன்.

## ஆரோக்ய பரிபாலநத்தில் ஆதி கவிகளின் கொள்கை

‘அறநெறி நன்கு நிறைவேறுதல் ஆரோக்யத்தைக் காக்கும் முறையைக் காரணமாகக் கொண்டது’ என்னும் உண்மையைக் காளிதாஸ மஹாகவி “शरीरमाद्यं खलु धर्मसाधनम्” ‘ஶரீரமாத்யம் கலு தர்மஸாதநம்’ என்று எடுத்துக் காட்டியிருக்கிறார். “சித்தம் த்ருடமாயிருக்கையில், சரீரமும் குணத்ரயத்தின் நிலைமையிற் குன்றாது பலம் பெற்றிருக்கையில், தாதுக்கள் என்கிற வாத பித்த கபங்கள் கோளாறடையாது ஸம ஸ்திதியைப் பெற்றிருக்கையில், பகவத் த்யாநம் செய்வது பரகதி யடைவதற்குப் பெரிதும் உதவுகின்றது” என்று ஸ்ரீ நிகமாந்த தேசிகனும் “स्थिते मनसि विग्रहे गुणिनि धातुसाम्ये सति स्मरत्यखिलदेहिनं” ‘ஸ்திதே மநஸி விக்ரஹே குணிநி தாதுஸாம்யே ஸதி ஸ்மரத்யகிலதேஹிநம்’ என்கிற அபீதிஸ்தவ ஶ்லோகமொன்றில் தம் அபிப்ராயத்தை அருளிச்செய்திருக்கிறார். ‘தாதுஸாம்யம்’ என்கிற பதத்தை நம் ஆசார்யன் ஆயுர்வேத க்ரந்த ப்ரமாணத்தை ஆதாரமாகக் கொண்டே குறிப்பிட்டிருக்கிறார் என்பது நன்கு விளங்குகிறது. சரகர் தம் ஸம்ஹிதையில் ‘धातुसाम्य क्रिया चोक्ता तन्त्रस्यास्य प्रयोजनम्’ ‘தாதுஸாம்ய க்ரியா சோக்தா தந்த்ரஸ்யாஸ்ய ப்ரயோஜநம்’ என்று வைத்ய சாஸ்த்ரத்தின் ப்ரயோஜநம் தாதுஸாம்ய க்ரியைதான் என்பதாக க்ரந்தாரம்பத்திலேயே ஸந்தேஹமறக் குறிப்பிட்டிருக்கிறார். தாது ஸாம்யம் என்றால் ஸ்வாஸ்த்யந்தான்; அதாவது: அகில விதத்திலும் ஆரோக்யமாயிருத்தல். இதைத்தான் “समधातु-मल-क्रियः । प्रसन्नात्मेन्द्रियमनाः स्वस्थ इत्यभिधीयते”

'ஸமதாதுமலக்ரிய: । ப்ரஸன்னாத்மேந்த்ரியமனா: ஸ்வஸ்த இத்யபிதீயதே' என்று ஸுச்ருதாதிகளும் ஸுகநிலைமைக்கு லக்ஷணமாக விவரித்திருக்கிறார்கள். இந்த ச்லோகத்திலுள்ள 'ப்ரஸன்னமனா:' என்பதை 'ஹ்ருஷ்டசித்த' என்பதாலும், 'ப்ரஸன்னாத்மா' என்பதை 'விசுத்தமானஸ' என்பதாலும், 'ஸமதாதுர்' என்பதை 'தாதுஸாம்ய' என்பதாலும் வேண்டுமென்றே வேதாந்த தேசிகன் அனைவரது அபயத்தையும் ஆந்தரமாகக் கோரி எடுத்துக் கூறியதாகக் கருதுகிறேன்.

## தேஹாத்ம ஸுகத்தைக் காக்க முனிவர்களின் முயற்சி

ஆரோக்ய முறை அநபாயமாய் நிகழ்ந்து வந்தாலன்றி ஆத்மார்த்தமான ஆமுஷ்மிக விஷயங்களில் அபிநிவேசம் உண்டாக வகையில்லை யென்பதைக் கருதி அங்கிரஸ், ஜமதக்னி, கச்யபர், ஆத்ரேயர், அகஸ்த்யர், ஸாங்க்யர், புலஸ்த்யர் முதலிய ப்ரஹ்மஜ்ஞாந நிதிகளான முநீச்வரர்கள், முன்பு இமாலயத்தின் அடிவாரத்தில் அகில ப்ரஜைகளுடையவும் ஆரோக்ய முறைகளை நிலைநிறுத்தும் உபாயங்களை ஆலோசிப்பதற்காகப் பெரியதோர் ஸபை கூடியதாகக் கூறி, அக்நிவேசர் வர்ணித்திருக்கும் வகையானது பொதுஜந ஸேவையிலும் பராவர தத்வங்களிலும் பண்டைக் காலத்திய பெரியோர்களுக் கிருந்த நிரதிசயமான நிர்வ்யாஜ ச்ரத்தையையும், நிருபமமான நாகரிகத்தின் நேர்மையையும் நிரூபிப்பதா யிருக்கிறது. "மனிதர் இம்மையிலும் மறுமையிலும் மேன்மையுறக் கருவியான தவம், உபவாஸம், கல்வி, ப்ரஹ்மசர்யம், வ்ரதம், ஆயுள் ஆகியவற்றிற்கு இடையூறாக நோய்கள் பல தோன்றியதை நோக்கி, ப்ராணிகளிடம் பெரிதும் இரக்கங்கொண்டு, ரிஷீச்வரர்கள் புநிதமான நோக்கத்துடன் பூர்வம் பரிசுத்தமான இமாலய ப்ரதேச மொன்றிற் கூடி யமர்ந்து, அறம் பொருள் இன்பம் வீடென்கிற புருஷார்த்தங்களுக்கு அத்யுத்தம ஸாதநமாயுள்ள ஆரோக்யத்தையும், ஆயுளையும், அவற்றால் இஹ பரங்களிற் பெறக்கூடிய பெரும் பேறுகளையும், கொள்ளையடிக்கத் தோன்றிய கொடிய நோய்களைத் தடுக்கவும் பரிஹரிக்கவும் பரமோபாயம் யாதென்று பரஸ்பரம் விஷயங்களை விளக்கிக் கூறி ஆலோசித்து, ஆயுர்வேத க்ரந்தங்களைத் தாம் முடிவாகத் தெரிந்து கொண்ட தத்வங்களின்படி மிக ப்ரமுகர்களான ருஷிகளைக் கொண்டு இயற்றி வைத்தனர்" என்று "विघ्नभूता यदा रोगाः प्रादुर्भूताः शरीरिणाम् । तपो-ध्ययन..." "விக்னபூதா யதா ரோகா: ப்ராதுர்பூதா: சரீரிணாம் । தபோத்யயந......" ஆகிய பன்னிரண்டு ச்லோகங்களால் ஸூத்ரஸ்தாநாரம்பத்தில் அக்நிவேசர் மொழிவது ஆஸ்திகர் மனத்தைக் கவரும். அம்மஹா ஸபைக்கு விஜயம் செய்திருந்தோர் முக்யமாக ஐம்பத்தைந்து முநீச்வரர்கள். மற்றும் குறிப்பிட முடியாத நூற்றுக்கணக்கான



மஹர்ஷிகளும் வந்து கூடி யிருந்தனர். तथा चान्ये महर्षयः । ब्रह्मज्ञानस्य निधयः समेताः" 'ததா சான்யே மஹர்ஷய: । ப்ரஹ்மஜ்ஞாநஸ்ய நிதய: ஸமேதா:' என்றவாறு அங்கு மொழிந்துள்ள வரலாறானது அச்சபையின் ப்ராதாந்யத்தையும், அம் மாமுனிவரது மஹாஸபை விமர்சம் செய்து நிர்ணயித்த விஷயத்திற்குள்ள ப்ராமாண்யத்தையும் ப்ரகாசப்படுத்துகிறது. உத்தம புருஷர்களான அம்முனிவர்கள், உலகத்தோர் இம்மை மறுமைகளிற் சுகம் பெறுவதற்கு இன்றியமையாத உபாயங்களை நூல்களின் வாயிலாக இயற்றி அளித்துவிட்டு, என்றைக்கும் நமது நன்றிக்கு நற்பாத்ரமாயிருந்து மறைந்தனர்.

## ஆயுர்வேதமும் வேதாந்தமும்

ஆர்யர்கள் உவந்த ஆயுர்வேதத்தை வேதாந்திகள் ஆதரிக்க வேண்டியதற்கு அவச்யமான ஹேதுக்கள் அநேகம். வேதங்கள் பெரும்பாலும் பரலோகஹிதமான விஷயங்களையே விஸ்தாரமாக உபதேசிப்பவை. ஆகவே அவை புநிதமானவை யென்பதைப் புராதந வைத்ய சாஸ்த்ரவல்லோர் உட்படப் புறக்கணிப்பார் எவருமில்லை. வேதாங்கங்களில் ஒன்று ஆயுர்வேதம். 'ऋग्वेदस्यायुर्वेदमाहु पवेदम्' 'ருக்வேதஸ்யாயுர்வேதமாஹுருபவேதம்' என்று ருக் வேதத்திற்கு உபவேத மெனவும் கருதப்படும் இச் சாஸ்த்ரம், இவ்வுலகில் உயிர் வாழுங்கால் உடல் வன்மையுற்று ஆயுள் அபிவ்ருத்தி யடையவும், ஆமுஷ்மிகத்தில் ஆத்மா உயர்கதி பெறவும் உதவுவதால், இது உபய லோக ஹிதங்களை உபதேசிப்பது. ஆகவே இச்சாஸ்த்ரம் புண்ய தமமென்று "तस्यायुषः पुण्यतमो वेदो वेदविदां मतः । उच्यते यन्मनुष्याणां लोकयोरुभयोर्हितः" 'தஸ்யாயுஷ: புண்யதமோ வேதோ வேதவிதாம் மத: । உச்யதே யன்மநுஷ்யாணாம் லோகயோருபயோர்ஹித: ॥' என்கிற ச்லோகத்தினால் பதஞ்ஜலியின் அபராவதாரமாகக் கருதப்படும் சரகர் கூறி, இது வேத வித்துக்களின் கொள்கை யென்றும் விளக்கி யிருக்கிறார். "अत्रायत्तं ऐहिकमामुष्मिकं च श्रेयः" 'அத்ராயத்தம் ஐஹிகம் ஆமுஷ்மிகம் ச ச்ரேய:' [இம்மையிலும் மறுமையிலும் இனிது பெறக்கூடிய பேறுகள் இச்சாஸ்த்ரத்திற்கு அதீநமானவை] என்று தந்வந்தரி ஸுச்ருதருக்கு உபதேசிக்கிறார்.

சரீரத்திற்கும் ஆத்மாவுக்கும் இயற்கையிலுள்ள ஸம்பந்தத்திற்கு இன்றியமையாக் குறியான ஆயுஸ் என்பதன் ஸ்வரூபத்தை ஆராய்ந்தறியாமல் ஆத்மார்த்த விஷயங்களில் வைதுஷ்யம் பெறுவது எங்ஙனம்? ஆயுர்வேதம் விவரித்துள்ளபடி ஆயுளின் தத்வத்தை அலசிப் பார்க்கையில், ஆத்ம தத்வங்களை உபதேசிக்கும் வேதாந்தார்த்தங்களை ஆயுர்வேதாசார்யர்கள் ஸாங்கோபாங்கமாய், அநுபவ ரீதியாய், ஸம்ப்ரதாய முறையாய், எவ்வாறு

ஆராய்ந்து உணர்ந்து விஷயங்களை விளக்கி யிருக்கிறார்கள் என்பது தெரியவரும். இதற்கு ஆதாரமான க்ரந்த பாகங்களை யெல்லாம் எடுத்தெழுத இங்கு இடமில்லை. ஆனால் ஆயுர்வேதம் அநேக ஔஷத முறைகள் அடங்கிய சுஷ்கச் சுவடிக ளென்று நூல்களைப் பாராமலே நினைத்திருக்கும் நமது ஸம்ப்ரதாயஸ்தர்கள் சிலர், ஸ்வாஸ்த்ய ஸம்ரக்ஷணத்தையே முதற் கோட்பாடாகக் கொண்ட ஆயுர்வேத க்ரந்தங்களில் அடங்கிய ஆரோக்ய ஸாதந ப்ரகரணங்களைக் கருத்துடன் படித்துப் பார்த்தால், ஆயுராரோக்யாபிவ்ருத்திகளைப்பற்றி மாத்ரமல்ல, அனைவரும் அறிந்து அநுபவிக்கக்கூடிய வகையில் ஆத்யாத்மிகமான அம்சங்களையும் அழகாக அறிவிக்கக் கூடியவை ஆயுர்வேத க்ரந்தங்கள் என்றுணர்ந்து மகிழ்வர். "**स्वस्थातुरपरायणमिदं शास्त्रम्**" 'ஸ்வஸ்தாதுர பராயணமிதம் சாஸ்த்ரம்' என்றும், "**स्वस्थस्य स्वास्थ्यरक्षणम्, आतुरस्य व्याधिप्रशमनं चास्य तन्त्रस्य प्रयोजनम्**" 'ஸ்வஸ்தஸ்ய ஸ்வாஸ்த்ய ரக்ஷணம், ஆதுரஸ்ய வ்யாதிப்ரசமநம் சாஸ்ய தந்த்ரஸ்ய ப்ரயோஜநம்' என்றும், பலமுறை பேள-சரகாதி ஸம்ஹிதைக ளெல்லாம் ஆரோக்ய பரிபாலநத்திற்கான விதி நியமங்களை விளக்குவதையே முதற் கொள்கையாகவும், ஆதுர பரிபாலநத்திற்கான முறைகளைப் பற்றி மொழிவதை அடுத்தபடியான நோக்கமாகவும் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் உலக நன்மையைக் கோரி உபதேசித்திருக்கின்றன.

## ஆரோக்யமும் இந்த்ரிய நிக்ரஹமும்

அவ்வித ஆரோக்ய ஸாதநோபாயங்களுள் இந்த்ரியங்களுடையவும் மனத்தினுடையவும் ஆசாபாசங்களை அளவுக்கு மீறாது அடக்கி ஆள்வதையே சரகாதி மஹர்ஷிகள் மிக ப்ரசஸ்தமான ப்ரதமோபாயமாகக் கருதி விளக்கி யிருக்கின்றனர். இந்த்ரியங்களின் இயக்கங்களை முறை தவறாது ஆள்வதற்கான உபாயங்களை உபதேசிப்பதற்கென்று ச்லோக ஸ்தாநாரம்பத்தில் 'இந்த்ரியோபக்ரமணீயம்' என ப்ரத்யேகமாக ஓர் அத்யாயத்தைச் சரகர் இயற்றி யிருக்கிறார். உடலை ஆரோக்யமாகக் காத்து, ஆத்மாவையும் உஜ்ஜீவிக்கச் செய்யவேண்டுமானால், இந்த்ரியங்களை ப்ரக்ருதி பாவத்திற் கட்டியாண்டு, * பஞ்சபஞ்சக ஸ்வரூபங்களையும், மநஸ்ஸின் தத்வத்தையும், விமர்ச பூர்வகமாக விளங்கத் தெரிந்துகொள்வது முதற் கார்யம் எனப்படுகிறது. இந்த்ரியங்களைப் பற்றிய ஸூக்ஷ்மாம்சங்களை

---

*பஞ்ச-பஞ்சகம்—(1) பஞ்சேந்த்ரியங்கள், (2) பஞ்சேந்த்ரிய த்ரவ்யங்கள், (3) பஞ்சேந்த்ரியாதிஷ்டாநங்கள், (4) பஞ்சேந்த்ரியார்த்தங்கள், (5) பஞ்சேந்த்ரிய புத்திகள் என்பனவாம்.



இங்கு விவரிக்க இயலாவிடினும், மநஸ்ஸின் ‡ தன்மையைப் பற்றி மாத்ரம் மிகச் சிறிதேனும் மொழிவது அவச்யமாகிறது. ஏனெனில்: ரூப ரஸாதி விஷயங்களை விளங்க க்ரஹிக்க வெவ்வேறு தனிக் கருவிகளான நேத்ராதிகள் நமக்கு அமைந்திருக்கின்றன. அதீந்த்ரியமான மநஸ்ஸோ சிந்தனை, த்யாநம், ஸங்கல்பம் முதலிய தனக்கேற்பட்ட ப்ரத்யேக விஷயங்களில் ப்ரவ்ருத்திக்கவேண்டி யிருப்பதுடன், ப்ரதி இந்த்ரியத்தின் விஷயத்திலும், அப்போதைக்கப்போதும், சில ஸமயம் அநுஸ்யூதமாகவும் அவதாநம் செலுத்துவது அவச்யமா யிருப்பதால், ஒரு புருஷனுடைய அந்தஃகரணத்திலிருந்து ஒவ்வோர் இந்த்ரியத்தினூடே நாநாமுகமாக மநோவ்ருத்திக்கு ஏககாலத்திலும் அடுத்தடுத்தும் ப்ரவ்ருத்தி உண்டாவதால், அதன் கார்யம் அஸாதாரணமானது எனப்படுகிறது. "**शरीरं सत्त्वसंज्ञं च व्याधीनामाश्रयो मतः**" 'சரீரம் ஸத்வஸம்ஜ்ஞம் ச வ்யாதீநாமாச்ரயோ மத:' என்று உடலும் உள்ளமும் நோய்களுக்கு ஆதாரமாவதால், ஸத்வம் என்கிற மநஸ்ஸைப் பற்றி இச்சாஸ்த்ரத்தில் சர்ச்சை செய்யவேண்டி யிருக்கிறது. ஸத்வத்தின் ப்ரவ்ருத்தி அடிக்கடியும் அநேக விதமா யிருப்பதைக் கருதி, சேதநா தாதுவான புருஷன் ஒருவனாயினும், சைதந்ய வ்யஞ்ஜகமான சித்தமும் அநேகம் எனப்படுகிறது. "**स्वार्थेन्द्रियार्थसङ्कल्प व्यभिचरणात् अनेकमेकस्मिन् पुरुषे सत्त्वम्**" 'ஸ்வார்த்தேந்த்ரியார்த்த ஸங்கல்ப வ்யபிசரணாத் அநேகமேகஸ்மிந் புருஷே ஸத்வம்' என்கிறார் அக்நிவேசர். ராஜஸ ஸத்வம், தாமஸ ஸத்வம், சுத்த ஸத்வம் என்கிற வகையிலும் வெவ்வேறு குண யோகங்களாலும், இக்குணங்களின் ஸம்யோக ரீதியில் ஏற்படும் தாரதம்ய விகல்பனைகளாலும் அந்தஃகரணத்திற்கு அநேகத்வம் கற்பிக்கப்படுகிறது. இந்த்ரியங்கள் தனித் தனியாகவோ சேர்ந்தோ விஷயங்களிற் ப்ரவ்ருத்திக்கும்போது மனத்தை முன்னிட்டுக்கொண்டு முயன்றாலன்றி அததற்குற்ற விஷயத்தை விளங்க க்ரஹிக்க இயலாதாகையால், சாரீர மாநஸிக வ்யாதிகளைத் தடுக்க இந்த்ரியங்களைப்போல் மனத்தை முக்யமாக ஊக்கங் குன்றாது காக்கவேண்டும்.

## புத்தி தத்வமும் இந்த்ரிய ஜயமும்.

புத்தி யென்னும் மற்றொரு தத்வத்தைப் புறக்கணித்து ஆரோக்ய ஆத்யாத்மிக விஷயங்களை அறியப் புகுவது அஸாத்யம். உடலைக் காக்கவும்,

---

‡ அந்தஃகரணம் (ஆந்தரமான இந்த்ரியம்) எனப்படும்; மநஸ் அதீந்த்ரியமானது; சேதநாவ்ருத்திக்கு வ்யஞ்ஜக மானதால் சித்தம் அல்லது சேதஸ் எனப்படுகிறது. இது சேதநாதாதுவான ஆத்மாவுக்கும் விஷயங்களுக்கும் ஆயத்தமாயிருந்து சேஷ்டிக்குந் தன்மையது. வைத்ய தந்த்ரத்தில் சேதஸ்ஸானது 'ஸத்வம்' என்கிற ஸம்ஜ்ஞையைப் பெறுகிறது.

ஆத்மாவை உஜ்ஜீவிக்கச் செய்யவும் உற்ற உபகரணங்களாய்ப் பாஹ்யேந்த்ரியங்களையும் அந்த:கரணத்தையும் அமைத்து, இவ்விந்த்ரியங்களையும் ஜீவனையும் இணைக்கும் அபூர்வமான அதீந்த்ரியக் கருவியாய் புத்தியையும் (இந்த்ரிய புத்தி-மநோபுத்திகளை) ஈஸ்வரன் இயற்றியிருக்கும் விந்தையைப்பற்றி விமர்சம் செய்து, வைத்ய சாஸ்த்ர ப்ரவர்த்தகர்கள் அத்யாத்ம த்ரவியங்களையும் குணங்களையும் கூறி, அவ்வகையான அத்யாத்ம த்ரவ்யாஸ்ரிதமாய், சுபாசுபங்களிற் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு ஹேதுவாய் நிகழும் கர்மம் எதுவோ அதை ஒழுங்காக நிறைவேற்றவே இச்சாஸ்த்ரத்திற்குப் ப்ரபஞ்சத்தில் ப்ரவ்ருத்தி ஏற்பட்டதென்றும், 'அச்சாஸ்த்ரமே புத்தியின் பெருக்கத்தால் விவேகத்தின் விரிவால் உடலை உரம்பட ஆரோக்யமாகச் செய்யவும், அதனால் உலக நன்மைக்கு உள்ள ஸேவை செய்யவும், அஹங்கார மமகாரங்களற்ற மனத்துடன் புருஷன் இறுதியிற் பெரும்பேறு பெறவும் முற்றிலும் ஏற்ற சாஸ்த்ரம் என்றும், "पुण्यतमम्, आयुःप्रकर्षकरम्, ऊर्जस्करम्, आत्मनश्चानुत्तमोपकारकं शाश्वतं शास्त्रं मत्तः श्रोतुमर्हन्ति भवन्तः" 'புண்யதமம் ஆயு:ப்ரகர்ஷகரம், ஊர்ஜஸ்கரம் ஆத்மநஶ்சாநுத்தமோபகாரகம் ஶாஶ்வதம் ஶாஸ்த்ரம் மத்த: ஶ்ரோதுமர்ஹந்தி பவந்த:' என்றவாறு ரஸாயந பாதாத்யாயத்தில் சரகர் விவரித்திருக்கும் விஷயம் கேவல வேதாந்திகளாலும் விரும்பத் தக்கதாம். விஜ்ஞாநாதிகளால் விசேஷ ஸம்ஸ்காரத்தையும் வலிமையும் பெற்ற புத்தியினால் வசப்படுத்தப்பட்ட மநஸ் தேஹமாகும் நகரத்திற்கு அரசனெனக் கூடிய ஜீவாத்மாவினால் இந்த்ரியங்களாகும் ஊழியர்களை அடக்கியாண்டு, அவற்றைக் கொண்டு அரும்பெரும் கார்யமான அத்யாத்ம தத்வத்தைக் கடைப்பிடிக்க அதிகாரி யாக்கப்படுவதாக அடியிற் குறிக்கப்படும் ஆநந்தராயமஹியின் ச்லோகம் வைத்யர்களுக்கிருந்த வேதாந்த தத்வ விவேகத்தை விளக்கும்.

उद्दामबुद्धिविभवेन मनस्तु तत्र
विज्ञानशर्मसचिवेन वशीकृतं सत् ।
कार्ये महत्यधिकृतं हितकारि राज्ञः
सर्वात्मनाप्यनुसरत्यधुना तमेव ॥ (जीवानन्दनम्)

'உத்தாமபுத்திவிபவேந மநஸ்து தத்ர
விஜ்ஞாநஶர்மஸசிவேந வஶீக்ருதம் ஸத் ।
கார்யே மஹத்யதிக்ருதம் ஹிதகாரி ராஜ்ஞ:
ஸர்வாத்மநாப்யநுஸரத்யதுநா தமேவ ॥'

(ஜீவாநந்தநம்)



சக்ஷுராதி இந்த்ரியங்களும், சித்தமும், அததற்குற்ற விஷயத்துடன் *அதியோக-அயோக-மித்யா யோகங்களைப் பெற்றால், அவை விதம்விதமான விக்ருதியை—அதாவது: இயற்கைக்கு விரோதமான வெவ்வேறு அஸ்வாஸ்த்ய நிலைமைகளை—நியமேந பெற்று, அவ்வவ்விந்த்ரியத்திற்கு ஸம்பந்தமான புத்தியின் கோளாறுக்குக் காரணமாவது இயல்பு. அவை அர்த்தங்களென்கிற விஷயங்களுடன் ஸமயோகத்தைப் பெற்றிருந்தால் அவ்விந்த்ரியங்களும் மனதும் ப்ரக்ருதி பாவத்தில்—அதாவது: இயற்கை நிலைமையில்—இருந்துகொண்டு, அததற்குற்ற புத்தி தத்வத்தைப் புஷ்கலமாகவும் நிஷ்களங்கமாகவும் இருக்கச்செய்யும். எவ்விதத்திலும் நிலைகுலையாத் தன்மையிலுள்ள இந்த்ரியங்களையும் மனத்தையும் அவ்வித ஸ்வாஸ்த்ய நிலைமையிலேயே நிலைக்கச் செய்வதற்காக அடியிற் கூறப்படும் உபாயங்களை உறுதியாகப் பின்பற்றி நடக்கவேண்டும்: "தேஹாத்ம ஹிதத்தைத் தேடும் அனைவரும் எப்பொழுதும் நிகழ்த்தும் பணியில் முழு நினைவு வைத்து ஸத்வ்ருத்தத்தையே அநுஷ்டிக்கவேண்டும். இந்த்ரியங்களுக்கு முற்றிலும் § ஸாத்ம்யமாயுள்ள அர்த்தங்களென்கிற விஷயங்களோடு ஸம்பந்தமிருக்கப் பார்க்கவேண்டும். புத்தியினால் புலன்களைப் பராமரித்தவாறு, செய்யப்புகும் காரியத்தை அம்சம் அம்சமாக

---

* அதியோகம்—மிதத்தை மீறிய யோகம். அயோகம்—தேவைக்குக் குறைந்த அளவான யோகம். இதுவே ஹீநயோகம் எனவும் கூறப்படும். மித்யா யோகம்—விபரீத யோகம். யோகம் என்றால் ஸம்பந்தம். [உ—ம். ஒரு நேத்ரேந்த்ரியத்தை இதற்கு த்ருஷ்டாந்தமாய் எடுத்துக் கொள்வோம். மிகவும் மந்தமான வெளிச்சத்தில், அல்லது பெரும்பாலும் இருட்டான இடத்தில், த்ருஷ்டிக்குக் கஷ்டங் கொடுத்து வஸ்துக்களை அல்லது அக்ஷராதிகளை ஊன்றிப் பார்த்தல் நேத்ரத்திற்கு ரூபத்துடன் அயோகம் எனப்படும். கடும் ப்ரகாசத்தைப் பார்ப்பதும், ஜ்வலிக்கும் வஸ்துக்களை நெடுநேரம் நோக்குவதும், அவ்விந்த்ரியத்திற்கு ரூபத்துடன் அதியோகம் எனப்படும். ஓர் உருவம் பல்வேறு உருவங்களாகவோ, ஒரு வஸ்து வேறுவித வஸ்துவாகவோ, வேறுவித நிறமாகவோ, த்ருஷ்டிக்கு மாறுபட்டுப் புலப்பட்டால் அக்கோளாறு மித்யா யோகம் எனப்படும்.] •

§ ஸாத்ம்யம்—(ஆத்மநே ஹிதம்) ஸ்வபாவமாகவோ, பழக்க வழக்கங்களாலோ, எவருக்கு ஏது அநுகூலமாய்விட்டதோ அது ஸாத்ம்யம். அது சேஷ்டாஸாத்ம்யம், த்ரவ்ய (ஆஹார) ஸாத்ம்யம் என்று இருவகைப்படும். சுருங்கச் சொன்னால் தேஹேந்த்ரிய மநஸ்ஸுகளுக்கு அநுகூலமாயிருப்பது ஸாத்ம்யம் அல்லது உபஶயம் எனப்படும்.

ஹேயோபாதேய விமர்ச பூர்வமாகப் அலசிப் பார்த்து அவதாநத்துடன் செய்யவேண்டும். அவ்வாறு அநுஷ்டித்தலானது ஆரோக்யாபிவ்ருத்தி, இந்த்ரிய ஜயம் என்னும் இரு பெரும்பேறுகளை ஒருமிக்க நிகழ்த்திவைக்கும். —"तस्मादात्महितं चिकीर्षता सर्वेण सर्वं सर्वदा स्मृतिमास्थाय सद्वृत्तमनुष्ठेयम्। तद्ध्यनुष्ठानं युगपत् संपादयत्यर्थद्वयं आरोग्यं इन्द्रियविजयं च।" 'தஸ்மாதாத்மஹிதம் சிகீர்ஷதா ஸர்வேண ஸர்வம் ஸர்வதா ஸ்ம்ருதிமாஸ்தாய ஸத்வ்ருத்தமநுஷ்டேயம். தத்த்யநுஷ்டாநம் யுகபத் ஸம்பாதயத்யர்த்தத்வயம் ஆரோக்யம் இந்த்ரியவிஜயஞ்ச' என்றவாறு சரகர் இந்த்ரியோபக்ரமணீயாத்யாயத்தில் விவரித்துள்ள ஸத்வ்ருத்த ஸம்பந்தமான வாக்யங்கள் விவேகிகளால் விரும்பிப் படிக்கத் தகுந்தவை.

## ஆரோக்யத்திற்கான ஸதாசாரங்கள்.

அவ்வத்யாயத்தில் அனைவரும் ஸதாசாரங்களைச் சரிவரவே நடத்தி வந்தாலன்றி, ஆத்மார்த்தங்களை மாத்ரமல்ல: ஆரோக்ய நிலைமையும் நிரந்தரமாக நிலைநிறுத்திக் கொள்வதற்கியலாதெனக் கருதி வெகு விஸ்தாரமாக இஹபர ஸாதநங்களான ஸத்வ்ருத்தங்களை யெல்லாம் ஸகலரும் அறியுமாறு சரகர் விவரித்திருக்கிறார். அவற்றுள் சிலவற்றின் மொழிபெயர்ப்பை மாத்ரம் இங்கு எடுத்துக் கூறுகிறேன். "तस्मात् सद्वृत्तमखिलेनोपदेक्ष्यामः" 'தஸ்மாத் ஸத்வ்ருத்தமகிலேநோபதேக்ஷ்யாம:' என்று ஆரம்பித்து, "தேவர்களையும் பசுக்களையும் அந்தணரையும் ஆசார்யர்களையும் தொழவேண்டும்" என்பதை முதலிற் கூறும் ஆயுர்வேதாசார்யர்கள் ஆஸ்திக்யத்திலும் மனோநிலைமையிலும் எவ்வளவு மேம்பட்டவர்கள் என்பதை நமது ஸம்ப்ரதாயஸ்தர்கள் சிந்தித்துப் பார்ப்பாராக. "தினத்திற்கு இருமுறை ஸ்நாநம் செய்யவேண்டும். நாசி செவி நேத்ரம் குதம் முதலிய மலாயதநங்களென்கிற அவயங்களும் பாதங்களும் நிர்மலமாக அடிக்கடி அலம்பிச் சுத்தமாக வைத்துக்கொள்ளப்படவேண்டும். தலைமயிர், மீசை, நகங்கள் முதலியவற்றைப் பக்ஷத்திற்கு மூன்று முறை க்ஷௌராதிகளால் சுத்தமாக்கவேண்டும். விருப்பத்தக்க வேஷமுள்ளவனாய், விடுத்து உலர்த்திப் பரிசுத்தமாக்கிய தலைமயிர் உள்ளவனாய், சிரம் செவி நாசி பாதங்கள் இவற்றில் தைலம் தேய்த்து அநுதினமும் அப்யங்கம் செய்பவனாய், நலங்காத நல்லுடை யுடுப்பவனாய் இருந்துவரவேண்டும்." என்கிற இவைமுதலிய ஆரோக்யாசாரங்களை, "द्वौ कालावुपस्पृशेत्। मलायतनेष्वभीक्ष्णं पादयोश्च वैमल्यमादध्यात्। त्रिः पक्षस्य केश-श्मश्रुरोम-नखान् संहारयेत्। साधुवेषः प्रसाधितकेशो मूर्धश्रोत्र-घ्राण-पाद तैलनित्यो नित्यमहतवासाः स्यात्।" 'த்வௌ காலாவுபஸ்ப்ருசேத். மலாயதநேஷ்வபீக்ஷ்ணம் பாதயோச்ச வைமல்யமாதத்யாத். த்ரி: பக்ஷஸ்ய



கேசச்மச்ருரோம நகாந் ஸம்ஹாரயேத். ஸாதுவேஷ: ப்ரஸாதிதகேசோ மூர்த்தச்ரோத்ர க்ராண பாத தைலநித்யோ நித்யமஹதவாஸா: ஸ்யாத்' பூர்வபாஷியாய், ஸுமுகனாய், ஆபத்பந்துவாய், உதாரசீலனாய், ஹித மித வாதியாய், தர்மாத்மாவாய், ஹேதுவிலன்றிப் பலனிற் பொறாமை யுறாதவனாய், சிந்தை யற்றவனாய், தீரனாய், உத்ஸாஹியாய், கருணை யுள்ளவனாய், ஆஸ்திகனாய் இருத்தல்வேண்டும். வெளியிற் செல்லுங்கால் குடை, கைத்தடி, தலைப்பாகை, பாதரக்ஷை முதலியவற்றைத் தரித்துகொள்ளவேண்டும்."

"ப்ராணிகளனைத்தையும் பந்துவைப்போல் பராமரிக்கவேண்டும். சினந்தவர்களை நயம்படப் பேசியும், பயந்தவர்களைத் தேறுதல் கூறியும், துன்புற்றவர்களை அன்புடன் ஆதரித்தும் அநுஸரிக்கவேண்டும். ஸத்யஸந்தனாய், ஸமாதாந ப்ரியனாய், பிறர் கூறும் கடுஞ்சொற்களைப் பொறுக்குமியல்பினனாய் இருத்தல் வேண்டும். "सर्वप्राणिषु बन्धुभूतः क्रुद्धानामनुनेता, भीतानामाश्वासयिता, दीनानामभ्युपपत्ता, सत्यसन्धः, सामप्रधानः, परपुरुषपरुषवचनसहिष्णुश्च स्यात्।" 'ஸர்வப்ராணிஷு பந்துபூத: க்ருத்தாநாமநுநேதா, பீதாநாமாச்வாஸயிதா, தீநாநாமப்யுபபத்தா, ஸத்யஸந்த:, ஸாமப்ரதாந:, பரபுருஷபருஷவசநஸஹிஷ்ணுச்ச ஸ்யாத்' "பொய் பேசாதீர்கள். பிறர் பொருளைக் கவராதீர்கள். பரஸ்த்ரியைப் பாராதீர்கள். அபகாரிகளுக்கும் அபகாரம் புரியாதேயுங்கள். பிறர்மீது குற்றங் கூறாதீர். அதார்மிகர்களுடனும், அரசர்மீது வைரம் பாராட்டுபவருடனும், பித்தருடனும், துஷ்டருடனும், அற்பருடனும் அணுகிப் பழகாதீர்கள். "नोच्चैर्हसेत्। न शब्दवन्तं मारुतं मुञ्चेत्। नासंवृतमुखो जृम्भां क्षवथुं हास्यं वा प्रवर्तयेत्। न नासिकां कुष्णीयात्। न दन्तान् विघट्टयेत्। न विगुणमङ्गैश्चेष्टेत। ज्योतींषि, अनिष्टं अशस्तं च नाभिवीक्षेत। नोत्तमैर्विरुद्ध्येत। नानार्यमाश्रयेत्।" 'நோச்சைர்ஹஸேத். ந சப்தவந்தம் மாருதம் முஞ்சேத். நாஸம்வ்ருதமுகோ ஜ்ரும்பாம் க்ஷவதும் ஹாஸ்யம் வா ப்ரவர்த்தயேத். ந நாஸிகாம் குஷ்ணீயாத். ந தந்தாந் விகட்டயேத். ந விகுணமங்கைச்சேஷ்டேத. ஜ்யோதீம்ஷி, அநிஷ்டம் அசஸ்தம் ச நாபிவீக்ஷேத. நோத்தமைர்விருத்த்யேத. நாநார்யமாச்ரயேத்.'

மேலும் ஆஹார முறையைப்பற்றி ஆங்குக் கூறியுள்ள விதிகளிற் சிலவற்றையும் கவனிப்போம். "ஸ்நாநம் செய்யாமலும், சுத்த வஸ்த்ரம் தரிக்காமலும், பகவானுக்கு நிவேதநம் பண்ணாமலும், அதிதிகளுக்கு இடாமலும், கை கால் முகங்களைக் கழுவிக்கொள்ளாமலும், மனத் துயரங்களை மறக்காமலும், பசியை உணராமலும், ஏற்ற ஸமயம் வராமலும், போஜந பாத்ரத்தைப் பரிசுத்தமாக்காமலும், நிமிர்ந்து ருஜுவாய் உட்காராமலும்

அந்நத்தை யுண்ணலாகாது. பக்வமாகாத உணவையும், பழகிப் பதனழிந்த உணவையும், ப்ராணிகளாற் பரிசிக்கப்பட்ட உணவையும் உபயோகிக்கக் கூடாது.”

“மல மூத்ராதிகளின் வேகங்களை அடக்கிக்கொண்டு வேறு வேலைகளில் ப்ரவ்ருத்திக்கலாகாது. ஜலத்திலாவது, பெரியோர்களுக் கெதிரிலாவது, ஜந ஸஞ்சார ஸ்தலங்களிலாவது, மார்க்கங்களிலாவது, ஆஹார காலங்களிலாவது, மல ஜல விஸர்க்கங்களையாவது, நிஷ்டீவந மென்கிற காசியைச் சிந்துதல் கோழையைத் துப்புதல் முதலியவற்றையாவது செய்யலாகாது.” இவ்வாறு நான் மொழிபெயர்த் தெழுதுவதினும், மூலவாக்யங்களை அப்படியே எடுத்தெழுதுவது மேலெண நினைத்து, அவற்றில் இன்னும் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன். பொதுவான ஸத்வ்ருத்தங்களில் பின்வருபவையும் சில:—“नाहंमानी स्यात्। नादक्षः। नासूयकः। न वृद्धान्, न गुरून्, न गणान्, न नृपान् वाऽधिक्षिपेत्। न चातिब्रूयात्। न कार्यकालमतिपातयेत्। नापरीक्षितं अभिनिविशेत्। नेन्द्रियवशगः स्यात्। न बुद्धीन्द्रियाणां अतिभारमादध्यात्। न च अतिदीर्घसूत्री स्यात्। न क्रोध-हर्षौ अनुविदध्यात्। न शोकं अनुवसेत्। न सिद्धौ उत्सुकं गच्छेत्। नासिद्धौ दैन्यम्। प्रकृतिं अभीक्ष्णं स्मरेत्। न कृतमिति आश्वसेत्। न वीर्यं जह्यात्। नापवादं अनुस्मरेत्। ब्रह्मचर्य-ज्ञानदान-मैत्री कारुण्य-हर्षोपेक्षा-प्रशमपरश्च स्यात्।’ ‘நாஹம்மாநீ ஸ்யாத் । நாதக்ஷ: । நாஸூயக: । ந வ்ருத்தாந், ந குரூந், ந கணாந், ந ந்ருபாந் வாதிக்ஷிபேத் । ந சாதிப்ரூயாத் । ந கார்யகாலமதிபாதயேத் । நாபரீக்ஷிதம் அபிநிவிஶேத் । நேந்த்ரியவஶக: ஸ்யாத் । ந புத்தீந்த்ரியாணாம் அதிபாரமாதத்யாத் । ந ச அதிதீர்கஸூத்ரீ ஸ்யாத் । ந க்ரோதஹர்ஷௌ அநுவிதத்யாத் । ந ஶோகம் அநுவஸேத் । ந ஸித்தாவுத்ஸுகம் கச்சேத் । நாஸித்தௌ தைந்யம் । ப்ரக்ருதிம் அபீக்ஷ்ணம் ஸ்மரேத் । ந க்ருதமிதி ஆஶ்வஸேத் । ந வீர்யம் ஜஹ்யாத் । நாபவாதம் அநுஸ்மரேத் । ப்ரஹ்மசர்ய ஜ்ஞாநதாந மைத்ரீ காருண்ய ஹர்ஷோபேக்ஷா ப்ரஶமபரஶ்ச ஸ்யாத் ।’ இவ்விதமாக ஆரோக்யாபிவ்ருத்திக்கும், ஆயுளின் வளர்ச்சிக்கும், ஆத்மா கடைத்தேறுவதற்கும் ஆதாரமான ஆர்ய தர்மங்களை விவரித்துக் கூறிவிட்டு, அம்முறைகளைத் தவறாது அநுஸரித்துவருவதன் ப்ரயோஜநத்தையும் சரகர் பின் வரும் ச்லோகங்களால் விளக்குகிறார்:—

“स्वस्थवृत्तं यथोद्दिष्टं यः सम्यगनुतिष्ठति ।
स समाः शतमव्याधिरायुषा न वियुज्यते ॥
नृलोकमापूरयते यशसा साधुसंमतः ।
धर्मार्थावेति भूतानां बन्धुतामुपगच्छति ॥



परान् सुकृतिनो लोकान् पुण्यकर्मा प्रपद्यते ।
तस्माद्वृत्तमनुष्ठेयमिदं सर्वेण सर्वदा ॥”

‘ஸ்வஸ்தவ்ருத்தம் யதோத்திஷ்டம் ய: ஸம்யகநுதிஷ்டதி ।
ஸ ஸமா: ஶதமவ்யாதிராயுஷா ந வியுஜ்யதே ॥
ந்ருலோகமாபூரயதே யஶஸா ஸாதுஸம்மத: ।
தர்மார்தாவேதி பூதாநாம் பந்துதாமுபகச்சதி ॥
பராந் ஸுக்ருதிநோ லோகாந் புண்யகர்மா ப்ரபத்யதே ।
தஸ்மாத்வ்ருத்தமநுஷ்டேயமிதம் ஸர்வேண ஸர்வதா ॥’

## வேதாந்திகளுக்கான விஜ்ஞாபநம்.

ஆரோக்ய முறையைத் தழுவியே ஆர்யர்களின் ஆசாரசீலாதிகள் ஆதியில் நிர்ணயிக்கப்பட்டன வென்பதை நிரூபிக்க, அதி ப்ராசீநமான ஆயுர்வேத ப்ரமாண க்ரந்தங்களிலிருந்து ஆதாரங்களை எடுத்து உதஹரித்து எழுதியுள்ள இவ்யாஸம், வைதிக ஸம்ப்ரதாய நிஷ்டர்களான விவேகிகளுக்கு ஆர்யவைத்யமான ஆயுர்வேத சாஸ்த்ரத்திற் சிறிதேனும் மதிப்பையும் விஸ்வாஸத்தையும் விளைவிக்குமென்று நம்புகிறேன். ஸ்ரீ வேதாந்ததேசிகன் வேதாந்த விஷயத்தை விளக்குவதற்காகச் செய்தருளிய ஸங்கல்ப ஸூர்யோதயத்திலும், க்ஷேத்ரஜ்ஞனுக்கு முக்தி யுண்டாகப் போகிற மங்களோதய ஸந்தர்ப்பத்தில், ஜீவாத்மா என்னும் பிணியாளியை வெகுதீர்க்க காலமாகப் பிடித்துப் பீடித்துவரும் பவம் (ஸம்ஸ்ருதி) என்னும் கடும் பிணியைப் போக்கி, அபவர்க்கம் என்கிற அழிவற்ற ஆரோக்ய நிலைமையை அளித்திட ஸர்வேச்வரனும் ஜகத்பிதாவுமான ஸ்ரிய: பதியே வைத்தியராயிருந்து உத்தாரணம் செய்ய உபக்ரமிக்கையில், ஹேய விஷயங்களாகிற அபத்யங்கள் நிவ்ருத்தியாய், அச்சிகித்ஸை நல்லபடி நிறைவேற வேண்டுமேயென்று விவேகன் விதர்க்காக்ராந்தனாய் சிந்திப்பதாகக் கூறும்

“भिषज्यति भवं प्रभौ पितरि शेषिणि श्रीपतौ ।
अपथ्यविनिवर्तकं किमपि भद्रमभ्यर्थये ॥”

‘பிஷஜ்யதி பவம் ப்ரபௌ பிதரி ஶேஷிணி ஶ்ரீபதௌ ।
அபத்யவிநிவர்தகம் கிமபி பத்ரமப்யர்த்தயே ॥’

இந்த பத்யமும், ஸம்ஸாரமாகும் வ்யாதியை விளக்குவதிற் பாண்டித்யம் பெற்ற மிக ப்ராதாந வைத்யனான விவேகனாய் வாத பித்த கபங்களென்னும் சாரீர தோஷங்களும், ரஜஸ் தமஸ் என்னும் மாநஸிக தோஷங்களும் அற்றுப்பட்டுப்போயின என்றவாறு பத்தாம் அங்கத்தில் வெகு அழகாக விஷ்ணுபக்தி விளம்பும்

" भवरोगैकभिषजा विवेकेन विपश्चिता ।
शमं दोषगणो नीतः शारीर इव मानसः ॥ "

'பவரோகைகபிஷஜா விவேகேந விபஶ்சிதா ।
ஶமம் தோஷகணோ நீத: ஶாரீர இவ மாநஸ: ॥'

என்கிற ச்லோகமும், நம் பரமாசார்யானை நிகமாந்த குருவுக்கு வைத்ய தந்த்ரத்திலிருந்த பரிசய விசேஷத்தையும் அபிமாநாதிசயத்தையும் அறிவிக்கின்றன.

முடிவுரை

முடிவில் விஜ்ஞாபந ரூபமாக நான் மொழிய விரும்புவ தொன்றுண்டு. நமது அநாதி ஸித்தமான ஆயுர்வேத சாஸ்த்ரத்திலன்றி, ஆங்கில வைத்ய முறையிலாகட்டும், அம்முறையைப் பயின்ற நம் நாட்டு ஸஹோதர வைத்தியர்களிட மாகட்டும், ஆஸ்திக்யக் கொள்கையோ, ஆர்யர்கள் உகந்த ஆசாரா நுஷ்டாநமோ ஏதும் உண்டென்று நமக்குத் தெரியவில்லை. ஆகிலும் மேனாட்டாரது மேம்பா டடைந்து வரும் கிறிஸ்து மதத்தை ப்ரபஞ்ச மெங்கும் ப்ரபலப்படுத்தும் வேலையைத் தலைமேற் கொண்டுள்ள பாதிரி மார்களுள் பெரும்பாலோர் வைத்யர்க ளென்பதும், அம் மதத்தைப் பாமரர்களிடங்கூடப் பரவச் செய்யும் நோக்கத்துடனேயே நம் நாட்டில் நூற்றுக்கணக்கான மிஷன் வைத்யசாலைகள் அளவற்ற பொருட் செலவில் அநேக விடங்களில் ஸ்தாபிக்கப்பட்டு நன்கு நிர்வஹிக்கப்பட்டு வருகின்றன வென்பதும், ப்ரத்யக்ஷஸித்தம். இதிலிருந்து கேவலம் ஐஹிக விஷயத்தி லேயே ஆழ்ந்துள்ள ஐரோப்பியர்கள் தம் மதம் மழுக்கங்கொள்ளாது மேலோங்கி மனித வர்க்கம் அனைத்தாலும் ஆதரிக்கப்பட்டு வேரூன்றி விளங்கவேண்டு மென்னும் ஆற்றலைப் பெற்று ஊக்கங் குன்றாது உழைக்கிறார்க ளென்பது விளங்கவில்லையா? வைதிகமான ஹிந்துமதம் இந்த நாட்டிலாவது ஹீந ஸ்திதி யடையாம லிருக்கவேண்டுமானால் இவ்வேதாந்த தீபிகையைப்போன்ற பத்ரிகையை ப்ரசுரித்தல் ஒன்று மாத்ரம் அதற்கு எவ்விதத்திலும் போதுமானதல்ல. கிறிஸ்தவ மிஷனரிகளைப்போல் நம்மவர்—முக்யமாகப் பணக்கார ஹிந்துக்கள் —பாடசாலைகளை வைத்தும், வைத்யசாலைகளை ஸ்தாபித்தும், அரிய நூல்களைச் சிறிதும் பெரிதுமாக அச்சிட்டு அழகாக வெளிப்படுத்தி யும், அநேகம் கூட்டத்தார்களை நியமித்து ஆரோக்ய முறைகளுடன் ஆர்ய ரது ஆசாரநுஷ்டாநங்களை ஆங்காங்கு அநுஸ்யூதமாகப் பிரவசநம் செய்தும். மற்றும் எல்லாத் துறைகளிலும் உத்ஸாஹத்துடன் உழைக்கவேண்டும், அவ்வித முயற்சிகளில் ஏதுமில்லாது, நமது மதமும் ஸம்ப்ரதாயமும் சால வும் அனைத்தினும் ஏற்றமானதென்று வெறுமனே வேதாந்ததீபிகை யொன் றில் மாத்ரம் இரண்டொருவர் எழுதிப் புகழ்ந்துகொள்வது 'ஏட்டுச் சுரைக்காய்' என்பதினும் வேறு பலனளிக்குமென்று நாம் எதிர்பார்ப்ப தற்கில்லை.

# மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜசார்யர்.]

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இரண்டாவது பாதம்

182. முன் பாதத்தில் சொல்லிய கர்மங்களை எவர்கள் செய்யலாம் எவர்கள் செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டது. இந்தப் பாதத்தில் அதிகாரி ஒருவனா பலரா என்று விசாரித்து, அதிகாரியின் தர்மங்கள் இன்னவைகள் என்று தீர்மானிக்கப்படுகின்றன.

183. 'ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்ககாமோ யஜேத' என்கிற வாக்யம் இருக்கிறது. இவைகளைச் செய்கிற அதிகாரி ஒருவனா? இரண்டு பேரா? அல்லது பலரா? என்று ஸந்தேகம்.

பூர்வபக்ஷம்—ஒருவன்தான் என்கிற கட்டுப்பாடில்லை. இரண்டு பேர்களும் செய்யலாம்; பலரும் செய்யலாம். ஏனென்றால்: ஸ்வர்க்ககாம: ஸ்வர்க்கத்தை ஆசைப்படுகிறவன் உத்தேச்யன். அந்தச் சொல்லில் இருக்கும் ஒன்று என்கிற ஸங்க்யையைச் சொல்வதில் கருத்தில்லை.

ஸித்தாந்தம்—நீர் சொன்னபடி இருக்கட்டும். ஆனால் 'யஜேத' (யாகத்தாலே பலனை உண்டுபண்ணுகிறான்) என்கிற சொல்லில் ப்ரத்யயத்தில் ஒன்று என்கிற ஸங்க்யை இருக்கிறது. க்ரியை (வியாபாரம்) இங்கே விதேயம்; அதற்கு ஸங்க்யை விசேஷணம். அந்த க்ரியையானது உண்டாவதற்காக மற்றக் காரகங்களைத் தேடுவதுபோலக் கர்த்தாவையும் தேடுகிறது. க்ரியை எப்படி விதேயமோ, அப்படியே அதின் வழியாய்க் கர்த்தா விதேயம். அவன் ஒன்று என்று ஏற்படுகிறது. அதைச் சொல்லுவதில் கருத்து இருக்கிறது. ஆகையால் கர்த்தா ஒருவனாகவே இருக்க வேண்டியது.

(2) சிரு கேள்வி—இங்கே க்ரியை விதேயமென்று எப்படிச் சொல்லலாம், வாக்யத்தின் பொருள்—யாகத்தாலே ஸ்வர்க்கத்தை அடை (ஸ்வர்க்கம் யாதி) என்று; அதாவது: ஸ்வர்க்கத்திற்கு யாகம் ஸாதநம் என்று காட்டப்படுகிறது. அதைச் செய்யும்படி சொல்லவில்லை. இதைத் தெரிந்தவன் அதைத்தானே செய்வன்; விதி வேண்டியதில்லை என்று. பதில்—ப்ரத்யயம் க்ரியையைச் சொல்லுகிறது. அடைவதை (ப்ராப்தியை) சொல்லவில்லை.

(3) மறுபடியும் கேள்வி—நீர் சொன்னபடி "ஸ்வர்க்கத்தை உண்டு பண்ணு" என்றே பொருள் இருக்கட்டும். அப்பொழுதும் க்ரியை விதேயமன்று. எவன் எதை ஆசைப்படுகிறானோ, அவன் அதற்கு வேண்டியதைச் செய்கிறான். ஆகையால் ஒரு பலனை ஆசைப்பட்டவன் அதை அடைவதற்கு வேண்டிய க்ரியையைத் தானே செய்கிறான். இப்படித் தானே ப்ராப்தமான க்ரியையை ப்ரத்யயத்தாலே அநுவாதம் செய்து, தாதுவின் பொருளான யாகம் ஸாதநமாக விதிக்கப்படுகிறது. ப்ரத்யயம் அநுவாதமாயிருப்பதால், அதில் இருக்கும் ஸங்க்யையைச் சொல்லுவதில் கருத்தில்லை என்பது. பதில்—யாகத்தைக் காரணமாகவுடைய பாவனையைத்தான் வாக்கியம் விதிக்கிறது. இந்தப் பொருள்தான் வாக்யத்தைக் கேட்டவுடன் தோன்றுகிறது. அதாவது—எவன் 'எனக்கு ஸ்வர்க்கம் உண்டாகவேணும்' என்று ஆசைப்படுகிறானோ, அவன் அதை யாகத்தாலே உண்டு பண்ணவேண்டியது என்று. எல்லா விசேஷணங்களுடன் கூடின பாவனை தான் விதிக்கப்படுகிறது.

(4) இன்னும் ஒரு கேள்வி—நீர் சொன்னபடி இது விசிஷ்ட விதியாகவே இருக்கட்டும். அப்பொழுதும் அது ஏற்கெனவே இருக்கிறது. எது இல்லையென்று விசாரிக்கவேண்டும். விசிஷ்டம் யாக விஷயமான க்ரியை. இதில் விசேஷ்யமான க்ரியை விதியில்லாமல் ஏற்படுகிறது. ஆகையால் யாகம் மாத்ரம்தான் விதேயம் என்று. பதில்—க்ரியை விதியில்லாமல் ஏற்படும் என்பது பிசகு. விதி வாக்யத்தைக் கேட்பதற்கு முன்னாலே ஸ்வர்க்கத்தை ஆசைப்படுகிறவன் யாகத்தைச் செய்தால் ஸ்வர்க்கம் கிடைக்கும். அதைச் செய்யாவிட்டால் அது கிடைக்காது; அது வரமும் கொடுக்காது; அது வேறு காரணத்தாலும் வராது என்று அறியவில்லை. அறியாமையால் ஸ்வர்க்கத்தை அடைய ஆசைப்பட்டாலும், அதற்காக வேலை செய்யாமலிருக்கிறான். அதைத் தெரிந்தவுடன் வேலை செய்ய ஆரம்பிக்கிறான். ஆகையால் விதேயம் யாக விசிஷ்டமான பாவனை. அதற்கு ஸங்க்யை விசேஷணம். அதைச் சொல்வதில் கருத்து உண்டு (சாஸ்—460—461)

184. கர்மங்கள் நாலுவிதம். அவை: நித்யம், நைமித்திகம், காம்யம். ப்ராதிஷித்தம் என்பன. சாஸ்த்ரம் சொன்னபடி நடக்கிறவன் அவைகள் விஷயத்தில் என்ன செய்யவேண்டியது என்று இனி விசாரிக்கப்படுகிறது.

முதலில் நித்ய கர்மங்கள்—"யாவஜ்ஜீவம் அக்நிஹோத்ரம் ஜுஹோதி, யாவஜ்ஜீவம் தர்சபூர்ணமாஸாப்யாம் யஜேத" என்று இரண்டு வாக்யங்கள். இவைகளின் பொருள்: எது வரையில் ஒருவன் உயிரோடிருக்கிறானோ, அது வரையில் அக்நிஹோத்ர ஹோமத்தைச் செய்யவேண்டியது; தர்ச பூர்ண மாஸ யாகங்களையும் செய்யவேண்டியது என்பது. யாவஜ்ஜீவம் என்பதற்குக் கருத்து என்ன? அவைகளை இடைவிடாமல் செய்யவேண்டியது என்றா என்று ஸந்தேஹம்.



பூர்வ பக்ஷம்—ஜீவநத்தை உயிரோடிருப்பதை நிமித்தமாகச் சொல்லியிருக்கிறது. நிமித்தம் இருந்தால் நைமித்திகத்தைக் கட்டாயம் செய்யவேண்டியது. ஆகையால் சொன்ன கர்மங்களைச் செய்து கொண்டேயிருக்கவேண்டியது.

(2) கேள்வி—அக்நி ஹோத்ரத்துக்கு அங்கமாகக் காலையையும் மாலையையும், தர்ச பூர்ண மாஸங்களுக்கு அங்கமாக அமாவாஸையையும் பௌர்ணமியையும் சொல்லியிருக்கிறதே; நீர் சொன்னபடி செய்தால் அங்கமிருக்காதே என்று. பதில்—இது குற்றமன்று. முக்யத்தை விட்டு விடுவதைக் காட்டிலும் அங்கத்தை விட்டு விடலாம்.

ஸித்தாந்தம்—சொன்ன காலங்கள் உபாதேயம் அல்ல; அதாவது: ஒருவனால் செய்யக் கூடியவைகள் அன்று. எப்படி ப்ரயாஜம் முதலானவைகளை அங்கமாக விதிக்கலாமோ, அப்படி அவைகளை அங்கமாக விதிக்க முடியாது. அவைகள் தானே விடும்போது கர்மங்களைச் செய்யும்படி விதிக்கிறது. அந்தக் காலங்கள் ஜீவநம் என்னும் நிமித்ததை ஸங்கோசம் செய்கின்றன. அதாவது: சொன்ன காலங்களோடு கூடிய ஜீவநம் நிமித்தம். மற்ற காலமன்று. இவ்விதமான நிமித்தத்தில் ஜீவநம் என்பது விசேஷ்யமான பாகம். அதைச் செய்வதும் முடியாது; விட்டு விடுவதும் முடியாது. அப்படியே விசேஷண பாகமான காலமும் செய்யவும் தகுந்ததன்று; விடவும் தகுந்ததன்று. அங்கத்தை விடுவது குற்றம் என்று சொல்லக்கூடாது. (அதி. 7)

185. "ஜ்யோதிஷ்டோமேந யஜேத" என்று விதிக்கப்பட்ட ஜ்யோதிஷ்டோமமானது நித்யமா என்று ஸந்தேஹம்.

பூர்வ பக்ஷம்—அது காம்யம். "ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்ககாமோ யஜேத" என்று பலனில் ஆசை சொல்லப்படுகிறது.

ஸித்தாந்தம்—"வஸந்தே வஸந்தே ஜ்யோதிஷா யஜேத" என்று இன்னுமொரு வாக்யம். ஒவ்வொரு வஸந்த ருதுவில் ஸோம யாகத்தைச் செய்யும்படி விதிக்கிறது. இதனால் நித்யம் என்று ஏற்படுகிறது. வேதத்தை அத்யயநம் பண்ணுவதற்குப் பலன், செய்யவேண்டிய யாகங்களைச் செய்யும் விதத்தை அறிவது. இது த்ருஷ்ட ப்ரயோஜநம். ஆனபோதிலும், சொன்ன யாகங்களைச் செய்வது நித்யமானதால், அதற்குக் காரணமான அத்யயநமும் நித்யம். ஆகையால் இவைகளை ருணம் (கடன்) என்று சொல்லுகிறது. (அதி-11)

186. நைமித்திக கர்மங்கள்—'ஹிரெஜ~ஹொதி; ஸ்ஹெஜ~ஹொதி' என்று இரண்டு வாக்யங்கள். தர்ச பூர்ணமாஸ இஷ்டியில் பாத்ரங்கள் உடைந்தாலும், எடுத்த ஹவிஸ்ஸிலிருந்து கீழே சிந்தினாலும், அவைகளை நிமித்தமாக வைத்துகொண்டு ஹோமம் விதிக்கப்படுகிறது. சொன்ன நிமித்தம் எப்போது வருகிறதோ, அப்போது அப்போது நைமித்திகமான ஹோமத்தைச் செய்யவேண்டும். ஆகையால் அதை ஒரே தடவை செய்கிறது என்கிற நியமமில்லை. (அதி-9)

187. ஆசார்யனைக் கண்டால், வந்தநம் பண்ணவேண்டும் என்று ஸ்ம்ருதியால் சொல்லப்பட்ட ஒரு விதி யிருக்கிறது. இந்த வந்தநத்தால் ஆசார்யனுக்கு ப்ரீதி உண்டாகிறது. இது த்ருஷ்ட ப்ரயோஜநம். ஆன போதிலும், விதிக்கப்பட்ட நியமத்தால் நியமா பூர்வம் உண்டாகிறது. ஆகையால், ஆசார்யனைப் பார்ப்பதான நிமித்தம் எப்போது உண்டாகிறதோ, அப்போதெல்லாம் நைமித்திகமான வந்தநத்தைச் செய்யவேண்டும். (அதி-10)

188. காம்ய கர்மங்கள்—பலன்களை ஆசைப்படுகிறவனால் செய்ய வேண்டியதாய் விதிக்கப்பட்ட கர்மங்கள். இவைகளை ஆரம்பிக்கவேண்டிய தில்லை. ஆரம்பித்த பிறகு, அது முடிவதற்கு முன் பலன் தானாய் கிடைத்தாலும், ஆசை போய்விட்டாலும், கர்மத்தை விட்டு விடலாமா என்று ஸந்தேஹம்.

பூர்வ பக்ஷம்—முடிக்கவேண்டாம். முடிப்பதில் ப்ரயோஜந மில்லை.

ஸித்தாந்தம்—ஆரம்பித்ததை முடிக்காதவனை வேதம் நிந்தித்து ப்ராயச்சித்தத்தை விதிக்கிறது. "யாகம் செய்கிறேன்" என்று சொல்லி ப்ராயஸ சித்தத்தை விதிக்கிறது- எவன் அதைச் செய்கிறதில்லையோ, அவன் தேவதைகளுக்கு த்ரோஹம் செய்கிறான். த்ரைதாதவீயம் என்கிற இஷ்டியைச் செய்யவேண்டியது என்று. (அதி-3) ஒரு கேள்வி—நிந்திப்பதற்குக் காரணம் பொய்சொன்னான் என்பது. உண்மையில் பொய் இல்லை; கர்மத்தைச் செய்வதாக எண்ணிவிட்டபடியால். ஆசைபோன பிறகு கர்மத்தைச் செய்வது சாஸ்த்ரத்துக்கு விரோதம். ஆகையால் முடிக்கலாமா என்று. பதில்—இப்படி யுக்தி சொல்லி, வேதத்துக்கு ப்ரமம் இருப்பதாகக் கல்பித்தால், இவ்விதமான யுக்தியை எங்கும் சொல்லலாம். அப்போது எல்லா சாஸ்த்ரமும் ப்ரமாணமாயிருப்பது போய்விடும். (சாஸ்.463)

189. கீழ்ச் சொன்ன ந்யாயம் வீடுகட்டுவது முதலான உலகத்து வ்யாபாரங்களிலும் வருமா என்று ஸந்தேஹம்.



பூர்வபக்ஷம்—வரும். வீடு கட்டுவதற்காகத் தக்ஷ ஸ்ம்ருதி (மனைசாஸ்த்ரம்) என்று ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அதற்கும் மூலம் வேதம்தான் என்று கல்பிக்கவேண்டும். ஆகையால், ஆசையோடு வீடுகட்ட ஆரம்பித்த பிறகு, ஆசை போனபோதிலும் அதை முடிக்கவேண்டும்.

ஸித்தாந்தம்—மனைசாஸ்த்ரம் வீடு நன்றாயிருப்பதற்கு ஸாதநம். நன்றாயிருப்பது த்ருஷ்ட ப்ரயோஜநம். புத்தியுள்ள யாவனோ ஒருவன் அதை எழுதி யிருக்கலாம். அதற்கு மூலம் வேதம் என்று கல்பிக்கக்கூடாது. ஆரம்பித்ததை முடிக்கவேண்டும் என்று கட்டாயமில்லை. (அதி-4)

190. ப்ரதிஷித்தமான கர்மங்கள்—ஒரு ப்ரகரணத்திலும் சேராமல் தனியாய் வாக்யங்கள்—"நகலஞ்ஜம் பக்ஷயெத், நலஶுநம், நக்ருஞ்ஜநம்" என்று இருக்கின்றன. இவற்றின் பொருள்:—சொன்ன பதார்த்தங்களைச் சாப்பிடக் கூடாது என்பது 'நபக்ஷயெத்' என்பதின் பொருள் என்ன என்பது ஸந்தேகம்.

பூர்வ பக்ஷம்—"ந" (நஞ்) என்கிற சொல் 'பக்ஷயெத்" என்கிற சொல்லில் தாதுவுக்குக் கிட்ட இருக்கிறது. ஆகையால் அத்துடன் அதற்கு ஸம்பந்தம். சாப்பிடாமை, (அபக்ஷணம்) என்பது பொருள். அதை எப்படி விதிக்கிறது? ஆகையால் அபக்ஷணம் என்பதற்குச் சாப்பிடுகிறதில்லை என்கிற ஸங்கல்பம் பொருள்கொள்ளவேணும். அது விதிக்கப்படுகிறது. அந்த ஸங்கல்பத்துக்கு ஸ்வர்க்கம் பலன் என்று கீழே சொன்னபடி கொள்ள வேண்டும்.

ஸித்தாந்தம்—ஒரு பதத்தின் ஒரு பாகமான தாதுவுக்கு வேறு பதத்துடன் ஸம்பந்தம் என்று சொல்லக்கூடாது. ஆகையால் விதியைச் சொல்லும் சொல்லுக்கு 'ந' என்பதுடன் ஸம்பந்தம். அப்போது ஒருவனுக்கு தானாகச் சாப்பிடவேணும், என்று எண்ணமுண்டாகி, அதற்காக வேலை செய்வதைத் தடுக்கிறது என்பது வாக்யத்துக்குப் பொருளாகும். இப்படித் தடுப்பது வீணன்று. அதனால் நரகத்தில் விழுவது தடுக்கப்படுகிறது. பூர்வபக்ஷத்தில் என்ன குற்றமென்றால், ஸங்கல்பம் என்பது சொல்லப்படவில்லை. அதைக் கல்பித்து, அதற்குப் பக்ஷணம் என்கிற சொல்லுக்கு லக்ஷணை பண்ணவேண்டியதாயிருந்தது. இவைகள் ஸித்தாந்தத்தில் இல்லை. (அதி-5)

சாஸ்த்ர தீபிகைப்படி பூர்வபக்ஷமும் ஸித்தாந்தமும். நஞ்~க்கும் விதிக்கும் நடுவில் பக்ஷண மிருக்கிறது. ஆகையால் அவைகளுக்கு ஸம்பந்தமில்லை.

விதிக்கும் ஸம்பந்தம். நஞ் ஈக்ஷேத என்பதுடன் வாக்யத்தால் சேர வேண்டும். ச்ருதியைக் காட்டிலும் வாக்யம் துர்பலம்.

ஸித்தாந்தம்—பூர்வ பக்ஷத்தில், நஞ் ஈக்ஷணம் ஆகிய இரண்டுக்கும் ஏற்பட்ட அர்த்தங்கள் விடப் படுகின்றன. ஈக்ஷணம் என்பதற்குப் பக்ஷண ஸங்கல்பம் என்று லக்ஷணை பண்ணுவதால். ஆகையால் ச்ருதி மிகவும் பாதிக்கப்படுகிறது. ஸித்தாந்தத்தில் கிட்ட இருப்பது என்பது மாத்ரம் பாதிக்கப்படுகிறது. அதுவுமில்லை என்று சொல்லலாம். எப்படி என்றால்- 'ஈக்ஷேத' என்கிற முழு பதமும் நஞுடனே சேருகிறது. ஈக்ஷேத ந என்று. இவைகளில் முதலில் சொல்ல பக்ஷணம் செய்வதில் ஒருவனைத் தூண்டிவிடுகிறது. நஞுடன் சேர்ந்த விதியானது அதைச் செய்வதிலிருந்து திருப்புகிறது. திருப்புவதற்குப் பலன் பக்ஷணத்தைச் செய்யாமை, அறிவுடன் வேலை செய்கிறவன் ஆசையால் ஒன்றைச் செய்ய ஆரம்பிக்கும் போது, அதைச் செய்வதில் குற்றமில்லாவிட்டால், அவனைத் திருப்ப முடியாது. ஆகையால் வாக்யம் திருப்புவதினாலே நரகத்தில் விழுவது வேண்டாம் என்று சொன்னதைச் சாப்பிடுவதின் பலன் என்று கல்பிக்கவேண்டும். இந்தக் கெடுதி வாராமைக்காக இந்தப் பக்ஷணத்தை எல்லாரும் விலக்க வேண்டியது. (சாஸ்-464-465)

நஞ் உடன் கூடின பக்ஷணத்துக்கு விதியோடு ஸம்பந்தமானால் அப்போது பர்யுதாஸம். நஞுக்கும் விதிக்கும் ஸம்பந்தமானால், அது ப்ரதிஷேதம். (சாஸ்-464).

இரண்டாவது பாதம் முற்றிற்று.

# வித்யா விஷயத்தில் ஸ்த்ரீகளின் அதிகாரம்

[ஸ்ரீமான் உ. வே. வித்வான். வி. அநந்தாசார்யர், பச்சையப்பன் காலேஜ், ஸம்ஸ்க்ருத பண்டிதர்.]

[இந்த வ்யாஸத்தில் ஆசிரியர் ஸ்த்ரீகளின் படிப்பைக் குறித்து எழுதப் புகுந்து அவர்கள் ஸம்ஸ்க்ருத பாஷையில் வேதம் தவிர மற்றவையான ராமாயணம், மஹாபாரதம், கீதை முதலியவைகளையும் நேரே வாசிக்கக்கூடாதென்று சொல்லும் கக்ஷியை நிராகரித்து, அவர்கள் அவைகளையெல்லாம் தாங்களே நேரில் வாசிக்கும் விஷயத்தில் அதிகார மாத்ரமே யல்லாமல் ஆவச்யகமும் உண்டென்றும் ப்ரபலமான ப்ரயோஜநமும் கிடைக்கு மென்றும் நிரூபிக்கிறார். இது விஷயத்தில் அபிப்ராய பேதம் இருக்கக் கூடுமாயினும், ஆசிரியர் எடுத்து உரைத்திருக்கும் காரணங்கள் யோசிக்கத் தகுந்தவையாம்.—பத்ராதிபர்.]

படிப்பு என்பது ஈச்வரனால் கொடுக்கப்பட்ட அறிவுக்கு ஒரு ஸம்ஸ்கார விசேஷம் உண்டாக்குவது.

மானிட ஜாதியில் அடங்கிய அனைவர்க்கும் கொடுக்கப்பட்ட அறிவு ஏக ரீதியிலேயே காணப்படுகின்றது. இவ்வறிவை, அவரவர், தங்கள் தங்களுடைய ஜாதி, மதம், தொழில், நோக்கம், ஊக்கம், இவைகளுக்குத் தக்கபடி உபயோகப்படுமாறு வ்ருத்தி செய்து கொள்ளக் கடமைப்பட்டவர். இப்படிப்பு ஒரு புறத்தில், மேனாட்டு நாகரிகம் தலையெடுத்து ஸ்த்ரீகளையும் புருடர்களையும் வித்யாஸமின்றி ஆக்குகிறது. மற்றொரு புறத்தில், சாஸ்த்ரம் என்ற பிசாசு பிடித்துக்கொண்டு ஸ்த்ரீகளை இருட்டறையில் போட்டுத் தான் இட்டு வைக்கிறது. அதாவது: நமது அரசாங்கத்தார் பெண்களின் படிப்புக்காக ஏராளமான த்ரவ்யங்களைச் செலவு செய்கின்றனர். ஈச்வரனால் அமைக்கப்பட்ட உலக வாழ்க்கையில் ஸ்த்ரீகளுடைய உபயோகம் வேறு ; புருடர்களுடைய உபயோகம் வேறு. இருவருடைய ஒத்தாசையைக் கொண்டே குடும்ப கார்யங்கள் நடைபெற வேண்டியவை. இப்படி இருக்க, 'புருடர்களைப் போலவே ஸ்த்ரீகளையும் ஆக்குவது எவ்வளவு தூரம் பயன்படும்' என்பதை ஆலோசித்துப் பாருங்கள். வ்யாகரண மஹாபாஷ்யத்தில் பதஞ்ஜலி மகாமுனி, மனிதன் காலையில் எழுந்து முதன்முதல் தன்னுடைய சரீர கார்யங்களைக் கனிக்கிறான்; பிறகு தன் நண்பர்களுடையவும், அதன் பிறகு உற்றாருடையவும் கார்யங்களைச் செய்கிறான்' என்று கூறுகிறார். அதுபோல் ஸ்த்ரீகளும் தங்கள் குடும்ப கார்யங்களுக்கு உபயோகமுள்ள அறிவை முதன் முதல் கற்றுக்கொண்டு, பிறகு மற்றவைகளைக் கற்றுக்கொண்டால் நன்றாக விருக்கும். புருடன், வீட்டிற்குப் புறம்பே திரிய வேண்டியவன். பெண், வீட்டினுள் இருந்து, தன்னையும் புருடனையும் தனது குழந்தைகளையும் காப்பாற்றக்

கடமைப்பட்டவள். வீட்டில் உள்ளோர் தைவத்தைக் கவனிக்க வேண்டும்; தர்மத்தைப் பாதுகாக்க வேண்டும்; தேக ஸௌக்யத்தில் ஊக்கம் வைக்க வேண்டும்; நல்ல காலம் கெட்ட காலம் இவைகளை அறிய வேண்டும்; இவற்றிற்கு வைத்யத்திலும் சோதிடத்திலும் தர்ம சாஸ்த்ரத்திலும் நல்ல பயிற்சி வேண்டும். இப்படிப்பட்ட படிப்பை விட்டு, இக்காலத்துப் பெண்கள் பி. ஏ. பரீக்ஷைக்கும் எம். ஏ. பரீக்ஷைக்கும் படிக்கிறார்கள். அவர்களுடைய ஸ்வபாவத்திற்கும் மனோபாவத்திற்கும் விரோதமான இப்படிப்பு, அவர்களைப் பெண்களாயில்லாமலும் புருஷர்களாய் இல்லாமலும் ஆக்கிவிடுகிறது. இவர்களால் தங்களுக்கும் பயன் இல்லை; பிறருக்கும் பயன் இல்லை. இது நிற்க: இத்தேசத்தில் மற்றொரு வகுப்பினர்: ஸ்த்ரீகளுக்குப் படிப்பே வேண்டியதில்லை; சாஸ்த்ரங்களை அவர்கள் படிக்கக்கூடாது என்கிறார்கள். இவ்விஷயம் எவ்வளவு வரை வாஸ்தவம் என்பதைச் சற்று விசாரிப்போம். இப்போது ஆண்பிள்ளைகளுக்குப் படிப்பைச் சார்ந்ததாக இரண்டு க்ரியைகள் செய்யப்படுகின்றன. அவை: அக்ஷராப்யாஸம் உபநயநம் என்பன. இவைகளில் முதல் க்ரியை வைதிகமுமல்ல, ஸமார்த்தமுமல்ல. நித்யம் நைமித்திகம் காம்யம் இவைகளிலும் அது சேர்ந்ததன்று. ஆகையால் அதை அநுஷ்டிப்பதற்கு அதிகாரிகள் இன்னார்தான் என்ற வ்யவஸ்தை ஏற்படுத்தப்படவில்லை. ஸ்த்ரீகளும் சூத்ரர்களும் மற்றுமுள்ளோர்களும் செய்ய அதிகாரம் உள்ளவர்கள் என்றே சொல்லலாம். இரண்டாவதான உபநயநம் மாத்ரம், ப்ராஹ்மணருக்கு—அவர்களிலும் புருஷர்களுக்கு—மாத்ரம் உரியது. படிப்பு விஷயத்தில் ப்ராஹ்மணப் பெண்களைச் சூத்ர ஆண்மக்களுக்குச் சமானமாக சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. சூத்ரர்களுக்கு வேதம் தவிர மற்றவைகளைப் படிப்பதற்கு யாதொரு ஆக்ஷேபமும் இருப்பதாகத் தெரியவில்லை. ஸ்ரீ பாகவதத்தில் முதல் ஸ்கந்தத்தில்,

“ஸ்த்ரீஶூத்ர த்விஜபந்தூநாம் த்ரயீ ந ஶ்ருதிகோசரா ।
கர்மஶ்ரேயஸி மூடாநாம் ஶ்ரேய ஏவம் பவேதிஹ ।
இதி பாரதமாக்யாநம் க்ருபயா முநிநா க்ருதம்”

என்று மகாபாரதத்தை ஸ்த்ரீ சூத்ரர்கள் படிப்பதற்காகவே வ்யாஸர் எழுதியதாகக் கூறப்பட்டது. அதிலும் ப்ராஹ்மணர்கள் வேதத்தை எவ்விதம் உபயோகிக்கிறார்களோ அவ்விதம் ஸ்த்ரீ சூத்ரர்கள் மகாபாரதத்தை உபயோகிக்க அதிகாரம் பெற்றவர்கள் என்று தெளிவாய்க் கூறப்பட்டது. அந்த மகாபாரதத்திலும் ஸஹஸ்ரநாமாத்யாயத்தில்,

“ய இதம் ஶ்ருணுயாந்நித்யம் யஶ்சாபி பரிகீர்தயேத் ।
நாஶுபம் ப்ராப்நுயாத் கிஞ்சித் ஸோऽமுத்ரேஹ ச மாநவ: ।
வேதாந்தகோ ப்ராஹ்மண: ஸ்யாத் க்ஷத்ரியோ விஜயீ பவேத் ।
வைஶ்யோ தநஸம்ருத்த: ஸ்யாத் ஶூத்ர: ஸுகமவாப்நுயாத்.”

என்று சூத்ரர்களுக்கு ஸஹஸ்ரநாம மந்த்ரத்தைக் கேட்பதிலும் படிப்பதிலும் அதிகாரம் உண்டு என்று ஸந்தேஹமறக் கூறப்பட்டது. ராமாயணத்தைப் படிக்கவும் ஸ்த்ரீ



சூத்ரர்களுக்கு அதிகாரம் உண்டு என்பதை, ஸம்க்ஷேப ஸர்க்கத்தின் முடிவில் ஸ்ரீ வால்மீகி பகவானே கூறியுள்ளார். இப்படி இருக்க நமது முன்னோர்களில் சிலர்,

“இதிஹாஸ புராணாநி யஶ்ச ஸாங்காந்யதீயதே ।
ஶ்ராவயேச்சதுரோ வர்ணாந் க்ருத்வா ப்ராஹ்மணமக்ரத: ”

என்ற ஸ்ம்ருதி வசநம் ஒன்றைக்கொண்டு முன்சொன்ன ப்ரமாண ச்லோகங்களுக்கெல்லாம் அர்த்தத்தை மாற்றி விட்டார்கள். ‘இதிஹாஸ புராணங்கள் அனைத்தையும் ஸ்த்ரீ சூத்ரர்கள் கேட்கலாமே யொழிய படிக்கக்கூடாது’ என்று ராமாயண வ்யாக்யாநம் செய்த கோவிந்த ராஜர் வம்ஶ என்ற வசந ப்ரமாணத்தால் ஸம்க்ஷேப ஸர்க்கத்தை ஸ்த்ரீ சூத்ரர்கள் படிக்கலாம் என்றும், மற்ற பாகங்களை படிக்க அநுமதி இல்லை என்றும்; முதன் முதலில் சொல்லி, பிறகு முன் கூறிய ஸ்ம்ருதி வசநத்திற்கும் அதை ப்ரபல ப்ரமாணமாகக்கொண்ட முன்னோர்களுக்கும் பயந்து ஸம்க்ஷேப ஸர்க்கத்தையும் கேட்கலாமே யொழியப் படிக்கக் கூடாது என்று மறுத்துவிட்டார். ஒரு ஸ்ம்ருதி வசநத்தைக் கொண்டு அநேக வசநங்களின் அர்த்தத்தை மாற்றுவது எப்படிப் பொருந்துமோ தெரியவில்லை. கருணாசாலிகளான ரிஷிகள், ஸ்த்ரீ சூத்ரர்களுக்கென்றே ஏற்படுத்திய நூல்களை அவர்கள் படிக்கக் கூடாது என்று மறுத்தது அவ்வளவு உசிதமாகத் தோன்றவில்லை. அதிலும் நமது வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் அநேக மந்த்ரங்களை ஜபிக்க ஸ்த்ரீ சூத்ரர்களுக்கு அதிகாரம் உண்டு. அவைகளில் சரம ச்லோகம் ஒன்று. சரம ச்லோகத்தை ஜபிக்க அதிகாரம் கொடுத்தபோதே, முழு பகவத்கீதைக்கும் அதன் மூலமாய் முழு மகாபாரதத்திற்கும் வந்து விடவில்லையா? ஆகையால் நமது தேசத்தில் உள்ள ஸ்த்ரீகள் அனைவரும் ஜாதி வித்யாஸம் இன்றி ஸம்ஸ்க்ருதம் கற்று, ராமாயண மகாபாரதாதிகளைப் படிக்க அதிகாரம் உள்ளவர்கள் என்பதை இதனால் தெரிக்க முன் வருகிறேன்.

ஸ்ரீ:

# பத்ராதிபரின் அறிக்கைகள்

## இம்மாதத்திய தீபிகை

இம்மாதத்திய தீபிகை பிரசுரப்பட சில நாட்கள் தவக்கப் பட்டது. அதற்கு முக்கிய காரணம் இது அச்சிடப்படும் அச்சுக்கூடம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாற்றப்பட்டதே. இனிமேல் அவ்வித காரணங்கள் நேரிடாதென்று நம்புகிறோம்.

* * *

## ஸம்ஸ்கிருத லிபி

தத்காலத்தில் ஸம்ஸ்கிருத பாஷையானது நாகராக்ஷரத்திலேயே பரசாரம் அடைந்து வருவதையும் அனேக சந்தாதார்கள் தெரிவித்துக் கொண்டதையும் யோசித்து தீபிகையில் ப்ரசுரமாகும் வ்யாஸங்களிலும் கட்டுரைகளிலும் ஸம்ஸ்கிருத பாஷையில் இருக்கும் பாகங்களை நாகராக்ஷரத்திலேயே அச்சிடலாமென்று ப்ரயத்னம் செய்ததில் அந்த லிபி பழக்கமில்லாத சிலர் அதைப்பற்றி குறை சொல்ல நேரிட்டது. ஆதலால் இனிமேல் கூடியவரையில் ஸம்ஸ்கிருத பாஷையில் இருக்கும் பாகங்களை இரண்டு லிபிகளிலும் வாசிக்கிறவர்கள் ஸௌகர்யத்திற்காக அச்சிடலாமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

* * *

## சந்தாதாரர்கள்

இந்த இரண்டு மாஸமாய் அனேக புதிய சந்தாதாரர்கள் தீபிகைக்குக் கிடைத்திருப்பதைப் பற்றி சந்தோஷிக்கிறோம். ஆயினும் அது விஷயத்தில் சில முக்யமான விஷயங்கள் தெரிவித்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது, இந்த தீபிகையானது ப்ரசுரிப்பவரின் த்ரவ்ய லாபத்திற்காக ஏற்படுத்தப் படாததென்றும் நடத்திவரப்படாததென்றும் எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே. சந்தாவும் மிகக்குறைவாக ஏற்படுத்தப் பட்டதற்கு முக்யமான காரணம் இம்மாதிரி பத்திரிகை ஒன்று தமிழ் நாட்டில் ப்சுரம் அடைந்திருக்க வேண்டு மென்பதே. இப்பொழுது இந்த பத்திரிகையை பக்கங்கள் அதிகப்படுத்தியும் உயர்ந்த காகிதத்தில் நன்றாய் அச்சிட ஏற்பாடு செய்திருப்பதையும் கண்டு தீபிகையின் சந்தாதாரர்கள் சந்தோஷப்படுகிறார்களென்று தெரியவருகிறது. ஆதலால் இந்த தீபிகைக்கு இன்னும் அனேக நூற்றுக் கணக்கான சந்தாதார்கள் சேர்ந்தா லொழிய த்ரவ்ய நஷ்டமில்லாமல் நடத்திவர முடியாது. ஆகையால் ஏற்கனவே இருக்கும் சந்தாதார்கள் தாங்கள் செலுத்த வேண்டிய சந்தாக்களை செலுத்தியும் இன்னும் அனேக சந்தாதாரர்களை சேர்த்து வைக்கவும் வேணுமென்று ப்ரார்த்திக்கிறேன். சந்தாதார்கள் அதிகரிக்க அதிகரிக்க இந்த பத்திரிகையின் பக்கங்களையும் உபயோகத்தையும் அதிகரித்து அனேக விதங்களில் ஆகர்ஷகமாய் செய்யக் கூடுமென்று தோன்றுகிறது. இது விஷயத்தில் நம்மவர்கள் யாவரும் ச்ரத்தாளுகளாய் யாவச்சக்யம் உதவி புரிய வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.



நிதராம் ஹ்ருதயங்கம் அநுகூலதியாம் வரேஷாம்
உத்வேஜகம் ச தவ தேஜ உதாஹரந்தி ॥ 56

துக்கொண்டிருக்கிறதாகவும், ஹாரி- மநஸ்ஸுக்கு ஆகர்ஷகமாகவும் இருக்கிற, தவ தேஜ:- உன்னுடைய தேஜஸ்ஸை, அநுகூலதியாம்- அநுகூலராயுள்ள ஜநங்களுக்கு [அதாவது: பக்தர்களுக்கு], நிதராம் ஹ்ருதயங்கம்-எப்பொழுதும் போக்யமாயும், வரேஷாம்- மற்றவர்களுக்கு [அதாவது: பகவானிடம் பக்தியற்றவர்களுக்கு], உத்வேஜகம் ச- பயத்தைக் கொடுக்கக்கூடியதாயும் இருப்பதாக, உதாஹரந்தி [அதன் ஸ்வரூபத்தை அறிந்தவர்கள்] சொல்லுகிறார்கள்.

ஒரே வஸ்து சிலருக்குப் போக்யமாகவும் மற்றவர்களுக்குப் பயங்கரமாகவும் இருக்கின்றதென்றால் அது ஒரு ஆச்சர்யமன்றோ?

ஸம்வர்த்தஸம்ஹரதகரவத்- ப்ரளய காலத்தில் ஸூர்யனுக்கு விசேஷித்த தேஜஸ் உண்டாகின்றது என்று சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. இப்பொழுது இருக்கும் ஸூர்யனுடைய தேஜஸ்ஸே நமக்கு அஸஹ்யமாக இருக்கின்றது. அந்தத் தேஜஸ் அதிகப்பட்டிருக்கும்பொழுது அது அஸஹ்யமாக இருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அப்படிப்பட்ட தேஜஸ்ஸும் பகவானுடைய தேஜஸ்ஸின் முன்னிலையில் இருள் ஆகிவிடுகின்றதென்றால், பகவானுடைய தேஜஸ் எவ்வகைப்பட்டதாக இருத்தல் வேண்டும்?

அநுகூலதியாம்- பகவத் பக்தர்களை அவனுக்கு ப்ரியர்களென்று சொல்வது உண்டு. ஆகையால் பக்தரல்லாதவர்களே இவ்விடத்தில் 'வரேஷாம்' [மற்றவர்கள்] என்று சொல்லப்படுகிறார்கள், 'வரேஷாம்' என்பதற்கு, 'சத்ருக்களுக்கு' என்னும் பொருள் கொள்ளக்கூடும். அப்பொழுது, பகவானிடமோ அவனுடைய பக்தர்களிடமோ எவர்கள் சத்ருத்வத்தைக் கொள்ளுகிறார்களோ அவர்களே க்ரஹிக்கப்படுவார்கள். இதனால், பகவானிடத்தில் ஹார்த்தமான ப்ரீதியைச் செய்பவர்களுக்கே பகவத் ஸ்வரூபம் அத்யந்தம் போக்யமாக இருக்குமென்று சொல்லப்பட்டதாயிற்று.

பகவத் ஸ்ருஷ்டியில், ஸகல வஸ்துக்களும் ஸ்வரூபத்தில் போக்யங்களே. ஆனால் அவை, நம்முடைய கர்மங்களுக்குத் தக்கபடி சிலருக்குப் போக்யங்களாகவும் வேறு சிலருக்கு அபோக்யங்களாகவும் காணப்படுகின்றன. அதுபோலவே, எப்பொழுதும் போக்ய தமமாக இருக்கும் பகவத் ஸ்வரூபமும், அந்தப் பகவானிடததில் பக்தி செய்யும் பாக்யம் பெற்றவர்களுக்குப் போக்யமாகவும், மற்றவர்களுக்கு உத்வேககரமாகவும் அநுபவிக்கப் படுகின்றது என்பதை நாம் அறியவேண்டும்.

நைவ ஹ்யவாப்யமநவாப்தமிஹாஸ்தி யஸ்ய
ஸூதிஸ் தஸ்ய தவ வீக்ஷணதः ப்ரஜாநாம் ।
ஸம்பச்ச கிம் புநரஹோ ந வதாந்யமந்ய-
ந்மந்யே த்வமேவ பதம் ச்ரிதம் ச்ரியாயா: ॥ 57

57. கீழில் 46-வது ச்லோகம் அவதியாக பகவானுடைய ஸ்வரூபம் ரூபம் இவைகளை அநுஸந்தாநம் செய்துவிட்டு, பிறகு 47-வது ச்லோகம் முதல் 66-வது ச்லோகம் அவதியாகப் பகவானுடைய குணங்களை அநுஸந்திக்கப் புகுந்தவராய், ஸ்ரீ ஆழ்வான், முதலில் பகவானுடைய பரத்வத்தை ஸூசிப்பிக்கும் ஜ்ஞாநம் பலம் முதலிய குணங்களுள் சிலவற்றை ப்ரஸ்தாவித்துவிட்டு, இப்பொழுது அவனுடைய ஆச்ரயணத்வோபயுக்தங்களான ஔதார்யம் க்ருபை முதலிய குணங்களுட் சிலவற்றை அநுபவிக்க ஆரம்பிக்கிறார். இந்த ச்லோகத்தில் ஔதார்யம் என்னும் குணம் ப்ரஸ்தாவிக்கப்படுகின்றது. லோகத்தில் பெரிய தாநங்கள் செய்பவனை 'உதாரன்' என்று சொல்வார்கள். அப்படி தாநம் செய்யும் ஸ்வபாவம் 'ஔதார்யம்' ஆகும். பகவானை உதாரன் என்று சொல்வதற்கு, அவன் என்ன உயர்ந்த தாநம் செய்கிறானென்றால், இந்த ப்ரபஞ்சத்தில் இருக்கும் சேதந வர்க்கம் முழுவதற்கும் உத்பத்தி ஸ்திதி ப்ரவ்ருத்தி இவைகளைக் கொடுத்தவன் அவனே. இது மாத்ரமன்று; இந்தச் சேதநர்களிடம் தென்படும் ஸம்பத் முழுவதும் அவனால் கொடுக்கப்பட்ட வஸ்துவே. இவ்விதம் உத்பத்தி முதலியவைகளையும் ஸம்பத்தையும் கொடுத்து உபகரிக்கிறவன் உதாரனாகாவிட்டால், வேறு எவன் உதாரனாவான்? இவனைப் பரமோதாரனென்றன்றோ சொல்ல வேண்டும்? ஒருகால், இவ்விதம் பிறருக்கு உபகரித்து அதனால் அவன் ஏதாவது ஒரு ஸ்வார்த்தத்தைத் தேடிக்கொள்கிறானோவென்றால், அதுவும் இல்லை. ஏனென்றால் அவனுக்குப் புதியதாக ஸாதிக்கப்படவேண்டியதான ஒரு ஸ்வார்த்தமு மில்லையன்றோ? எவன் இவ்விதம் ஸ்வார்த்த நிரபேக்ஷமாகப் பிறருக்கு உபகரிக்கிறானோ, அவனே உண்மையான உதாரனாவான்.

[ப-ரை] யஸ்ய [தவ]-எந்த உனக்கு, உப-இந்த இரண்டு விபூதிகளிலும், அநவாப்தம்-இதுவரையில் அடையப்படாத, அவாப்யம் [வஸ்து]-இனி அடையத்தகுந்த ஒரு வஸ்துவானது, நைவாஸ்தி - இல்லவே இல்லையோ, தஸ்ய தவ - அப்படிப்பட்ட உன்னுடைய, வீக்ஷணதः - கடாக்ஷத்தால், ப்ரஜாநாம் ஸூதி - சேதநவர்க்கங்களின் உத்பத்தியும், [பவதி-உண்டாகின்றது]. ஸம்பச்ச - ஸம்பத்தோவென்றால், கிம் புநः- [உன்னுடைய கடாக்ஷாதீநமே என்று] சொல்லவும் வேண்டுமோ? அதः - ஆகையால், அந்யம் - [உன்னைத் தவிர்த்த] வேறெவனையும், வதாந்யம் -



யாசேயராதிஹ ஸஹஸம் ஸஹவாஸநோத்தை-
ர்து:கைர்யேஷு ய: பரம் திதிக்ஷதி ஸந்த ஜந்து: ।

உதாரனென்று, ந மந்யே - நான் எண்ணுகிறேனில்லை. த்வமேவ - நீயே, ச்ரியாயா: - லக்ஷ்மிக்கு, ச்ரிதம் பதம் - வாஸ ஸ்தாநமன்றோ?

சதுர்முக ப்ரஹ்மா முதலாக மிகச் சிறிய அல்ப ஜந்து அவதியாக உள்ள ஸகல சேதநர்களுக்கும் உத்பத்தி முதலான ஸ்திதி ப்ரவ்ருத்திகளைக் கொடுத்தவன் நீயே. எந்த லக்ஷ்மியின் கடாக்ஷத்தை ஸகல ஸம்பத்திற்கும் காரணமென்று லோகத்திற் சொல்லுகிறார்களோ, அந்த லக்ஷ்மியை உன்னைவிட்டு ஒரு க்ஷணம்கூடப் பிரியாதவளாய் வைத்துக்கொண்டு, ஸகல ப்ரஜைகளுக்கும் அந்த லக்ஷ்மீ கடாக்ஷாதீநமான ஸம்பத்தைக் கொடுக்கிறவனும் நீயே. நீ அவாப்த ஸமஸ்த காமனானதால், இப்படி நீ உபகரிப்பதெல்லாம் ஸ்வார்த்த நிரபேக்ஷமாகவே செய்யப்படுகின்றது. ஆகையால் நீயே பரமோதாரன்.

பகவானுக்குக் கேவலம் இச்சா மாத்ரத்தால் ஸகல இஷ்டங்களும் ஸாதிக்கப்படக்கூடும் என்பது ப்ரஸித்தம். இதைத்தான் 'அவன் அவாப்த ஸமஸ்த காமன்' என்னும் வாக்யம் விளக்குகின்றது. அப்படி இருக்கையிலும் அவன் ஜகத்தின் ஸ்ருஷ்டி முதலிய வ்யாபாரங்களில் ப்ரவர்த்திக்கிறானென்றால், அது அவனுடைய ஔதார்யாதிசயத்தையே ப்ரகாசிப்பிக்கின்றது.

ஸூதி - உத்பத்தியும். இதனால், உத்பத்தி ஸ்திதி ப்ரவ்ருத்தி ஆக இம்மூன்றும் குறிக்கப்படுகின்றன. ஜீவன்களுடைய உத்பத்தியும் பகவானால் கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படுவதிலிருந்து, ஜீவன்கள் உத்பந்நங்களான வஸ்துக்களோவென்று ஒரு ஸந்தேஹம் ஜநிக்கக்கூடும். ஜீவன்கள் அநாதிகளாயினும், அப்படி அவைகள் அநாதியாக இருப்பது பகவானுடைய ஸங்கல்பத்தாலேயே யானதால், ஜீவன்களுடைய உத்பத்தி பகவததீநம் என்று சொல்வது அஸங்கதமாகமாட்டாது.

58. இந்த ச்லோகத்தால் பகவானுடைய 'க்ருபை' என்னும் குணத்தை அநுஸந்திக்கிறார். பிறர் கஷ்டப்பட்டால் அந்தக் கஷ்டத்தை ஸஹியாமல் இருக்கும் தன்மையை க்ருபை என்று சொல்வார்கள். 'ஔதார்யம்' என்னும் குணம்போல இதுவும் ஸ்வார்த்த நிரபேக்ஷமாக இருந்தால் மாத்ரம் சரியான க்ருபையாகும். இது மாத்ரமின்றிக்கே, எந்தக் கஷ்டங்களைப் பார்ப்பது அஸஹ்யமாக இருக்கின்றதோ அந்தக் கஷ்டங்களை நிவர்த்திக்க முயல்வதும் இந்த க்ருபையின் லக்ஷணத்தில் சேரும். பகவான், இந்த

தம் கெவலம் ஸ்வக்ருபயைவ ஸமுஜ்ஜிஹீர்ஷும்-
ஸம்க்ஷிப்த தத்ஸுக்ருத துஷ்க்ருத நிஷ்க்ருதிம் த்வம் ஶாஸ்த்ரைஃ ॥ 58

ப்ரபஞ்சத்திலுள்ள ஜந்துக்களின் துக்கங்களை ஸஹியாதவனாய், அவைகளை ஸ்வார்த்த நிரபேக்ஷமாகவே நிவர்த்திப்பிக்க ப்ரயத்நப்படுகிறபடியால், அவனைப் பரம க்ருபாளு வென்று சொல்லுகிறார்.

'இந்த ப்ரபஞ்சத்தில் ஸகல ஜந்துக்களும் மஹத்தான துக்கங்களை அநுபவித்துக் கஷ்டப்படுகின்றனவே. அவைகளுள் சில ஜந்துக்களுக்கு மாத்ரம் சிற்சில காலங்களில் சிற்சில துக்கங்கள் நீங்குவதையும், மற்றை ஜந்துக்களுக் கெல்லாம் மேன்மேல் கஷ்டங்கள் அதிகரித்துக்கொண்டு வருவதையுமன்றோ நாம் பார்க்கிறோம்? அதைப் பார்க்கும் நமக்கு, நமது துக்கங்களை நிவர்த்திப்பிக்கும் சீலமுள்ள பகவான் ஒருவன் இருக்கிறான் என்றே தோன்றவில்லை. அப்படி ஒருவன் இருந்தாலும், அவன் செய்யும் துக்க நிவ்ருத்தி ஒருவித ந்யாயத்திற்கும் உட்பட்டுச் செய்யப்படுவதாகத் தெரியவில்லை. ஒரு ஜந்துவுக்கும் ஒருவித துக்கமும் நேராமல் எல்லாரையும் எப்பொழுதும் ஸுகிகளாகவே இருக்கும்படி அந்தப் பகவான் செய்து வந்தாலன்றோ அவனைப் பரம க்ருபாளுவென்று சொல்லக்கூடும்? ஒருவித நீதிக்கும் ஒத்து வராதபடி நடக்குமவனை க்ருபாளுவென்று எவ்விதம் சொல்லக்கூடும்?' என்று ஒரு ஆக்ஷேபம் ஜநிக்கலாம். பகவான், இந்த ஜகத் வ்யாபாரத்தைச் செய்வதில், தன்னுடைய இச்சையாலேயே ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு கட்டுக்கு உட்பட்டு ப்ரவர்த்திக்கிறான் என்பதை நாம் மறக்கக்கூடாது. அதாவது: ஒவ்வொரு ஜந்துவுக்கும், அததன் புண்ய பாப ரூபங்களான கர்மங்களுக்குத் தகுந்தபடியே ஸுகதுக்கங்களைக் கொடுத்தல் வேண்டும் என்பதே. 'அப்படி அவரவர்களுடைய கர்மங்களுக்கு அநுகுணமாக அவன் பலத்தைக் கொடுக்கிறானென்றால், அவன் எவ்விதம் க்ருபையுடன் கூடியவனாவான்? ஒருவித ஹேதுவையும் எதிர்பாராமல் எல்லாருக்கும் ஸமமாகவே ஹிதத்தைச் செய்ய ப்ரவர்த்திப்பதன்றோ க்ருபையின் லக்ஷணம்?' என்று கேட்டால், அப்படி அவன் ப்ரவர்த்தித்தால் ஜகத்தில் பாபத்திலிருந்து பயப்படுவது என்பதே அற்றுப் போய்விடும். அது ஜகத்தின் க்ஷோபத்திற்குக் காரணமாகுமன்றோ? ஜகத்தின் நன்மையைக் கோருமவன் இம்மாதிரி ஒரு நியமத்தைச் செய்துகொண்டு அதற்கு உட்பட்டு ப்ரவர்த்திக்க வேண்டியவனாகவே இருத்தல் வேண்டும். ஆனால், அவனுடைய க்ருபை எவ்விடத்தில் வருகின்றதென்றால், ஜந்துக்களெல்லாம் தங்கள் தங்களாற் செய்யப்படும் புண்ய பாபங்களின் பலத்தை அநுபவித்தே தீரவேண்டும் என்று விட்டுவிடாமல்,



ஶாஸ்த்ரை ரநாதிநிபுணைஃ ஸ்ருதிஸ்ம்ருதீய-
தீவ்ராவதார அபிதைஸ்ஸஹயா அ த்ருஷ்டா ।

அந்தப் புண்ய பாபங்களைச் சிற்சில ப்ராயச்சித்தங்களால் நிவர்த்திப்பித்துக் கொள்ளலாமென்று அவன் சாஸ்த்ரங்களைக் கொண்டு நிஷ்பக்ஷபாதமாக வெளியிட்டிருக்கிறான் என்னுமிடத்தில் தான். ஸுக துக்கங்களிலிருந்து அவ்விதம் நம்மைத் தப்புவித்துக் கொள்வதற்கு அவன் ஒருவித உபாயத்தையும் காண்பியாமல் இருந்தானேயானால் அவன் க்ருபாளுவாகமாட்டான் என்பது உண்மையே. ச்ருதி ஸ்ம்ருதி முதலிய சாஸ்த்ரங்களைக் கொடுத்து, அவைகளில் நாம் எவ்வித உபாயத்தால் நம்மை ஸம்ரக்ஷித்துக்கொள்ளலாம் என்பதைக் காண்பிப்பதே அவனுடைய க்ருபா கார்யம். இவ்விதம் அவன் சாஸ்த்ரங்களைக் கொடுப்பது ஒருவித ஹேதுவாலும் ஏற்படவில்லையாதலால் அவனைப் பரம க்ருபாளு என்று சொல்வதில் எவ்விதக் குறையுமில்லை. நாம் சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறபடி அநுஷ்டிப்பது அவனுடைய ப்ரஸாதத்திற்குக் கேவலம் வ்யாஜ மாத்ரமே ஆகின்றது. இது தான் இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கப்படும் விஷயம்.

[ப-ரை] யொ ஜந்துঃ - எந்த ஜந்துவானது, அநாதி ஸம்ஸார வாஸநொத்தைঃ - அநாதியாயிருக்கும் ஸம்ஸாரத்திலிருந்து உண்டாகும் வாஸனையின் கார்யங்களான, பாபைঃ - பாபங்களால், துঃகேஷு - துக்கங்களில், நிமங்க்துமிச்சதி - மூழ்கிப் போவதற்கு இச்சிக்கின்றதோ, ஹந்த - ஆச்சர்யம், தம் ஜந்தும் - அந்த ஜந்துவை, கேவலம் ஸ்வக்ருபயைவ- கேவலம் தனது க்ருபையால் மாத்ரம், ஸமுஜ்ஜிஹீர்ஷு - காப்பாற்றவேண்டுமென்னும் எண்ணத்துடன், தத்துஷ்க்ருதஸ்ய - அந்த ஜந்துவாற் செய்யப்பட்டுள்ள பாபங்களுக்கு, நிஷ்க்ருதிம் - ப்ராயச்சித்தத்தை, ஶாஸ்த்ரைঃ - சாஸ்த்ரங்களைக்கொண்டு, ஸ்ருஷ்டவந் - சொல்லியிருக்கிறாயன்றோ?

பாபைঃ- இது புண்யம் பாபம் இரண்டையும் குறிக்கின்றது. ஸம்ஸாரத்திலிருந்து [அதாவது: கர்ம பந்தத்திலிருந்து] நிவ்ருத்தியை அபேக்ஷிக்குமவர்களுக்குப் பாபம் ப்ரதிபந்தகமாவது போலப் புண்யமும் ப்ரதிபந்தகமே.

அநாதி ஸம்ஸார வாஸநொத்தைঃ—நமது கர்ம பந்தம் ஆதியற்றது; நாம் கணக்கற்ற ஜந்மங்களை எடுத்திருக்கிற படியால், நம்மாற் செய்யப்பட்டுள்ள புண்ய பாபங்களும் அளவற்றவை என்பதை இந்தப் பதம் காண்பிக்கிறது.

ஹந்த—ஆச்சர்யம். எது ஆச்சர்யம் என்றால், இவ்விதம் தாமே தமக்கு அநர்த்தங்களை விளைவித்துக்கொள்ளுகிறார்கள் என்பது தான். விவேகியா

*நிஶ்ரேயஸம் யதுபகல்பயஸி ப்ரஜாநாம்*
*ஸா த்வத்க்ருபாஜலதிஜ்ரும்பிதஶ்ரீஃ ॥* 59

யிருக்கும் ஜந்து, தனக்கு எது அநர்த்தாவஹமோ அதைச் செய்யமாட்டாதன்றோ? அதை அறியாமலே தமக்குக் கேட்டையே செய்விக்கும் புண்ய பாப ரூபங்களான வ்யாபாரங்களில் கண்மூடித்தனமாக இந்த ப்ரஜைகள் மேன்மேல் ப்ரவர்த்திக்கின்றனவே என்பது தான் ஆச்சர்யம்.

**கேவலம் ஸ்வக்ருபயைவ**—கேவலம் தனது க்ருபையால் மாத்ரம். அதாவது: 'ப்ரஜைகளாற் செய்யப்படும் கர்மங்களை எதிர்பாராமலே' என்று சொன்னதாயிற்று. இதைத் தான் நிர்ஹேதுக க்ருபாகார்யமென்று சொல்வார்கள். ப்ரளய காலத்தில் அசித் ப்ராயங்களாகக் கிடக்கும் ஜீவன்களுக்குக் கரண களேபரங்களைக் கொடுப்பதான ஜகத் ஸ்ருஷ்டி வ்யாபாரமானது எப்படி ப்ரஜைகளின் கர்மங்களை ஹேதுவாகக் கொண்டதன்றோ, அப்படியே சாஸ்த்ரங்களைக் கொடுக்கிற வ்யாபாரமும் என்பது கருத்து.

**நிஷ்க்ருதிம்** - ப்ராயச்சித்தத்தை. அதாவது, 'நம்மாற் செய்யப்பட்டுள்ள புண்ய பாபங்களிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளும் உபாயத்தை' என்று சொன்னதாயிற்று. ஸத்ய வசநம் தர்மாசரணம் முதலாகப் பகவானுடைய திருவடிகளில் ஶரண வரணம் செய்வது பர்யந்தங்களான ஸகல உபாயங்களும் இந்த 'நிஷ்க்ருதி' என்னும் சப்தத்தால் குறிக்கப்படுகின்றன.

"**அவஶ்யமநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம ஶுபாஶுபம்**"

[ஒவ்வொருவனும் தன் தன்னாற் செய்யப்பட்டுள்ள புண்ய பாபங்களின் பலத்தை அவச்யம் அநுபவித்தல் வேண்டும்] என்னும் வாக்யம் முதலானவை, சாஸ்த்ரத்திற் சொல்லப்பட்டுள்ள நிஷ்க்ருதிகளைச் செய்யாதவர்கள் விஷயமாக ஏற்பட்டவை.

இந்த ச்லோகத்தால் ஏற்படுவது என்னவென்றால்: 'பகவான் பரம க்ருபாளு; அவன் நமது துக்கங்களை ஸ்வயமே நிவர்த்திப்பான் என்று நாம் ஒருவித உபாயத்தையும் செய்யாமல் இருப்பது சரியன்று. சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டிருக்கும் உபாயங்களை யதா சக்தி நாம் அநுஷ்டித்தல் வேண்டும். அப்படி நாம் அநுஷ்டித்தால், அந்த அநுஷ்டாநத்தால் ப்ரீதனான பகவான், அதை வ்யாஜமாகக் கைப்பற்றி, நம்முடைய புண்ய பாபங்களை நசிப்பித்து நம்மை ரக்ஷிப்பான்' என்பது தான்.

59. சாஸ்த்ர ப்ரதாந ரூபமான க்ருபா கார்யத்தை ப்ரஸ்தாவிக்கும் ப்ரஸங்கத்தில், இன்னும் வேறுவிதமாகப் பகவான் உபகரிப்பதையும் அநுஸந்தித்து, அதனால் அவனுடைய க்ருபா வைபவத்தின் அதிசயத்தைப் பார்த்து விஸ்மய மடைகிறார். ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணாதிகளைக் கொடுப்பதுடன் கூட, தர்ம ஸம்ஸ்தாபநத்திற்காக அவன் அப்பொழுதைக்கப்பொழுது அவதரித்தும் தனது சுபமான கடாக்ஷத்தால் அநுக்ரஹித்தும் ப்ரஜைகளுக்குப் பரமமான க்ஷேமத்தைப் பலிதமாக ஸங்கல்பிக்கிறானன்றோ?



*ஶாஸ்த்ரைஃ ஸநாதநதமைஃ ஸ்ம்ருதிபிஶ்ச ஸார்த்தம்*
*ஸ்வீயதிவ்யாவதாரசரிதைஃ ஶுபயா ச த்ருஷ்ட்யா ।*

[ப-ரை] **ஸநாதநதமைஃ** - உத்பத்தி விநாசங்களின்றிக்கே ஸநாதநங்களாயிருக்கிற, **ஶாஸ்த்ரைஃ** - ச்ருதிகளாலும், **ஸ்ம்ருதிபிஃ** - ஸ்ம்ருதிகளாலும் [அதாவது: ஸ்ம்ருதி முதலிய இதிஹாஸ புராணங்களாகிற உப ப்ருஹ்மணங்களாலும்] **ஸ்வீயதிவ்யாவதாரசரிதைஃ** - உன்னுடைய திவ்யாவதார சேஷ்டிதங்களாலும், **ஶுபயா ச த்ருஷ்ட்யா** - சுபமான கடாக்ஷத்தாலும், **ப்ரஜாநாம்** - ப்ரஜைகளுக்கு, **நிஶ்ரேயஸம்** - பரம புருஷார்த்தத்தை, **உபகல்பயஸீதி யத்** - ஸங்கல்பிக்கிறாய் என்பது யாதொன்று உண்டோ, **ஸா** - அது, **த்வத்க்ருபாஜலதிஜ்ரும்பிதஶ்ரீஃ** - உன்னுடைய க்ருபையாகிற ஸமுத்ர ச்ரேஷ்டத்தின் பொங்கும் ஸம்பத்தன்றோ?

**ஸநாதநதமைஃ**—ச்ருதியாகிற ஶாஸ்த்ரம் எப்பொழுதும் இருப்பது; ஆகையால் அதற்கு உத்பத்தியும் விநாசமும் ஒருபொழுதும் இல்லையென்று சொல்லப்படுகிறது. ப்ரளய காலத்தில் அது லயத்தை அடைந்த போதிலும், மறுபடியும் ஸ்ருஷ்டிகாலத்தில் அது யதாபூர்வம் கல்பிக்கப்படுகிறபடியால், அது நித்யமான வஸ்து ஆகின்றது.

**ஸ்வீயதிவ்யாவதாரசரிதைஃ**—பகவான் அவதரிக்கும்பொழுது மாத்ரம் இந்த அநுக்ரஹம் ஏற்படுகின்றது என்பது இல்லை; அவனுடைய அவதார சேஷ்டிதங்கள் எவ்வளவு காலம் இந்த ஜகத்தில் கதாரூபமாக நடையாடுகின்றனவோ அவ்வளவு காலமும் இந்த அநுக்ரஹம் உண்டு என்பதை இந்தப் பதம் ஸூசிப்பிக்கின்றது.

**ஶுபயா த்ருஷ்ட்யா**—பகவானுடைய சுபமான கடாக்ஷமே ஜகத்தின் ஸ்ருஷ்டிக்குக் காரணம். அப்படி ஸ்ருஷ்டியாவிட்டால், ஜீவ வர்க்கம் முழுவதும் யாவத் காலமும் நாம ரூப விபாகமற்று அசித்ப்ராயங்களாக லயித்துக்

யஸ்த்ரவாஜநயிஶவஸ்திவெநவெந-

ஶநூம்வயதஸ்கூதஹாவஸ்ராஹாமயெயாநு ॥ 60

---

கிடக்கும்படியன்றோ நேரும்? இந்தப் பதம் ஜாயமான கடாக்ஷமென்று சொல்லப்படும் பகவதநுக்ரஹ விசேஷத்தைக் குறிக்கின்றதென்றும் சிலர் சொல்வார்கள்.

**தஜ**—இதற்கு 'ச்ரேஷ்டமான' என்பது பொருள். '**ஜயிதஜ**' என்றால் 'உத்தமமான ஸமுத்ரம்' என்று சொன்னதாயிற்று. '**வஜித**' என்பதற்குப் 'பொங்குதல்' என்பது பொருள். '**வஜிதஸ்ரீ:**' என்றால் 'பொங்குதலின் ஸம்பத்' அதாவது: 'அதன் பெருமை' என்று சொன்னதாயிற்று. 'ஸா' என்னும் இவ்விடத்தில் ஸ்த்ரீலிங்கம் ப்ரயோகம், '**ஸ்ரீ:**' என்னும் விதேயத்தை அநுஸரித்துச் செய்யப்பட்டிருக்கின்றது. 'உவகஜ **யஸீதி யகதக வஜிதஸ்ரீ:**' என்று '**யக**' என்னும் பதத்தை உத்தேசித்து நபும்ஸகலிங்கமாவும் ப்ரயோகம் செய்யக்கூடும். "**ஸெதஜ் ஹி யக** ஸாவகூதி **ஜஜஸ்**" என்னும் மஹாகவி ப்ரயோகமும். "**கஶணாயஶஹிவைதி** ஸஸம்வஷாநழ" என்னும் வையாகரண வாக்யமும் இவைகளுக்கு நிதர்சநங்கள்.

60. இவ்விதம் ச்ருதி முதலிய சாஸ்த்ரங்களும் பகவானுடைய திவ்யாவதார சேஷ்டிதங்களும் அவனுடைய சுபமான கடாக்ஷமும் இந்த ஜகத்தில் நிரம்பி நிற்கையில், ஏன் சில ப்ரஜைகள், தங்களுக்கு அநர்த்தாவஹமாக இவை யெல்லாவற்றையும் அநாதரிக்கிறார்கள் என்று விசாரித்து அதற்கு ஸமாதாநம் சொல்லுகிறார். பலிஷ்டமான ஜந்மாந்தர பாபமே இதற்குக் காரணம். ப்ரஜைகளுக்கு இயற்கையாயுள்ள விவேகம் ஒரு அளவுக்கு விஞ்சிப் பாபங்களால் அபிபூதமாகிவிட்டால், அப்படி அது அபிபூதமாயிருக்குங் காலங்களில் விவேகம் பராக்ரமிக்கமாட்டாது; பாபமே பராக்ரமித்து நல் வழியிலிருந்து அவர்களை மேன்மேல் பாபகார்யங்களிலேயே நயிப்பிக்கும். அப்படிப்பட்ட தௌர்ப்பாக்யசாலிகளைப்பற்றி இந்த ச்லோகத்தால் சோகிக்கிறார்.

'அப்படி தௌர்ப்பாக்யத்தால் ஆக்ரமிக்கப்பட்டவர்களின் கதி என்ன? மேன்மேல் அவர்கள் பாபத்திலேயே மூழ்கிக்கொண்டிருந்தால், அவர்களுக்கு மோக்ஷம் என்பது ஒருகாலும் லபியாதோ?' என்று ஒரு சங்கை ஜநிக்கலாம். கர்மங்களின் வ்யாபாரம் அதிமாத்ரம் விசித்ரமானது. மநுஷ்ய



செம்பொற் கலுழன்முதற் செம்மை யுறுமூர்தி
அம்பொற் கலையரங்கன் மும்மூன் றிரும்பகலும்
பம்பிப் பலர்தொடர வூர்ந்தின் விழாவயர்ந்தே
விம்பர்க் கிதமாகு மவபிரத மாடுமரோ. 78

வேறு

ஈங்கிந்தக் கார்ப்பருவ மிகந்திடலும்
வெண்முகிலா மேகா சத்திற்
றீங்குரலின் மராளகதி யுடனுடுவி
னிரையெனுநித் திலவா ரத்திற்
பாங்கினில கம்புலியா மின்முகமும்
பங்கயமா விழியுந் தாங்கித்
தேங்கமழின் றுளவோனைச் சரற்காலத்
திருமங்கை திகழ்ந்து சேர்ந்தாள். 79

வெண்டிங்க ணிலவானும் வெண்கால
மலரானும் வெள்ளை வண்ணக்
கொண்டல்களின் குழுவானுஞ் செங்கானுஞ்
செஞ்சூட்டுஞ் செறிந்து வெண்மை
யுண்டவெழி லோதிமநே ரோனியினுங்
கூதிரெனும் வனிதை யேனை
வண்டலம்பும் போதலரு மிருதுகளை
முறுவலிக்கும் வகையே மானும். 80

ஆசையெனு மங்கனைக ளிளவேனி
லலர்புட்ப வதிகளாகி
வீசனிலத் தான்முதிய வேனிலெழுந்
துகளாலே திமிர்ந்து காரின்
மாசொழியப் பொழிதருபைங் கொண்டலெனுந்
தசும்புகளின் மணநீ ராடி
யாசகனுங் கூதிரிடை நின்மலமா
மம்பரமு முடைய ரானார். 81

கலசசல நிதியென்னும் பாயன் மிசைக்
கண்டியிலுங் காமன் றந்தை
யிலகுசாத் திருதுவினிற் றுயிலெழுந்தா
னென்பதுவுஞ் சாத மின்றேற்

பலசனமு முதமுறவப் பரந்தாம
னிருவிழியாய்ப் படைக்க மின்னும்
குலசசியு மேழ்பரியைக் கொண்டவிர
தத்தோனுங் குலவு வாரே. 82

வெண்கடலுட் கண்டுயில்வோன் விழித்தருளு
மரிவிரத திவசந் தன்னி
லொண்பெரிய நிசியுளியே பிற்பொழுதி
லும்பர்தொழு மரங்கத் தம்மான்
பண்பொழுகும் பாணர்குலம் பாவலனாற்
கௌசிகமென் பண்ணுமுள்ள
மண்குலவக் கௌசிகனன் மிழற்றியதைச்
செவியுற்று மகிழ்ந்தான் மன்னோ. 83

வேறு

படியெலாம் களிகொள் செய்ய நளிமதி யிசையிற் பாயக்
கடுவிறை யுடைய கண்ணன் கார்த்திகைப் பருவ வைகல்
விடுநில வெறிக்குந் திங்கள் வெண்கலை யவையுந் தாழ
மடநிகழ் மகளி ரேற்றும் விலக்கமின் சிறப்புங் கண்டாள். 84

புலரியி னறுநீ ராடிப் பொலிபல கலனும் பூண்டு
கலவமா மயில்க ளென்னுங் காளையர் மகளி ரோடு
மிலகுறு முபகாரங்க ளேந்தியின் காத்தி னிற்ப
நலமுறுந் தனது சேவை நல்கின னருளி னோக்கா. 85

தரணியோர் பற்று மின்று மம்பர தலத்தின் வரவு
முரணுறுங் குரக தங்கள் குளித்திடக் குடபான் முந்நீர்
விரவுறு வெழுவான் போல வெங்கரஞ் சுருங்க மீண்டு
மரணெனும் படியி னோங்கு மத்தவெற் படைந்தா னன்றே. 86

முயலொழு குதிர மென்ன முதிர்சிவப் புடைய வெய்யோன்
வயங்கொளுங் கரங்கண் மேலே யிடருமேல் வளாயு மன்றோன்
செயிரறு மயங்கண் மார்பிற் சிகரியின் சிகரந் தேய்க்கப்
பெயலுறுங் குருதி தோய்ந்த செயலெனப் பிறங்கிற் றம்மா. 87

வையக முய்யும் வண்ணம் வானகம் படருஞ் சூரன்
செய்யவெம் பதங்க ளெல்லாஞ் சிவந்திடுஞ் செயனு னோக்கின்
மையுறு மளவொன் றில்லா வைகலி விருந்து மாகத்
தொய்யென வொழியா தகே வுற்றதென் றுரைக்க லாமே. 88



முழுமையுஞ் சேர்ந்து தோன்று மொய்ம்புறுந் தபன விம்ப
மெழுமலை நிரைகண் மேலை யார்கலி யிடத்தொன் றேடொன்
றிழைதர வெழுந்து மாய னெழிற்புயத் திடையின் மன்னி
மளவிறங் கதிரெ றிக்கு மணிவணத் தழகே மானும். 89

அருணமாங் கிரண கேச ரங்களின் வருண னைசை
மருவியே தூங்குஞ் சோதி மண்டல முலக மூன்று
முரிமையின் வேறற் கெண்ணு மொழுகுதேன் மலரம் பெய்வோன்
பிரிவின ருடலம் போழ்வா னெய்ததிற் பிறங்கு மாதோ. 90

ஆயியம் பெரிய வெள்ளத் தழுந்தினன் கரங்க ளந்தோ
விழுகுவன் விரிந்த வெண்ணி னெடுத்தனை விடுவா ருண்டேல்
வாழுவே னெடுநா ளென்று வாய்வெரீஇ யுடலஞ் சேர்ந்து
மாழ்கிமே லெடுத்த கைக ளெனவவன் கிளரு மாதோ. 91

நளினியாங் கற்பின் மிக்க நாயகி யெனது நாயக
னளிபெருங் கடலுண் மூழ்க னுண்கணிற் காணே னென்னாக்
களிமது கரங்கள் பாடுங் கமலக்கண் முகிழ்த்து மாய்ந்தா
ளளிப்புறுங் கற்பின் மங்கைக் குயர்நெறி யிழிந்தா மன்றே. 92

பனிப்பகை குடக்கு வாரி தியினிடைப் பருப்ப தத்தி
னனித்தலத் திருந்து வீழ்ந்தா னெனவிரைந் துள்ளஞ் சாம்பிச்
சணக்குரைத் திடுவ னென்னப் பறவையின் சங்கங் கூவா
வினிப்புற விழைத்து நீடத் துண்ணுழைந் தொடுங்கிற் றன்றே. 93

மூடிய வனசத் தூடு முரலளி முடங்கிற் றென்றே
யாடுறும் போக்கின் வெய்யோ னந்தவன் பட்டா னென்ன
வாடிய விரைமா றுத நளினியாம் வனிதை வாயிற்
பாடறுங் கரிய நஞ்சைச் சாதமே பரிந்து பெய்தாள். 94

அளிகுல மழுங்க னண்பன் புலரியி லடைவா னென்று
நளினியா நங்கை தன்னை யிசையெனு நறிய மாற்றங்
குளிர்வுற மொழிந்து புன்கண் குலைதரத் தெருட்டிற் றம்மா
வளியின தியற்கை நோனு தயலவர் பழங் கணன்றே. 95

பரவைமேற் படருந் துப்பி னிழன்மிசைப் பாய்ந்த துண்டோ
விரவிமேல் வரையின் செய்ய தாதுமின் விறங்கிற் றேயோ
வருணனின் மனைவி யங்க ராகமேல் வழங்கிற் றாமோ
வருணமா யாய மேல்பா லம்பர முழுது மாங்கே. 96

அம்பர வுவரி மீதே யலர்ந்தசெந் துகிரோ பூவி
னம்பினன் வலிய தோளி னடலழற் சிகையோ மேல்பாற்
கொம்பனை யடியி லூட்டிக் குலவலத் தகமோ மேலை
யும்பரின் முடியார் வெற்பி னொளிர்செவி யசோக மாமோ. 97

கற்பகத் தளிரின் சோதி கலந்ததோ திமிர வண்டின்
பொற்புறுங் குழுவிற் பொங்குஞ் செய்யபங் கயத்தின் காமே
விற்பன னடரா சற்கு விளங்குசெந் திரையோ நீங்கு
மற்பொழு திரதப் புள்ளி னாசைநோ யனல மேயோ. 98

*　　　*　　　*　　　*

வேறு

உதயவெற்பி ருங்களிற்றி னொளிருகண்ட சங்கமாய்
மதனமன்ன வற்குமுத்த மன்னுவெண்க வீகையாய்
விதுவிருந்த ணிந்தவிம்பம் விரியுநீல வானமாஞ்
சதமுறுந்த டத்தெழுந்த புண்டரீகஞ் சான்றதே. 110

அமுதநெய்க ரத்திரீய மார்ந்ததிங்கள் விம்பமா
மிமிழுறுந்த களியதன்க ணுதயராக மென்றிடு
நிமிர்தருஞ்சு டரையந்தி யென்னுமின்னு நேரிழை
முமதமாவின் கொம்பொசித்த வற்குமுன்ன ரேற்றினாள். 111

மங்களத்தி னோரைதன்னின் மணிமயத்த தகளிவா
யெங்குமெண்ணி னானெய்யி னேற்றருஞ்சு டரெலா
மெங்கணைய வரங்கனாதி யிண்டையின் விழிகளிற்
பொங்குடன்கண் டருள்புரிந்து பொன்விமானம் விண்டபின். 112

ஒன்பதாய மணிகுயிற்றி யொளிருதண்டி கைக்குளே
யன்பினாற் றெழுந்துவெம்ப டைக்கணத்தி னரசனார்
தன்பெருந்தி ரீயண்ண றன்சினக ரந்தனின்
முன்புகீட்டி சைக்கணாட்டி முகடுவான முட்டவே. 113

திசையினெங்குந் தெரியுமாறு தீபமொன்று முனையுற
வசையிகந்த தாளவோலை வரையிகந்த திற்புரிந்
தசலமென்ன வோங்கதின்ன டித்தலத்தி னெரியிட
மிசையெழுந்து சடசடென்று மிக்குமூள நோக்கினான். 114

* [நூலாசிரியர் எழுதியுள்ள கையெழுத்துப் பிரதியில் ஓரேடு செல்லுக்கிரையான மையால் இவ்விடத்தில் 11 செய்யுட்கள் விடப்பட்டன.]



தாளநாள மின்பொறிக்க ணங்கடங்கு கேசரம்
மூளருஞ்சி கைத்தளங்கண் முடுகுதூப நிரையுமே
லொளியாயொ ருங்குபோது மதுகரத்தொ ழுங்குமாய்
வாளலர்ந்த பங்கயத்தை யொத்ததந்த வன்னியே. 115

மீதுமூளு மந்தவெய்ய வனற்சிகைகண் மிக்கெழுந்
தீதலிற்சி றந்தவைந்தி ருந்தருக்க ளைவளைந்
தாதிநாய கன்முனங்கெ ரிந்தபோத வேகனுஞ்
சோதிவல்லி யென்னவாருஞ் சொல்லுமாறொ ளிர்ந்தவே. 116

புரமெரித்த புனிதன்வீரி யந்தகித்த பொங்கழல்
வரநதிக்கண் வெம்மையாற்று வானெழுந்த துண்மையே
சுரர்தமக்கி வன்கொடுக்கு மவிகளைச்சு மந்துசென்
றெரிகரத்தி னீயவங்கெ ழுந்ததென்று மிசைத்துமே. 117

நீடுசொக்கப் பனைதணிந்த பின்னர்நீல மேனியா
னாடுபாம்ப ணைப்பரன்றி ரும்பியங்கு நின்றுபொற்
கோடுயர்ந்த நாயகிதன் கோயின் முன்வ ழிச்செலா
நாடரும்வ ரவரமண் டபநடுவ ணண்ணினான். 118

அங்குசேர பாண்டியன்சிங் காதனத்து விற்றிருந்
தெங்குமோனை போயமங்கை யெழிற்கலிய னிசைதலும்
பொங்குமுள்ளத் தொடுசெவிப்பு லன்கொளாம கிழ்ந்துபோ
தங்கிரும்ப தின்மராழு வார்கடாம திக்கவே. 119

சடமகற்றி னாரிழைத்த தமிழ்மறைப்பு துநருக்
குடமெடுத்த கூத்தினோடு கொண்டுளங்க ளிக்கவே
யிடமடுத்த வாடன்மூன்றி னேதுவாய சாசனம்
மடமகற்று மாலையாதி யோடவர்க்க ணுய்த்ததின். 120

அந்தமாந னாறுதைல கந்தரத்தி னாங்கெழுந்
தெந்த மாய னாணைதன்னை வீழ்ந்துவீழ்ந்தி றைஞ்சியே
சந்தமாய தந்தலைப்பு றத்தியைந்து கானமங்
கந்தமயு வந்துபாடற் ககமுவந்து சென்றனர். 121

வேறு

முன்பனியெ ழுந்ததுபின் முளரியுரு மென்ன
மன்பெரிய மாகமொடு மெண்ணகமு மொன்றாய்க்
கொன்பனிவி ழுந்திடுகு றுந்துளிகண் மூடப்
பொன்புரையு மேனிகளும் பொற்பொருவ மாதோ. 122

மூடுபனி முன்ன ரெழு வோர்கடெரி யாமே
நீடிரவி யின்கதிர்க ணீக்கும்வலி யின்றாற்
கூடுறின னுத்திரனுங்:கொண்டவல:மொன்றே
பாடிலது பாரினதை யேன்றெதிர் படுக்க. 123

அவ்விருது வானவன டார்ந்துபெயி மத்தின்
கவ்வைபுரி நுண்டிவலை கொண்டுகம லத்தின்
செவ்வியொடு செந்தவன கன்றமட மாத
ரொவ்வறுமு கத்தலரி னுண்மையையுங் கொண்டான். 124

ஆங்கயில்வி ழிச்சுரிகு ழன்மகளி ராடும்
பாங்கினெனு வன்பவள வாயிதழ்வ லிந்து
தேங்கமுத முண்ணவவர் சீற்கரமுஞ் செய்யா
ரேங்குவர்க ளூடுவர்க ளின்பனிவெ டிப்பின். 125

அத்துகின மாதவன டர்க்கும்வலி யின்று
லொத்தவவ னுக்குரிய நீரசமொ றுக்கும்
குத்தலைவ லப்பகைவர்க் குறுகும்வலி யில்லார்
மொத்துவர வர்க்குரிய மொய்ம்பிலரை யென்ப. 126

தண்ணிமக ரன்றுகின நுண்டுளிக டம்மா
னண்ணெழிலை நளினமது நன்கபக ரித்தான்
றன்னெடுபி றந்ததிரு வதனமலர் தன்னை
யொண்மையினு றழ்ந்ததிது வென்றுளம ழன்று. 127

நூறிதழ்ம ணத்தினெடு நாண்பனிய ளைந்து
வீறிளைய தண்வளித வழ்ந்துவிளை யாட
நாறுமல ரின்கணைய னண்ணரிய வெந்தீ
மீறியதி கந்தவர்க ளுள்ளமும்வெ தும்ப. 128

மாயனுரு.வாயமதி வைகறையி லாரும்
பாயொளிய மைம்பொனில யக்கதிர்ப டிந்து
சேயநறு நெய்யடிசி லேமுதல செய்ய
வாயகர மார்ந்துதிருப் பள்ளியெழுப் புற்றார். 139

அம்பொனொளிர் கம்பமவை யாயிரமு யர்ந்தும்
வம்பவிழ்ம லர்த்தொடைய ணித்திலமு நாலும்
உம்பருறு கொட்டகையு மொன்றெதிரி னோங்கும்
இம்பரெதி ரின்றியவின் மண்டபமெ ழுந்தே. 130



வடகலையுந் தென்கலையும் வைப்பமர ரோதப்
புடையொழுகு பொன்னியரங் கன்னிடைபொ லிந்து
நடமுதல கண்டருளி நாலைந்திரு வைக
லடைவுடனெ ழிற்றிருவி ழாவதின கற்றும். 131

வேறு

பின்வெங்கதிர் மகரந்தனிற் பிணையும்பொழு தரங்கன்
பொன்வெம்பிதிர் பொருவுஞ்சுணங் கிளமாமுலை யவரின்
மின்வெம்மணி யூசற்றிரு விழவாடலும் விழையா
மன்விம்மெழு நூறூர்மணி மண்டபமு மணைந்தான். 132

பூமாமுத லெமதன்னையர் பொதுளத்திரு வூசல்
காமாயிர னனுகாமத களநங்கையர் நசையாக்
காமாகர டோலைத்தலை கலந்தாடுறு கவினும்
வாமாகர விழிகண்டுள மகிழாவருள் செய்தான். 133

பெண்மாமணி களின்மேலடி யாகச்சுழல் பெரிதும்
மண்மாமணி மிளிரெந்திர மதனன்வய மடைவா
னெண்மாவுரு வேற்றுஞ்செப மாலைக்கிளை யிதுவென்
றுண்மாவளை யொளிர்கைப்பா னுவந்தெண்ணுபு கண்டாள். 134

சுடுவெந்தப னனும்வெங்குளி ராற்றும்வலி தொய்யா
முடுகுங்கனன் முதல்வன்றிசை முன்னிச்செறி தரமா
குடைதந்தெழு வாசங்கமழ் குந்தத்திர ளலரும்
படிபின்பனி பின்வந்தது பார்தாமன துழையே. 135

மாயன்மல ருறைவோனரன் மார்வம்முக மரைமெய்
யாயுந்திரு வெழிறுமக ளயிராணியென் றிவர்க
ளேயும்படி திலையும்வரை யின்றேயெழுந் திலரேல்
வாயும்பெரு [illegible]ப்பொழு தெவ்வாறவர் வதிவார். 136

அடலாரர விந்தக்கணை யலகக்கனல் வில்லோன்
மடலார்குழ லவர்மைந்தரை மருவப்புரி வகையே
விடலார்கணை யொன்றின்றியவ் வேலைப்படு குளிரே
மிடலார்விசி கங்கள்ளென மேவித்தொழி லாற்றும். 137

காழாரகி லூட்டும்புகை கமழும்பவ னத்தும்
வீழாவண மகளிர்முலை மிடையுஞ்சுடு கையினுந்
தாழாதெரி தணலார்தரு குண்டத்தரு கிடையும்
வாழாவுறை தருவாரத மதிவாசர முழுதும். 138

மீனந்தனி லாதிப்பிர மச்சாறுளம் விழையா
வானந்திகழ் வோரைக்கூய் வரிவார்முர சறையா
மானந்துரோ கிணியிற்கர மதுகங்கண மன்ன
வானந்தமோ டவிருந்துச வாரோகணம் வளைந்தான். 139

குமுதாதிக ணேசர்களிற் குலவேழவ ரணத்தி
னமுதற்குறு பலிதந்தனற் கருமங்களு மயரா
விமிழின்னிர ணியசப்பர மிவர்ந்தெல்லியின் மறுகின்
முமதக்கரி முரசார்ப்பொடு படர்ந்தாலய மணைந்தான். 140

மறுவைகலின் மணியிற்புரி சதுரந்தயா னமிவர்ந்
திறைவன்னுப வனமன்னியங் கிருவைபவம் பருகா
வுறையார்குர கதமூர்ந்தவன் மறுவைகலை யுலையா
நறையார்குக நகரோபவ னந்தங்கினன் கழித்தான். 141

நாலாவது தினநாகவ சனன்மண்டப நணுகா
மேலாயவன் மணதோரண மிளிரும்மறு குலவாக்
கோலாகல மொடுமாலையிற் குளிரப்பல வியமும்
மேலாவெவர் களுமேத்திட வெழுந்தானில யத்துள். 142

முன்மாகடி புரியுந்திரு மூதாருறை யூரிற்
பின்னுளெழுந் தவனுடரும் பெருமைக்குறு பலவும்
மன்னுநிசி மலரின்சிவி கையினூர்ந்தம ருங்கார்
மன்மாகம திடைநின்றுனை தொழுமந்திர மணைந்தான். 143

ஆறாவதி னருங்கும்பமு னியினைசையி னணுகா
வீறார்பகல் விபவத்தொடு கழியாவிரை மதமே
பூறாவொழு கும்பற்றிரு வூர்திப்பிட ரூர்ந்தே
மாறாமறை வடிவத்துவி மானந்தனை மணந்தாள். 144

மற்றும்படர் மறுகின்வளை யாடல்வளைந் திரவி
னுற்றங்குச மொளிர்வானக மபிடேகமு னெல்லா
பெற்றங்கிருந் திருமாமறை பின்முன்னரு மிசைக்கக்
கொற்றங்கொளுந் தெருவோடைந் தம்பொற் கொயில்கோண்டான் 145

இருநான்கினிற் புரியின்கிழக் கெய்தித்தின முகத்தின்
மருமாமலர்க் கதம்பம்மெனுந் தீர்த்தக்கரை மருவில்
பரிமாமிசை யூர்ந்தேமறு படியந்தியங் கிருந்தே
கிரிமாமனை மறுகிற்செல வயர்ந்தாலயஞ் செறிந்தான். 146

# விற்பனைக்குத் தயாராய் இருக்கும் புத்தகங்கள்

1. ஸ்ரீ யதுநாதகத்யம் :—இப்பிரபந்தம், ஸ்ரீ பாகவத தசமஸ்கந்தத்தில் அடங்கிய கதையைப் பொருளாகக் கொண்டு, ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் அருளிச் செய்த ஸ்ரீ ரகுவீர கத்யத்தை அடியொற்றிக் கத்ய ரூபமாக (க்ரந்தாக்ஷரத்தில்) பந்தல்குடி வேலாமூர் வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யரால் இயற்றப்பட்டுப் பாக்கெட் ஸைஸில் அச்சிடப்பட்டுள்ளது. இதனுடன், ஷை தசமஸ்கந்த கதையை அநுஸரித்து, "கிருஷ்ண பஜநதசகம்" என்ற ஒரு க்ரந்தமும் அச்சிடப்பட்டிருக்கிறது. இதில் அடங்கிய ச்லோகங்கள், பலவித ராகங்களிலும் மெட்டுகளிலும் அமைத்துத் தாளத்துக்கு இசையப் பாடுவதற்குத் தகுதியானவை. ஷை க்ரந்தங்கள், அநுஸந்தாநத்துக்கும் உபந்யாஸாதி ப்ரவசநங்களுக்கும் மிகவும் உபயோகமானவை. இவை, பல பெரிய வித்வான்களால் பார்வையிடப்பட்டு நன்கு ஆமோதிக்கப்பட்டுள்ளன.

இதன் விலை அணா 0 1 6

தபால் சார்ஜ் உள்பட அணா 0 2 0

2. திருப்பாவை:—இது, ஸ்ரீரங்கராமாநுஜ ஸ்வாமி அருளிச் செய்த ஸம்ஸ்க்ருத வ்யாக்யாநத்துடனும், ஸ்ரீ பரகால ஸ்வாமி, ஸ்ரீரங்கநாத ஸ்வாமி, இவர்கள் அருளிச்செய்த மணிப்ரவாள வ்யாக்யாநங்களுடனும், ப்ரதி பத தாத்பர்யத்துடனும் கூடியது. முகவுரையில் ஆண்டாள் வைபவச் சுருக்கமும் அடங்கியுள்ளது. இதன் விலை (பைண்டுடன்) ரூ. 2-0-0 தபால் சார்ஜ் வேறு.

3. க்ருஹ்ய ரத்நம் :—இந்த க்ரந்தம், விவாஹம் முதலான பூர்வ கர்மாக்களைச் செய்து வைக்கும் உபாத்யாயர்களுக்கும், அவர்கள் இல்லாத இடத்தில் தாமாக அறிந்து செய்யவேணுமென்று எண்ணங்கொண்ட பிறர்க்கும் மிகவும் உபயோகமுள்ளது. 'கண்ட பூஷணம்' என்னும் ஸம்ஸ்க்ருத வ்யாக்யாநமும், அதற்கேற்ற தமிழ் வ்யாக்யாநமும் அடங்கியுள்ளது. இதன் விலை (பைண்டுடன்) ரூ. 1-0-0. தபால் சார்ஜ் வேறு.

கிடைக்குமிடங்கள் : —

1. மானேஜர், வேதாந்த தீபிகா ஆபீஸ்,
   ராமஸ்வாமி தெரு, புதுமாம்பலம், தியாகராயநகர் போஸ்ட், சென்னை.
2. மானேஜர், ஸ்ரீ ஸத்வித்யா புக் டேப்போ,
   1, புஜங்கராவ் தெரு, சைதாப்பேட்டை (மதராஸ்)

Registered No. M. 916.

## Sri Vaishnava Siddhanta Prachara Sabha Ltd.

An Institution under the above designation has recently been registered under the Indian Companies Act for the purpose of promoting and propagating the doctrines of Sri Vaishnava Religion and Philosophy. The Company has published a Memorial Edition of Sri Vedanta Desika's Works, in Nagari Script. 'NYAYA SIDDHANJANAM' with the commentary of Sri Rangaramanuja Swami and with an introduction by Mahamahopadhyaya Ramanuja Vijayadhvaja Kapisthalam Desikacharia Swami. Copies can be had at Rs. 5/- each. The second volume, TATWATIKA, is in the press and is nearing completion.

Shares in the Company of Rs. 50 each are payable by convenient instalments. The following are the office-bearers of the Company.

| | | |
|---|---|---|
| *Sriman* | V. V. Sreenivasa Aiyangar | *President* |
| do | P. Rangaswami Iyengar, Retd. Sub Judge | *Genl. Secy.* |
| do | T. Rajagopalachariar, Retd. Sub Judge. | *Exec. Secy.* |
| do | S. Jagannathachariar, Organiser, United India Life Assurance Co., Ltd. Madras. | do |
| do | S. Aravamuda Iyengar, Advocate. | *Treasurer.* |
| do | R. Kesava Iyengar, Advocate, | *Director.* |
| do | T. D. Sreenivasachari, Advocate, | do |
| do | N. T. Shamanna, Solicitor. | do |
| do | M. Sudarsana Iyengar, Merchant. | do |
| do | C. V. Venktaramana Iyengar, Coimbatore. | do |
| do | T. E. Satakopachariar, Advocate, Cuddalore. | do |

It is requested that all Sri Vaishnavas will take shares in and otherwise co-operate with the work of the Company.

Subscriptions to Vedanta Dipika should be remitted either to the Manager, No. 1, Ramaswami Street, East Mambalam, Theagarayanagar Post, Madras or to the Registered Office of the Sabha at 39, Muthiyalu Chetty Street, Vepery, Madras, according to the convenience of the subscribers. Memorandum of Association and any other information may be had on application to the Registered Office of the Sabha.

Printed by Kabeer Printing Works, Triplicane. and Published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras

# SRI VEDANTA DIPIKA

Vol. 24] NOVEMBER 1935 [Part 5

Editors : S. VASUDEVACHARIAR, V. V. SRINIVASA AIYANGAR

# ஸ்ரீ வேதாந்த தீபிகை

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால்
ப்ரசுரிக்கப்படும் மாதத் தமிழ்ப் பத்ரிகை.

யுவ ௵



ஐப்பசி ௴

பத்ராதிபர்கள் :
ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

CONDUCTED BY

**Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,**

39, MUTHIYALU CHETTY ST., VEPERY, MADRAS.

# விஷய ஸூசிகை.


1. ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனுடைய உபகார விசேஷம் 193
[ஸ்ரீ. உப. தி. இ. சடகோபாசார்யர், அட்வொகேட், கடலூர்]

2. கம்பராமாயண ஆதியந்தப்பாக்கள் 204
[பந்தல்குடி : பாரத்வாஜ மாடபூசி : ஸ்ரீ. உப. ரெ. திருமலை ஐயங்கார்]

3. ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத் 214
[ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யர், அட்வொகேட், திருச்சி]

4. அவதாரங்களின் கருத்து
[ஸ்ரீ. உப. திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயண ஸ்வாமி] 222

5. அத்யாத்ம ஸ்ரீமத் ராமாயணம்
[ஸ்ரீமான் உ. வே. சேட்லூர் துரைஸாமி அய்யங்கார், அட்வகேட், சித்தூர்.] 226

6. "வேதம் தமிழ் செய்த மாறன்"
[ஸ்ரீ. உப. ஸி. நரஸிம்மாசாரியார், அட்வொகேட், சென்னை] 232

7. ஸம்ஸ்க்ருதத்தின் தற்கால நிலைமை
[ஸ்ரீமான் உ. வே. வித்வான். வி. அநந்தாசார்யர், பச்சையப்பன் காலேஜ் ஸம்ஸ்க்ருத பண்டிதர்.] 233

8. தேசிக சித்ரமும் சில்பியும்
[ஸ்ரீமான் உ. வே. தி. ராமஸ்வாமி அய்யங்கார், அட்வொகேட், சென்னை.] 236

9. புருஷாயுஸ்ஸின் ப்ரமாணம்
[ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்] 241

10. மானமும் மௌநமும்
[ஸ்ரீ உப. டி. சுந்தராசாரியார், வக்கீல், சீர்காழி] 243

11. ஸ்ரீ க்ருஷ்ண தாதார்ய மஹா தேசிக சரிதம் 248
[ஸ்ரீ, உப. வித்வான் ஐபா. க்ருஷ்ண தாதாசார்யர்]

12. வ்ருத்தாந்தங்கள் 250

13. ஸம்பாதகரின் குறிப்புகள் 252


---

## விற்பனைக்குக் கிடைக்கும் புஸ்தகங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ யதுநாதகத்யம் ... .... | 0 | 2 | 0 |
| 2. | திருப்பாவை (வ்யாக்யைகளுடன்) ... ... | 2 | 0 | 0 |
| 3. | க்ருஹ்ய ரத்நம் (கண்டபூஷணமும்) .... ... | 1 | 0 | 0 |

கிடைக்குமிடங்கள் : —

1. மானேஜர், வேதாந்த தீபிகா ஆபீஸ்,
ராமஸ்வாமி தெரு, புதுமாம்பலம், தியாகராயநகர் போஸ்ட், சென்னை.

2. மானேஜர், ஸ்ரீ ஸத்வித்யா புக் டேப்போ,
1, புஜங்கராவ் தெரு, சைதாப்பேட்டை (மதராஸ்)

श्रीः

श्रीमते नमः

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்கள் : { ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

ஸம்பு.24] யுவ௵—ஐப்பசி மீ [ஸஞ்சிகை 5

## ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனுடைய உபகார விசேஷம்

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்யர், அட்வொகேட், கடலூர்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

இவ்வாறு நம் ஆசார்யன், ஸ்த்ரீ சூத்ரர் உட்பட ஒவ்வொரு அதிகாரிக்கும் அவரவர் புத்திக்கும் சக்திக்கும் தக்கபடி தேவபாஷையிலும் தேசபாஷையிலும் ஸம்க்ஷிப்தமாகவும் விஸ்த்ருதமாகவும் லலிதமாகவும் கஹநமாகவும் தத்வ ஹித புருஷார்த்தங்களைப் பரம்ஸத க்ரந்தங்களில் ஸுஸ்பஷ்டமாயும் ஸுநிஸ்சிதமாயும் ப்ரதிபாதித்திருக்கும் ப்ரகாரத்தைப் பராமர்சித்தால்,

'[illegible]'

'मग्नानुद्धरते लोकान् कारुण्याच्छास्त्रपाणिना'

என்றது இவர் விஷயத்தில்தான் பூர்ணாந்வய முள்ளதென்று நிச்சயிக்கத் தகும். இக்கலியுகத்தில் '[illegible]' 'श्वः श्वः पापीयदिवसाः' என்றபடி ஜனங்களுக்கு வரவர ஜ்ஞாநம், சக்தி, ஶ்ரத்தை முதலியவை

[illegible] அடையப் போகின்றன வென்பதை ஸர்வஜ்ஞரான ஸ்வாமி விஷயீ [illegible] இப்படிப் பஹுவிதமாக உபகரித்தார்போலும். இங்ஙனம் அநந்ய ஸாதாரணமாய் உபகாரம் பண்ணியிருந்தும், ஜனங்கள் அவ்வுபகார மஹிமையை அறியாமல் உதாஸீநர்களாகவும் அஸூயுக்களாகவும் வர்த்திப்பது கலி ஸாம்ராஜ்யத்தின் ப்ரபாவத்தையே ப்ரகாசிப்பிக்கிறது என்பதற்கு ஸந்தேஹமேது ?

நமது ஸ்ரீமத் தேசிக ஸம்ப்ரதாயத்துக்குள்ள வைலக்ஷண்யங்களில் தர்சந ப்ரணாடிக்கும் அநுஷ்டாந ப்ரகாரத்துக்கும் ஏற்பட்டிருக்கும் ஸாமரஸ்யம் ப்ரதாநமாய்க் கவனிக்கத்தக்கது. இதர மதஸ்தர்களுக்கு இம் மாதிரியான ஏகரூப்யம் அமையாததால்தான் 'ஏட்டுச் சுரைக்காய் வேறு வீட்டுச் சுரைக்காய் வேறு' என்பதுபோல், அவர்கள் ஸித்தாந்தம் வேறாகவும் அநுஷ்டாநம் வேறாகவும் இருப்பது எல்லோருக்கும் ப்ரத்யக்ஷ ஸித்தம். இதற்கு முக்ய காரணம், இதர ஸம்ப்ரதாயங்களில் தத்வ ஹித புருஷார்த்தங்கள் யதாவத்தாக ப்ரதிபாதிக்கப்படாததுதான். ஆனது பற்றியே, தமது மனமுகந்த ஸ்ரீமத் ராமாநுஜ ஸத்ஸம்ப்ரதாயத்துக்கு யாதொரு அவத்யமும் வாராதபடி ஸர்வ ப்ரகாரமாகவும் அதை ரக்ஷித்து, அதுவே முமுக்ஷுக்களுக்கு ஸ்ருதி ஸ்ம்ருதி ஸம்மதமான ஸநாதந தர்ம மார்க்கம் என்பதை ஸுப்ரதிஷ்டிதமாகச் செய்து, அதன் ப்ரபாவத்தை ஸர்வத்ர ஜயகோஷ புரஸ்ஸரமாய் ப்ரகடநம் பண்ணுவதற்காகவே பரம தயாபரனான ஸ்ரீ வேங்கடநாதன்,

'வித்ராஸிநீ விபுதவைரிவரூதிநீநாம்'

'वित्रासिनी विबुधवैरिवरूथिनीनाम्'

என்றபடி ஸமஸ்த விபக்ஷ நிரஸந ஸமர்த்தரான தம்முடைய திருமணியாழ்வாரையே அஸ்மதாசார்ய ரூபியாய் அவதரிப்பித்துத் தமது திருநாமத்தை அவர்க்குச் சாத்திப்போக அநுக்ரஹித் தருளினாரென்பது தத்வ வித்துக்களுக்கு ஸ்பஷ்டமாய் விளங்கும். 'தர்மேண பாபமபநுததி' 'धर्मेण पापमपनुदति' என்று வேதத்தில் கூறப்பட்டபடி, நாம் நமக்கு ஸ்வரூப ப்ராப்தமன பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம் பண்ணுவதற் கில்லாமல் ஸம்ஸார காராக்ருஹத்தில் கட்டுண்டு, ஸங்குசித ஜ்ஞாநர்களாகத் தட்டித் தடுமாறும் துர்த் தசையிலிருந்து நீங்கி, ஸ்வஸ்வரூபாவிர்ப்பாவத்தை அடைய வேண்டுமானல், ஸர்வபாப விமோசகமாகிற பரம தர்மாநுஷ்டாநத்தாலல்லது வேறு விதமாக அம்மநோரதத்தைப் பூரணம் செய்ய முடியாதாகையால், தாத்ருஶ தர்ம ஸ்வரூபத்தை யறிந்துகொள்ள வேண்டியது முமுக்ஷுக்களின் முதற்கடமை யாகிறது. வேதங்களிலும் தர்ம சாஸ்த்ரங்களிலும் ப்ரவ்ருத்தி தர்மம் என்றும் நிவ்ருத்தி தர்மம் என்றும் தர்மம் இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.



'ஸுகாப்யுதயிகம் சைவ நைஶ்ரேயஸிகமேவ ச ।
ப்ரவ்ருத்தம் ச நிவ்ருத்தம் ச த்விவிதம் கர்ம வைதிகம் ॥'

'सुखाभ्युदयिकं चैव नैश्रेयसिकमेवच ।
प्रवृत्तं च निवृत्तं च द्विविधं कर्म वैदिकम् ॥'

என்று மநுஸ்ம்ருதியில் கூறப்பட்டபடி, ப்ரவ்ருத்தி தர்மாநுஷ்டாநத்தால் ஐஹிக ஸுகமும் ஸ்வர்க்காதி ஸுகங்களும் கிடைக்கின்றன. நிவ்ருத்தி தர்மாநுஷ்டாநத்தால் மோக்ஷ ஸாம்ராஜ்ய லாபம் ஏற்படுகிறது. அதெப்படி யெனில்: அந்தந்தக் கர்மத்துக்கு ப்ரதிநியதமாய் வேதத்தில் சொல்லப்பட்ட பலத்தை உத்தேசித்துத் தாதர்த்தமாக அதை யநுஷ்டித்தால் அவ்விதமான ப்ரவ்ருத்தி கர்மாநுஷ்டாநத்தால் தத்தத் பலப்ராப்தி ஏற்படுவதுடன், தத்நுகுணமான வாஸனையும் ருசியும் ஏற்பட்டு, அதனால் மறுபடியும் ப்ராக்ருத லோகத்தில் ஜந்மம் ஏற்படுகிறது. அப்படிக் கில்லாமல் அதே கர்மங்களைப் பலாபிஸந்தி ரஹிதமாய்க் கேவலம் பகவதாராதந வேஷமாய் அநுஷ்டித்தால், அவைகள் நிவ்ருத்தி தர்மமென்கிற கர்மயோக கோடியில் சேர்ந்து, 'அவித்யயா ம்ருத்யும் தீர்த்வா' 'अविद्यया मृत्युं तीर्त्वा' என்கிறபடியே அவ்யவஹித மோக்ஷோபாயமான பக்தியோகத்துக்கு ப்ரதிபந்தகமாயிருக்கும் பாபங்களை அபநோதநம் பண்ணி, பக்தியோகத்தைத் தலைக்கட்டிவைத்து, தத்வாரமாக 'வித்யயாऽம்ருதமஶ்நுதே' 'विद्ययाऽमृतमश्नुते' என்றபடி அப்ராக்ருத திவ்யலோக ப்ராப்திக்கு ஹேதுவாகின்றன. இதனால்தான் ப்ரவ்ருத்தி தர்மத்துக்கு புபுக்ஷுக்கள் அதிகாரிகளென்றும், நிவ்ருத்தி தர்மத்துக்கு முமுக்ஷுக்கள் அதிகாரிகளென்றும் விபாகம் ஏற்பட்டிருக்கிறது. இவ்விரண்டு விதமான அதிகாரிகளில் புபுக்ஷுக்களுக்கு வேதாந்த சாஸ்த்ரத்தில் ப்ரவேச யோக்யதை இல்லாததால், அதற்கு

'பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாத்'

'परीक्ष्य लोकान् कर्मचितान् ब्राह्मणो निर्वेदमायात्'

என்றபடி முமுக்ஷுக்களே அதிகாரிகளாகிறார்கள். இப்படி முமுக்ஷுக்களான விசிஷ்டாதிகாரிகள் தங்கள் உத்திஷ்ட பலமாகிய மோக்ஷ ஸாம்ராஜ்யத்தைப் பெறுவதற்கு அவலம்பிக்க வேண்டிய உபாயத்துக்கே வித்யா சப்த வ்யபதேசம் தகு மென்னுமிடம்,

'ஸாவித்யா யா விமுக்தயே வித்யாந்யா ஶில்பநைபுணம்'

'सा विद्या या विमुक्तये विद्यान्या शिल्पनैपुणं'

என்கிற மஹர்ஷி வசநத்தால் ஸித்தம். இவ்வித்யையின் ஸ்வரூபத்தையும் அதன் அங்கோபாங்க விவரங்களையும் நிஸ்ஸம்ஶயமாய் அநுஷ்டாநார்ஹமான வழியில் தெளிவிப்பதே அத்யாத்ம சாஸ்த்ரத்தின் முக்யோத்தேச மாகையால், அது விஷயமாக வைஶத்யோத்பாதநமே ஸர்வோத்தமமான ஆசார்ய க்ருத்யம். இவ்விஷயத்தில் ப்ரதிபாத்யாம்ஶம் முழுமையும் சிறிதும் விடாமல் அநஸூயுவான ஜிஜ்ஞாஸுவுக்கு ஸமஸ்த ஸம்ஶய ப்ரஶமநமாகவும், குதர்க்காவலம்பிகளான ப்ரதிபக்ஷிகளில் எவருக்கும் எதிர்த்து ப்ரதிகோடி சொல்ல ஸாத்யப்படாமலும், ப்ரமாணங்களைக் கொண்டும், தந்நுஸாரியான ஸத் தர்க்கங்களைக் கொண்டும் தத்வ நிர்ணயம் பண்ணிப் பரமோபகாரம் செய்திருப்பதில் நமது ஆசார்யன் ப்ராதம்யத்தை வஹிக்கிறார் என்பது எல்லோரும் ஸ்பஷ்டமா யறிந்த விஷயம். இவர் ஶ்ருதிகளும், பகவச் சாஸ்த்ரமும், ஆழ்வார்களின் திவ்யஸூக்திகளும், தத்வஹித புருஷார்த்தங்கள் விஷயத்தில் ஏக கண்டமா யிருக்கின்றன வென்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக் காட்டி, பரம ஹிதமான மோக்ஷோபாயம் பக்தி ப்ரபத்தி யென்று இருவகைப்பட் டிருப்பதை நிர்த்தாரணம் செய்து, அததன் ஸ்வரூபத்தையும் அநுஷ்டாந ப்ரகாரத்தையும் தத்நுபந்தியான ஸகல வேத்யாம்ஶங்களையும் யதா ஶாஸ்த்ரம் வகுத்துக் காட்டி, 'இதற்குமேல் ஜிஜ்ஞாஸ்யாம்ஶம் வேறு கிடையாது; இதுவே ஸர்வ தத்வார்த்தங்களின் பராகாஷ்டை' யென்று எல்லோர் மனத்திலும் சதுரஶ்ரமாய்ப் பதிந்து அநுபவஸித்தமாம்படிப் பஹுவிதமாய் க்ரந்தங்களில் உபபாதித்திருக்கிறார். இதில் முக்யமாய் ப்ரபத்தியின் ப்ரபாவத்தைப் பூர்வாசார்யர்கள் பூர்ணமாய் அறிந்திருந்தும், அதற்குத் தக்க அதிகாரி கிடைப்பது அரிதென்பது முதலான ஹேதுக்களை முன்னிட்டு, அவர்கள் அது ஸ்வதந்த்ரமான மோக்ஷோபாயமாய் அநுஷ்டிக்கத் தகுமென்பதை ஸுஸ்பஷ்டமாய் வெளியிடாமல் ரஹஸ்யமாய் ஆபத்தநம்போல் சேமித்து வைத்து, யுக்தாதிகாரிகள் அநுஷ்டிப்பது மாத்ரமாய் இருந்தபடியால், இவ்வுபாயத்தின் ஸ்வரூபத்தையும் ப்ரகாரத்தையும் குறித்து அர்வாக் காலத்தில் பஹுரூபமான விப்ரதிபத்தி ஏற்பட்டதன்பேரில், இக்கலியுகத்தில் வரவர ஜனங்களுக்கு ஸர்வ ப்ரகாரத்திலும் சக்திக் குறைவு ஏற்படுவதால், பக்தியோகத்துக்கு அதிகாரியே ஸித்திக்காம லிருப்பதைக் கணிசித்து, இனி ஸர்வோபஜீவ்யமான இவ்வாபத்தநத்தை மறைத்துவைப்பது யுக்தமல்ல வென்று நமது ஆசார்யன் திருவுள்ளம் பற்றி, அதை யதாவத்தாய் ப்ரகாசிப்பிக்க வேணுமென்கிற அபிப்ராயத்துடன்,



'ஸ காலேநேஹ மஹதா யோகோ நஷ்ட: பரந்தப |
ஸ ஏவாயம் மயா தேऽத்ய யோக: ப்ரோக்த: புராதந: ||'

'स कालेनेह महता योगो नष्टः परन्तप ।
स एवायं मयातेऽद्य योगः प्रोक्तः पुरातनः ॥'

என்று ஜநகர் முதலிய ராஜர்ஷிகளால் ஆதிகாலத்தில் அறியப்பட்டும் அநுஷ்டிக்கப்பட்டு மிருந்து, பிறகு காலக்ரமத்தில் ஸம்ப்ரதாய விச்சேதம் வந்த கர்மயோகத்தைக் கீதாசார்யன் தன் ஸகாவும் பக்தனுமான அர்ஜுநனுக்குப் பரிவுடன் உபதேசித்தாப்போல், தம் அந்தரங்க சிஷ்ய வர்க்கங்களுக்கு ந்யாஸ வித்யையின் தத்வத்தையும் தத்நுஷ்டாந ப்ரக்ரியையும் ஸாங்கோபாங்கமாய் வெளியிட்டிருக்கிறார். இந்த ந்யாஸ வித்யை பரமைகாந்திகளுக்கு அஸாதாரணமான தென்றும், இது மற்றுமுள்ள பக்தியோக ப்ரபேதங்களான ஸர்வ வித்யைகளைக் காட்டிலும் வெகு மடங்கு ச்லாக்யமான தென்றும்

'நிஷ்கிஞ்சநத்வதநிநா விபுதேஶ யேந
ந்யஸ்தஸ்ஸ்வரக்ஷணபரஸ்தவ பாதபத்மே |
நாநாவிதப்ரதிதயோகவிஶேஷதந்யா
நார்ஹந்தி தஸ்ய ஶதகோடிதமாம்ஶகக்ஷ்யாம் ||'

'निष्किञ्चनत्वधनिना विबुधेश येन
न्यस्तस्स्वरक्षणभरस्तव पादपद्मे ।
नानाविधप्रथितयोगविशेषधन्या
नार्हन्ति तस्य शतकोटितमांशकक्ष्याम् ॥'

என்பது முதலிய அநேக திவ்ய ஸூக்திகளில் ஆசார்யனால் உத்கோஷிக்கப் பட்டிருக்கிறது. இவற்றை யெல்லாம் பராமர்சிக்குமளவில், இவ்வாசார்யாவதாரத்தின் முக்ய ப்ரயோஜநம் ப்ரபத்தி கண்டாபத ப்ரதிஷ்டாந மென்றும், தீர்த்தம் கண்டக ஶோதநம் பண்ணுவதற்காக விமத நிரஸநம் பண்ணி, யதாவத்தான தத்வ ஸ்வரூபத்தை நிர்ணயித்து, அதைச் சார்ந்ததாக நிவ்ருத்தி தர்ம ஸாமாந்யத்தைப் பற்றியும் அவற்றுக்குள் அவ்யவஹித மோக்ஷோபாயமான பக்தி யோகத்தைப் பற்றியும் வக்தவ்யாம்ஶங்களை நிரூபித்திருக்கிறார் என்றும் ஏற்படுகிறது. இந்தக் கணக்கிலேயேதான் நம்மாசார்யன் க்ரந்தங்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டு நிற்கும். அவை:—1. ப்ரஹ்ம ஸூத்ரம், ஸ்ரீ பாஷ்யம், ஸ்ரீ கீதை, கீதாபாஷ்யம் முதலிய பூர்வாசார்ய க்ரந்தங்களை உபஜீவித்துத் தத்ஸம்ப்ரஹ்மண ரூபமாய்

ஏற்பட்ட க்ரந்தங்கள்; 2. பகவத் சாஸ்த்ரத்தையும் பூர்வாசார்யர்களுடைய ஸம்ப்ரதாயமான ஸாரத்தையும் அவர்கள் அநுஷ்டாந ப்ரக்ரியையும் அநுஸரித்து தத்வவிவக்தி ரூபமாக ந்யாஸவித்யா விஷயமாய் அநுக்ரஹிக்கப்பட்ட நிபந்தந க்ரந்தங்கள்—என்பவை.

இப்படிக்குப் பரமஹிதமாகத் தாம் உகந்த ந்யாஸ வித்யையின் ஸ்வரூப மின்னதென்று நிஷ்கர்ஷித்து, அது விஷயமாக ஏற்பட்ட கலக்கங்களையெல்லாம் தெளிவித்து, அதன் அங்கங்களை நிர்ணயம் பண்ணி, தத் ஸம்பந்தமான சங்கைகளையெல்லாம் சமிப்பித்து, இவ்வுபாயத்தை அநுஷ்டிக்கும் ப்ரகாரத்தையும் அதற்கு அதிகாரம் முதலிய யாவதம்ஶங்களையும் யதா ப்ரமாணம்|உபபத்திகளுடன் ஆசார்யன் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் நிக்ஷேபரக்ஷை முதலிய க்ரந்தங்களில் ப்ரதிபாதித்து, ஸாது ஜநங்களுக்குப் பரமோபகாரம் செய்தருளி யிருக்கிறார். இதனால் ஸித்தோபாயத்தைக் குறித்துச் சிலருக் குண்டான ஸம்சயங்களையெல்லாம் ஶமிப்பித்து, லக்ஷ்மீ விசிஷ்டனை பகவான் நாராயணனே உபாயமென்றும், த்வயத்தில் பூர்வோத்தர கண்டங்களிலுள்ள ஸ்ரீமச் சப்தங்கள் ஸமாநார்த்தகங்கள் என்றும் நிர்ணயித்து, ஸாத்யோபாயத்தைப்பற்றி, அது கர்த்தவ்யமான வ்யாபார விசேஷமா? அல்லது ஸம்பந்த ஜ்ஞாந மாத்ரமா? என்கிற கலக்கத்தையும் சோதித்து, 'அது சேஷத்வ ஜ்ஞாந மாத்ரமன்று; மேலும் சேஷத்வ ஜ்ஞாநாதி யுக்தமான ஸ்வரக்ஷா பரந்யாஸம்' என்றும் நிகமநம் செய்தருளினார்.

இங்ஙனம் தர்மி விஷயமான ஸம்ஶயங்கள் தீர்க்கப்பட்ட பிறகு,

'𑌪𑌶𑍁𑌰𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌃 𑌪𑌕𑍍𑌷𑍀 𑌵𑌾 𑌯𑍇 𑌚 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌾𑌃'

**'पशुर्मनुष्यः पक्षी वा ये च वैष्णवसंश्रयाः'**

என்று ஸர்வாதிகாரமாய் விதிக்கப்பட்ட இவ்வுபாய விசேஷத்தை அவலம்பித்தவர்களுக்கு உபாய ஸாம்யமும் பல ஸாம்யமும் இருக்கும்போது ஜாதிபேதம் இருக்கலாமோ? அதுவும்,

'𑌨 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾 𑌭𑌗𑌵𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾 𑌭𑌾𑌗𑌵𑌤𑌾𑌸𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃'

**न शूद्रा भगवद्भक्ता विप्रा भागवतास्स्मृताः**

என்பது முதலிய வசநங்களுக்கு விருத்தமல்லவோ?" என்கிற சங்கையைப் பற்றி யதாப்ரமாணம் விசாரித்து, இம்மாதிரியான வசநங்களெல்லாம் பகவத் பக்தர்கள் திறத்தில் பஹுமாநம் காட்டவேண்டு மென்பதற்காகக் குணப்லாகை பண்ணுவதற்கு மாத்ரமேயல்லாமல், யாவதாயுஷம் ஸ்தாயியான



ஜாதி பேதத்தைப் போக்கினதாகத் தாத்பர்ய முள்ளவை யல்ல வென்றும், அப்படித் தாத்பர்யம் கொண்டால் ஸர்வ சாஸ்த்ர வ்யாகாதமும் ஸர்வ மர்யாதா ஸம்க்ஷோபமும் உண்டாகும் என்றும் நிர்த்தாரணம் செய்திருக்கிறார்.

இப்படி ஜாதிபேத முண்டா வென்கிற ஶங்கையைச் சார்ந்ததாகவே மற்றொரு ஸம்ஶயமும் ஏற்பட்டது. அதாவது: த்ரை வர்ணிகர்களால் மட்டும் அதிகரிக்கத் தக்கதான பக்தி யோகத்துக்கு வர்ணாஶ்ரம தர்மாநுஷ்டாநம் அவச்ய மபேக்ஷிதமென்று ப்ரஹ்ம ஸூத்ரத்திலும் ஸ்ரீ கீதையிலும் நிர்ணயிக்கப்பட்டிருந்தபோதிலும், ஸர்வாதிகாரமாகவும் ஸஹகாரி நிரபேக்ஷமாகவும் ஸக்ருத் கர்த்தவ்யமாயு மிருக்கிற ப்ரபத்திக்கு வர்ணாஶ்ரம தர்மாநுஷ்டாநத்தால் யாதொரு ப்ரயோஜநமு மில்லாததால்,

'𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌮𑌨𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌨 𑌮𑌨𑍍𑌦𑍋𑌽𑌪𑌿 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇'

**'प्रयोजनमनुद्दिश्य न मन्दोऽपि प्रवर्तते'**

என்கிற ந்யாயாநுஸாரமாய் வர்ணாச்ரம தர்மங்கள் ப்ரபந்நாநுஷ்டேயமாக மாட்டாவல்லவோ வென்பதுதான். இதையும் ஸ்ரீமதாசார்யன் பரம க்ருபையுடன் ஶாஸ்த்ராநுக்ரஹீத ஸத்தர்க்கங்களைக் கொண்டு பஹுப்ரகாரமாய் விசாரித்து, ஆளவந்தார் ஸ்ரீ பாஷ்யகாரர் முதலிய பூர்வாசார்யர்களின் அபிப்ராயத்தை அநுஸரித்து, இப்படி முன்னடி பார்த்து வர்த்திக்க வேணுமென் றருளிச்செய்த அர்த்தம் ஶாஸ்த்ரைகவேத்ய மாகையாலே ஶாஸ்த்ரீயங்களுக்கு உபலக்ஷணமாக ஸாரோத்தாரம் பண்ணி இவரருளிச் செய்த கைங்கர்யங்களும் தான் வேண்டினபடி செய்யவொண்ணாமையாலே ஶாஸ்த்ரோக்த நியமத்தோடே செய்தால் கைங்கர்யமாமென்று ஸூசிதம். 'வேண்டிற்றுச் செய்து திரிய வமையுமோ வென்னில், அது இவனுக்கு ஸ்வரூபமன்று' என்றருளிச் செய்தபடியாலே '𑌅𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌾𑌸𑍁𑌰𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑍍'
**'अशास्त्रमासुरं कृत्स्नम्'** என்று ஆளவந்தார் அருளிச்செய்தபடியே சாஸ்த்ர விருத்தங்கள் தேவப்ரக்ருதியான இவன் ஸ்வரூபத்துக்குப் பொருந்தாமையாலும்,

'𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍍𑌮𑌮𑍈𑌵𑌾𑌜𑍍𑌞𑌾 𑌯𑌸𑍍𑌤𑌾𑌮𑍁𑌲𑍍𑌲𑌙𑍍𑌘𑍍𑌯 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌆𑌜𑍍𑌞𑌾𑌚𑍍𑌛𑍇𑌦𑍀 𑌮𑌮 𑌦𑍍𑌰𑍋𑌹𑍀 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌃 ॥'

**'श्रुतिस्मृतिर्ममैवाज्ञा यस्तामुल्लङ्घ्य वर्तते ।**
**आज्ञाच्छेदी मम द्रोही मद्भक्तोऽपि न वैष्णवः ॥**

என்று அடிமை கொள்ளுகிறவன் அருளிச் செய்தபடியாலும், இவன் சரீரத்தோடிருந்த காலம் ஶாஸ்த்ரவச்யனா யடிமை செய்ய வேணுமென்று திருவுள்ளம்,

'நிஜகர்மாதி பக்த்யந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித: ।
உபாயதாம் பரித்யஜ்ய ந்யஸ்யேத் தேவே து தாமபீ: ॥'

'निजकर्मादि भक्त्यन्तं कुर्यात् प्रीत्यैव कारितः ।
उपायतां परित्यज्य न्यस्येद्देवे तु तामभीः ॥'

என்று ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹத்தில் 'ப்ரீத்யைவ' என்கிற அவதாரணத்தாலே ஸாதந புத்தியை வ்யவச்சேதித்தா ரென்னுமிடம் 'உபாயதாம் பரித்யஜ்ய' என்று விவரிக்கையாலே வ்யக்தம். சாஸ்த்ரீய கைங்கர்யத்தில் ப்ரீதியினுடைய ப்ரேரகத்வாதிஶயம் விவக்ஷிதமானாலும், 'நிஜகர்மாதி பக்த்யந்தம்' என்கிற இவற்றின் ஸ்வரூபத்துக்கு ஶாஸ்த்ரமே ப்ரமாணமென்னுமிடம் 'நிஜகர்ம' சப்தத்தாலே தர்சிதமாயிற்று. இச் சாஸ்த்ரீய நியமம்

'அவிப்லவாய தர்மாணாம் பாலநாய குலஸ்ய ச ।
ஸங்க்ரஹாய ச லோகஸ்ய மர்யாதாஸ்தாபநாய ச ॥
ப்ரியாய மம விஷ்ணோஶ்ச தேவதேவஸ்ய ஶார்ங்கிண: ।
மநீஷீ வைதிகாசாரம் மநஸாபி ந லங்கயேத் ॥'

'अविप्लवाय धर्माणां पालनाय कुलस्य च ।
संग्रहाय च लोकस्य मर्यादास्थापनाय च ॥
प्रियाय मम विष्णोश्च देवदेवस्य शार्ङ्गिणः ।
मनीषी वैदिकाचारं मनसापि न लंघयेत् ॥'

என்று ப்ரபத்யத்யாயத்திலே ப்ரஸித்தம். இது தவிர்ந்தபோது,

'யதா ஹி வல்லபோ ராஜ்ஞோ நதீம் ராஜ்ஞா ப்ரவர்த்திதாம் ।
லோகோபயோகிநீம் ரம்யாம் பஹுஸஸ்யவிவர்த்தநீம் ।
லங்கயந் ஶூலமாரோஹேத் அநபேக்ஷோऽபி தாம் ப்ரதி ।
ஏவம் விலங்கயந் மர்த்யோ மர்யாதாம் வேதநிர்மிதாம் ।
ப்ரியோऽபி ந ப்ரியோऽஸௌ மே மதாஜ்ஞாவ்யதிவர்த்தநாத் ॥'

'यथा हि वल्लभो राज्ञो नदीं राज्ञा प्रवर्तितां ।
लोकोपयोगिनीं रम्यां बहुसस्यविवर्धनीम् ।
लङ्घयन् शूलमारोहेदनपेक्षोऽपि तां प्रति ।
एवं विलङ्घयन् मर्त्यो मर्यादां वेदनिर्मिताम् ।
प्रियोऽपि न प्रियोऽसौ मे मदाज्ञाव्यतिवर्तनात् ॥'



என்று அநந்தரம் சொல்லப்பட்டதென்றும். ஆகையால் ஜாதி வ்யவஸ்தை குலையாதே நிற்கப் பாகவத ப்ரபாவம் கண்டு கொள்வது.

'அதோ ஜாதே நிக்ருஷ்டாயாஸ் ஸர்வஸ்யா வா விநாஶத: ।
ஸாஜாத்யம் விஷ்ணுபக்தாநாமிதி மந்தமிதம் வச: ॥
வைஷ்ணவத்வேந மாந்யத்வம் ஸமாநம் முநிஸம்மதம் ।
ஜாத்யாதித்வம்ஸதஸ்ஸாம்யம் முக்திகாலே பவிஷ்யதி ॥".

अतो जातेर्निकृष्टायास्सर्वस्या वा विनाशतः ।
साजात्यं विष्णुभक्तानामिति मन्दमिदं वचः ॥
वैष्णवत्वेन मान्यत्वं समानं मुनिसम्मतम् ।
जात्यादिध्वंसतस्साम्यं मुक्तिकाले भविष्यति ॥'

பகவத் கீதாதிகளிலும்

'ஸ்த்ரியோ வைஶ்யாஸ்ததா ஶூத்ராஸ்தேऽபி யாந்தி பராம் கதிம்'
'ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர: ।'
'ஸ்வகர்மநிரதஸ்ஸித்திம் யதா விந்ததி தச்ச்ருணு ।
ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ: ।'
'தஸ்மாத் ஸப்ரணவம் ஶூத்ரோ மந்நாமாநி ந கீர்த்தயேத்'
'வர்ணாஶ்ரமாசாரவதா புருஷேண பர: புமாந் ।
விஷ்ணுராராத்யதே பந்தா நாந்யஸ்தத்தோஷகாரக: ॥'
'ந சலதி நிஜவர்ணதர்மதோ ய:'

'स्त्रियो वैश्यास्तथा शूद्रास्तेऽपि यान्ति परां गतिम् ।'
'स्वे स्वे कर्मण्यभिरतः संसिद्धिं लभते नरः ।'
'स्वकर्मनिरतस्सिद्धिं यथा विन्दति तच्छृणु ।
स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः ।'
'तस्मात् सप्रणवं शूद्रो मन्नामानि न कीर्तयेत् ।'
'वर्णाश्रमाचारवता पुरुषेण परः पुमान् ।
विष्णुराराध्यते पन्था नान्यस्तत्तोषकारकः ॥'
'न चलति निजवर्णधर्मतो यः'

இத்யாதிகளாலே பாகவதனுக்கே யதாபூர்வம் ஜாதி வ்யவஸ்தையும் அதற்கு அநுரூபமான வ்ருத்த வ்யவஸ்தையும் ஸுஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டன.

இப்படிப் பாகவதத்வமாகிற குணமும் அதனடியாக வரும் புருஷார்த்த விசேஷமும் ஸமானமாயிருக்க, ஜாதி விசேஷங்களும் வ்ருத்த விசேஷங்களும் நித்ய வ்யவஸ்திதங்கள் என்னுமிடம், ‘ஶூத்ராஸ்ஸாயா: க்ஷத்ரியாஸ்ஸாயா:’ இத்யாதிகளிலும் ப்ரஸித்தம்.

‘ 𑌤𑌮𑌶𑍍𑌶𑍂𑌦𑍍𑌰𑍇 𑌰𑌜𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑍇 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇 𑌸𑌤𑍍𑌵𑌮𑍁𑌤𑍍𑌕𑌟𑌮𑍍 ’

‘ तमश्शूद्रे रजः क्षत्रे ब्राह्मणे सत्वमुत्कटम् । ’

இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே, ஸத்வாதி குண தாரதம்யவத்தான சரீரத்தில் ப்ராஹ்மண்யாதிகள் வேறு; மநஸ்ஸில் ஸத்வாதிகுண விசேஷமடியாக ஸர்வஜாதிகளிலும் ப்ரஶம்ஸா வாக்யங்களாலே சொல்லப்பட்ட ப்ராஹ்மண்யாதிகளும் வேறு. இவற்றில் ஶரீர குண விசேஷமடியாக வ்யவஸ்திதங்களான ஶரீர ஜாதி விசேஷங்கள் உத்பத்தி ஸித்தங்களாய் மரணாந்தமாக ஸ்திரங்களாயிருக்கும். மாநஸமான ஸத்வாதி குணோத்கர்ஷ மடியாகச் சொல்லுகிற ப்ராஹ்மண்யாதிகள் ஸர்வ ஜாதிகளுக்கும் ஸம்பாவிதங்களாய் ப்ரஹ்லாதாதிகளுக்கு ஜந்ம ஸித்தங்களாய், ஏனையோர்க்கு ஆசார்ய ஸம்பந்தாதி ஹேதுக்களாலே ஆகந்துகங்களாயிருக்கும். இதில் ஶரீர ஜாதி விசேஷங்களையிட்டுச் சில ஶாஸ்த்ரங்கள் நியதங்களாம். மாநஸமான ப்ராஹ்மண்யாதிகளையிட்டு அவற்றுக்கநுரூபமான புருஷார்த்த தத்³உபாயங்களும் ப்ரஶம்ஸாதிகளும் ஸர்வ ஜாதியிலும் ஸம்பாவிதங்களாம். ‘இப்படி விஷய வ்யவஸ்தை பண்ணாதபோது பரிக்ரஹீதங்களான பஹு ஶாஸ்த்ரங்களோடும் ஶிஷ்டாநுஷ்டாநத்தோடும் விரோதிக்கையாலே அதிவாதமாத்ரமாய் விடும். மஹா ப்ரபாவனான பரமைகாந்தி பக்கலிலும் இச்சாஸ்த்ரீய நியமம் குலையாதென்னுமிடம், நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானாருள்ளிட்ட பரமாசார்யர்களுடைய அந்திம திவஸாவதியான அநுஷ்டாநங்களைக் கேட்டுத் தெளிந்து கொள்வது’ என்றும் நிர்ணயம் செய்தருளினார்.

இவ்வாறு ஸர்வ ஶாஸ்த்ராநுகுணமாகவும் யுக்திக்கு உபபந்நமாகவும் விஶததமமாய் ஆசார்யன் ஸாதித்தருளியிருக்கும் நிர்ணயத்தால் ஸர்வ ஸம்ஶயங்களும் சாந்தமாய், இதுவே பூர்வாசார்யாபிப்ராயமென்று தடஸ்த மதிகளுக்குத் தெளிவுண்டாகத் தட்டில்லை. அதி கடோர தர்க்க குலிஶங்களால் விபக்ஷகோத்ர பக்ஷச்சேத படுவான தேசிகேந்த்ரன் அந்தரங்க பூதர்களுடைய ஶங்கா நிவர்த்தந விஷயத்தில் ஆவிஷ்கரிக்கும் ஶ்லக்ஷ்ணதையும் வாத்ஸல்யமும் ஆதராதிஶயமும் ஒரு மாதாவின் பரிவுக்குப் பதின்மடங்கு கொண்டதென்பது ஸுமநஸ்ஸுக்களுக்கு வ்யக்தமாகும்.

இவ்வண்ணம் ப்ரபத்தி ஸ்வரூபத்திலும் ப்ரபந்ந க்ருத்ய ப்ரகாரத்திலும் ஏற்பட்ட கலக்கங்களையெல்லாம் அபுநருத்பவமாய்த் தெளிவித்து, இவ்வுத்தமாதிகாரியின் அநுஷ்டாநம் நிஷ்பங்கமாக வேண்டிய க்ரமத்தைக் குறித்துப் பகவச் சாஸ்த்ராநுஸாரமாய் ஸ்ரீ பாஷ்யகாரர் நித்யத்தில் ஸங்க்ரஹித்திருப்பதை அவலம்பித்து, தத்³உபப்ருஹ்மண ரூபமாய் ஸச்சரித்ர ரக்ஷை ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷை முதலிய க்ரந்தங்களில் உபாதேயாம்ஶங்களையெல்லாம் நன்கு விளக்கியிருக்கிறார்.



இவ்வாறு நம் ஆசார்யன் ஒவ்வொரு அதிகாரிக்கும் அந்தந்தக் காலத்துக்கும் அந்தந்த அவஸ்தா விஶேஷத்துக்கும் தக்கபடி, சாஸ்த்ரார்த்தங்களை ஸங்க்ரஹமாயும் விஸ்த்ருதமாயும் பஹுப்ரகாரமாக ப்ரதிபாதநம் பண்ணியதால், ஸர்வ சேதநங்களுக்கும் செய்திருக்கும் அநுக்ரஹ விஶேஷமானது, ஒவ்வொரு ஜீவாத்மாவுக்கும் பூர்வ ஸம்ஸ்காராநுகுணமாய் ஶரீர ப்ரதாநம் செய்து அதைத் தர்மஸாதநமாய் உபயோகிப்பதற்கு த்ரயீ மார்க்கத்தைக் கைவிளக்காகக் கொடுத்துப் பகவான் ஸர்வேஶ்வரன் செய்த உபகாரத்துக்குக் கொஞ்சமும் குறைந்ததல்லவென்கிற ப்ரதிபத்தியுடன் அநவரதம் அவர் திறத்தில் க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் பண்ணுவதே ஸத்வோத்தரர்களுக்குப் பரம புருஷார்த்தமென்பதை

‘ 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌪𑍁𑌨𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌯 𑌭𑍁𑌜𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ’

‘ सत्यं सत्यं पुनस्सत्यमुद्धृत्य भुजमुच्यते ’

என்று ஸத்யாப்மாநிகள் உத்கோஷிக்க ப்ராப்தம்.

𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍀𑌕𑍃𑌤𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌾𑌦𑌿𑌤𑌮𑍋𑌨𑍁𑌦𑍇 ।
𑌨𑌮𑍋 𑌦𑍇𑌶𑌿𑌕𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌯 𑌵𑍇𑌦𑌸𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑌭𑌾𑌨𑌵𑍇 ॥

प्रकाशीकृततत्वाय प्रतिवादितमोनुदे ।
नमो देशिकसूर्याय वेदसारार्थभानवे ॥

# கம்பராமாயண ஆதியந்தப் பாக்கள்

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ஸ்ரீ. உப. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி,
திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்]

"ஸ்ரீ ராமாயணத்தால் சிறையிருந்தவளேற்றஞ் சொல்லுகிறது" என்பது ஸ்ரீவசன பூஷண வாக்கியம். திருமந்த்ரம் எட்டுத் திருவக்ஷரமாய் மூன்று பதமாயிருக்கும். இதில் முதற் பதம் பிரணவம். இது 'அ' என்றும், 'உ' என்றும், 'ம' என்றும் மூன்று திருவக்ஷரம். அகாரமானது ஜ்ஞாநஸ்வரூபனான விஷ்ணுவுக்கு வாசகமாக இச்சிக்கப்படா நின்றது. அப்படியே உகாரம் சித் ஸ்வரூபையான பெரிய பிராட்டிக்கு வாசகமாகும். மகாரமோ வென்றால், அவர்களுக்குத் தாஸபூதனான ஆத்மாவாகச் சொல்லப்படுகிறது. இது ப்ரணவத்துக்கு லக்ஷணம். ஸர்வ லோகத்துக்கும் ஈசுவரனும் வியாபகனுமான ஹரியானவன் அகாரத்தாலே சொல்லப்படா நின்றான். அந்த விஷ்ணுவாலே எப்போதும் திருமார்பிலே தரிக்கப்படுகிற லக்ஷ்மியானவள், எப்போதும் உகாரத்தாலே சொல்லப்படா நின்றாள். மகாரமோ வென்றால் அந்த ஸ்ரீ, நாராயணன், இவர்களிருவர்க்கும் எப்போதும் சேஷபூதனான ஆத்மாவுக்கு வாசகமாகச் சுருதிகளாற் சொல்லப்பட்டிருக்கின்றன என்று ஸ்ரீ பாஞ்சராத்ரம் கூறுகின்றது. 'த்வயத்தில் பெரிய பிராட்டியாலே பேறென்கிறது' என்பது முமுக்ஷுப்படி.

கம்பநாட்டாழ்வார் பரம வைஷ்ணவ பாகவதராதலால், தாமியற்றியருளிய ஸ்ரீ ராமாயணத்து ஆரம்பத்திலும் இறுதியிலும் உகாரத்தை யிட்டுச் செய்யுள் வகுத்துள்ளார். இவர் பாடியது பாலகாண்டம் முதல் உயுத்தகாண்டம் ஈறாகத்தான். உத்தரகாண்டம் இவர் இயற்றியதல்ல. இந்த இரண்டு செய்யுட்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கு. குற்றங் களைந்து குணமே கொள்க.

'𑌅𑌖𑌿𑌲 𑌭𑍁𑌵𑌨 𑌜𑌨𑍍𑌮𑌸𑍍𑌥𑍇𑌮𑌭𑌙𑍍𑌗𑌾𑌦𑌿𑌲𑍀𑌲𑍇
𑌵𑌿𑌨𑌤𑌵𑌿𑌵𑌿𑌧𑌭𑍂𑌤 𑌵𑍍𑌰𑌾𑌤𑌰𑌕𑍍𑌷𑍈𑌕𑌦𑍀𑌕𑍍𑌷𑍇 ।
𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌿𑌰𑌸𑌿 𑌵𑌿𑌦𑍀𑌪𑍍𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑍇
𑌭𑌵𑌤𑍁 𑌮𑌮 𑌪𑌰𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌶𑍇𑌮𑍁𑌷𑍀 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌾 ॥'

என்னும் ஸ்ரீபாஷ்யத்தின் மங்கள சுலோகத்தையும், கீழ்க்கண்ட இராமாயணப் பாசுரத்தையும் உபய கலைகளிலும் தேர்ச்சிபெற்ற மஹான்கள் உற்று நோக்குவார்களாயின், ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரியர்களின் நடுநாயகமான



இராமாநுசமுனியும் கம்பநாட்டாழ்வாரும் கைகோத்துச் செல்வதுபோல அழகிதாய் நம் ஸித்தாந்த ரஹஸ்யார்த்தத்தைச் செவ்வியில் விளக்குவது நன்கு புலனாகும். எனவே அச்செய்யுளைக் கூடியவரை நன்கு விளக்கி மற்றொன்றைச் சுருங்கச் சொல்வாம்.

பாலகாண்டம் தற்சிறப்புப்பாயிரம் முதலாவது செய்யுள், வணக்கமாகிய மங்களத்தைச் சார்ந்தது. அது பின் வருமாறு:—

"உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே."

(பதவுரை) உலகம் யாவையும்—எல்லா உலகங்களையும், தாம்—தாமே, உள ஆக்கலும்—படைத்தலையும், நிலை பெறுத்தலும்—இரக்ஷித்தலையும், நீக்கலும்—அழித்தலையும், நீங்கலா—(தம்மைவிட்டு) நீங்காத, அலகு இலா—அளவில்லாத, விளையாட்டு—லீலையாக, உடையார்—உடையவராகிய, அவர்—அவரே, தலைவர்—(இவ்வுலகங்கட்கெல்லாம்) இறைவர்; அன்னவர்க்கே—அத்தன்மையராகிய கடவுட்கே, நாங்கள் சரண்—நாங்கள் அடைக்கலம் புகுந்தவரானோம்.

எல்லா உலகங்களையும் ஆக்கி, அளித்து, அழிக்கும் மூன்று தொழில்களையும் ஒழிவில்லாத விளையாட்டாகக் கொண்டுள்ளவன் எவனோ, அவனே உலகங்கட்கெல்லாம் இறைவனாவான்; அவனுக்கே எல்லாவித வாழ்த்துக்களும் உரியன; அவனுக்கே நாங்களடைக்கலம் என்பது இப்பாசுரத்தின் திரண்ட பொருள்.

இனி இப்பாசுரத்திற்கு விசேடவிரிவுரை வருமாறு:—இச் செய்யுளில் கவி, தத்துவங் கடந்த பரம்பொருளின் இலக்கணங் கூறுகிறார். அவ்விலக்கண அறிவோடு வாழ்த்துதல் மிகச் சிறந்ததல்லவா? நூன்முகத்தில் மங்கல மொழி முதலில் வகுத்துக் கூறுவது தமிழ்க் கவிகளின் மரபு; அதுபற்றி 'உலகம்' என்று தொடங்கினார். சேக்கிழாரும் 'உலகெலா முணர்ந் தோதற் கரியவன்' என்று பெரிய புராணத்தைத் துவக்குகிறார். 'உலகமுண்ட பெருவாயா உலப்பில் கீர்த்தி யம்மானே' என்பது நம்மாழ்வார் பாசுரம். 'உலகெலாம் புகழநாளு முயர்மதி குலத்திற் றோன்றி" என ஆரம்பிப்பது குசேலோபாக்கியானம். 'உலகம் ஆதிபகவன் முதற்று' என்பது திருவள்ளுவர் வாக்கு. உலகம் என்பது லோகமென்ற வடமொழியின் திரிபென்பது சேனாவரையர் கொள்கை; அது நற்றமிழ்ச் சொல்லேயாகு மென்பது நச்சினார்க்கினியர் மதம். இராமாயண நூன்முகத்தில் வேதந் தமிழ்

செய்த குருகைநாதன் குரைகழலுக்குக் காப்பிட்டிருக்கும் கம்பருக்கு, உலகம் என்பது தமிழ்ச் சொல் லென்பதே அவரது சம்மதம். உகாரத்தால் பெரிய பிராட்டியார் குறிக்கப்படுகிறாள். அவள் புருஷகார பூதை. பிராட்டி பாஷை தமிழ்ப் பாஷை. இராமாயணத்தால் சொல்லப் படுவது அவள் ஏற்றமே. எனவே அந்த அக்ஷரத்தை முதலிற்கொண்ட 'உலகம்' என்ற பதத்தைக் கம்பர் பிரயோகித்தார். தவிரவும், 'உயர்வற உயர்நலம் உடையவன்' என்று நம்மாழ்வார் உகாரத்தைக்கொண்டே ஆரம் பித்தது பற்றி, முதலில் இவரும் 'உலகம்' என்றார். திருமழிசைப்பிரான், திருச்சந்தவிருத்தத்தில்,

"உலகுதன்னை நீபடைத்தி யுள்ளொடுக்கி வைத்திமீண்
டுலகுதன்னு ளேபிறத்தி யோரிடத்தை யல்லையால்
உலகுநின்னொ டொன்றிநிற்க வேறுநிற்றி யாதலால்
உலகினின்னை யுள்ளசூழல் யாவருள்ள வல்லரே."

என்று கூறுகிறார். மேலும் அப்பெரியாரே,

"ஆதியான வானவர்க்கு மண்டமாய வப்புறத்து
ஆதியான வானவர்க்கு மாதியான வாதிநீ
ஆதியான வானவாண ரந்தகாலம் நீயுரைத்தி
ஆதியான காலநின்னை யாவர்காண வல்லரே" என்றும்

"சொல்லினால் தொடர்ச்சிநீ சொலப்படும்பொ ருளும்நீ
சொல்லினால் சொலப்படாது தோன்றுகின்ற சோதிநீ
சொல்லினால் படைக்கநீ படைக்கவந்து தோன்றினார்
சொல்லினால் சுருங்கநின்கு ணங்கள்சொல்ல வல்லரே"

என்றும் பணித்திருக்கின்றார்.

வேதாந்தத்தில் பிரம தத்துவங் கூறுமிடத்தில் 'இந்த ஜகத் எவனிடத்தி லிருந்து உண்டாயிற்றோ? எவனால் ரக்ஷிக்கப்படுகிறதோ? எவன்கண் இறுதி யில் ஒடுங்குகிறதோ? அவனே இறைவன்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றை உட்கொண்டே கம்பரும் 'உலகம் யாவையுந் தாமுள வாக்கலும், நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா, அலகிலா விளையாட்டுடையார்' என்கிறார். இதனால் ஜகத்காரணத்வம் பிரம்மத்திற்கு உண்டென்பது வெளிப்படை.

"இனியறிந்தே னீசற்கும் நான்முகற்குந் தெய்வம்
இனியறிந்தே னெம்பெருமா னுன்னை—இனியறிந்தேன்



காரணன்நீ கற்றவைநீ கற்பவைநீ நற்கிரிசை
நாரணன்நீ நன்கறிந்தேன் நான்"

என்று கூசாது கூறுகிறார் மழிசை வந்த சோதி.

'உலகம் யாவையும்' என்பது விண், மண், பாதாளம் என்ற முப்பிரிவின தாயுள்ள பதினான்கு உலகங்களையும் குறிக்கும். இச்சொல், 'இதுவரையில் சிருட்டித்த—இனி சிருட்டிக்கப்போகிற—எல்லா உலகங்களையும்' என்று பொருள்படும். 'தாம்' என்றதினால், வேறொருவர் உதவியின்றித் தாமே செய்கின்றார் என்பது விளக்கம். இதனால் நிமித்த உபாதாந காரணங்கள் பரமாத்மா வென்றும், அவன் யாதொரு உபகரணமு மின்றி உலகத்தைச் சிருஷ்டிக் கிறா னென்றும், அவன் அரூபியாய் யாண்டும் நிறைந்து அவயவ மின்றியும் சிருஷ்டியை நடத்துகிறா னென்றும் தெரிகின்றது.

'உளவாக்கல்' என்பதால், கருப்பந் தரித்த சில காலத்திலே அழிதலும், கருப்பம் சின்னபின்னம் அடைதலும், பூர்ண கர்ப்பமாகி வயிற்றில் செத்தே விழுதலும், அற்ப ஆயுளோடிருத்தலும் இன்றிக்கே, சேதன அசேதன வருக்கங்களும் நிற்குமாறு சிருட்டித்தல் என்பது புலனாகின்றது, 'தாம் உள ஆக்கல்' என்றதால், ஜகத்காரணமான பரவஸ்து ஆதியில் 'நான் அனேக விதமாக ஆகப்போகிறேன்' என்று ஸங்கல்பித்ததற் கொப்ப, எம்பெருமான் அந்தரியாமியாய் நின்று பதார்த்தங்கள் ஸத்தை பெறும்படி செய்கிறான் என்பது அறிப்படுகிறது. 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பது ஆப்த வசனம். 'தாம்' என்பதை நிலைபெறுத்தலும், நீக்கலும், என்பவற்றோடுங் கூட்டுக. இதனால் பெறப்படுவன இவை: பகவானுக்கும் ஜீவாத்மா வுக்கும் உள்ள ஆதார ஆதேய பாவங்கள், சரீர சரீரி பாவங்கள், சேஷ சேஷி பாவங்கள், ஆண்டான் அடிமைத் தொடர்புகள், நாயக நாயகி பாவங்கள் என்பன. ஸ்தூலமான சரீரத்திற்குள்ளே யிருந்து அது இயங்கு மாறு செய்விப்பது ஸூக்ஷ்மமான ஆத்மா. இதைச் சித் தென்று கூறுவர். ஸ்தூல சரீரத்தை அசித்து வர்க்கத்திற் கொள்ளலாம். ஆத்ம தத்துவத்தை உள்ளபடி அறிவார் சிலரே. 'தேஹமே ஆத்மா' என்பாரும், 'இந்திரியங்களே காண் ஆத்மா' என்பாரும், 'மநஸ்ஸே ஆத்மா என்பாரும்', "பிராணனே ஆத்மா' என்பாரும், 'புத்தி தத்துவமே ஆத்மா' என்பாரும் உளர், அவருள், 'இவை யித்தனைக்கும் அவ்வருகாய் ஜ்ஞாந குணமாய் ஜ்ஞாந ஸ்வரூபமா யிருப்பதொன்று ஆத்மா' எனச் சொல்ப வரே ஆத்ம தத்துவத்தை உள்ளபடி அறிந்தவர்கள். ஆத்மா சரீரத்தைக் காட்டிலும் விலக்ஷணன்,

ஆதாரம் தாங்குவது; ஆதேயம் தாங்கப்படுவது. சரீரம் ஆதேயம்; ஆத்மா அதற்கு ஆதாரம். ஆத்மா சரீரி; தேகம் சரீரம். பரவஸ்து உள்ளும் புறமும் உள்ளது. எல்லா வஸ்துக்களிலும் பரமாத்மா இருக்கிறான். எவ்வித மென்னில்: ஆத்மாவுக்குச் சரீரம் எப்படியோ அதுபோல் பரமாத்மாவுக்கு ஜீவாத்மா ஆகிறான். ஆகவே மனுஷ்யன் என்றால், மனுஷ்ய சரீரத்தைச் சொல்லி, அதை நிலை நிறுத்தற்குக் காரணமாகிய ஜீவனை யுணர்த்தி, அதற்கும் ஸத்தா ஹேதுவாய் அந்தர்யாமியாயிருக்கும் பரமாத்மாவை உணர்த்தும். பரமாத்மாவுக்குச் சித்தும் அசித்தும் சரீரங்கள்.

'நிலை பெறுத்தல்' என்பது ஸ்திதியைக் குறிக்கும். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்தல்; பரிணமித்தல். இதுவும் பரம்பொருளின்றி முடியாத காரியம். அவனே உள் நின்று விருத்தியாகும்படி செய்கிறான் என்றபடி.

'நீக்கலும்' என்பது மறைதல் என்ற பொருளில் வந்தது. ஸம்ஹரித்தல் என்னாது நீக்கலென்றது, பரம்பொருளின் மாயா சக்தியைக் காட்டுகின்றது. ஆக்கல் அளித்தல் முதலியவற்றைக் கண்கூடாகப் பார்க்கலாம். இடம் மாறுபாடே நீக்கலுக்கு விஷயம். ஜீவாத்மாக்களின் பார்வையினின்று நீக்கி, இல்லாதது போல் செய்து, தன் உதரத்தினுள்ளே அடக்கி அளிக்கிறான்' என்ற உண்மைக் கிணங்க 'நீக்கல்' என்றார். அனுக்கிரகிக்கை என்ற பரம்பொருளின் தொழில் இதில் அடங்கும். ஆகவே கடவுள் பஞ்ச கிருத்தியங்கள் செய்கிறவன் என்பதும் விளக்கியவாறாயிற்று.

"உண்டு முமிழ்ந்துங் கடந்து மிடந்துங் கிடந்து நின்றுங்
கொண்ட கோலத்தொடு வீற்றிருந்தும் மணங் கூடியும்
கண்ட வாற்றால் தனதே யுலகென நின்றான் தனை
வண்டமிழ் நூற்க நோற்றே னடியார்க் கின்ப மாரியே"

என்ற பாசுரம் கவனிக்கத் தகுந்தது.

'நீங்கலா விளையாட்டு'; 'அலகிலா விளையாட்டு' என்று கூட்டி நயங் காண்க. இனி: இறைவன் யாது பிரயோஜனத்தைக் கருதி உலகினைச் சிருஷ்டித்துக் காத்து நீக்குகின்றான் என்ற வினாவெழுதல் சகஜம். பலத்தில் ஆசை வைத்தே எவனும் எக்காரியத்தையும் செய்வன். பயனல்ல செய்து பயனில்லை யல்லவா? ஸர்வேசுவரன் அவாப்த ஸமஸ்தகாமனாதால் ஒரு பயனைக் கருதி இக் காரியங்களைச் செய்கிறான் என்பது பொருத்தமாகாது. ஜீவர்களின் நன்மையைக் கருதி உலக சிருஷ்டி செய்கிறானெனில், பிறப்பால் நரகவாசம் முதலிய கொடிய துன்பங்களும் உண்டாவதால் அதுவுமல்ல; கேவலம் லீலார்த்தமே தவிர வேறில்லை. லீலை யென்பது விளையாட்டு. அதாவது: அப்போது உண்டாகிற இன்ப மொழிய வேறு ஒருவித லாபத்தையும் எதிர்பார்த்துச் செய்கிறதல்ல. இறைவனுக்கு ஜகத்ஸ்ருஷ்டி மற்றோர் பிரயோஜன மில்லாமல் விளையாட்டி னிமித்தமே என்பது பெற்றாம். அவனை விட்டுப் பிரிக்க முடியாததாகையால் 'நீங்கலா விளையாட் டென்றார்.' சூரியப் பிரபையை சூரியனிடமிருந்து எப்படிப் பிரிக்க முடியாதோ, அதுபோல் லீலையை அவனிடமிருந்து பிரிக்க முடியாது. அவனுக்கு அது இயற்கையாயுள்ளது. அவன் பிரிக்க எண்ணினாலும் அது நீங்காது. மேலும் பிறருக் கரிதான இம் முத்தொழில்களையும் அவன் விளையாட்டாகச் செய்கிறான். இவைகளைச் செய்வதில் அவனுக்குப் பிரயாசையில்லை. இதனால் அவன் உபயவிபூதி நாதனாகிறான். பரமபதம் நித்ய விபூதி. இவ்வுலகம் லீலா விபூதி. 'நீக்கலும் நீங்கலா'—நீக்கல் முதலியவற்றைச் செய்தும் அவை நீங்கில. 'அலகு இலா'—அளவில்லாத விளையாட்டு எனினும் அமையும். 'நீங்கலா' என்பதில், இவ்வரிய பெரிய காரியங்களைச் செய்ததனால் தனக்கு ஒருவித மாறுபாடு வருவதில்லை என்பதும் தொனிக்கிறது. பகவானுக்கு அச்சுதன் என்ற ஒரு திருநாமம் உண்டு. தான் நழுவுத லில்லாதவன் என்றும், தன்னை அண்டினவர்களை நழுவவிடாதவன் என்றும் அதன் பொருள்.



'அலகு இலா விளையாட்டு'—முடிவில்லாத விளையாட்டுகள். ஆதியும், நடுவும், முடிவும் இல்லாதவன் இறைவன். எனவே அவன் விளையாட்டுகளும் அனந்தம். மேலும் இவ்விளையாட்டுகள் அவனைப் போல் நித்யமானவை. இது பற்றியும் 'அலகிலா' என்ற அடைமொழி கொடுத்தார். 'அலகு'—பாகு படுத்துவது. இத்தன்மையது என்று நிச்சயித்துக் கூற அரிதாதலின், அது அலகிலாத தாயிற்று. 'உடையார்'—உடைத்தானவர்; ஸ்வாமி; ஆண்டான். விளையாட்டு—உடைமை. அது அவர் இஷ்ட விநியோகம். அவரைப் போல் அதை உடைமையாக்கிக் கொள்ள ஒருவராலும் இயலாது.

"துன்பமு மின்பமுமாகிய செய்வினையா யுலகங்களுமாய்
இன்பமில் வெந்நரகாகி யினிய நல்வான் சுவர்க்கங்களுமாய்
மன்பல் லுயிர்களுமாகிப் பலபல மாயமயக்குக்களால்
இன்புறு மிவ்விளையாட் டுடையானைப் பெற்றேது மல்லலிலனே"

என்ற நம்மாழ்வார் பாசுரம் இங்கு அநுஸந்தேயம்.

"ஒண்டொடியாள் திருமகளுந் தானுமாகி
யொருநினைவா லீன்றவுயி ரெல்லா முய்ய

வண்டுவரை நகர்வாழ வசுதேவர்க்காப்
　　மன்னவர்க்குத் தேர்ப்பாக னாகிநின்ற
தண்டுளவ மலர்மார்பன் றானேசொன்ன
　　தனித்தருமந் தானெமக்காய்த் தன்னையென்றுங்
கண்டுகளித் தடிசூட விலக்காய் நின்ற
　　கண்புதையல் விளையாட்டைக் கழிக்கின்றானே."

என்ற அதிகார ஸங்கிரஹச் செய்யுளையும் நோக்குக.

முத்தொழில்களையும் விளையாட்டாக வுடையவரெனவே, அவர் கண்ணூன்றி முயன்று செய்யுங் காரியம் எத்துணைச் சிறப்பினை யுடைத்து என்பதைக் கூறவும் வேண்டுமோ ? இதனால் அவன் கருணாநிதி என்பதும், அகடிதகடநா ஸாமர்த்யன் என்பதும் தெரிகின்றன.

'அவர் தலைவர்'--முத்தொழில்களை யுடையவனும், அத்தொழில்களைத் தனக்கு விளையாட்டாகக் கொண்டவனும் எவனோ, அவனே உலகங்கட்கெல்லாம் மூல புருஷன். 'அவர்'—இங்ஙனம் சிறப்பித்துக் கூறப்பட்ட அவரே ; அகார வாச்யனான அவரே; அகாரச்சுட்டால் பிரசித்தியுடன் விளங்கும் அவரே ; பிறரல்ல. காணப்பட்ட புகையால் காணப்படாத அதன் காரணமாய நெருப்பு உண்டென்று அநுமானிக்கின்றோம். கண்ணால் காணப்பட்ட உலகத்தால் காணப்படாத அதன் காரணமாய்க் கடவுள் உண்டென்று நிச்சயிக்கின்றோம். சகல சராசரங்கட்கும் மூல புருஷனொருவன் உளனாதல் வேண்டுமென நிச்சயித்து 'விளையாட்டுடையார் தலைவர்' என்றார் கவி.

'அன்னவர்க்கே'—அத்தன்மையராகிய இறைவர்க்கே. ஏகாரம் தேற்றம். அவ்விறைவ ரன்றி வேறு புகலிடம் எமக்கு இல்லை. 'உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்றபடி. 'அன்னவர்க்கே' என்பதிலுள்ள ஏகாரத்தை 'அவர்' என்பதிலுங் கூட்டி முன்பு உரை சொன்னோம். அவர் என்பது ஈண்டு வழுவமைதி. இறைவனுக்கு ஸர்வஜ்ஞத்வமும், ஸர்வ சக்தித்வமு முண்டென்பது இதனால் பெறப்படும். 'சரண்'—புகலிடம். 'உன் சரணல்லாற் சரணில்லை;' 'சரணே சரணமக்கு'; 'ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்'; 'கழல்க ளவையே சரணாகக் கொண்ட' என்னக்கடவதிறே. 'சரண் நாங்களே'—அகங்கார மமகாரத்தை வேரற மாய்த்துத் தான் பெற்ற பேறு தம் மினத்தவரும் பெறுமாறு பாகவத கோஷ்டியையும் சேர்த்து எம்பெருமான் திருவடிகளில் சரணம் புகுகிறார். 'சரண் ஆங்களே' என்று பிரித்து 'ஆகுங்கள்' என்பது 'ஆங்கள்' எனத் திரிந்ததாகக் கொண்டு, அப்படிப்பட்டவரையே சரணாகப் பற்றுங்கோள் என்று உலகத்



தாரை நோக்கி உபதேசிப்பதாகக் கொள்ளவுமாம். இவர் கல்வியில் தலைசிறந்தவ ராதலாலும், ஆழ்வா ரானதாலும் பரோபதேசம் செய்ய அதிகாரமுள்ளவர்.

'அன்னவர்க்கே சரணங்கள்'—முத்தொழிலுடையவனும், யாவையும் அறியும் ஆற்றலுடையவனும், யாதொரு உபகரணம் அவயவம் முதலியன இன்றிச் சிருஷ்டிக்க வல்லவனும், எங்கும் நிறைந்தவனும், பரிபூர்ணனும், இத்தொழில்களை விளையாட்டாகக் கொண்டவனுமாகிய ஸர்வேசுவரனுக்கே எமது சரணங்கள் உரியன. சரணம்—மங்கள சரணம்; மங்கள வாழ்த்து. இறைமைக் குணங்க ளிலராயினாரை உடையரெனக் கருதி அவர்கள் புனைந்துரைக்கின்ற வாழ்த்துக்களையு மடக்கி 'சரணங்கள்' என்று கூறினார் கவி. இதனால்: பிற தெய்வ வாழ்த்துக்களும் இறைவனையே சென்றடையும் என்ற அறிஞர் போதனை நன்கு தெளிகின்றது.'நும்மின் கவிகொண்டு நும்நுமிட்டா தெய்வ மேத்தினால், செம்மின் திருமுடியென் திருமாலுக்குச் சேருமே" என்பது இதற்குச் சான்று. ஸர்வேசுவரன் ஸர்வ சப்த வாச்யன் என்பது ஆன்றோர் கொள்கை.

இச்செய்யுளைத் திருவாய்மொழி முதற் பாசுரமான

"உயர்வற வுயர்நல முடையவன் யவனவன்
மயர்வற மதிநல மருளினன் யவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே"

என்பதற்கு ஒப்பிடுவதுண்டு.

"'உயர்வற உயர் நலமுடையவன் அயர்வறு மமரர்க ளதிபதி'—என்கையாலே ப்ராப்ய வேஷம் சொல்லிற்று. 'மயர்வற' என்கையாலே - விரோதி போனபடி சொல்லிற்று; 'அருளினன்'- என்கையாலே அவனே ஸாதனமென்றது; 'தொழு தெழு' என்கையாலே -ப்ராப்தி பலமான கைங்கரியத்தைச் சொல்லிற்று; 'என் மனனே' என்கையாலே பரிசுத்தாந்த:கரணனே அதிகாரி யென்னுமிடம் சொல்லிற்று" என்பது ஈடு.

"நீங்கலா அலகிலா விளையாட் டுடையான்"—"உயர்வற வுயர் நலமுடையவன்;" "தலைவர்"—"அயர்வறு மமரர்க ளதிபதி;" "அன்னவர்க்கே சரணம்"—"அவன் துயரறு சுடரடி தொழுதெழு" "நாங்கள்"—"என் மனனே" என்ற ஜதைகளின் கருத்துக்களை நோக்கினால் இவ்விரு பாடல்களுக்குள்ள நயங்கள் நன்கு விளங்கும். ஆக, இச்செய்யுளில் "உலகம் யாவையும் தாமுள வாக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும்" என்றதனால், இறைவன் ஸர்வ சக்தியுடையவனென்பதும், எல்லா

மறியும் ஆற்றலுடையவன் என்பதும், "நீங்கலா அலகிலா விளையாட்டுடையான்" என்றதனால், அவன் அனந்த கல்யாண குண கண மஹோததி என்பதும், ஸத்வகுண மேலிட்டவனென்பதும், "தலைவர்" என்றதனால் அவன் ஸகல லோக கர்த்தா வென்பதும், "அன்னவர்க்கே சரணங்கள்" என்றதனால் அவன் ஸர்வ சப்த வாச்யன் —எங்கும் நிறைந்துள்ளவன் என்பதும் பெறப்பட்டன.

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி யிருப்பதுபோல்"

என்கிறார் பிற்காலத்திய தமிழ்வாணர்.

"நிலைதந்த தாரகனாய் நியமிக்கு மிறைவனுமாய்
இலதொன் றெனாவகை யெல்லாந் தனதெனு மெந்தையுமாய்த்
துலையொன் றிலையெனநின்ற துழாய்முடியா னுடம்பாய்
விலையின்றி நாமடியோ மென்றுவேதியர் மெய்ப்பொருளே."

என்ற பெரியார் பாசுரம் சிந்திக்கற்பாலது.

உயுத்தகாண்டம் இறுதியான விடைகொடுத்த படலம் கதையளவில் கடைசிச் செய்யுள் இது.

"உம்பரோ டிம்பர்காறு முலகமோ ரேழுமேழும்
எம்பெரு மானென்றேத்தி யிறைஞ்சிநின் றேவல்செய்யத்
தம்பிய ரோடுந்தானுந் தருமமுந் தாரணிகாத்தான்
அம்பரத் தனந்தர் நீங்கியயோத்திவந் திறுத்தகாலை."

தேவதைகள் எம்பெருமானிடத்தில் சரணாகதி பண்ணிய காலத்து உணர்ந்தவர்க்குப் பரகதி உதவி பண்ணவனான ஸ்ரீமந் நாராயணன் அவர்களை நோக்கி,

"மசரத மனையவர் வரமும் வாழ்வுமோர்
நிசரத கணைகளா னீறுசெய்ய யாம்
கசரத துரகமாக் கடல்கொள் காவலன்
தசரதன் மதலையா வருதுந் தாரணி."

"வளையொடு திகிரியும் வடவை தீதர
விளைதரு கடுவுடை விரிகொள் பாயலும்
இளைஞர்க ளெனவடி பரவ வேகிநாம்
வளைமதி லயோத்தியில் வருது மென்றனன்."

சத்யசங்கல்பனான பரமபுருஷன் "ஆதியஞ் சோதியுருவை யங்குவைத் திங்குப் பிறந்து" என்றபடி தன் வார்த்தையை நிலைநாட்ட, தருகைநீண்ட தயரதன் தான் தரும் இருகை வேழத் திராமனாய்த் திருவவதரித்தான்.



"சென்றால் குடையா மிருந்தாற்சிங் காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்—என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற் கரவு"

என்று ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸகல கைங்கர்யங்களையும் உடனாய் மன்னி அடிமைசெய்யும் அனந்தாழ்வான் இலக்குமணனாகவும், வடிவார்சோதி வலத்துறையும் சுடராழியும், படைபோர்புக்கு முழங்கும் அப்பாஞ்சசன்னியமும், முறையே பரத சத்துருக்கனர்களாகவும் திருவவதரித்தனர். இராமபிரான், சாமானிய தருமங்களான பெற்றோர் சொற்படி நடத்தல், சகோதர ஒற்றுமை, ஏகபத்னீ விரதம் முதலியவற்றையும், விசேஷதருமமான சரணாகதியையும் அனுட்டித்தார்; பகவத் பாரதந்த்ர்யத்தை மேற்கொண் டொழுகினார் பரதர். பகவத் சேஷத்துவத்தையே தமக்கு நிதியாகக்கொண்டு நடந்தார் இளையாழ்வார். பாகவத சேஷத்துவத்தைச் சிரோபூஷணமாக அணிந்தார் சத்துருக்கினர்.

எண்ணருங் குணத் திராகவன் இனிதிருந்து இவ்வேழுலகங்களையும் ஆளுதற்குரிய இடம் அயோத்தி. 'வீற்றிருந் தேழுலகுந் தனிக்கோல் செல்ல' என்றபடி அரசு செலுத்தினான் இரகுகுல திலகன். இளைய வீரர்களின் தன்மையை, 'தப்பற அடிநிழல் தழுவி ஏத்துற முப்பரம் பொருளுக்கு முதல்வன் வைகுறும்' என்றார் கவி திருவவதாரப் படலத்தில். இராமனைப் பின் வருமாறு அனைவரும் அனுபவித்தனர்.

"தயரதன் புதல்வ னென்பார் தாமரைக் கண்ண னென்பார்
புயலிவன் மேனி யென்பார் பூவையும் பொருவு மென்பார்
மயலுடைத் துலக மென்பார் மானிட னல்ல னென்பார்
கயல்பொரு கடலுள் வைகுங் கடவுளே காண்மி னென்பார்."

நம் பிரபன்னஜன கூடஸ்தரான நம்மாழ்வாரும்,

"கற்பா ரிராமபிரானை யல்லால் மற்றுங் கற்பரோ
புற்பா முதலாப் புல்லெறும்பாதி யொன்றின்றியே
நற்பா லயோத்தியில் வாழுஞ் சராசரம் முற்றவும்
நற்பாலுக் குய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே"

என்று திருவாய்மலர்ந் தருளுகின்றார்.

"நாடியபொருள் கைகூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழியதாக்கும் வேரியங் கமலைநோக்கும்
நீடிய வரக்கர்சேனை நீறுபட் டழியவாகை
சூடிய சிலையிராமன் றோள்வலி கூறுவோர்க்கே."

# ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்

[ஸ்ரீ. உ.ப. A. V. கோபாலாசார்யர் M.A., B.L, அட்வோகேட், திருச்சி.]

யம் சக்ஷுஷாம் அவிஷயம் ஹயமேதயஜ்வா
த்ராகீயஸா ஸுசரிதேந தத்ருசே வேதா: ।
தம் த்வாம் கரீச கருணாபரிணாமதஸ்தே
பூதாநி ஹந்த நிகிலாநி நிசாமயந்தி ॥ 7

यं चक्षुषामविषयं हयमेधयज्वा
द्राघीयसा सुचरितेन ददर्श वेधाः ।
तं त्वां करीश करुणापरिणामतस्ते
भूतानि हन्त निखिलानि निशामयन्ति ॥

[பதவுரை] சக்ஷுஷாம்-எவர் கண்களுக்கும் (ப்ரஹ்ம தேவருடைய எட்டுக் கண்களுக்கும், கண் முதலிய எல்லாப் புலன்களுக்கும்), அவிஷயம்-எட்டாத, யம்-எவரை, ஹயமேதயஜ்வா-அஸ்வமேத யாகம் செய்துகொண்டிருந்த, வேதா:-(உலகத்தை ஸ்ருஷ்டிப்பவரும், உலகத்துக்கு யாகம் முதலிய விதிகளை விதிப்பவரும், உலகங்களுக்குப் பலங்களைக் கொடுக்கக் கூடியவருமான) ப்ரஹ்மாவானவர், த்ராகீயஸா-மிகவும் நீண்ட காலமாக, ஸுசரிதேந-(துஸ்சரிதத்தை அடியோடு நீக்கிச் சாஸ்த்ர விஹிதமான ஸகல கர்மங்களையும் பலத்தை உத்தேசிக்காமல் கேவலம் ஈஸ்வராராதநமாகச் செய்த) ஸத்கர்மத்தாலே, (அதன் ஸுக்ருத பரிபாகத்தாலே), தத்ருசே-பார்த்தாரோ, (காணப் பெற்றாரோ), தம் த்வாம்-அதே உம்மை, கரீச!-கரிமலை ப்ரபுவே! (கஜேந்த்ரத்தின் அரசனே! ஆனைகளின் ஈஸனே!) தே-உம்முடைய, கருணாபரிணாமத:-அருளின் ஒரு மூர்த்தி விசேஷத்தாலே (அருளின் பரிபாகத்தாலே: அருளின் காஷ்டையான திருமேனியை), நிகிலாநி பூதாநி-(ஒருவர் பாக்கியில்லாமல்) எல்லா ப்ராணிகளும், நிசாமயந்தி-பார்க்கிறார்கள் (காணப் பெறுகிறார்கள்); ஹந்த!-இது ஆஸ்சர்யம்; இது ஸந்தோஷம்.

தேவப் பெருமாளின் அவதாரம் இங்கு வர்ணிக்கப்படுகிறது. ஸ்ரீ பாஷ்யகாரர், கீதையின் பாஷ்யத்தின் ப்ரவேஸத்தில் கண்ணனது அவதாரத்தையும், கீதையின் அவதாரத்தையும், கீதையால் உலகத்திற்கு வெளிப்படுத்தப்படும் பக்தி யோகத்தின் அவதாரத்தையும் பரவஸமாக வர்ணிக்



கிறார். அங்கே, ஸர்வேஸ்வரனை பரப்ரஹ்மம், தம்முடைய அபார காருண்யம் ஆஸ்ரித வாத்ஸல்யம் முதலிய குணங்களுக்கு வஸ்யராய், ஸகல மநுஜர்களுடைய நயநங்களுக்கு விஷயமாகிக் கண்ணனாக அவதரித்தார் என்கிறார். 'மாம்ஸக் கண்களுக்கும் மற்றெந்த இந்த்ரியங்களுக்கும் விஷயமாகாத பரப்ரஹ்மம், எல்லா மநுஷ்யர்களுடைய கண்களுக்கும் விஷயமாயிற்றே! இதென்ன அருளின் பெருமை!' என்று ஸ்ரீ பாஷ்யகாரர் ஆச்சரியப் பட்டார்.

இங்கே, 'இந்தப் பேரருளாளப் பெருமாள் மநுஷ்யருக்கு மட்டுமன்றி, எல்லாப் பூதங்களுக்கும் (ப்ராணிகளுக்கும்) நேத்ர விஷயமாகிறார்; இதென்ன பேரருள்! இதென்ன ஆஸ்சர்யம்!' என்று ஸ்வாமி விஸ்மயப் படுகிறார். கண்ணன் அவதரிக்கையில், பெற்ற தாய் தந்தையர் 'இதென்ன அத்புதம்!' என்று ஆஸ்சர்ய ரஸத்தில் மூழ்குகிறார்கள் என்பதை, ஸ்ரீ பாகவதத்தில் கண்ணன் அவதார ஸ்லோகத்தில் 'தமத்புதம்' என்று முதலிலேயே காட்டினார். அவ்வவதாரத்தைத் தம்முடைய ஞானக் கண்ணால் ஸேவித்துக் கொண்ட ஸ்ரீ வ்யாஸ சுகர்களும், தம்முடைய ஆஸ்சர்ய ரஸத்தையும் அந்த வர்ணநத்தினால் பெருக்கினார்கள். ஸஞ்ஜயர் கீதையின் 11-வது அத்யாயத்தில் கண்ணன் காட்டியருளின விச்வரூபத்தை ஸேவிக்கப் பெற்ற பொழுது, அதை அத்யத்புதமென்றும், அதை நினைக்க நினைக்கத் தாம் மகிழ்வதாயும், ஹர்ஷ விஸ்மய பரவசராய்ப் பேசினதையும் இங்கே நினைக்கவேணும்.

ஸ்ரீ பாஷ்யகாரருடைய கீதாபாஷ்யத்தின் ப்ரயோகத்தை இங்கே ஸ்வாமி நினைக்கிறாரென்பது நிச்சயம். அங்கே, 'ஸகல மநுஜ நயந விஷயமானார்' என்றிருக்கிறது. அதனால் கண்களுக்கே விஷயமாகக் கூடாத பொருள் என்று ஏற்படுகிறது. அதையே இங்கே, 'கண்களுக்கு விஷயமாகக் கூடாதவர்' என்று முதலில் பரத்வத்தைக் காட்டி, 'ஸகல மநுஷ்யர் கண்களுக்கும் விஷயமானார்' என்பதற்குப் பதிலாக, 'ஸகல பூதங்களும் கண்களால் பார்க்கும்படி தம்முடைய கருணையின் மிகுதியால், கருணையின் ஒரு விசேஷ வடிவமென்றே சொல்லும்படி ஒரு ரூப விசேஷத்தைப் பரிக்ரஹித்தார்' என்று ஸௌலப்யத்தின் எல்லையைக் காட்டுகிறார்.

இங்கே ஸ்ரீ பாஷ்யத்தின் அவதாரத்தையும் ஸ்வாமி நினைக்கிறாரென்பதும் திண்ணம். தேவப் பெருமாள் அவதரித்து, ஸ்ரீ பாஷ்யத்தை உடையவர் திருவாக்காலும், ஸ்ரீ அம்மாள், ஸ்ரீ ச்ருத ப்ரகாசிகாசார்யர், ஸ்ரீ அப்புள்ளார், ஸ்ரீ தேசிகன் முதலிய பூர்வாசார்யர்களாலும் தம் முன்னிலையில் தாம் அவதரித்த யஜ்ஞ மண்டபத்தில் அம்ருத தாரையாய்ப் ப்ரபக்ஷம்

செய்பச் செய்து தாமும் திருச்செவி சாத்தினார். 'ஸவிதூஸூவந' '**अखिलभुवन**' என்றும் 'விநதவிவிதபூத' '**विनतविविधभूत**' என்றும் ஸாதித்த ஸ்ரீ பாஷ்ய மங்கள ச்லோக பதங்களை நினைத்து 'நிகிலாநி பூதாநி' '**निखिलानि भूतानि**' என்று இங்கே ஸ்வாமி ஸாதித்தார்; போலும்.

முன் ச்லோகத்தில் ஸ்வாமி, தாம் ஒரு கிளிப்பிள்ளை யானார். பெருமாள் கபிலராக அவதரித்துத் தம்முடைய தாயாராகிய தேவஹூதிக்குத் தத்வோபதேசம் செய்கையில், சேதநர்கள் ஈச்வரனுக்கு அத்யந்தம் பராதீநர்கள் என்பதைக் காட்ட, கர்ப்பத்தில் சிசு கை கால்களை ஆட்ட இயலாமல் பெருமாளாலேயே வளர்க்கப்படுவதை வர்ணிக்கிறார். அங்கே, 'பஞ்ஜரத்தில் சகுந்தம் போலே தன் உடம்பை அசக்கி ஸஞ்சரிக்கச் சக்தியற்றதாய்' என்று வர்ணனை. பஞ்ஜர சகுந்தம் என்று அங்கே கர்ப்ப சிசு விஷயமாகச் சொன்ன த்ருஷ்டாந்தத்தை நினைப்பதைக் காட்டி, தாமும் ஒரு கர்ப்ப சிசுவைப்போல் ஸ்வதந்த்ரமாகக் கை கால்களை அசைக்க முடியாதவரென்பதையும், தம்முடைய அத்யந்த பாரதந்த்ர்யத்தையும் 'த்வதீநவாசா' '**त्वद्-धीनवाचा**' என்பதால் காட்டினார்.

'த்வதீநவாசா' என்று தாம் மநுஷ்யத் தன்மையு மில்லாமல் கிளிப்பிள்ளையாதலால், எல்லா ப்ராணிகளுக்கும் ஸேவை ஸாதித்தால் தான் தாமும் தம் கண்களால் ஸேவிக்கப் பெறலாம்; கண்ணனைப் போல மநுஷ்யர்களுடைய கண்களுக்கு மட்டும் விஷயமானாற் போதாது. கண்ணனைப் 'பசுக்களும் கன்றுகளும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து, தமது கண்களில் நீர் சொரிந்தன' என்று ருஷிகள் வர்ணித்திருக்கையில், ஸ்ரீ பாஷ்யகாரர் 'ஸகல மநுஷ்யர் கண்களுக்கும் விஷயமானார்' என்று மநுஷ்யரை மட்டும் குறிப்பிட்டதற்கு என்ன காரணம்? அங்கே கீதா சாஸ்த்ரத்தின் அவதாரத்தைப் பேசுமிடம்; சாஸ்த்ர மென்பது மநுஷ்யர்களுக்குத் தான் அதிகாரம் என்றார் ஸூத்ரகாரர்; ஜந்துக்களுக்கு அதிகாரமில்லை. கீதா சாஸ்த்ரத்தைக் கேட்டு மநநம் செய்து, அதில் உபதேசித்திருக்கும் பக்தி யோகத்தை ஆயுஸ் முழுவதும் அநுஷ்டித்தால் பெருமாளைக் காணப் பெறலாம். இங்கே இப் பேரருளாளனுடைய கரைபுரண்ட கருணையினால் ஆதி வாஸுதேவ மூர்த்தியோடு எள்ளளவும் வேறில்லாத அதே திருமேனியை, யாதொரு பக்தி யோகத்தின் அபேக்ஷையில்லாமலும், மநுஷ்யர் யானை முதலிய தாரதம்ய மில்லாமல் எல்லா ப்ராணிகளும் கண்களாற் கண்டு உஜ்ஜீவிக்கப் பெறுகிறார்கள். ப்ரஹ்மாவைப் போல் சாஸ்த்ரத்தின் வழியாக, அதன் முறையை அநுஸரித்து, அதன் க்ரமத்தின்படி யெல்லாம் நடந்து, பரப்ரஹ்மத்தின் காட்சியென்னும் பரம புருஷார்த்தத்தைப் பெறுவதான லல்லவோ, மநுஷ்யர்கள் மட்டும் பெருமாளைப் பார்க்க அதிகாரிகளென்று சொல்லவேண்டிவரும். பெருமாள்



தாமாகவே கரைபுரண்ட அருட் கடலாகி, நம்மைத் தேடி வந்து, நம் கண்கள் பேரில் அலைத்து மோதி, தம்முடைய அருளென்னும் ஞானக் கண்ணினால் தம்மை நேரில் ப்ரத்யக்ஷமாக ஸர்வ காலமும் பார்க்கும்படி அநுக்ரஹித்தால் நமக்குச் சாஸ்த்ரத்தின் ஸஹாயம் தான் வேணுமோ? பார்க்கும் ப்ராணிகளுக்குச் சாஸ்த்ராதிகாரம் வேணுமோ? ஆனால் 'இப்படி ஸுலபமாய் யாதொரு ப்ரயாஸமின்றியில் ஸேவை கிடைப்பதால், இந்தத் திருமேனி ஆதியஞ் சோதி உருவுக்குக் குறைந்ததாகுமோ? அல்லது வேறுபட்டதாகுமோ? என்ற சங்கையை 'தம் த்வாம்' '**तं त्वां**' (அதே உம்மை: 'அவ்வுருவே இவ்வுருவம்') என்பதால் காட்டுகிறார்.

கீதையில் ஐந்தாவது அத்யாயத்தின் முடிவு ச்லோகமும் இங்கே ஸ்வாமி நெஞ்சில் ஓடுகிறது. 'எல்லா யஜ்ஞங்களுக்கும் தபஸ்ஸுக்களுக்கும் போக்தாவாயும், ஸர்வ லோகங்களுக்கும் மஹேச்வரனாயும், ஸர்வ பூதங்களுக்கும் ஸுஹ்ருத்தாகவுமுள்ள என்னைத் தெரிந்துகொண்டவன், ப்ராணிகளிடம் த்வேஷத்தை அடியோடு தவிர்த்து சாந்தியை—ஸ்வரூப ஸுகத்தை—அடைகிறான்' என்று அந்த ச்லோகம். இந்தப் பெருமாள், உலகத்தைப் படைக்கும் ப்ரஹ்மாவின் யஜ்ஞத்தின் ஹவிஸ்ஸை அமுது செய்தவர். இந்த வார்த்தையைக் கொண்டு தொடங்கி, முடிவிலும், 'ஹிரண்ய கர்ப்பரான ப்ரஹ்மாவின் அச்வமேதத்தின் ஹவிஸ்ஸை அமுது செய்த உம்மை' என்று ஸாதிக்கிறார். இந்தப் பெருமாள் யாக வேதியில் அக்நியாக அவதரித்தாராகையால், எல்லா யஜ்ஞங்களையும் இவர் புஜிப்பவரென்று சொல்லத் தடையில்லை. எல்லாத் தபஸ்ஸுக்களிலும் ந்யாஸமென்னும் சரணாகதி உயர்ந்த தபஸ்ஸென்று வேதம் சொல்லுகிறது. ஹவிஸ்ஸுக்களி லெல்லாம் உயர்ந்தது ஆத்மா வென்னும் ஹவிஸ். ஆத்மாவென்னும் ஹவிஸ்ஸை ப்ரஹ்ம மென்னும் அக்நியில் ஸமர்ப்பணம் செய்வதுதான் சரணாகதி யென்னும் ஸர்வோத்க்ருஷ்டமான தபஸ். ஆகையால் இந்தப் பெருமாளை, யஜ்ஞங்களையும் தபஸ்ஸுக்களையும் அமுது செய்பவரென்று பேசுவது உசிதமே. தேவாதி ராஜன் என்று எல்லாத் தேவர்களுக்கும் மேற்பட்ட தேவனான இந்தப் பெருமாளை, ஸர்வலோக மஹேச்வர னென்னத் தடையில்லை. பேரருளாளனாகையாலே எல்லா ப்ராணிகளுக்கும் நிஸர்க்க ஸுஹ்ருத்தே. இவர். ஸர்வ பூதங்களுக்கும் ஸுஹ்ருத்தென்று கீதா ச்லோகத்தி லுள்ளதை அநுஸரித்து 'நிகில பூதங்களும் அருளால் பார்க்கிறார்கள்' என்கிறார்.

யோகிகள் ஹ்ருதயத்திற்குள்ளே (அந்த:) காணும் ஹார்த்த னென்னும் ஜ்யோதிஸ் ரங்கத்திற்குள் யோகிகள் அல்லாத நமக்கும் சக்ஷுர் விஷயமாக ஸுலபமாகிறதென்று பெரிய பெருமாள் ஹார்த்த விக்ரஹமாயும் அர்ச்சா

விக்ரஹமாயும் ஆனார் என்றார். இங்கே ஒன்று அதிகம். அது என்ன? 'யஜ்ஞம் முதலியவற்றை அநுஷ்டிக்கும் கர்மடர்களுக்கு அக்நியில் (அக்நி ரூபமாக) விஷ்ணு ஸேவை ஸாதிக்கிறார்; யோகிகளுக்கு ஹ்ருதயத்தில் ஹரிஸேவை; ப்ரஹ்ம வித்யையில்லாத ப்ராணிகளுக்கும் ப்ரதிமைகளில் (அர்ச்சைகளில்) பெருமாள் ஸேவை' என்று ஒரு ப்ரமாணம். இம் மூன்றும் இப்பெருமாளிடம் சேரும். ப்ரஹ்மாவைக் காட்டிலும் கர்மடர் இல்லை. இந்த ப்ரமாணத்தைக் காட்ட 'யஜ்வா' என்றார்.

கீதையில் ஆறாவது அத்யாயத்தின் முடிவில், 'எல்லா யோகிகளும் தம் அந்தராத்மாவை என்னுள்ளே வைத்து ஶ்ரத்தையோடு எவன் என்னைப் பஜநம் செய்கிறானோ, அவனை எல்லா யோகிகளிலும் சிறந்த யோகியென்று நான் எண்ணுவேன்' என்றார். கீதையில் முதல் ஆறு அத்யாயங்கள், கர்மயோக ஜ்ஞாந யோகங்களைச் சொல்லி, அதைக்கொண்டு ஜீவ ஸ்வரூபத்தின் ஸாக்ஷாத்காரத்தைச் செய்யும் வழியைக் காட்டின. ஏழாவது அத்யாயம் முதல் ஆறு அத்யாயங்கள் பக்தி யோகத்தைச் சொல்லுகின்றன. ஏழாவது அத்யாயத்தில் பக்தியோகம் அவதாரமாகப் போகிறது. ஆறாவது அத்யாயத்தின் கடைசீ ச்லோகத்தில், 'கண்ணன் விஷயமான பக்தியோகம்தான் சிறந்தது' என்று மேலே உபபாதிக்கும் பக்தி யோகத்தை அவதரிப்பிக்கிறார். அந்த ச்லோகத்தின் பாஷ்யத்தில் உடையவர் கண்ணனை, 'வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் அளவிடக்கூடாத ஸ்வரூப ஸ்வபாவமுடையவன்; எல்லையில்லாத கருணை, ஸௌஶீல்யம், வாத்ஸல்யம், ஔதார்யம், இக்குணங்களின் பெருங் கடல்; ஏற்றத் தாழ்வு வாராமல் அஶேஷ ஜகத்திற்கும் ஶரண்யனான ப்ரணதார்த்திஹரன்; ஆச்ரிதர் விஷயத்தில் வாத்ஸல்ய மயமான ஸமுத்ரம்; அரிய மநுஜ நயநங்களுக்கு விஷயமானவன்; வஸுதேவர் க்ருஹத்தில் அவதரித்தவன்' என்று வர்ணிக்கிறார். ப்ரணதார்த்திஹரரென்று அங்கே கண்ணனை அநுஸந்திக்கிறார். இந்தப் பெருமாளை அங்கே உடையவர் நினைப்பதாக ஸ்ரீ தேசிகன் நினைத்து, அங்கே கூறிய விஷயங்களையெல்லாம் இந்த ஸ்தோத்ராரம்பம் முதல் ஸாதித்து வருகிறார். பெரிய கத்யத்தில் தாரதம்யம் ஒன்றும் வாராமல் 'ஸர்வ லோகத்திற்கும் ஶரண்யனே!' என்று கூப்பிட்டவுடன், 'ப்ரணதார்த்திஹரா!' என்று கூப்பிட்டார். அங்கே ச்ருத ப்ரகாசிகாசார்யர், 'இவருக்கு வரதன் இந்தப் புத்தி யோகத்தை அருளினதால் அவரைக் கூப்பிடுகிறார்' என்று வ்யாக்யாநம் ஸாதித்தார்.

ஸ்தோத்ரம் பண்ணுவதற்குச் சக்தியை த்ருவரைப்போன்ற சிசுவான தமக்கும் அநுக்ரஹிக்க வேணுமென்று ஸ்வாமியின் மநோரதத்தை முன்பே காட்டினோம். ஸ்ரீ பாகவதத்தில், த்ருவர் அர்ச்சித்த பெருமாளுக்கு ப்ரண



தார்த்திஹரன் என்றும், அவநதார்த்திஹரன் என்றும் திருநாமம் காணப்படுகிறது. 'யோக விபாகத்தால் தீவ்ரமான புத்தியால் மின்னற் கொடிபோல் தம்முடைய ஹ்ருதய பத்மத்தில் ப்ரகாசித்துக்கொண்டிருந்த பெருமாள், உள்ளேயிருந்து மறைந்து வெளிப்பட்டு வெளியே எதிரில் நிற்பதைப் பார்த்தார்' என்று த்ருவர் பெருமாளைத் தம் கண்ணுக்கு எதிரில் பார்த்தது சொல்லப்படுகிறது. அதுபோலவே இங்கும், ப்ரஹ்மா தீர்க்க காலம் தபஸ்ஸால் (ஸுசரிதத்தால்) பார்த்தாரென்று சொல்லப்படுகிறது. அங்கே, 'பார்த்தார்' என்பதற்கு ப்ரயோகித்த 'ததர்ஶ' என்னும் பதத்தையே இங்கேயும் ஸ்வாமி ப்ரயோகிக்கிறார். இங்கே இப்பெருமாளை முதலில் பார்த்த ப்ரஹ்மா, அவருடைய வாஸ்தவமான குழந்தை. த்ருவர் பொதுவான ஸம்பந்தத்தால் குழந்தையேயொழிய, ஸாக்ஷாத்தாகப் பெருமாள் குழந்தையல்லர். ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் பெருமாள் த்ருவருக்கு ஸேவை ஸாதிக்கையில், 'ஓ உத்தாநபாதர் பிள்ளையே! உனக்கு மங்களம் உண்டாகுக; உன்னுடைய தபஸ்ஸினால் ஸந்துஷ்டனாய், வரதனாகிய நான் வந்திருக்கிறேன். நல்ல வ்ரதத்தை நன்கு ஆசரித்தவனே! (ஸுவ்ரத!) வேண்டும் வரத்தை வரி' என்று பெருமாள் வார்த்தை. 'தேவதேவனுடைய இந்த வார்த்தையைக் கேட்டுக் கண்ணைத் திறந்து தயானத்தால் உள்ளே பார்க்கப்பட்ட ஹரியை வெளியே பார்த்தார்' என்று அங்கே பராசரர் பணிப்பு. அங்கு 'தத்ருஶே' என்று பணிக்கப்பட்டது. இவைகளெல்லாம் ஸ்வாமி திருவுள்ளத்தில் படுகின்றன. 'ஸுவ்ரதர்' என்பதை 'ஸுசரிதத்தால்' என்று இங்கே ஸாதிக்கிறார். ஸேவை ஸாதித்த பெருமாளை த்ருவர் ஸ்தோத்ரம் செய்யும் வகை தெரியாமல் இவர் ஸ்துதி விஷயத்தில் நான் என்ன பேசுவேன்?'

'கிம் வதாமி ஸ்துதாவஸ்ய கேநோக்தேநாஸ்ய ஸம்ஸ்துதி:'

'किं वदामि स्तुतावस्य केनोक्तेनास्य संस्तुतिः'

என்று ஸாதித்ததையே ஸ்வாமியும் நாலாவது ச்லோகத்தில் 'கிம்வா ஹராமி வரத ஸ்துதயே கதம் வா' என்று ஸாதித்தார். ஸ்தோத்ரம் செய்வதற்கு வேண்டிய ப்ரஜ்ஞையை அருளவேண்டுமென்று த்ருவர் ப்ரார்த்தித்தது போல், ஸ்வாமியும் மதியை ப்ரார்த்தித்தார். இரண்டிடத்திலும் பார்க்கப்படுபவரும் ஸ்துதிக்கப்படுபவருமான பெருமாள் வரதன்தான்.

ப்ரஹ்லாதரென்னும் குழந்தையும், பெருமாளை ஸ்தோத்ரம் செய்கையில் முதல் ச்லோகத்தில், 'ப்ரஹ்மா முதலிய தேவகணங்களும் முனிகளும் ஸித்தர்களும் ஸ்தோத்ரம் பண்ண அஶக்யமான பெருமாளைக் கொடிய அஸுர ஜாதியனான நான் எப்படித் துதிப்பேன்?' என்று கூறிவிட்டு, இரண்

டாம் ச்லோகத்தில் ‘கஜேந்த்ராழ்வானுடைய பக்தியால் ஸந்தோஷித்த பெருமாளை ஆராதிக்க ஜாதி குலம் தபஸ் படிப்பு முதலியன வேண்டுமோ?’ என்கிறார். கரிவரதன், கஜேந்த்ராழ்வான் பெருமாள் என்பது ப்ரஸித்தம். ‘மேலே வேண்டிய வரங்களைக் கேட்டுக்கொள்’ என்று பெருமாள் அருளுகையில், ‘ஹே வரதச்ரேஷ்டனே!’ என்று பெருமாளைக் கூப்பிடுகிறார். இதையும் ஸ்வாமி நினைக்கிறார்.

யம்—எவரை. புத்திக்கு எட்டாத பரப்ரஹ்மத்தை யாரென்று குறிப்பிடுவது? நாம ரூபமில்லாத அவரை என்னவென்று வர்ணிப்பது? அவர் யார்? அவர் யாரோ, அவர்தான் அவர். வேதம், ‘யோऽஸி ஸோऽஸி’ ‘योऽसि सोऽसि’ [நீர் யாரோ அவர்தான் நீர்] என்று சொல்லிற்று. வேதம் சொல்லுகையில் ‘நீர்’ என்று நேரில் பேசிற்று. இங்கே முதலில் நேரில் அவஸரப்பட்டுப் பேசாமல், ‘எவரை ப்ரஹ்மா நீண்ட தவத்தால் யாக வேதியில் பார்த்தாரோ அந்த’ என்று பேசிவிட்டு, அப்புறம் கருணையின் மிகுதியை அநுபவித்து ‘த்வாம்’ [உம்மை] என்கிறார்.

அசக்ஷுஷாம் அவிஷயம் - चक्षुषां अविषयं - கண்களுக்குப் புலப்படாதவரை. ஒருவர் கண்களுக்கும் புலப்படாதவர். உலகத்தாருடைய கண்களையும் சேர்த்து, இரண்டுக்கு மேற்பட்ட பொருளுடைய பஹுவசநத்திற்குத் தாத்பர்யம் சொல்லலாம். ஒருவருக்கே, இரண்டுக்கு மேற்பட்ட பல கண்களும் உண்டு. இங்கே ‘ப்ரஹ்மா பார்த்தார்’ என்று சொல்லப்போவதால், அவருக்கு எட்டுக் கண்கள் உள்ளமையால், ‘அவருடைய எட்டுக் கண்களுக்கும் புலப்படாதவர்’ என்று பன்மைக்குப் பொருள் சொல்லலாம். அப்படியே ‘மூன்று கண்களையுடைய ஈச்வரர்களுக்கும்’ என்றும், (அடுத்த ச்லோகத்தில் சொல்லும்) ஆயிரம் கண்களையுடைய ஶக்ரர் (இந்திரன்) கண்களுக்கும்’ என்றும் சொல்லலாம்.

ஸ்தோத்ர ரத்நத்தில் ஸ்ரீ ஆளவந்தார், ‘எவருடைய மஹிமா ஸமுத்ரத்தின் ஒரு திவலையில் அணுவளவுகூட உண்மையாக சர்வர் (ஈச்வரன்) பிதாமஹர் (ப்ரஹ்மா) முதலியவர்களாலும் அளவிட ஶக்யமில்லையோ?’ என்று ஆரம்பத்தில் ஸாதித்தார். அதுபோல இங்கே, ‘முக்கண்ணப்பர் கண்களுக்கும், நான்முகனுடைய எட்டுக் கண்களுக்கும், இந்திரனுடைய ஆயிரம் கண்களுக்கும் புலப்படாதவர்’ என்று தாத்பர்யம். ஸ்தோத்ர ரத்நத்தில் இது ஏழாவது ச்லோகம்; இதுவும் இங்கே ஏழாவது ச்லோகம். தேவப் பெருமாள் விஷயத்தில் இதுவும் ஒரு ஸ்தோத்ர ரத்நமாக வேண்டுமென்று மனோரதம். ‘கண்களுக்கு’ என்பதற்கு, ‘கண் முதலிய எல்லாப் புலன்களுக்கும்’ என்றும் பன்மைக்கு அர்த்தம் கொள்ளலாம்.



கேனோபநிஷத்தின் க்ரமத்தை அநுஸரித்தும் இந்த ஸ்தோத்ராரம்பத்தில் பொருள்களும் சொற்களும் அமைவதை முன்பே காட்டியுள்ளோம். ‘எது வாக்கினால் பேசப்படுவதில்லையோ? எதனால் வாக்கு பேசப்படுகிறதோ?’ என்றும், ‘எதைக் கண்ணால் பார்ப்பதில்லையோ? எதனால் கண்கள் பார்க்கின்றனவோ?’ என்றும் அந்த உபநிஷத்தின் பணிப்பு. ‘அதனிடம் சக்ஷுஸ் (கண்) செல்லாது; வாக்கு செல்லாது; மனமும் செல்லாது; அதை எப்படி அறிவோம்?’ என்றும் அங்கே பேசினபடி. அது காணக் கை வாங்க வேண்டிய விஷயமன்றோ? ‘அதனால் (அதனருளால்) வாக்கும் பேசும்; கண்ணும் பார்க்கும்’ என்றும் அங்கே காண்கிறோம். வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாவிடினும், அவன் கொடுத்த வாக்கையும் அர்த்தத்தையும் கொண்டு அவனே கிளிப்பிள்ளையைப் போல் என்னைப் பேசவைக்கிறான் என்று முன் ச்லோகத்தில் ஸாதித்தார். இங்கே: கண்ணுக்கே எட்டாவிடினும், அவனருளால் எல்லோருடைய மாம்ஸக் கண்களுக்கும் தன்னைப் பார்க்கும்படி தன்னை ப்ரத்யக்ஷமாகச் செய்கின்றான் என்கிறார். கஜேந்த்ராழ்வார் ஸ்தோத்ரத்தில் முதலில் ‘எதிலிருந்து இந்தச் சேதநாத்மகமான உலகம் வந்ததோ? எதனுள் இவ்வுலகு உளதோ? எதனிடமிருந்து இவ்வுலகு வருகிறதோ? எதனால் இவ்வுலகு உளதாகுமோ? எதுதானே இவ்வுலகாகுமோ? எது இவ்வுலகைக் காட்டிலும்—இன்னும் மற்றெல்லா உத்க்ருஷ்டரைக் காட்டிலும்—பரமோ? (உத்க்ருஷ்டமோ), தானே தோன்றும் அப்பொருளைச் சரணமடைகிறேன்’ என்றும் பேசிவிட்டுக் கடைசியில் ‘யோகத்தினால் சுத்தி செய்யப்பட்ட மனத்தில் யோகிகள் எந்த யோகேச்வரரை ஹ்ருதயத்துக்குள் பார்க்கிறார்களோ, அவரை நான் பணிகிறேன்’ என்றார். ‘எவரை’ என்று அவர் பேசினது போல், இங்கேயும் ‘எவரை’ என்கிறார். இவ்விடத்திற் போல் அங்கும் ‘அதீந்த்ரயமும் அதி தூரத்தில் இருப்பது போல் கண்ணுக்குத் தெரியாமல் ஸூக்ஷ்மமாயும்’ என்றும், ‘ரூபமில்லாதவனுக்கு’ என்றும் பேசப்படுகின்றன. ரூபமில்லாதவனென்றால் கண்களுக்குப் புலப்படாதவன். கஜேந்த்ராழ்வார் ஸ்தோத்ரத்தின் வழியை அநுஸரித்தால் இந்தப் பெருமாள் திருவுள்ளம் உகக்குமென்று அதை அநுஸரிக்கிறார்.

ஹயமேதயஜ்வா - हयमेधयज्वा - அச்வமேத யாகம் செய்து கொண்டிருந்த ப்ரஹ்மா. தசரத சக்ரவர்த்தி, ‘பிள்ளை கிடைப்பதற்காக ஏன் நான் ஹயமேதந்தால் யாகம் செய்யக் கூடாது?’ என்று சொல்லிவிட்டு, பிறகு, அச்வமேதத்தைத் தொடங்க, அதில் பெருமாள் புதல்வனாக அவதரித்தார்.

'ஸுதார்த்தம் ஹயமேதேந கிமர்த்தம் ந யஜாம்யஹம்'

**'सुतार्थं हयमेधेन किमर्थं न यजाम्यहं'**

என்று அந்த ராமாயண ச்லோகங்களை இங்கே அமைப்பதால், 'இந்த அச்வமேதத்திலும் பெருமாள் அவதரித்தது உசிதம்' என்று காட்டுகிறார். ராகவனுக்குக் கருணை அஸாதாரணமென்பது ப்ரஸித்தம். தசாவதார ஸ்தோத்ரத்தில் எல்லா அவதாரங்களையும் ஒவ்வொன்றாகக் கூப்பிடும் ச்லோகத்தில் 'கருணா காகுத்ஸ்தனே!' என்று கூப்பிடுகிறார். இந்த அச்வமேதத்தில் பேரருளாளனின் அவதாரம். கருணாமூர்த்தியான ராமன் அவதரித்தது போல், இங்கும் அச்வமேதத்தில் அவதரிப்பது உசிதம் என்று கருத்து. அங்கே தகப்பனாருக்குப் புத்ரனாக அவதாரம். இங்கே பிள்ளைக்குத் தகப்பனாராக அவதாரம். தகப்பன் அவதாரத்தைப் பிள்ளை பார்க்க என்ன தவம்? என்ன பாக்யம்? என்ன ஆச்சர்யம்? இந்த ராமாயண ச்லோக ஹயமேத பதங்களை அமைத்து, 'எந்த ஸத்யவ்ரத க்ஷேத்ரத்தில் திவ்ய புருஷனால் தனது ஸ்வந்த புத்ரனுடைய (நிஜ ஸுதனுடைய) ஹயமேதத்தில் உலகத்தின் கலுஷத்தையெல்லாம் போக்க ஆவிர்ப்பவிக்கப் பட்டதோ' என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஸாதித்தார். 'அந்த இப்ரஹ்மத்தை ப்ராஹ்மணர்கள் வேதாத்யயநத்தாலும், யஜ்ஞத்தாலும், தாநத்தாலும், தபஸ்ஸாலும் காண (அடைய : அறிய) விரும்புகிறார்கள்' என்று ப்ருஹதாரண்ய உபநிஷத். இங்கே 'யஜா' என்றதால், ப்ரஹ்மாவே யஜ்ஞத்தால் பரமாத்மாவைக் காண விரும்பி யாகம் செய்கிறாரென்று காட்டுகிறார்.

(தொடரும்)

## அவதாரங்களின் கருத்து

[சில நாட்களுக்கு முன் பெருமாள் கோவிலில், ஸ்ரீ. உப. திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயண ஸ்வாமி செய்தருளின உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம். பத்.]

ஒரு சேதநன் உஜ்ஜீவிக்க வேண்டுமானால் பிறரை ஆச்ரயித்தே உஜ்ஜீவிக்க வேண்டும். அப்படி ஆச்ரயிப்பதில், தன்னுடைய உஜ்ஜீவநத்திலும் அஸமர்த்தர்களான ப்ரஹ்ம சிவாதிகளை ஆச்ரயிக்காமல், அவர்களுக்கும் பலப்ரதனையும், ஸ்ரீ வைகுண்ட லோகத்தில் எழுந்தருளியிருந்தால் ஸம்ஸாரிகள் மநஸ்ஸாலும் ஆச்ரயிப்பது அசக்யமென்று மநுஷ்ய ஸஜாதீயனாக அவதரிக்கையிலும் சங்க சக்ராதி உபேதனாக இருக்கக் கண்டு, இந்தத் திவ்யாயுதங்களை மறைத்து ப்ராக்ருத சிசுவாகவே இருக்கவேண்டுமென்று தேவக்யாதிகள் ப்ரார்த்தனையை அங்கீகரித்தும், இவர்கள் நம்மை யணுக அஞ்சுவார்க



ளென்று தானே கருதியும், பரத்வ சிஹ்நங்களை மறைத்து ஸர்வஸுலபனாய் கார்ய காலங்களில் மட்டும் பரத்வத்தை ஆவிஷ்கரித்துப் போந்த ராம க்ருஷ்ணாதி அவதாரங்களையே ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கவேண்டும். விபவாவதாரங்களிலும் விவேக விஜ்ஞாநத்தை உண்டு பண்ணி வைத்தவை ஹம்ஸ மத்ஸ்ய நரநாராயண கீதாசார்ய ஹயக்ரீவாதி அவதாரங்களே யாகும். ஆதியில் பகவான் சதுர்முகனுக்கு ப்ராஜாபத்யம் என்கிற அதிகாரத்தை அநுக்ரஹித்து எழுந்தருளும் காலத்தில், 'தேவரீர் எழுந்தருளிவிட்டால் நாங்கள் தர்மஸந்தேஹம் வந்த காலத்தில் யாரைக்கேட்டுத் தெளிந்து கொள்வோம்?' என்று ப்ரஹ்மா ப்ரார்த்திக்க, 'நான் ஹம்ஸ ரூபியாக ஸூர்யமண்டலத்தில் ஸாந்நித்யம் செய்கிறேன்; ஸந்தேஹம் வந்த காலத்தில் என்னைக் கேட்டால் நான் உங்களுக்கு உபதேசித்துத் தெளிய வைக்கிறேன்' என்று நியமித்து அப்படியே உபகரித்துக்கொண்டிருக்குமது ஹம்ஸாவதாரம்.

ஒருகால விசேஷத்தில் சதுர்முகன் மது கைடபர்கள் பக்கல் வேதங்களைப் பறிகொடுத்த காலத்தில், பகவான் தாமே அவைகளை மீட்டுக் கொடுப்பதாக ஸங்கல்பித்துப் பாதாளம் சென்று, மது கைடபர்களை ஜயித்து வேதங்களைத் திருப்பிக் கொடுத்ததும், ச்ராத்த தேவன் (வைவஸ்வதமநு) என்பவர் க்ருதமாலா நதியில் ஸந்த்யாவந்தநம் செய்தருளுகையில், அர்க்ய ப்ரதாநம் செய்வதற்காக இரண்டு கைகளிலும் எடுத்த ஜலத்தில் ஒரு சிறு மீனாய் அவதரித்து, 'என்னை நீர் கீழே விட்டால் எங்கள் வழக்கம் போல் நான் பெரிய மீனுக்கு இரையாய் விடுவேனாகையால் என்னை ரக்ஷித்தருள வேணும்' என்று சரணம்புக, அவர் அதை எடுத்துக்கொண்டு கமண்டலுவில் ஜலத்தோடு ஆச்ரமம் வந்தார். அந்த மீன் மநுவைப் பார்த்து, 'நான் வஸிப்பதற்குத் தகுந்த இடம் கமண்டலுவில் இல்லை; ஆகையால் அதிக ஜலமுள்ள இடத்தில் விடவேணும்' என்று ப்ரார்த்திக்க, அப்படியே அவர் குளம் மடு முதலான இடங்களில் கொண்டு விட்டும், அதுவும் பேதாதென்று ஸமுத்ரத்தில்கொண்டு விடும்படி மீன் ப்ரார்த்திக்க, அப்படியே ஸமுத்ரத்தில் கொண்டு விடுங் காலத்தில், அம்மீனின் செய்கையைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, 'நீ யார்? தெய்வத் தன்மை பொருந்தினவனாக இருக்கிறாய்' என்று மநு கேட்க, 'நான் ப்ரஹ்மாவுக்கு வேதங்களை மீட்டுக் கொடுப்பதற்காக இப்படி முன்பு அவதரித்தவன்; இப்போதும் ஸ்வல்ப காலத்தில் வரப்போகிற ப்ரளயத்தில் உம்மை ரக்ஷித்து உமக்கு விவேக மளிப்பதற்காக இப்படி வந்தோம்; ப்ரளயம் வந்தவுடன் நீர் நம்மை நினையும்; நாம் வந்து ரக்ஷிக்கிறோம்' என்று நியமித்து ஸமுத்ரத்துக்குள் எழுந்தருள, அவரும் ப்ரளயம் வந்தவுடன் நினைக்க, ஒரு கொம்புள்ள மீனாக எழுந்தருளி அந்தக் கொம்பில் ஒரு ஓடத்தைக் கட்டிக்கொண்டு, அந்த ஓடத்தில் ஸப்த ரிஷிகளையும், ஸ்ருஷ்டிக்கு உபயுக்தமான ஓஷதி முதலானவற்றையும், மநுவையும் ஏற்றிகொண்டு ஸமுத்ரத்

தில் ஸஞ்சரிக்கையில், அந்த மநு முதலானவர்களுக்குத் தர்மோபதேசம் செய்து மாத்ஸ்ய புராணத்தை அவதரிப்பித்தும் உபகரித்தருளினது மத்ஸ்யாவதாரம்.

தர்மங்களைச் சொல்லும் முறைபோல் கேட்கும் முறையும் அறியாத ஜனங்கள்மீது அருள்புரிந்து, அம்முறைகளையும் தர்மங்களையும் தம் உபதேசாநுஷ்டாநங்களால் தெளிவிப்பதற்காகத் தாமே சிஷ்யாசார்யனாய் அவதரித்து, சிஷ்யன் கேட்கும் முறைகளையும் ஆசார்யன் உபதேசிக்க வேண்டிய முறைகளையும் காண்பித்துக் கொடுத்துத் தர்மப்ரவர்த்தநம் செய்து உபகரித்தருளினது நர நாராயணாவதாரம்.

வெகு நாளாக அர்ஜுநனுக்கு ஹிதோபதேசம் செய்யவேண்டுமென்று ஸங்கல்பித்துக் கொண்டு ஸமயாந்வேஷணம் செய்யும் காலத்தில் போர்க்களத்தில் ஒருவிதமான சோகம் பிறந்து அர்ஜுநன் ஒன்றைக் கேட்க, ஸ்ரீ கீதாசார்யனும் அதையே ஸமயமாகப் பற்றித் தேர்த்தட்டில் கையும் கடிவாளமுமாக இருந்து கொண்டே 'நத்வேவாஹம்' தொடக்கமாயுள்ள கீதாமுகேந ஹிதோபதேசம் செய்து ஸர்வ ஜநங்களும் உஜ்ஜீவிக்கலாம்படி உபகரித்தருளினது கீதாசார்யாவதாரம். இப்படி இவை பூர்வோத்தரனுதி வ்யாஜாந்தரங்களாலே அவதரித்ததோடு, நடுவில் ஜ்ஞாநோபகாரம் பண்ணுமிடத்திலும் சொல்வதைக் கேட்டுத் தெரிந்துகொள்ளும் அளவுடையார்களுக்கு விவேக விஜ்ஞாந விவ்ருத்தி ஹேதுவுமானவை. அப்படியில்லாமல் ஜ்ஞாநோத்பத்தியைச் செய்விப்பதற்காகவே அவதரித்து, ப்ரஹ்மாதிகளுக்கு ஜ்ஞாந ப்ரதாநாதிகள் பண்ணின அவதாரம் ஹயக்ரீவாவதாரமேயாகும். இவ்வவதாரத்தின் பெருமையை ஆசார்யன் இந்த ச்லோகத்தால் அநுஸந்தித்தார்.

"ப்ராசீ ஸந்த்யா காசிதந்தர்நிசாயா:
ப்ரஜ்ஞாத்ருஷ்டேரஞ்ஜநஶ்ரீரபூர்வா ।
வக்த்ரீ வேதாந் பாது மே வாஜிவக்த்ரா
வாகீசாக்யா வாஸுதேவஸ்ய மூர்த்தி: ॥"

"प्राची सन्ध्या काचिदन्तर्निशायाः
प्रज्ञादृष्टेरंजनश्रीरपूर्वा ।
वक्त्री वेदान् भातु मे वाजिवक्त्रा
वागीशाख्या वासुदेवस्य मूर्तिः ॥"

ப்ராசீ ஸந்த்யா காசிதந்தர்நிசாயா:-l. இந்த ஹயக்ரீவ மூர்த்தியானது ஒரு விலக்ஷணையான ப்ராதஸ் ஸந்த்யையாக இருக்கிறது. ஸூர்யோதயமான பிறகு இருள் நீங்கினாலும், வீட்டினுள் இருக்கும் இருள் நீங்குவதில்லை,



தவிர: ஸூர்யோதய காலத்தில் ஸுகமாக இருந்தாலும், வரவர வெயில் அதிகமாவதால் ச்ரமகரமாயும், அஸ்தமநமான பிறகு பின்னும் இருட்டு வரும்படியாயுமிருக்கும். இந்த விலக்ஷண ஸந்த்யையோ வென்றால், உள்ளிருக்கும் தமஸ்ஸுக்கும் (அஜ்ஞாநத்திற்கும்) நிவர்த்தகமாயும், வரவர வ்ருத்திஹேதுவாயும் க்ஷயமில்லாமலும் ஸுகாவஹமாயும் இருக்கிறது.

ப்ரஜ்ஞாத்ருஷ்டேரஞ்ஜநஶ்ரீரபூர்வா—இது ஜ்ஞாநக் கண்ணுக்கு ஒரு விலக்ஷணமான அஞ்ஜநமாக இருக்கிறது. ஒருவன் தினந்தோறும் கீழே இருக்கும் நிதியை அறியாமல் அதன் மேலேயே ஸஞ்சரித்துக்கொண்டு, ஆஹாராதிகளுக்கும் ச்ரமப்பட்டுக்கொண்டிருந்தால், அவனுக்கு அநேகமான ஔஷதி ஸம்பாதநாதி ச்ரமங்களால் செய்யப்பட்ட ப்ராக்ருத ஸித்தாஞ்ஜநம் கிடைத்தால் அது எப்படி நிதியைக் காண்பித்துக் கொடுத்து ஸௌக்யத்தை உண்டுபண்ணுமோ, அதுபோல் இந்த அபூர்வாஞ்ஜநமானது அஜ்ஞாநத்தால் திரஸ்க்ருதனான சேதநனுடைய ஜ்ஞாநத்திற்கு உபகாரமாக ஒருவிதமான ச்ரமுமமின்றி ஸ்வயம் ஸித்தமாய் ப்ரார்த்தநாமாத்ர ப்ரஸந்நமாய் உபகரிக்கிறது.

வக்த்ரீ வேதாந்—ஜ்ஞாநத்தை உண்டு பண்ணுமளவன்றிக்கே, அதற்குரிய வேதங்களையும் ஆதியில் சொல்லிவைத்து உபகரிக்கிறது. அது இவனுக்கு ஸ்வாபாவிகமாகவே இருக்கிறதென்பது 'வக்த்ரீ' என்று தாச்சீல்ய ணிநி ப்ரத்யயத்தால் தெரிகிறது.

வாஜிவக்த்ரா-'அடியுடன் அறிவு புகவே யோக்யதையில்லாத நமக்கு எங்கே விசத ஜ்ஞாநம் வரப்போகிறதென்று ஒருவரும் பின்வாங்க வேண்டா; பகலை இரவாக்குவது முதலியவைகளில் போல் இதிலும் நமக்கு அகடிதகடநாஸாமர்த்ய முண்டு' என்று நம் போன்றவர்களைத் தேற்றுவதற்காக மநுஷ்யரூப அச்வரூபங்களாகிற அகடிதங்களை ஒரே திருமேனியில் கடிப்பித்துக்கொண்டு குதிரை முகமாக இவ்வவதார மிருப்பது.

வாகீசாக்யா— இந்த 'வாகீச' னென்கிற திருநாமமே ஜ்ஞாநத்தை உண்டுபண்ணி வர்த்திப்பித்து, வாக் பர்யந்தமாக்கிக் கொடுப்பதற்கு ப்ரமாணமாக இருக்கிறது. இந்த ஹயக்ரீவ மூர்த்தி எனக்கு ப்ரத்யக்ஷமாக வேணுமென்று ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்திருப்பதால், அந்த ஹயக்ரீவ மூர்த்தியே அஸ்மதாதிகளுக்கும் ஜ்ஞாநத்தை உண்டு பண்ணினால் நாமும் உஜ்ஜீவித்து க்ருதார்த்தர்களாகலாம்.

கா. விஜயராகவ தாஸ:

# அத்யாத்ம ஸ்ரீமத் ராமாயணம்

[ஸ்ரீமான் உ. வே. சேட்லூர் துரைஸாமி அய்யங்கார், அட்வகேட், சித்தூர்.]

[இந்த வ்யாஸத்தில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களில் அநேகம், நம்முடைய ஸம்ப்ரதாயஸ்தர்களால் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாதவையே. அன்றியும், அவைகளில் சில அம்சங்களை அபசாரமாகவும் மற்றும் சில அம்சங்களை அநுபந்நமாகவும் கருதக்கூடும். ஆயினும் விசாரணீயமான சில முக்யமான விஷயங்கள் இருப்பதையும், அவ்விதமான விஷயங்களும் சர்ச்சிக்கப்பட வேண்டியதையும் நிச்சயித்து, இது ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. பத்.]

ஸ்ரீமத் ராமாயணம் ஸ்ரீமத் பாரதம் என்னும் இரண்டு மஹா காவ்யங்கள் இரண்டு யுகங்களில் இரண்டு மஹர்ஷிகளால் செய்யப்பட்டுள்ளன. இவ்விரண்டு க்ரந்தங்களும், ஜீவன் முக்தி அடையும் மார்க்கத்தைத் தெரிவிப்பதையே முக்ய உத்தேசமாகக் கொண்டவை. ஸ்ரீமத் ராமாயணத்தில் வால்மீகி மஹர்ஷி ஒரு மஹானை உதாஹரணமாக்கி, அவனுடைய சரித்ரத்தால் முக்தி மார்க்கத்தைத் தெரிவித்தார். ஸ்ரீ பாரதத்தில் வ்யாஸபகவான், பகவானையே ஆசார்யனாக்கி, ஒரு ஸாமாந்ய ஜீவனை சிஷ்யனாகக்கொண்டு கீதோபதேசம் செய்தார். இந்த இரண்டு க்ரந்தங்களிலும் ஸ்வதர்ம ஜ்ஞாந வைராக்யங்கள், முக்தியை அடைய முக்ய ஸோபாநங்களாகக் காண்பிக்கப்பட்டன. இரண்டுக்ரந்தங்களிலும் தநுர்த்தரர்களே உதாஹரணமாகக் காட்டப்பட்டனர். ஏனென்றால், தநுர்வித்யையில் லக்ஷ்யம் ப்ரதாநமானதால், முமுக்ஷு ப்ராப்யத்தை அடைய உயர்ந்த உதாஹரணம்.

வால்மீகி மஹர்ஷியும் வ்யாஸ பகவானும், கேவலம் ஐஹிக சரித்ரத்தை வர்ணிக்கும் பொருட்டே காவ்யங்கள் செய்தார்கள் என்று ஊஹிக்கலாகாது; முக்தி சாஸ்த்ரத்தைக் காவ்ய ரூபமாக வெளியிட்டார்களென்றே நினைக்கவேணும். இதற்கு,

"𑌮𑌾 𑌨𑌿𑌷𑌾𑌦 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌤𑍍𑌵𑌮𑌗𑌮𑌃 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍀𑌃 𑌸𑌮𑌾𑌃
𑌯𑌤𑍍𑌕𑍍𑌰𑍌𑌞𑍍𑌚𑌮𑌿𑌥𑌨𑌾𑌦𑍇𑌕𑌮𑌵𑌧𑍀𑌃 𑌕𑌾𑌮𑌮𑍋𑌹𑌿𑌤𑌮𑍍 ॥"

मा निषाद प्रतिष्ठां त्वमगमः शाश्वतीः समाः ।
यत्क्रौञ्चमिथुनादेकमवधीः काममोहितम् ॥'



என்னும் வால்மீகி ராமாயணம் முதல் ச்லோகமே அடிப்படை. இந்த ச்லோகம், ஸ்ரீமத் ராமாயணத்தை முக்தி சாஸ்த்ர ரீதியாகப் பார்க்குமளவில், என்ன அர்த்தம் கொடுக்கும் என்று கவனிப்போம். இரண்டு க்ரௌஞ்ச பக்ஷிகள் ஒரு மரத்தின்மேல் காம மோஹிதமாய் விளையாடிக்கொண்டு இருந்ததாகவும், ஒரு வேடன் அவைகளில் ஒன்றைச் சுட்டு அந்தப் பக்ஷியை வேறுபடுத்தியதாகவும், பெண் பக்ஷி கதறிக்கொண்டு இருந்ததாகவும், அதை வால்மீகி மஹர்ஷி பார்த்து வேடனைச் சபித்ததாகவும் பொருள்படுகிறது இதற்கு மூலம்,

"𑌦𑍍𑌵𑌾 𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑌾 𑌸𑌯𑍁𑌜𑌾 𑌸𑌖𑌾𑌯𑌾 𑌸𑌮𑌾𑌨𑌂 𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 𑌪𑌰𑌿𑌷𑌸𑍍𑌵𑌜𑌾𑌤𑍇।
𑌤𑌯𑍋𑌰𑌨𑍍𑌯𑌃 𑌪𑌿𑌪𑍍𑌪𑌲𑌂 𑌸𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌤𑍍𑌤𑌿 𑌅𑌨𑌶𑍍𑌨𑌨𑍍𑌨𑌨𑍍𑌯𑍋 𑌅𑌭𑌿𑌚𑌾𑌕𑌶𑍀𑌤𑌿 ॥"

"द्वा सुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्वजाते ।
तयोरन्यः पिप्पलं स्वाद्वत्ति अनश्नन्नन्यो अभिचाकशीति ॥"

என்னும் முண்டகோபநிஷத் வாக்யம். இதைக் கொண்டு ராமாயண முதல் ச்லோகம், ஜீவாத்மா அந்தர்யாமியை அநுபவிப்பதை ப்ரக்ருதியாகிற வேடன் பங்கப்படுத்தி, பிறகு ஜீவாத்மா சோகித்துக்கொண்டு ப்ரக்ருதி பந்தத்திலிருந்து விடுபட்டு, முக்தி அடையவேண்டியதென்கிற சோகத்தைத் தெரியப்படுத்துகிறது. ஆழ்வார்களும் தம்மை நாயகியாகவும் பகவானை நாயகனாகவும் வர்ணித்திருக்கிறார்கள் அல்லவா? 'ப்ரக்ருதி அசாஸ்வதமாகப் போகக்கடவது' என்று முக்தி சாஸ்த்ரத்தில் மங்கள ச்லோகத்தில் வால்மீகி அநுக்ரஹித்தார். 'நிஷாத' சப்தம் ப்ரக்ருதிக்கும் அந்வயம். இப்படி ஸ்ரீராமாயணத்தை முக்தி சாஸ்த்ரமாகக்கொண்டு ஒவ்வொரு ஜீவனும் தன்னுடைய சரீரத்தில் நடத்திக்கொள்ளலாம். அப்படிப் பார்க்குமளவில் இதனடியில் கண்டபடி சில யோஜனைகள் அடியேனுக்குத் தோன்றுகின்றன. இவ்விஷயமான அடியேனுடைய யோஜனைகள் தப்பாக இருந்தபோதிலும், அக் குற்றத்தைப் பாகவதர்கள் க்ஷமிக்கும்படி ப்ரார்த்திக்கிறேன். அவையாவன :—

1. மஹாத்மாவான ஸ்ரீராமன் அத்யுத்தமமான குணங்களுடன் கூடிய ஜீவாத்மா.
2. பரதாழ்வான்—ஸத்வ குணம்.
3. லக்ஷ்மணன்—ராஜஸ குணம்.
4. சத்ருக்னன்—தாமஸ குணம்.
5. தசரதன்—தசேந்த்ரியங்களாலும் நடக்கும் ரதம் என்கிற சரீரம்.
6. கௌஸல்யா—ஸ்ரீ என்கிற தர்மம்.

7. கைகேயி—கீர்த்தி.
8. ஸுமித்ரை—தர்மத்துக்கும் கீர்த்திக்கும் அநுகூலமான ஹ்ரீ.
9. ஸீதை—மநஸ்.
10. ஜநகன்—புத்தி.
11. ராவணன்—பல ரஜஸ்ஸுக்களுடன் கூடிய துஷ்ட குணங்கள்.
12. வாலி—சபலம்.
13. ஹநுமான்—ப்ராணன்.
14. ரிஷிகள்—தைவிக குணங்கள்.
15. ராக்ஷஸர்கள்—ஆஸுர குணங்கள்.
16. விஸ்வாமித்ரர்—அந்தர்யாமி.

இப்படி முக்யமாக ஸ்ரீ ராமாயணத்தில் சொல்லப்பட்ட பாத்ரங்களை இவ்விதமாய்ப் பாவித்து, ஸ்ரீ ராமாயண சரித்ரத்தை ஸ்வாநுபவத்தில் கொள்ளலாம். இதனால் ராமாயண சரிதம் உண்மையான சரித்ரம் அன்று என்றும், கேவல ஆத்யாத்மிக சாஸ்த்ரம் என்றும் அடியேனுடைய பாவமில்லை. ஸ்ரீமத் ராமாயணம் ஸம்பூர்ணமாய் உண்மையான சரித்ரமே. ஸாக்ஷாத் விஷ்ணுவான ஸ்ரீராமனே மநுஷ்யனாக அவதரித்தாரென்றும், அவர் பரமாத்மா என்றும் ஸம்ப்ரதாயம் இருக்க, இங்கு அவரை ஜீவாத்மாவாகப் பாவிப்பது ஸர்வாபசாரமென்று பாகவதர்கள் தோஷம் சொல்லாம். ஸ்ரீராமனை மஹாத்மா என்று பாவிக்கும்போதுகூட, பரமாத்மாவினிடம் இருக்கும் பக்திக்கும் ஸ்ரீராமனிடத்தில் இருக்கும் பக்திக்கும் லேசம் கூட வாசியில்லையென்பதே அடியேனுடைய அபிப்ராயம். ஆனபோதிலும், ஸ்ரீராமனை உத்தம மநுஷ்யனாக நினைத்துக்கொண்டு, ஸ்ரீராமாயண பாராயணம் செய்வதில், ஜீவனுக்கு அதிக விசேஷமும் உபயோகமும் இருப்பதாக வால்மீகி அபிப்ராயம் என்று அந்தக் காவ்யத்தாலேயே காணலாம். ஸ்ரீ ராமாயணத்தில் முதல் ஸர்க்கத்தில் வால்மீகிக்கு நாரத மஹர்ஷியினால் உபதேசிக்கப்பட்ட ராமாயண ஸங்க்ரஹத்தில் இந்த இரண்டு மஹர்ஷிகளுடைய ப்ரச்னோத்ரங்களைப் பார்த்தால் இவ்விஷயம் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. நாரதரைக் கேட்கும் ஸமயத்தில் வால்மீகி பகவான் இந்த ச்லோகங்களால் கேட்கிறார்.

"𑌕𑍋𑌨𑍍𑌵𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑌾𑌮𑍍𑌪𑍍𑌰𑌤𑌂 𑌲𑍋𑌕𑍇 𑌗𑍁𑌣𑌵𑌾𑌨𑍍 𑌕𑌶𑍍𑌚 𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 ।
𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌶𑍍𑌚 𑌕𑍃𑌤𑌜𑍍𑌞𑌶𑍍𑌚 𑌸𑌤𑍍𑌯𑌵𑌾𑌕𑍍𑌯𑍋 𑌦𑍃𑌢𑌵𑍍𑌰𑌤𑌃 ॥
𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑍇𑌣 𑌚 𑌕𑍋 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌕𑍋 𑌹𑌿𑌤𑌃 ।
𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑌃 𑌕𑌸𑍍𑌸𑌮𑌰𑍍𑌥𑌶𑍍𑌚 𑌕𑌶𑍍𑌚𑍈𑌕𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌃 ॥



𑌆𑌤𑍍𑌮𑌵𑌾𑌨𑍍 𑌕𑍋 𑌜𑌿𑌤𑌕𑍍𑌰𑍋𑌧𑍋 𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌮𑌾𑌨𑍍 𑌕𑍋𑌽𑌨𑌸𑍂𑌯𑌕𑌃 ।
𑌕𑌸𑍍𑌯 𑌬𑌿𑌭𑍍𑌯𑌤𑌿 𑌦𑍇𑌵𑌾𑌶𑍍𑌚 𑌜𑌾𑌤𑌰𑍋𑌷𑌸𑍍𑌯 𑌸𑌂𑌯𑍁𑌗𑍇 ॥
𑌏𑌤𑌦𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑍍𑌯𑌹𑌂 𑌶𑍍𑌰𑍋𑌤𑍁𑌂 𑌪𑌰𑌂 𑌕𑍌𑌤𑍂𑌹𑌲𑌂 𑌹𑌿 𑌮𑍇 ।
𑌮𑌹𑌰𑍍𑌷𑍇 𑌤𑍍𑌵𑌂 𑌸𑌮𑌰𑍍𑌥𑍋𑌽𑌸𑌿 𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌧𑌂 𑌨𑌰𑌮𑍍 ॥"

"कोन्वस्मिन् साम्प्रतं लोके गुणवान् कश्च वीर्यवान् ।
धर्मज्ञश्च कृतज्ञश्च सत्यवाक्यो दृढव्रतः ॥
चारित्रेण च को युक्तः सर्वभूतेषु को हितः ।
विद्वान् कः कस्समर्थश्च कश्चैकप्रियदर्शनः ॥
आत्मवान् को जितक्रोधो द्युतिमान् कोऽनसूयकः ।
कस्य बिभ्यति देवाश्च जातरोषस्य संयुगे ॥
एतदिच्छाम्यहं श्रोतुं परं कौतूहलं हि मे ।
महर्षे त्वं समर्थोसि ज्ञातुमेवं विधं नरम् ॥"

இங்கு '𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑌂 𑌨𑌰𑌂' என்பதால் மேற் கண்ட எல்லாக் குணங்களும் அமைந்த மநுஷ்யனைத் தெரிவிக்க ப்ரார்த்திக்கிறார் வால்மீகி. அதற்கு ஸ்ரீநாரத மஹர்ஷியினுடைய உத்தரம் பின்வரும் ச்லோகத்தால் தெரியவருகிறது.

"𑌬𑌹𑌵𑍋 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌯𑍇 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾 𑌗𑍁𑌣𑌾𑌃 ।
𑌮𑍁𑌨𑍇 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌤𑍈𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑌾𑌂 𑌨𑌰𑌃 ॥

"बहवो दुर्लभाश्चैव ये त्वया कीर्तिता गुणाः ।
मुने वक्ष्याम्यहं बुध्वा तै युक्तः श्रूयतान्नरः ॥"

இங்குக்கூட நாரத மஹர்ஷி 'நரன்' என்றே ப்ரயோகிக்கிறார். இப்படிக் கூறப்படும் நரனை இராமனைப் பகவான் ஸ்ரீமந் நாரயணன் என்று சொல்வது அஸம்பாவிதமன்றோ ? ஸ்ரீ இராமபிரான் ஸமஸ்த கல்யாண குணங்கள் நிறைந்தவனென்பது வால்மீகிக்குத் தெரியும் மேலும், ஸ்ரீ வால்மீகியால் நிர்த்தேசிக்கப்பட்ட சில குணங்கள் பகவான் விஷயமாகக் கேட்கப்பட்டதல்ல. அவருடைய உத்தேசம், பத்த தசையில் இருக்கும் ஸகலமான ஜீவர்களுக்கும் உபயோகமாக ஒரு மஹானுடைய சரித்ரத்தை வெளியிட வேண்டுமென்பதே. தவிர: ஸ்ரீ நாரத மஹர்ஷி ஸ்ரீராமனை வர்ணிக்கும்போது, '𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌨𑌾 𑌸𑌦𑍃𑌶𑍋 𑌵𑍀𑌰𑍍𑌯𑍇' என்று சொல்லி, இதர குணங்களுக்கு இதர ஸாம்யங்களைச் சொல்லுகிறார். ஸ்ரீராமனை ஸகல ஜீவர்களுக்கும் மார்க்கதர்சியாகக் கொள்வதில், அவரை 'உத்தம ஜீவனாகக் கொள்வது விசேஷமா ? அல்லது ஸாக்ஷாத் பரமாத்மாவாகக் கொள்வது விசேஷமா?' என்று

யோசிப்போம். ஸ்ரீராமன் பித்ரு வாக்ய பரிபாலநத்துக்காகத் தனக்குக் கிடைத்த அயோத்யா ராஜ்யத்தை விட்டுப் பதினன்கு வருஷம் காட்டுக்குப் போனதைக் கணிசித்தால், இது பகவான் செய்திருந்த பக்ஷத்தில், த்ரிலோகாதிபதியான பகவான் அல்பமான அயோத்யா ராஜ்யத்தை விடுவது என்ன விசேஷம்? ஸர்வாந்தர்யாமியான பகவான் பதினன்கு வர்ஷம் காட்டில் வஸித்தாலென்ன? பதினன்கு கோடிகாலம் தான் காட்டில் இருந்தால் என்ன? அவனுக்கு எதிலும் கிஞ்சித்தேனும் வாசியில்லை. ஒருவன் த்யாகம் பண்ணவேண்டிய தருணம் வந்தாலும், அல்லது விசேஷ கஷ்டங்களை அநுபவிக்கும்படி நேர்ந்தாலும், ஸ்ரீராமனைக்கொண்டு மநஸ்ஸைத் தேறுதல் செய்து அதற்கும் இதற்கும் வாசி எது என்று ஊஹிக்கலாம்.

தர்மபுத்ரர் அரண்யத்தில் பகுவித கஷ்டங்களால் சோகிக்கும்போது, ஸ்ரீ ராமோபாக்யாநமே அவருக்கு உதாஹரணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தவிர: நாரதர் வால்மீகி மஹர்ஷிக்குச் சொல்லும்போது, 'மஹாவிஷ்ணுவே மநுஷ்ய ரூபமாக ஸ்ரீராமனாக அவதரித்தான்' என்று சொல்லவில்லை. வால்மீகியும் தம்முடைய ராமாயணத்தில், ப்ரஹ்மாதி தேவகள் ஸ்ரீமஹாவிஷ்ணுவிடம் போய் ராவணனுடைய துஷ்ட கார்யங்களைச் சொல்லி, ராவணனுக்கு ப்ரஹ்மா கொடுத்த வரத்தில், 'மநுஷ்யனாலே மாத்ரம் அவன் வத்யன்; அவனும் மநுஷ்யனைக் குறித்து வரம் கேட்கவில்லை; ப்ரஹ்மாவும் அதே மாதிரி வரம் கொடுக்கவில்லை' என்று சொன்னார். ஆகையால் மநுஷ்யனால் மாத்ரம்தான் ராவணன் வத்யன் என்று சொல்லி ப்ரார்த்திக்கிறார்கள்.

'𑌤𑌸𑍍𑌯 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌸𑍁 𑌤𑌿𑌸𑍃𑌷𑍁 𑌹𑍍𑌰𑍀𑌶𑍍𑌰𑍀𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌮𑌾𑌸𑍁 𑌚 ।
𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌮𑌾𑌗𑌚𑍍𑌛 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌮𑍍'

"तस्य भार्यासुतिसृषु ह्रीश्रीकीर्त्युपमासु च ।
विष्णो पुत्रत्वमागच्छ कृत्वात्मानं चतुर्विधम् ॥"

இங்கு 'சதுர்விதம்' என்று சொல்லபட்டதே தவிர, 'சதுரம்ஶம்' என்றாவது 'சதுர்ப்பாக' மென்றாவது சொல்லப்படவில்லை. ஸ்ரீமந் நாராயணனே மநுஷ்யனாக அவதரிப்பதற்குப் பாதி விஷ்ணுவாகவும், கால் விஷ்ணுவாகவும், அரைக்கால் விஷ்ணுவாக இரண்டுபேரும் அவதரிக்கும்படியாகக் காரணம் காணப் படவில்லை. தவிர: மநுஷ்யனாலே மாத்ரம் ராவணன் வத்யனாயிருந்தால், பகவானே மநுஷ்ய வேஷதாரியாக வந்தால் அதனால் அவன் அடைந்த வரம் நிஷ்ப்ரயோஜநமாகும் அல்லவா? ஆகையால் எவ்வித



மாகப் பார்த்தாலும் ஸ்ரீராமனை உத்தம ஜீவனாகவே சொல்லவேணுமென்று ஏற்படுகிறது. விச்வாமித்ர மஹர்ஷியும்

'𑌅𑌹𑌂 𑌵𑍇𑌦𑍍𑌮𑌿 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌸𑌤𑍍𑌯𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍'

"अहं वेद्मि महात्मानं रामं सत्यपराक्रमम्"

என்று ஸ்ரீராமனை மஹாத்மா வென்றே சொல்லிப் போந்தார். ஸ்ரீராமாயணத்தில் எங்கே பார்த்தாலும் ஸ்ரீராமன் 'நரசார்த்தூல! நரவ்யாக்ர! நரபுங்கவ!' என்றே ஓதப்படுகிறார். இப்படி யெல்லாம் சொல்லுவதினால், ஸகல ஸத்வகுண ஸம்பூர்ணனான ஸ்ரீராமனை ஸாக்ஷாத் பகவானாகவே நாம் பூஜிக்க வேணுமென்று ஸபஷ்டமாய் ஏற்படுகிறது. ஸ்ரீ க்ருஷ்ண பகவான், ஸ்ரீபகவத்கீதையில் கர்மயோகத்தை அர்ஜுநனுக்கு உபதேசித்தவுடனே,

'𑌇𑌮𑌂 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑍇 𑌯𑍋𑌗𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌹𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ।
𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍 𑌮𑌨𑌵𑍇 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌮𑌨𑍁𑌰𑌿𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑌵𑍇𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ।
𑌏𑌵𑌂 𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌮𑌿𑌮𑌂 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃'

"इमं विवस्वते योगं प्रोक्तवानहमव्ययम् ।
विवस्वान् मनवे प्राह मनुरिक्ष्वाकवे ऽब्रवीत् ॥
एवं परंपराप्राप्त मिमं राजर्षयो विदुः ।

என்று சொல்லுகிறார். இது இக்ஷ்வாகு வம்ஶத்தில் உண்டான ஸ்ரீ ராமனுடைய ஸ்வதர்மாநுஷ்டாநத்தை ஸூசிப்பது என்று சொல்லலாம். இதனால் ஸ்ரீ ராமாயண பாத்ரங்களை ஒவ்வொரு ஜீவனும் ஸ்வாநுஷ்டாநத்தில்கொண்டு முக்தியடையலாமென்றும், அது ஓர் உண்மையான சரித்ரமே என்றும் விஞ்ஜாபநம் பண்ணினேன். இவ்விதமே ஒவ்வொரு காண்டத்திலும் உள்ள முக்யாம்ஶங்களை இரண்டு விதமாகவும் விஜ்ஞாபநம் பண்ணுகிறேன்.

# "வேதம் தமிழ் செய்த மாறன்"

[ஸ்ரீ. உ.ப. வி. நரஸிம்மாசாரியார், அட்வொகேட், சென்னை]

[இந்தக் குறுகிய வ்யாஸத்தில் நம்மாழ்வாருக்கு "வேதம் தமிழ் செய்த மாறன்" எனும் அஸாதாரணமான பிருது நாமாவினுடைய தத்வம் ஸுலபமாயும் நிஸ்ஸந்தேஹமாயும் நிரூபிக்கப் பட்டுள்ளது. பத்ராதிபர்]

"மனனக மலமற மலர்மிசை யெழுதரும்
மனனுணர் வளவிலன் பொறியுணர் வவையிலன்
இன்னுணர் முழுநல மெதிர்நிகழ் கழிவினும்
இனனில னெனனுயிர் மிகுநரை யிலனே"

(திருவாய்மொழி 1-1-2)

| வேதம் | | திருவாய்மொழி |
|---|---|---|
| [illegible] | ... | மனனகம் |
| [illegible] | ... | மலமற |
| [illegible] | | |
| [illegible] | } | மலர்மிசை யெழுதரும் |
| [illegible] | | |
| யதோ வாசோ நிவர்த்தந்தே | | பொறியுணர் வவையிலன் |
| அப்ராப்ய மநஸா ஸஹ | | மன னுணர்வளவி இலன் |
| ஸத்யம் | .... | இனன் (Existence) |
| ஜ்ஞாநம் | ... | உணர் (Knowledge) |
| ஆநந்தம் | ... | முழு நலம் (Bliss) |

இம்மாதிரி ச்ருதி வாக்யங்களையும் பதங்களையும் வெகு அழகாகத் தமிழில் மொழி பெயர்த்த இடங்கள் பலவுள.

இப் பாசுரத்தின் முதல் இரண்டடிகளாலும், பகவான் ஒவ்வொருவருடைய ஹ்ருதய கமலத்தில் பற்றில்லாமல் நித்யவாஸம் செய்தாலும், அவன் நம்முடைய மனோவாக்குக்கு எட்டாதவன் என்பது வெளிப்படையாகத் தோன்றும் பொருள்.

ஆனால் நம் பூர்வாசார்யர்கள் சித் அசித் விலக்ஷணமான ப்ரஹ்மம் என்று பொருள் கூறுவர். "பாஹ்யேந்த்ரிய ஜந்ய ஜ்ஞாந விஷயமான அசேதநத்தைக் காட்டிலும் யாதொருபடி விலக்ஷணனாயிருக்கும். அப்படியே யோகாப்யாஸ பரிசுத்தாந்த:கரண ஜந்ய ஜ்ஞாநைக விஷயமான பரிசுத்தாத்ம ஸ்வரூபத்தைக் காட்டிலும் விஸஜாதீயனாய்க் காலத்ரயத்திலும் ஒப்பில்லாதானாய்....." என்றார் திருக்குருகைப்பிரான் பிள்ளான்.

# ஸம்ஸ்க்ருதத்தின் தற்கால நிலைமை

[ஸ்ரீ. உ.ப. அநந்தாசார்யர், ஸம்ஸ்க்ருத பண்டிதர், பச்சையப்பன் கலாசாலை, சென்னை]

ஸம்ஸ்க்ருதம் மிகவும் கடினமான பாஷை என்பது ஸாதாரண ஜநங்களின் கொள்கை. அக்கொள்கை மிகவும் தவறானது. மற்ற எல்லாப் பாஷைகளையும் கற்பதற்கு எவ்வளவு ச்ரமம் வேண்டுமோ, அதற்குமேல் சிறிதளவு கூட இதற்கு வேண்டுவதில்லை. இலக்கண விதிகள் மிக்க விரிவாக இருந்தால், பாஷையைக் கடினம் என்று எண்ணுவது வழக்கம். மற்றைப் பாஷைகளுடைய வ்யாகரணத்தைக் காட்டிலும் ஸம்ஸ்க்ருத பாஷையின் வ்யாகரணம் மிக்க விரிவானது என்று சொல்லுவது எவ்விதத்திலும் பொருந்தாது. ஸம்ஸ்க்ருத வ்யாகரணம் இயற்றி யிருக்கும் வழியில் மற்றப் பாஷைகளின் வ்யாகரணங்களும் இயற்றப்படுமானால், அவை ஸம்ஸ்க்ருத வ்யாகரணத்தைப்போல் விரிவாகவே இருக்கும். ஸம்ஸ்க்ருத வ்யாகரண கர்த்தாக்கள், ஒவ்வொரு பதத்தையும் தாதுவிலிருந்து உண்டாக்கி, அதன்மேல் பொருள் வேற்றுமைக்கு ஏற்றபடி அநேக விக்ருதிகளை அமைத்து விட்டனர்; அதுவுமன்றி, பொது விதிகள் விசேஷ விதிகள் இவைகளை உபயோகப்படுத்தவேண்டிய விஷயத்தில், தர்க்கம் மீமாம்ஸை முதலிய சாஸ்த்ரங்களையும்கொண்டு நூலைப் பெருக்கி விட்டார்கள். அதோடு நிற்காமல், வ்யாகரணத்திற்கென்று தனியாய் ஒரு வேதாந்தத்தையும் உண்டாக்கிவிட்டனர். இவர்கள் செய்த கூத்தினால், உபநிஷத்திலிருந்து சுத்தமான வேதாந்தத்தைக் கண்டு பிடித்துக் காட்டுவதற்காகப் புறப்பட்டவர்களுக்கு மிகுந்த ப்ரயாஸை ஏற்பட்டது; இவர்களுடைய வேதாந்தத்தைக் கண்டித்து சுத்தமான வேதாந்த மதத்தை ஸ்தாபிக்கவேண்டியதாயிற்று.

ஸம்ஸ்க்ருத வ்யாகரண கர்த்தாக்கள் பட்டிருக்கிற ச்ரமம் எப்படிப்பட்டது என்றால், வெகு காலமாய் இருந்து வரும் ஒரு மாளிகையை முழுவதும் இடித்து, பூமியில் வெகு ஆழம் அஸ்திவாரம் தோண்டி, அங்கிருந்து கட்டிடம் கட்டுவதுபோலாகும். மற்றப் பாஷைகளின் வ்யாகரண கர்த்தாக்கள் இவ்வளவு ப்ரயாஸப்படாமல் ஸுலபமான வழியில் பாஷையைச் சுத்தப்படுத்திக்கொண்டார்கள். இதுவேயொழிய வேறு இல்லை. ஆனால் அந்தந்த தேசபாஷைகளுக்குச் சொந்தமான சொற்களின் ஸங்க்யையைக் காட்டிலும் ஸம்ஸ்க்ருத பாஷைக்குச் சொந்தமான சொற்களின் ஸங்க்யை கொஞ்சம் அதிகமாக இருக்கக்கூடும். இது, அநாதி காலம் தொட்டு வழங்கி வருகிற பாஷையாதலாலும், பல விஷயங்களில்

நூல்கள் இயற்றப்பட்டிருப்பதாலும், இதில் சொற்களின் ஸங்க்யை பெருகியிருப்பது இயல்பே. ஆனால் உலக நடவடிக்கைகளுக்கு வேண்டிய சொற்களின் ஸங்க்யை மற்றப் பாஷைகளைக் காட்டிலும் இதில் அதிகம் இல்லை என்று நிச்சயமாய்க் கூறலாம். இக்காலத்திய பள்ளிக்கூடப் பிள்ளைகள் ஸம்ஸ்க்ருத பாஷை மிகவும் கடினமான பாஷை என்று அபிப்ராயம் கொண்டு, தமிழ் தெலுங்கு முதலிய தேச பாஷைகளையே கற்க விரும்புகிறார்கள். அவர்களுக்குப் புத்தி சொல்லுபவர் யாரும் இல்லை. தேச பாஷைகளில் தங்களுக்குச் சிறிதளவு அறிவு இருப்பதாயும், அதைப் படித்தால் எளிதில் பரீக்ஷையில் தேறிவிடலாம் என்றும், ஸம்ஸ்க்ருத பாஷையை எடுத்துக்கொண்டால் எழுத்து முதற்கொண்டு கற்கவேண்டி வருகிறபடியால் அதிக ப்ரயாஸை என்றும் நினைக்கிறார்கள்.. பிள்ளைகளுடைய பெற்றோர்களுக்கும் இதுவே அபிப்ராயம். இவர்கள் அஜ்ஞானத்தைப்பற்றி நாம் என்ன சொல்லுவோம்? ஒவ்வொரு வருஷத்திலும் பரீக்ஷையில் தேறிவரும் ஸங்க்கையைப் பாருங்கள், ஸம்ஸ்க்ருதத்தை எடுத்துக்கொண்ட பிள்ளைகள் நூற்றுக்கு எழுபத்தைந்துக்குக் குறையாமல் தேறிவருகிறார்கள். தேசபாஷைகளில் அவ்வளவு இல்லை. கீழ்தரப் பள்ளிக்கூடங்களில் ஸம்ஸ்க்ருதம் படிப்பவர்களின் எண் மிகக் குறைந்திருக்க, உயர்தரப் பள்ளிக்கூடங்களில் (அதாவது: காலேஜுகளில்) ஸம்ஸ்க்ருதம் எடுத்துககொண்டவர்களின் ஸங்க்யை அதிகமாவதற்கு என்ன காரணம் சொல்லுவீர்கள்,?

மேலும்: நமது தேசபாஷைகளில் கலந்திருக்கும் ஸம்ஸ்க்ருத வார்த்தைகளைச் சற்றுக் கவனிக்கவேண்டும். நூற்றுக்கு அறுபது வீதம் ஸம்ஸ்க்ருத பதங்களே தமிழ் முதலான தேசபாஷைகளின் உருவத்தைக்கொண்டு வழங்குகின்றனவென்று சொல்லாம். 'இன்னின்னது தேசபாஷைச் சொல், இன்னின்னது ஸம்ஸ்க்ருதச் சொல்' என்பது ஸம்ஸ்க்ருதம் படித்தவர்களுக்குத் தெரியுமே யல்லாமல், மற்றவர்களுக்குப் பெரும்பாலும் தெரிவதில்லை. ஒருவன் ஸம்ஸ்க்ருதச் சொல் கலக்காமல் சுத்தமான தேச பாஷையில் பேசத் தொடங்கினால், அது ஸம்ஸ்க்ருதத்தைவிட அதிக கடினமாகவே ஆய்விடும். ஆகைபால் தேசபாஷைகளைக் கற்க எவ்வளவு காலமும் ஊக்கமும் தேவையோ, அவ்வளவுதான் ஸம்ஸ்க்ருதத்தைக் கற்பதற்கும் தேவை என்பது நிச்சயம். இதில் மற்றொரு முக்யமான விஷயம் கவனிக்கத்தக்கது. பள்ளிக்கூட மாணவர்கள் வடமொழியை இரண்டாவது பாஷையாக எடுத்துக்கொண்டால், அவர்கள் மூன்று பாஷைகளில் அறிமுகம் உள்ளவர்களாக ஆகிறார்கள். ஒருவற்குப் பலபாஷைகளில் அறிவு இருத்தல் நன்றன்றோ? ஒருவனுக்கு எவ்வளவு தூரம் பல வழிகளில் அறிவு பரவுகிறதோ, அவ்வளவுவரை நன்மை உண்டாகும் என்பது அறிஞர்களின் அபிப்ராயம்.



ஆகையால் வடமொழியின்மீது பகைமை கொண்டு அதைக் கற்கவே கூடாது என்று அடியோடு விளக்கி ஒழித்து விடுவது ந்யாயம் அல்ல. தவிரவும், இப்போது ஹிந்துக்கள் என வழங்கப்படும் வைதிக மதத்தைச் சார்ந்த மக்கள் அனைவரும், ஸம்ஸ்க்ருதத்தை விலக்கக்கூடாது என்பதை மற்றொரு வழியாலும் உணரவேண்டும். வேதங்களிலும் சாஸ்த்ரங்களிலும் நம்பிக்கை கொண்டு ஆஸ்திகர் அனைவரும் அநேக க்ரியைகளைச் செய்கிறார்கள் அல்லவா? அக்ரியைகளில் உபயோகப்படும் மந்த்ரங்களில் சில வேதங்களிலிருந்தும், சில புராணம் ஆகமம் இவைகளிலிருந்தும் எடுக்கப்படுகின்றன. அவை ஸம்ஸ்க்ருத பாஷாமயங்களே. ஸம்ஸ்க்ருதத்தின் வாஸனை கூட இல்லாதவர் மந்த்ரங்களை உச்சரிப்பது எப்படி? இந்த மந்த்ரோச்சாரணத்தினுடைய அலங்கோலத்தைப் பற்றி நாம் என்ன சொல்வது? இது நிற்க:

வைதிக க்ரியைகளில் ஒருவர்க் கொருவர் ஸம்பாஷணைகளைக் கூட நமது முன்னோர்கள் ஸம்ஸ்க்ருத பாஷையாலேயே செய்து வைத்திருக்கிறார்கள். மேற் சொன்ன ஸம்பாஷணைகள் வடமொழியில் கொஞ்சமேனும் பயிற்சியில்லாதவர்களால் கையாளப்படுவதால், அவற்றில் காணப்படும் பிழைகளுக்கு அளவே இல்லை. இப்படி நமது மதத்தையும் மதத்தைச் சார்ந்த சடங்குகளையும் தாறுமாறாகச் செய்து, நாம் அடைகிற பலன் இன்னதென்பது நமக்குப் புலப்படவில்லை. நம் தமிழ் தேசத்து மக்களுக்கு மற்றொரு கஷ்டமும் உண்டு. தமிழ்ப் பாஷையில் ஸம்ஸ்க்ருத பதங்களை எழுதப் போதுமான எழுத்துக்கள் இல்லை. இளம் வயதில் எழுத்தைக்கூட கற்காத தமிழ் மக்கள், ஸம்ஸ்க்ருதத்தை அப்யாஸம் செய்து தலைமுழுக வேண்டியதுதான் கதி. பணம், காலம், ஊக்கம் ஒன்றும் செலவு செய்யாமல், தனித்து வடமொழியைக் கற்க ஸௌகர்யம் இருக்கும் போது, சிறுவர்களை இவ்வழியில் அனுப்பினால் பெற்றோர்களுக்கு என்ன கஷ்டம் வந்து விடுமோ தெரியவில்லை. ஆகையால் ஹிந்து மக்கள் அனைவரும், அவர்களுள் ப்ராஹ்மணப் பெற்றோர்களாயினும் தமது சிறுவர்களை ஸம்ஸ்க்ருதம் கற்கும்படி தூண்ட முயன்றால், நமது புராதந பாஷையும் ஆர்யர்களின் மதமும் நாளுக்கு நாள் குன்றாமல் செழித்து ஓங்கும். ஸர்வ சக்தியாகிய ஸர்வேச்வரனே அவர்களுக்கு நல்ல புத்தியைப் புகட்ட முன்வரவேணும்.

# தேசிக சித்ரமும் சில்பியும்

[ஸ்ரீமான் உ. வே. தி. ராமஸ்வாமி அய்யங்கார், அட்வொகேட், சென்னை]

[இதென்ன ஆச்சர்யம்! தேசிக சித்ரமாவது! எந்த ஸ்வரூபம் எழுதப்பட்டது? எங்கே எழுதப்பட்டது? யார் எழுதினது? எப்பொழுது எழுதினது? எப்படி எழுதினது? இந்தக் கட்டுரையை வாசித்தால் கண்டு கொண்டு களிக்கலாம்—பத்.]

"ஒரொன்று தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்குவானேறப் போமளவும் வாழ்வு" என்று ஸ்வாமி தேசிகன் ஸ்ரீஸூக்தி விஷயமாய் அதிசயிப்பது, அந்த ஸ்ரீஸூக்திகள் அளிக்கும் அநுபவத்தின் பெருக்கால். சிந்திக்கத் தித்திக்கும் ஸ்ரிய: பதியைப்போல் ஸ்வாமியினுடைய அருளிச் செயல்களும் எண்ணம் புகுந்து தித்திக்குமவை; நமது புத்தி எவ்வளவு தூரம் செல்லவல்லதோ அவ்வளவு பர்யந்தம் இனிக்குமவை. மேல் இனிக்க மாட்டாமைக்குக் காரணம், நமது புத்திக் குறைவாகுமே யன்றி அங்கே ஏற்பட்ட ரஸக்குறைவா லன்று.எவ்வளவு ஞானசூன்யர்களும் பழகி உய்யும் பொருட்டு வெகு லலிதமாய் அருளிச்செய்யப்பட்ட ஸ்தோத்ர ஜாலங் களில் எவ்வளவு அழகும் அநுபவமும் கவித்திறமும் பொருந்தியுள்ளன வென்பதை அவைகளைப் பயின்ற பெரியோரே அறியமாட்டுவர். தற்காலத் திலோ ஸ்வாமியினுடைய அத்தகைய ஸ்தோத்ரங்கள் போதுமானவளவு கவனிக்கப்படாமற் போயுள்ளன. அதிகமாக சாஸ்த்ராப்யாஸம் செய் துள்ள பண்டிதவரர்களிற் சிலர், 'இது ஸ்தோத்ர பாடந்தானே' என்று சற்று உபேக்ஷயா யிருப்பதையும் கண்டிருக்கிறோம். 'தமிழ்தானே' என்று திவ்யப்ரபந்தங்கள் ஒருகால விசேஷத்தில் பலராலும்—இப்பொழு தும்கூட சிலராலும்—உபேக்ஷிதமானதும்—ஆவ் தும்—ஞாபகத்திற்கு வரு கிறது. த்ரமிடோபநிஷத் என்கிற பதவி திருவாய்மொழிக் கேற்பட்டது போல், ஸ்வாமியினுடைய ஸ்தோத்ர ஜாலங்களும் ஸகலோபநிஷத்துக் களின் ஸாரங்களும் பொருந்தியுள்ளமை பற்றி, அவை "ஸகலோபநிஷத் ஸாரம்" என்று பெயரெடுக்க வேண்டியவை. தத்வ விளக்கத்தில் அத்யாத்ம சாஸ்த்ரங்களையும், ரஸாநுபவத்தை ஊட்டுவதில் அருளிச் செயல்களையும் நிகர்த்த ஸ்வாமியினுடைய ஸ்தோத்ர பாடங்களை அனைவரும் கற்று அநுப விக்கவேண்டுமென்பதே அடியேன் ப்ரார்த்தனை.

அத்தகைய ஸ்தோத்ரங்களில் ஒன்றாகிய ஸ்ரீ கோபால விம்ஸதியில் 14-வது ச்லோகம் இது:



"ஹ்ருதி முக்தசிகண்டமண்டனோ லிகித: கேந மமைஷ சில்பிநா ।
மதநாதுரவல்லவாங்கநாவதநாம்போஜதிவாகரோ யுவா ॥"

"हृदि मुग्धशिखण्डमण्डनो लिखितः केन ममैष शिल्पिना ।
मदनातुरवल्लवाङ्गनावदनाम्भोजदिवाकरो युवा ॥"

"மந்மத வேதனையால் பீடிக்கப்பட்டு முகுளித்த கோபிகைகளின் முகத் தாமரைகளை அலர்விக்கும் ஸூர்யன் போன்ற அழகான மயிற் பீலி சூடிய இந்த யௌவந புருஷனை எனது ஹ்ருதயத்தில் எந்த சில்பி எழுதினன்?" என்பது இதற்குத் திரண்ட பொருள். அவரவர்கள் அநுபவத்திற்கு ஒவ் வொரு அர்த்தம் ஸ்புரிக்கும். அடியேனுக்கு இந்த ச்லோக ஸம்பந்தமாய் மனத்தி லெழுந்த சில எண்ணங்களை இங்கே எழுதுகிறேன். குற்றங்களை மறந்து குணம் கொள்க.

இந்த ச்லோகம் ஒரு கேள்வி ரூபமா யிருக்கிறது. இதற்கு விடை எங்கே யிருக்கிறது என்று தேடவேண்டும். ஸ்பஷ்டமாய்க் கிடைக்காவிட் டால் மறைந்துகிடந்த பொருளாயினும் கொண்டு எங்கிருந்தாவது பதில் பெறவேண்டுவது அவச்யம். ஆகவே ஸ்வாமியினுடைய ஸ்ரீஸூக்திகளில் எங்காவது இதற்குப் பதில் அளிக்கப்பட் டிருக்கிறதாவென்று நோக்கி, அது கிடைக்காத விடத்தே வ்யங்க்யார்த்தங்கொண்டு ஸமர்த்தித்து, இந்த ப்ரச்னைக்கு உத்தரம் பெறவேண்டும். அநேக வ்யாக்யாதாக்கள் இந்த ச்லோகத்திலேயே "கேந" பதத்திலே பதில் மறைந்து கிடப்பதாக அபிப்ராயப்பட்டுள்ளார்கள். ஸர்வேச்வரன் தானே இந்த ஸ்ரீ க்ருஷ்ண சித்ரத்தை ஸ்ரீ ஸ்வாமி திருவுள்ளத்தில் வரைந்ததாக முடிவு செய்திருக் கிறார்கள். இந்த வழியிலன்றி வேறு விதமாய் ரஸாநுபவம் செய்ய மார்க்க முண்டா வென்பதை ஆராய்வோம்.

ஸ்வாமி தமது திருவுள்ளத்தில் பகவத் விஷயம் எழுதப்பட்டதாக ப்ரஸ்தாவிக்கும் இடங்கள் வேறு பலவுள. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தின் கடைசிப் பாசுரமான

"வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகா லடியோம்
உள்ளத் தெழுதிய தோலையி லிட்டனம்."

என்கிற இடத்தில் பெருமாள் நேராக எழுதியதாக ஸாதிக்காமல் ஆசார்ய ரூபமாய் இருந்து எழுதியதாக அருளிச் செய்யப்பட் டிருக்கிறது. அப்ப டியே "ரஹஸ்யமாத்ருகை" என்னும் சிறிய ரஹஸ்ய மொன்றின் தலைப்பில்,

"அப்படி நின்ற அமலன் படியெல்லாம்
இப்படியெம் முள்ளத் தெழுதினர் — எப்படியும்

ஓயார் பருதி யொளியா லிருள்நீக்கும்
தாராபதி யனையார் தாம்."

என்று ஸாதிக்கு மிடத்தும் ஸூர்யனிடமிருந்து பெற்ற தேஜஸ்ஸைக் கொண்டு ப்ரகாசிக்கும் சந்திரனைப் போல், பகவானிடமிருந்து தாமடைந்த ஞானவொளியைக் கொண்டு பரம தயாளுக்களான ஆசார்யர்கள் தமதுள்ளத்தில் எப்பெருமான் படிகளையெல்லாம் எழுதியதாகப் பாசுரமிடுகிறார். இன்னும் அபய ப்ரதாந ஸாரம் அருளிச் செய்து, அது விஷயமாய் ஸாத்விக த்யாகம் செய்யும் ச்லோகம் பின் வருமாறு :—

"அபதிஶ்ய வேங்கடேஶம் ஸ்வஹஸ்தஸம்ஸக்ததூலிகயா துல்யம் ।
அபயப்ரதாநஸாரம் குருப்ரஸாத: ஸ்வயம் வ்யலிகத் ॥"

"अपदिश्य वेंकटेशं स्वहस्तसंसक्ततूलिकया तुल्यं ।
अभयप्रदानसारं गुरुप्रसादः स्वयं व्यलिखत् ॥"

இங்கேயும் தம்மை, ஆசார்ய கடாக்ஷத்தின் கையில் பிடிக்கப்பட்ட தூலிகையாகவே பேசிக்கொண் டிருக்கிறார். ஆகவே தம்மிடத்தில் எழுதும்போதும், தம்மைக் கொண்டெழுதும்போதும், அது ஆசார்ய க்ருத்யமாகவேயாகு மென்பதை அநுபவிக்கிறார் ஸ்வாமி. 'ஆசார்யர்களுக்கு ஆசார்யத்வத்தை எழுதி வைத்தவர் பெருமாள்' என்பதைப் பல இடங்களில் ஸ்பஷ்டமாய் ஸாதித்திருப்பதுடன், இந்த சித்ர லேகந உல்லேகத்தையிட்டே தயா ஶதகத்தில்,

"த்வதுதய தூலிகாபிரமுநா வ்ருஷஶைலஜுஷா
ஸ்திரசரஶில்பிநைவ பரிகல்பித சித்ரதிய: ।
யதிபதியாமுநப்ரப்ருதய:"

"त्वदुदयतूलिकाभिरमुना वृषशैलजुषा
स्थिरचरशिल्पिनैव परिकल्पित चित्रधियः ।
यतिपतियामुनप्रभृतयः"

என்று பீதகவாடைப் பிரானர் தாமே தீதில் நன்னெறியில் அவர்களை ப்ரதிஷ்டாபிதாய் வைத்தமையை அருளிச் செய்திருக்கிறார்.

* "க்ரீடாதூலிகயா ஸ்வஸ்மிந் க்ருபாரூஷிதயா ஸ்வயம் ।
ஏகோ விஶ்வமிதம் சித்ரம் விபு: ஶ்ரீமாநஜீஜநத் ॥"

"क्रीडातूलिकया स्वस्मिन् कृपारूषितया स्वयम् ।
एको विश्वमिदं चित्रं विभुःश्रीमानजीजनत् ॥"

* யாதவாப்யுதயம் 1-9.



என்று இந்த விஶ்வ சித்ரத்தையும்,

‡"அகண்டப்ரஹ்மாண்ட ப்ரதமதர ஶில்பீ ஸ பகவாந்
ஸ்வயம் பத்மாஜாநிர்வ்யலிகதிஹ ஶில்பம் ஸ்வவிஷயம் ॥"

अखण्डब्रह्माण्डप्रथमतरशिल्पी स भगवान्
स्वयं पद्माजानिर्व्यलिखदिह शिल्पं स्वविषयम् ।

என்று விபவாதார விசித்ரத்தையும் தானே எழுதினன் ஸர்வேச்வரன் என்று அருளிச் செய்தவர், தமது திருவுள்ளத்தில் எழுதும் திறமையை மாத்ரம் பெருமாளுக்குக் கொடுக்காமல் ஆசார்யர்களுக்குக் கொடுத்தே பேசிக்கொண்டு வந்திருக்கிறார். ஆகையால் இந்த ஸ்ரீ க்ருஷ்ண சித்ரத்தை ஸ்வாமி திருவுள்ளத்தில் எழுதியதும் பெருமாளா யிராமல் ஆசார்யரேயாக இருக்குமோ என்று ஒரு எண்ணம் உதிக்க, ஆசார்ய ஸ்தோத்ரமென்று ஸ்வாமி தனிப்பட அருளிச் செய்திருக்கும் ஸ்ரீ யதிராஜ ஸப்ததியில் தேடிப் பார்த்ததில் அங்கே இந்த ச்லோகம் கிடக்கிறது.

"நாதஸ்ஸ ஏஷ யமிநாம் நகரஶ்மிஜாலை
ரந்தர்நிலீநமபநீய தமோ மதீயம் ।
விஜ்ஞாநசித்ரமநகம் லிகதீவ சித்தே
வ்யாக்யாநகேலிரஸிகேந கராம்புஜேந ॥"

"नाथस्स एष यमिनां नखरश्मिजालै
रन्तर्निलीनमपनीय तमो मदीयं ।
विज्ञानचित्रमनघं लिखतीव चित्ते
व्याख्यानकेलिरसिकेन कराम्बुजेन ॥"

இவ்விரண்டு ச்லோகங்களையும் சேர்த்துப் பார்த்தால் அந்தக் கோபால விம்ஶதிச்லோகத்திற்கு இந்த யதிராஜ ஸப்ததி ச்லோகம் பதில் அளிப்பது போலவே த்வனிக்கிறது. "கேநாபி சித்ரவிதி:" என்பதற்கு "ஸ ஏஷ யமிநாம் நாத: லிகதீவ" என்று சுட்டிக் காட்டும் சொற்கள் உத்தர ரூபமாகவே அமைந்துள்ளன. கோபால விம்ஶதியில் விவரமாய் வர்ணிக்கப்பட்ட சித்ரம் இங்கே "விஜ்ஞாநசித்ரமநகம்" என்று ஸங்க்ரஹிக்கப் பட்டிருக்கிறது. விஜ்ஞாந யோகத்தை உபதேசித்த கண்ணன் இங்கே விஜ்ஞாந சித்ர விஷயமாகிறான் என்பதை விளக்கினபடி. சித்ரத்தைக் கோபால விம்ஶதியில் விவரித்தவர், இங்கே சித்ர மெழுதினவரையும் எழுதப்பட்டவாற்றையும் விரித்து உரைக்கிறார். இரண்டையும் ஒருங்கே சேர்த்துப்

‡ ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் 7-16.

படிக்க அபிப்ராய பூர்த்தி ஏற்படுகிறது. இன்னும், சித்தம் சலநமுள்ள தாகையால், 'அங்கே எவ்வாறு ஒரு சித்ரம் ப்ரதிஷ்டாபிதமா யிருக்கவல்லது ?' என்கிற சங்கையையும் இந்த ச்லோகம் போக்கடிக்கிறது. சஞ்சலத்திற்கு ஆஸ்பதமான தபோ நிவ்ருத்தியை முதலில் செய்து வைத்தமையால் சித்ரத்தைத் தரிக்கவல்லதாயிற்று ஸ்வாமி திருவுள்ளம். அதற்கு வேண்டிய ப்ரகாசம் பொருந்தியுள்ளமையை நக ரச்மி ஜாலங்களால் காட்டியருளுகிறார். இது 'நிவிஷ்டோஜ்ஜதி தயா ஸவித்ரீ பாஸ ஸாம்யம்' ஆகையால், ஒரு ஹ்ருதயைக தேசத்தில் தங்கும் இருட்டைப் போக்குவதற்குச் சக்தியுண்டோ என்று ஸம்சயிக்க வேண்டுவதில்லை. எழுதுவதும் ஒரு பால ஸூர்யன். எழுதப்படுவதும் ஒரு "திவாகரோ யுவா." எழுதுவதும் ஒரு இராமானுசன். எழுதப்படுவதும் ஒரு இராமாநுசன் இந்த ஐக்யத்தை ஸ்வாமியே வேறொரு ச்லோகத்தில்

"ஶமிதோதயஶங்கராதிகர்வ: ஸ்வபலாதுத்த்ருதயாதவப்ரகாஶ: ।
அவரோபிதவாந் ஶ்ருதேரபார்த்தாந் நநு ராமாவரஜ: ஸ ஏஷ பூ-
ய: ॥"

"शमितोदयशङ्करादिगर्वः स्वबलादुद्धृतयादवप्रकाशः ।
अवरोपितवान् श्रुतेरपार्थान्ननु रामावरजः स एष भूयः ॥"

யதிராஜ ஸப்ததி 13.

என்பதாக அநுபவிக்கிறார். இப்படி யதுநாதனுடைய சித்ரத்தை யதிராஜன் எழுதுவது பொருத்தமென்று தோன்றுவதோடு நில்லாமல், யதிராஜன் எழுதுவதுதான் பொருத்தம் என்று தோன்றவும் சில முகாந்தரங்கள் உள்ளன. எம்பெருமான் 'தன்னைப் பிறரறியாத் தத்துவம்.' ஆகையால் அவனை அறிவதற்கு அவனே அறிவித்தாலன்றி யாகாது. ஆனால் அவனது ஸ்வரூபத்தை அறிந்து தன்னை அநுபவிப்பதில், அவனைக் காட்டிலும் அவனடியார் ஸமர்த்தர். தனது வடிவழகைக் கண்ணாடிப்புறத்திலே மட்டில் கண்டு அநுபவிக்கவேண்டி வரும் எம்பெருமானிலும், ஸ்வோசித திவ்யாத்புத நித்ய நிரவத்ய நிரதிசய ஔஜ்ஜ்வல்ய ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்ய நந்தங்களான அம்சங்களை நேராக அநுபவித்து ஆழங்காற்படும் எம்பெருமானாரே அந்த ரூபத்தை ருஜுவாய் எழுதவல்லவர். மேலும் உபநிஷத்துக்களில் மறைந்து கிடக்கும் வஸ்து கண்ணன். இதை 'மறையின் பொருளாம் கண்ணன்' என்றும், "வேதாந்தஸௌதவிஹாரஸாரஸி" யென்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலும் "நிகமாந்தநேத்ர யுகளாவிர்பூதாணாம்" என்று கோபால விம்ஶதியிலும், இதேமாதிரி இன்னும் பல இடங்களிலும் அடிக்கடி அருளிச்செய்திருக்கிறார் ஸ்வாமி. உபநிஷதர்த்தங்களை உண்மையாய் உபதேசிப்பதில் ஸ்ரீபாஷ்யகாரர் முதன்மை



வாய்ந்தவரானமை பற்றி, இந்த உபநிஷதர்த்தமான ஸ்ரீக்ருஷ்ண ரூபத்தையும் அவர் வரைவதுதான் உசிதம்.

"உபநிஷத்துக்தாப்திமத்யோத்த்ருதாம்"

"उपनिषद्दुग्धाब्धिमध्योद्धृताम्"

என்று செய்யப்பட்டதை உள்ளத்துக்கொண்டு ஸ்வாமி;

"உத்க்ருஹ்ணதீமுபநிஷத்ஸு நிகூடமர்த்தம்
சித்தே நிவேஶயிதுமல்பதியாம் ஸ்வயம் ந: ॥"

"उद्गृह्णतीमुपनिषत्सु निगूढमर्थं
चित्ते निवेशयितुमल्पधियां स्वयन्नः ॥"

என்று ஸாதித்து, வ்யாக்யாந கேளி ரஸிக்ய முடைய ஆசார்ய ச்ரேஷ்டருடைய உபதேசமுத்ரை கண்ணனுடைய வடிவழகைத் தமது நெஞ்சகம் பால் சுவர்வழி யெழுதிவிட்ட தென்பதை உணர்த்துகிறார் மேல் ச்லோகத்திலும்.

இப்படி "கேந" என்ற கேள்விக்கு அநேக ப்ரகாரங்களில் பொருந்திய பதிலாய் இந்த "தாஸ்ஸ்வநஷயதிநாம்" என்கிற ச்லோகத்தைக் கொள்ளலாமாயிருக்க, "கம் ப்ரஹ்ம வம் ப்ரஹ்ம" என்கிற வசநத்தை யிட்டுக் 'கேந' சப்தத்திற்கு ஸர்வேச்வரனே என்று அர்த்தங் கொள்வது அவச்யமா என்று ரஸிகர்கள் யோசிக்கவேண்டி விஷயம்.

---

# புருஷாயுஸ்ஸின் ப்ரமாணம்

[ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்.]

'ஶதாயு: வை புருஷ:' என்று வேதம் முறையிட் டிருக்கிறது. 'வேத நூற் பிராயம் நூறு.' என்று ஆழ்வாரும் அருளிச் செய்திருக்கிறார். அப்படியிருக்க, அநேக புராணங்களில், மஹர்ஷிகளும் ராஜாக்களும்கூட கணக்கில்லாத வருஷங்கள் ஜீவித்திருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சிரஞ்ஜீவிகளாக எழுவர் வரப்ரஸாதத்தினால் அழிவில்லாச் சரீரத்துடன் இப்பொழுதும் எங்கேயோ இருந்து ஜீவித்து வருகிறார்களென்பது ப்ரஸித்தமான விஷயம். அது வரப்ரஸாதத்தின் மஹிமையால் கிடைக்கக் கூடுமாயின், அதைப்பற்றி நாம் இவ்விடத்தில் விசாரிக்கவேண்டிய அவச்யமில்லை.

அது ஒரு பால் நிற்க: யோகத்தினாலும் தபஸ்ஸினாலும் அநேக மஹர்ஷிகள் ஆயிரக் கணக்கான ஸம்வத்ஸரங்கள் ஜீவித்திருந்ததாகப் புராணங்களில் ஸர்வ ஸாதாரணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச்

சொல்லியிருக்கும் அநேக இடங்களில் ஓரிடத்திலாவது அது அஸம்பாவிதமென்றாவது ஆச்சர்யமானதென்றாவது புராண கர்த்தாவின் மனத்தில் தோன்றியதாகக்கூடத் தெரியவில்லை.

அதுவும் மற்றொருபால் நிற்க: தசரத மஹாராஜர் அறுபதினாயிரம் வர்ஷம் ராஜ்யத்தை ஆண்டதாக ஸ்ரீமத்ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீராமபிரான் பதினோராயிரம் வர்ஷம் பூலோகத்தில் எழுந்தருளியிருந்ததாக வால்மீகி மஹர்ஷி எழுதியுள்ளார். ஸ்ரீமத் ராமாயணத்தை நாம் வாசிக்கும்பொழுது, ஸர்வ ஸஹஜமாக மனத்தில் ஒரு விதமான ஆச்சர்யமாவது ஸம்ஶயமாவது தோன்றாமலே படித்து முடித்து விடுகிறோம்.

அது பொய்க் கதையா? அல்லது அறுபதினாயிரம் வர்ஷம் ஒரு மனிதன் எப்படி ஜீவித்திருக்கக் கூடும்? நல்லது: அவர்தான் அவ்வளவு காலம் ஜீவித்திருந்தாலும் அவருடைய மந்த்ரிகள் முதலானவர்களும் அவ்விதமே ஜீவித்திருந்தார்களா? இவையெல்லாம் நம்பக்கூடியதாக இல்லையே. அத்தனை காலம் ஜீவித்திருந்தால் வேதத்தில் சொல்லியிருப்பதுதான் சரியல்லவோ? மஹாபாரத காலத்தில் அவ்வளவு அசிந்த்யமான வருஷங்கள் மநுஷ்யர்கள் ஜீவித்திருந்ததாகத் தெரியவில்லை. இவைகளுக்கெல்லாம் நிஜமான ஸமாதானம் என்னவென்று நான் அநேக வருஷங்களாக யோசித்தும் எனக்கு ஒன்றும் புலப்படவில்லை.

வர்ஷம் என்கிற பதத்திற்கு நாள் என்றே அர்த்தம் இருக்கக்கூடுமோ என்று யோசித்துப் பார்த்தாலும், அறுபதினாயிரம் வர்ஷங்களை அறுபதினாயிரம் நாட்களாக எண்ணிப் பார்த்தாலும், அவை 160 வயதுக்கு மேலாகின்றன. அப்படிக் கணக்குப் பார்ப்போமானால், ஸ்ரீராமன் ஜீவித்திருந்த காலம் சுமார் 33 வருஷங்கள்தான் ஆகின்றன. ஆதலால் எந்த விதத்திலும் ஸம்ஶயம் தீரவில்லை. இவ் விஷயத்தில் நம்மவர்கள் விமர்சை செய்து நிஜத்தை அறிந்துகொள்ளும் விஷயத்தில் சிறிதுகூட கவலையாவது குதூஹலமாவது இல்லாமலேயே இருக்கிறார்கள். ஆதலால் நான் இந்த விஷயத்தைப்பற்றி இவ்விதம் எழுதப்புகுந்ததன் நோக்கம், இதைப் படிக்கும் எவராயினும் இது விஷயத்தில் தங்கள் தங்களுக்குத் தோன்றுவதை இந்தத் தீபிகைக்கு எழுதித் தெரிவிக்க வேண்டுமென்பதேயாகும். அவ்விஷயத்தில் அபிப்ராய பேதங்கள் இருக்கக்கூடுமாதலால், அவைகள் யெல்லாவற்றையுமே கூடியவரையில் ப்ரசுரம்செய்து ஒரு தீர்மானத்துக்கு வரமுடியுமாவென்று கண்டறிய யோசித்திருக்கிறோம். ஆதலால் இதை வாசிப்பவர்கள் தங்களுக்கு இது விஷயமாய் ஏதாவது ஸமாதானம் தெரிவிக்கக் கூடியதாயிருந்தால் அதைக் காரணங்களுடன் எழுதியனுப்ப வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்,

# மானமும் மௌனமும்

[டி. சுந்தராச்சாரியார், வக்கீல், சீர்காழி]

[ரஸிக்ய நிதியான இவ்வாசிரியர், இவ்யாஸத்தில், முக்யமானதோர் ஸநாதந ரஹஸ்யத்தை, அருமையாயும் அழகாயும் தெரிவித்துள்ளார்—ப]

நாம் இப்பொழுது நாகரீகத்தில் சிறந்துவிட்டதாயும் மேன்மேலும் சிறப்பை அடைந்து வருவதாயும் அபிப்ராயப்படுகிறோம். இந்த அபிப்ராயம் நமக்கு ஸொந்தத்தில் உண்டானதல்ல. அந்ய தேசத்தவர்கள் சொல்வதை வேதவாக்காக நம்பி, 'मूढः परप्रत्ययनेयबुद्धिः' 'மூட₄: பரப்ரத்யயநேயபு₃த்₃தி₄:' என்றபடி, நாம் அவர்களைப் பின்பற்றிப் பிதற்றுகிறோம். இப்பொழுது நாகரிகம், எந்த ப்ரகாரத்தில் நமக்கு உபதேசிப்பவர்கள் வாழுமிடத்தில் நிலை பெற்றிருக்கிறதென்பதைச் சற்றுக் கவனிப்போம். தூம சகடங்களும், விமாநங்களும், லஜ்ஜையை வர்ஜித்த விஷயாநுபவஸாதநங்களும், நாகரிகம் என்பதின் முக்ய லக்ஷணங்களாய் அங்கு ப்ரவஸித்தி அடைகின்றன. இவைகளைக் கண்டுபிடிக்கும் முறைகளை உணர்த்துவதான பௌதிக சாஸ்த்ரமே அவ்விடங்களில் வேத வேதாந்த ஸாரமாகக் கருதப்படுகிறது. இது போன்ற ஸித்திகளெல்லாம் நம் முன்னோர்களுக்குப் புத்தியிலாவது புலப்படாமல் இருக்கவில்லை. ஆனால் அவர்கள் அவைகளை நம் அபிவ்ருத்திக்கு அத்யந்த ஸாதநங்களாகப் பாராட்டவில்லை. அப்படிச் சிந்தித்துப் போதிப்போரையெல்லாம் லோகாயதர்கள் என்று பஹிஷ்கரித்தார்கள். 'कच्चिन्न लोकायतिकान् ब्राह्मणांस्तात सेवसे' 'கச்சிந்ந லோகாயதிகாந் ப்₃ராஹ்மணாம்ஸ்தாத ஸேவஸே' என்றார் ஸ்ரீ ராமபிரானும். சாந்தோக்யோபநிஷத்தில் பூம வித்யா ப்ரகரணத்தில் இந்நாகரிகத்தின் அல்ப ஸாவத்தையும் அநர்த்த ஸாவத்தையும் ஸ்ரீ நாரதருக்கு ஸ்ரீ ஸநத்குமாரர் நன்கு எடுத்துக் கூறுகிறார். ஸ்ரீ நாரதர் தாம் தெரிந்து கொண்டவைகளையெல்லாம் ஸநத்குமாருக்கு எடுத்து உரைக்கும் பொழுது,

'भूतविद्यां क्षत्रविद्यां नक्षत्रविद्यां
सर्पदेवजनविद्यां एतद्भगवोऽध्येमि'

'பூ₄தவித்₃யாம் க்ஷத்ரவித்₃யாம் நக்ஷத்ரவித்₃யாம்
ஸர்பதே₃வஜநவித்₃யாம் ஏதத்₃ப₄க₃வோऽத்₄யேமி'

என்று சொல்லி முடித்தார். [இதனால் நம் தேசத்திலும் பௌதிக சாஸ்த்ரம் முதலியவை ஒருவாறு விஸ்தார மடைந்திருந்தன என்று ஏற்படுகிறது]. அதைக் கேட்ட ஸநத்குமாரர் "நீர் பெயர்ப் புலவராகிறீர்", என்றார். கடைசியில் அந்த பகவான்,

'गो अश्वमिह महिमेत्या चक्षते हस्ति हिरण्यं
दासभार्यं क्षेत्राण्यायतनानीति ।
नाहमेवं ब्रवीमीतिहोवाचान्योह्य-
न्यस्मिन् प्रतिष्ठित इति ।'

'கோ அச்வமிஹ மஹிமேத்யாசக்ஷதே ஹஸ்தி ஹிரண்யம்
தாஸபார்யம் க்ஷேத்ராண்யாயதநாநீதி ।
நாஹமேவம் ப்ரவீமீதி ஹோவாசாந்யோஹ்ய
ந்யஸ்மிந் ப்ரதிஷ்டித இதி ॥'

என்று கூறுகிறார்.

["மாடுகள், குதிரைகள், பொருள், பூமி, மாட மாளிகைகள், இவை போன்ற செல்வங்கள் மேன்மையுள்ளவை என்கிறார்கள். நான் அப்படிக் கூறமாட்டேன்; ஏனென்றால், அவைகள் தாங்களே தங்கள் நிலையைப் பெற்றவையல்ல."] தன் நிலை தான் பெறாததை நம் நிலையாக்கிக்கொண்டால் நம்முடைய கதி அதோகதிதான் என்பது உபதேசத்தின் கருத்து. நம்முடைய அபிவிருத்திக்கு இவ்வித ஸித்திகளையே நாம் அடிப்படையாகக்கொண்டு, நம்முடைய அப்யாஸங்கள் அனைத்தையும் அவைகளைப் பெறவே பயன்படச் செய்வோமானால் மணலின்மேல் கட்டிய மாளிகை போல்தான் ஆகும். பௌதிக சாஸ்த்ரத்தின் அருகிலும் நாம் அணுகக் கூடாதென்பதாவது, அதன் தத்வங்களில் நாம் ப்ராவீண்யத்தைப் பெறக் கூடாதென்பதாவது இதன் கருத்தல்ல. அதற்கு ஸர்வ ப்ராதாந்யத்தை அளித்து, நம்முடைய ஸர்வ ப்ரவ்ருத்திகளையும் அதன் பொருட்டு அர்ப்பணம் செய்யக்கூடாதென்பதே இதன் பொருள்.

இந்த விஷயம் யாவும், மாநம், மௌநம் என்ற இரண்டு பதங்களுக்கு வ்யாக்யாநமாக ஸ்ரீ மஹாபாரதத்தில் ஸநத் ஸுஜாதீயத்தில் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

'नवै मानश्च मौनं च सहिते वसतः सदा ।
अयं मानस्य विषयो ह्यसौ मौनस्य तद्विदुः ॥'



'நைவ மாநச்ச மௌநம் ச ஸஹிதே வஸத: ஸதா ।
அயம் மாநஸ்ய விஷயோ ஹ்யஸௌ மௌநஸ்ய தத்விது: ॥'

மாநமும் மௌநமும் எப்பொழுதும் ஓரிடத்தில் கூடிக் குடியிருக்க மாட்டா. இங்கு ஸம்ருத்தி என்று பாவிக்கப் படுவதெல்லாம் மாநத்தின் விஷயங்கள். 'ஞானிகள் ஸம்ருத்தி-ஸாதநமென்று கண்டறிந்தவையெல்லாம் 'மௌநம் எனப்படும்' என்பது இதன் பொருள். மாநம், மௌநம் என்பதற்கு அர்த்த விசாரம் செய்யும்போது ஸ்ரீ ஶங்கரபகவத் பாதர் ஹைரண்ய கர்ப்பம் என்னும் க்ரந்தத்திலிருந்து அடியிற்கண்ட ச்லோகத்தை உதாஹரிக்கிறார்:

'अन्नाङ्गनादिभोगेषु भावो मान इति स्मृतः ।
ब्रह्मानन्दसुखप्राप्तिहेतुर्मौनमिति स्मृतः ॥'

'அந்நாங்கநாதிபோகேஷு பாவோ மாந இதி ஸ்ம்ருத: ।
ப்ரஹ்மாநந்தஸுகப்ராப்திஹேதுர்மௌநமிதி ஸ்ம்ருத: ॥'

இதை ஆலோசிக்கும் போது இப்பொழுது நாகரிகமாகக் கருதப்படுவதெல்லாம் மாந வகுப்பை முற்றிலும் தழுவியதே தவிர, மௌநமெனும் பெரும் பதத்தைப் பற்றியதாகவேயில்லை. ஆனால், 'மாநத்தைப் பின்பற்றியதால் மேல் நாட்டார்கள் செழித்து வாழ்ந்து திருவின் அருளைப் பெற்று வரவில்லையா?' என்ற கேள்வி இவ்விடம் பிறக்கக் கூடும். அதற்கு உத்தரம் அடுத்த ச்லோகத்திலேயே இருக்கிறது.

'श्रीर्हि मानार्थसंवासात् सा चापि परिपन्थिनी ।
ब्राह्मी सुदुर्लभा श्रीर्हि प्रज्ञाहीनेन क्षत्रिय ॥'

'ஸ்ரீர்ஹி மாநார்த்தஸம்வாஸாத் ஸா சாபி பரிபந்திநீ ।
ப்ராஹ்மீ ஸுதுர்லபா ஸ்ரீர்ஹி ப்ரஜ்ஞாஹீநேந க்ஷத்ரிய'

ஸம்பத்தானது, மாநத்தைப் போற்றுபவரோடு ஸஹவாஸம் செய்வதால், தானே சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டு விடுகிறது; மேலும் ஸம்பத்துக்கெல்லாம் ஸம்பத்தான ப்ருஹ்மஸ்ரீயை நாம் பெறவொட்டாமல் புத்திக்குறைவை விளைவித்து நமக்கும் அநர்த்தத்தை உண்டுபண்ணுகிறது.] மாநத்தைப் பின்பற்றிய ஸம்பத்து நம் புத்தியைக் கெடுப்பதோடு தானே ஸங்கடத்தில் அகப்பட்டு விழிப்பதை இக்காலத்திய ஸம்பவங்கள் ஒவ்வொன்றிலும் காண்கிறோம். த்ரவ்யாதார விப்லவங்கள் தற்காலத்தில் எதனால் என்றால் அதி பரிணாமத்தால் தான் என்று பதில் அளிக்கிறார்கள். இது

நான் ஸம்பத்து ஸம்பத்தாலேயே பீடிக்கப்படுகிறதாகும். நம்முடைய மஹார்ஷிகளின் வாக்யங்களில் நம்பிக்கை பிறந்து 'यः परः पर एव सः' 'யஃ பர: பர ஏவ ஸ:' என்ற மனப் பான்மையும் நம்மிடம் தலையெடுத்து நம்முடைய முன்னேற்றத்திற்கு இன்றியமையாததான மௌந பரமார்த்தத்தையே நாம் கைக் கொள்ளாவிடில் ஆயிரம் காங்கிரஸ்கள் அதிகாரத்திற்கு வந்தாலும் பல்கோடி மஹாத்மாக்கள் ப்ரஸங்க மழை பொழிந்தாலும் விமோசன மேற்படாதென்பது திண்ணம்.

மாநம், மௌநம் என்ற இவ்விரண்டும் 'प्रेयः श्रेयः' 'ப்ரேய: ச்ரேய:' என்னும் நாமாந்தரங்களால் கடோபநிஷத்திலும் ப்ரஸ்தாவிக்கப் பெற்றிருக்கின்றன. *ச்ரேயஸ் ப்ரேயஸ் என்னும் இவ்விரண்டில், ச்ரேயஸ்ஸைத் தேர்ந்தெடுப்போருக்கு நன்மை விளைகிறது. ப்ரேயஸ்ஸைப் பற்றியவரோ இறுதியில் தன் இயற்கையை இழந்து கெடுவார்கள். ப்ரேயஸ்ஸைக் காட்டிலும் நன்மதி வாய்ந்தோர் ச்ரேயஸ்ஸையே போற்றுவார்கள். மதியீன மக்களோ தங்கள் சரீரயாத்ரையில் ஈடுபட்டு யோக க்ஷேமார்த்தமாக ப்ரேயஸ்ஸைப் பின்பற்றுவார்கள். உயர்வெனும் பெரும்பதம் பெற மௌநாத்மமான ச்ரேயஸ் ஹேதுவாகுமே ஒழிய ப்ரேயஸ் ஆகாது. மாநம் எவ்வளவு கமநீய ஸ்வரூபம் உடையதாய் நம் கண்களுக்குப் புலப்பட்டாலும்,

'नानावर्णविचित्राङ्गो रत्नविन्दुसमाचितः ।
द्योतयन् वनमध्यग्रं शोभते शशिसन्निभः ॥
अहोरूपमहोलक्ष्मीः स्वरसम्पच्च शोभना ।
मृगोऽद्भुतो विचित्राङ्गो हृदयं हरतीव मे ॥'

(आरण्यकाण्डे त्रिचत्वारिंशसर्गे)

'நாநாவர்ணவிசித்ராங்கோ ரத்நபிந்து ஸமாசித: ।
த்யோதயந் வநமத்யக்ரம் சோபதே சசிஸந்நிப: ॥
அஹோரூபமஹோலக்ஷ்மீ: ஸ்வரஸம்பச்ச சோபநா ।
ம்ருகோऽத்புதோ விசித்ராங்கோ ஹ்ருதயம் ஹரதீவ மே ॥'

(ஆரண்யகாண்டே த்ரிசத்வாரிம்சஸர்கே)

---

* तयोः श्रेय आददानस्य साधुभवति । हीयतेऽर्थाद्य उ प्रेयो वृणीते ।... श्रेयोहि धीरोऽभिप्रेयसोवृणीते, प्रेयोमन्दो योगक्षेमाद्वृणीते ।

* தயோ: ச்ரேய ஆததாநஸ்ய ஸாதுர்பவதி । ஹீயதேऽர்த்தாத் ய உ ப்ரேயோ வ்ருணீதே । ... ச்ரேயோஹி தீரோऽபிப்ரேயஸோ வ்ருணீதே, ப்ரேயோ மந்தோ யோகக்ஷேமாத் வ்ருணீதே ।



என்று வர்ணிக்கப் பெற்ற மாரீச மானையே ஒக்கும். அதை ப்ரதாநார்த்தமாகக் கொண்டு பெருமை பேசி வரும் மேனாட்டாரே சிலர் இப்பொழுது சற்று விழித்துக்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். அந்த ஸந்தர்ப்பத்தில் விழி இழந்து வழி தடவாதிருத்தல் பாரத மக்களான நமக்கு ஸ்வரூபமாகும்.

மாநத்தால் ஏற்படும் மயக்கம் தெளிந்து, மௌந பரமார்த்தம் ஸித்திக்க அறுவகை முக்ய குணங்கள் நமக்கு உபதேசிக்கப் படுகின்றன.

'सत्यार्जवे ह्रीर्दमशौचविद्याः ।
षण्मानमोहप्रति वन्धकानि ॥'

(सनत्सुजातीय)

'ஸத்யார்ஜவே ஹ்ரீர்தமசௌசவித்யா: ।
ஷண்மாநமோஹப்ரதி பந்தகாநி ॥'

(ஸநத்ஸுஜாதீய)

ஸத்யம் அல்லது உண்மையென்பது இக்கால வ்யவஹாரங்களில் அதிக அவகாசத்தை அடையவில்லை. அந்தப்படியே தான் ஆர்ஜ்ஜவம் அல்லது நேர்மை என்பதும். இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னமேயே 'पराभिसन्धानमधीयते यै र्विद्येति' 'பராபிஸந்தாநமதீயதே யைர்வித்யேதி' என்று கவி தெரிவிப்பரேயானால், இக்காலத்தில ஆர்ஜ்ஜவமென்பதை எங்கு நாம் காண்பது? ஒருவேளை அபிஸீனியா யுத்தத்தில் அகப்படலாம். ஹ்ரீ அல்லது வெட்கமென்பதோ இக் காலத்தில் நம் உடைமையை நாம் தரிப்பதிலும், நம் ஆசாரோபசாரங்களை நாம் அநுஷ்டிப்பதிலும், நம் பாஷையை நாம் ஸதஸ்ஸுகளில் பேசுவதிலுமே நிலை பெற்றிருக்கிறது. தமம் அல்லது அடக்கம், தற்புகழ்ச்சி பரவக் கூட்டங்கூடி த்ரவிய வஸூல் செய்யும் காலத்தில் எவ்விதம் தரிக்கும்? சௌசம் அல்லது ஸதாசாரம், வித்யை அல்லது நற்கல்வி இவைகள் நாளுக்கு நாள் தங்கள் ஸ்வரூபம் குன்றி வருவது அபிஜ்ஞர்களெவர்க்கும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும் விஷயமே. இப்படி உண்மை முதலிய குணங்கட்கு மலிநதசை மேன்மேலும் அதிகரிக்கும் நாளை நன்னாள் என்றும் நாகரிகப் பெருக்கென்றும் நாம் எப்படிக் கூறுவது? ஆனாலும் 'मां प्रपन्नो जनः कश्चित् न भूयोऽर्हति शोचितुं' 'மாம் ப்ரபந்நோ ஜந: கச்சித் ந பூயோऽர்ஹதி சோசிதும்' என்ற ஸர்வேச்வரனுடைய வசநாம்ருதத்தில் விச்வஸித்து அவர் நமக்கு மயர்வற மதிநலம் அருளுமாறு அநவரதம் அஞ்சலி பத்தர்களாய் அவரை ப்ரார்த்திப்போமாக!

# ஸ்ரீக்ருஷ்ண தாதார்ய மஹாதேசிக சரிதம்

[ஸ்ரீ. உ.வே. ஐயா. க்ருஷ்ண தாதாசார்யர்]

மாத்வ மதஸ்தரா யிருந்த ரகுநாதராய ரென்பா ரொருவர், இந்த ஹம்பீ ராஜ்யத்திலே பெரிய அதிகாரம் பெற்று த்ரவ்ய ஸம்பாதநமும் பண்ணி, அத்தாலே சில வித்வான்களை ஸ்வாதீநம் செய்துகொண்டு, அக்ஷத யோநிகளான விதவைகளுக்குப் புநச்ச விவாஹம் செய்யவேணுமென் றொரு க்ரந்தம் எழுதி, அக்ரந்தப்படி இரண்டொரு விவாஹமும் செய்து வைத்தார். அப்போது அவர் க்ரந்தத்துக்கு ஸ்ரீஸ்வாமி கண்டநமாகத் 'தர்ம நிர்ணயம்' என்றொரு க்ரந்தம் அருளிச்செய்து, அந்த நடவடிக்கையையும் தடுத்தருளினார். தர்மநிர்ணயம் என்னும் க்ரந்தம் 'உதீர்ஷ்வ நாரீ அபிஜீவலோகம்' என்கிற ச்ருத்யர்த்த விசாரம். இந்த ச்ருதிக்கு வித்யாரண்ய பாஷ்யம் தங்களுக்கு அநுகூலமென்று பூர்வபக்ஷிகளின் அபிப்ராயம். அது பாஸ்கராசார்ய பாஷ்ய விருத்த மென்றும், அநேக மீமாம்ஸா ந்யாய விருத்த மென்றும், இந்தத் தர்ம நிர்ணய க்ரந்தத்திலே அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. தவிர: கப்பலேறி த்வீபாந்தரங்கள் போகலா மென்று கொண்டு சிலர் அதிக்ரமங்கள் பண்ண, அது ஆகாதென்று 'துர்வ்ருத்தநிக்ருதி' என்றொரு க்ரந்தம் அருளிச்செய்தார். இதில், கப்ப லேறுமவர்களுக்கு ப்ராயச்சித்தமுண்டு; ஆனாலும் ஸம்ஸர்க்க யோக்யதையில்லை', என்று நிஷ்கர்ஷிக்கப்பட்டுள்ளது.

ஒரு காலத்திலே நாதமுனி கிருஷ்ணையங்கார் என்று பேர் பெற்ற ஒருவர், இந்த நகராதிகாரம் பெற்று வாழும் நாளில், அவரை ஆச்ரயித்திருந்த தமிழ்வித்வான் ஒரு ஸ்ரீவைஷ்ணவ ப்ராஹ்மணன் சதாவதாந வல்லராயிருந்து, ஸ்ரீஸ்வாமி ஸந்நிதியிலே தம் அவதாந ஸாமர்த்யத்தைக் காட்டிப் பெருமை பெறவேணு மென்றெண்ணி அந்த அதிகாரியோடு சொன்னார். அவரும் ஸ்ரீஸ்வாமி ஸந்நிதியிலே அவ்விஷயத்தை விண்ணப்பித்து, தண்ட்ரி பட்டப்பா தா தாசார்ய ஸ்வாமி திருமாளிகைக்கு எழுந்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க, அப்படியே ஸ்ரீஸ்வாமியும் அங்கு எழுந்தருளினார். பிறகு அவதாநியும் அவதாநம் நடத்த ஆரம்பிக்க, மத்யே ஸமஸ்யா பூரணம் என்றொரு அவதாநம் ப்ரஸ்துதமாய், கட்டளைக் கலித்துறையிலே ஈற்றில் ஓகாரமாய் ஒரு ஸமஸ்யையை ஒரு தமிழ் வித்வான் கொடுக்க, அவதாநியும் அதைப் பூரிக்கப் பாட்டும் அர்த்தச் சேர்த்தியும் ஒன்றுபட அழகாகப் பாடினார். கடைசியில் அவருக்கு ஸம்பாவனை பண்ணும்போது, ஸ்ரீஸ்வாமி அவரது ஸாமர்த்யத்தைக் கொண்டாடி, 'எனக் கொரு ஸந்தேஹம்; கலித்துறை ஈற்றில் ஓகாரம் ஆகாதென்று கட்டளைக் காரிகத்திலே சொல்லியிருக்க, அதற்கு விருத்தமாக இந்தப் புலவர் எப்படி ஸமஸ்யை கொடுத்தார்? நீர்தான் எப்படி அதைப் பூரித்தீர்?' என்றார். இருவரும் திகைத்துத் தமது பிழையை ஒப்புக்கொண்டு ஸ்ரீஸ்வாமியின் ஸூக்ஷ்மாவதாந ஸாமர்த்யத்தைக் கொண்டாடினார்கள்.



ஸ்ரீஸ்வாமியின் ப்ரஹ்ம சப்தார்த்த விசாரம் செய்தருளின 40-ஸம்வத்ஸரத்துக்கு மேலே, புரிசை ஸ்ரீரங்காசார்ய ரென்பவர், அநந்தாழ்வான் ப்ரஹ்மபத சக்தி வாதத்துக்கு வ்யாக்யா வ்யாஜத்தாலே ஸ்ரீஸ்வாமி செய்தருளின ப்ரஹ்ம சப்தார்த்த விசாரத்துக்குக் கண்டநமாக ஒரு க்ரந்தம் எழுதி ப்ரஸித்தப்படுத்திக் கொண்டிருந்தார். ஸ்ரீஸ்வாமியும் அந்த க்ரந்தத்தைக் கடாக்ஷித்து, அதற்குக் கண்டநமாக 'வித்வஜ்ஜந விநோதிநீ' என்றொரு க்ரந்தம் அருளிச் செய்தார். அந்த க்ரந்தத்திலே' இவர் ஸ்வயம் வ்யாக்யாஸித மூலத்துக்கு யதாவஸ்திதார்த்தாநபிஜ்ஞ ரென்றும், தர்க்க வேதாந்தங்களில் இவருக்கு உண்டான ஜ்ஞாநம் வ்யதிகரணமாயே இருக்கிறதென்றும், ஸம்ப்ரதாய க்ரந்தங்களிலே அடியோடு இவர் பரிசயமில்லாதவ' ரென்றும் ஸ்பஷ்டமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

திருச்சானூரிலே ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்துவந்த கேதாண்டிப்பட்டி ஸ்வாமி என்று ப்ரஸித்தராயிருந்த ஸ்ரீரங்கராமாநுஜ மஹா தேசிகன், தமது திருமேனி தளர்ந்தவாறே கோயிலிலே பெரிய பெருமாள் திருவடிவாரத்திலே தமக்குச் சரீர வியோகம் நேரிடவேண்டு மென்று மநோரதித்து, கார்த்திகை மாஸம் ஸ்ரீதாததேசிகன் திருவவதார திருநக்ஷத்ரத்தன்று பெருமாள் கோயிலுக்கு எழுந்தருள, திருமேனி மிகவும் தளர்ந்து, கோயிலுக்கு எழுந்தருள முடியாமைக்காகப் போர க்லேசித்திருக்க, ஸ்ரீஸ்வாமியும் நித்யம் போல் அபிகமநத்திலே ஸ்ரீபேரருளாளன் மங்களாசாஸநம் செய்து தம் ஆச்ரமத்துக்கு எழுந்தருளும்போது, அந்த ஸ்வாமி எழுந்தருளியிருப்பதாகத் தெரிந்து, அந்த ஆச்ரமம் எழுந்தருளி ஸ்ரீஸ்வாமியைத் திருவடி தொழுது, ஆச்ரமாநுகுண யோக க்ஷேம விசாரண ப்ரஸ்தாவத்திலே அந்த ஸ்வாமி கோயிலுக்கு எழுந்தருள்வதாயிருந்த தம்முடைய மநோரதத்தை அருளிச்செய்ய, ஸ்ரீஸ்வாமியும், 'அப்படித் திருவுள்ளமாக வொண்ணாது; இந்தத் திவ்ய தேசமும் கோயிலுக்குக் குறைந்ததன்றே; திருவிலச்சினை கண்டு அஜ்ஞாத ப்ரேத ஸம்ஸ்காரம் பண்ணின கூடஸ்தரை 'நாட்டுக்குப் பொல்லான் நமக்கு நல்லா'னென்று அருளிச் செய்தவர் நம் பேரருளாளனே யன்றோ? கோயிலுக்கே எழுந்தருளவேண்டும் என்று நிர்ப்பந்தம் திருவுள்ளத்திற் பட்டால் மற்றைத்திவ்ய தேசங்கள் பாழாய், கோயிலும் ச்மசாந ஸத்ருசமாய்த் தலைக்கட்டும். ஆகையால் அப்படித் திருவுள்ளமாக வொண்ணாது' என்று ப்ரார்த்திக்க, அந்த ஸ்வாமியும் திருவுள்ளம் உகந்து சாஸ்த்ரார்த்தத்தை வெளியிட்டதற்குப் போர உகந்து, 'அடியேனுடைய சரீரவியோக தசையிலே தேவரீர் அருகே இருக்கவேணும்; தேவரீரைக் காணாதே அடியேனுக்கு உத்தராக நிஷ்க்ருதி' என்றருளிச்செய்ய, ஸ்ரீஸ்வாமியும் திருவுள்ளம் நொந்து, 'மஹாதேசிகன் ப்ரபாவம் இருக்கும்படி என்! ஸ்வாமி இப்படியும் அருளிச்செய்யலாமா? இப்படி இரு என்று நியமித்தால் ஜந்மஸாபல்யமும் மஹத்கடாக்ஷமும் ஸத்தாலாபமும் பெறுவேனே!' என்று விண்ணப்பிக்க, 'எப்படியாகிலுமாம்; தேவரீர் அப்போது அடியேன் பரிஸரத்திலே தானே இருக்கவேண்டும்' என்று ஜ்ஞாபித்து விடைகொடுக்க, ஸ்வாமியும் தம் ஆச்ரமம் எழுந்தருளினார். அந்த மஹா தேசிகனும் பத்தெட்டு தினங்கள் ஸ்ரீபேரருளாளன் விபூதிக்கு அலங்காரமாக எழுந்தருளியிருந்தார். ஸ்ரீஸ்வாமியும் அப்போதைக்கப்போது அம்மஹாதேசிகனைத் தண்டன் ஸமர்ப்பித்துத் திருமேனிப்படியை விசாரித்து வருவதுண்டு.

மார்கழி மாஸம் ரேவதீ நக்ஷத்ரம் ஸ்ரீதூப்புல் விளக்கொளி எம்பெருமான் மாஸ திருநக்ஷத்ரத்தை நடத்திவைக்க ஸ்ரீஸ்வாமி அங்கெழுந்தருளினார். அந்த மஹா தேசிகனும், அன்றே தமக்குப் பெருமாள் தன்னுடைச் சோதிக்கு வரும்படி நியமிப்ரென்று அறிந்து, தமக்கடைத்த நித்ய நைமித்திகங்களை எல்லாம் யதோசிதம் அநுஷ்டித்து, ஸமாபநமும் ஆன பிறகு யோக ஸங்கல்பமும் செய்து அநுஷ்டிக்கும்போது, நாராயண சப்தோச்சாரணத்தோடே தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளினார். ஸ்ரீ ஸ்வாமி இதனை அறிந்து சடக்கென எழுந்தருளி, சரமதிருமேனியைத் தண்டன் ஸமர்ப்பித்து, அப்போது தாம் அருகில் இல்லாமற் போனமைக்கு இரங்கி க்ஷமாபணம் செய்து, சரம கைங்கர்யத்தை முற்றும் தாமே நடத்திவைத்து, அவப்ருத ஸ்நாநம் செய்து, அன்று உபவாஸயாய் எழுந்தருளியிருந்தார்.

தர்ம சாஸ்த்ரத்திலே, [illegible] விசாரம், [illegible] நிஷேய விசாரம், [illegible] நிரூபணம்—இப்படிப் பல க்ரந்தங்கள் உண்டு ஸ்வாமி அருளிச் செய்தது. ப்ரஹ்ம யஜ்ஞம் அநுஷ்டிக்கும்போது ப்ரச்நாத்யயந ஸமாப்த்யநந்தரம் திருவாய்மொழியில் ஒரு பத்து அநுஸந்திப்பதுண்டு. இதில் கடைசியில் இரண்டு பாட்டுக்கள் நிறுத்தி வைத்து, இஜ்யாராதநாந்தத்திலே சாத்துமறை பண்ணுவர். '[illegible]' என்கிற கட்டளையிலே அத்யயநம் செய்யும்போது யதோசிதமாய் மற்றஅருளிச் செயல்களை அநுஸந்தித்துப் போருவர்.

# விருத்தாந்தங்கள்

## திருவஹீந்திரபுரம் ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் உத்ஸவமும் ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையும்.

நாளது யுவ(வரு) புரட்டாசி மாதம் 12௳ (28-9-35) தொடங்கிப் பத்து நாட்கள் வரையில் திருவஹீந்திரபுரத்தில் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் உத்ஸவம் வெகு சிறப்புடன் நடந்தேறியது. அவ்வுத்ஸவத்தில் நம்தேசிகன், தினமும் காலையிலும் மாலையிலும், பல்லக்கிலும் வாகனங்களிலும் வீதிகளில் எழுந்தருளினார். ஆயிரக்கணக்கான ஜனங்கள் தமக்குள்ளுள்ள வேற்றுமைகளையும் மறந்து அவரைஸேவித்து ஆனந்த பரவசராயினர் இவ்வுத்ஸவம், ஸ்ரீதேவநாதப் பெருமாளும் ஹேமாப்ஜ நாயகியும் நவராத்ரி உத்ஸவம் கண்டருளும் நாளிலேயே ஆரம்பிக்கப்பட்டது ஒரு விசேஷமாகும். இதனால் ஸ்ரீதேசிகன் உத்ஸவத்திற்கு ஒரு தனி அழகும் ஏற்பட்டது.

ஸ்ரீதேசிகன் முதலில் வீதிவலமாக எழுந்தருளி திருக்கோயி லெழுந்தருளுவதும், பின்பு ஸ்ரீதேவநாதன், தாயார் சந்நிதிக் கெழுந்தருளி; அங்குப்பக்தர்கள் தொழுது வணங்கி நிற்க ஸ்ரீஹேமாப்ஜ நாயகியுடன் ஏகாஸநத்தில் எழுந்தருளியிருந்து திருவாராதநம் காண்டருளுவதும், கண் கொள்ளாக் காட்சியாகும். ஸ்ரீதேசிகன் உத்ஸவத்திற்காகவே வெளியூர்களிலிருந்து வந்திருந்த ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வேதபாடசாலையிலும், மற்ற இடங்களிலும், ததீயாராதநம் மிகவும் நன்றாக நடந்தது. அன்றியும் ஸந்நிதியிலும் ப்ரஸாதம் அபரிமிதமாக விநியோகிக்கப்பட்டது. இவ்வாறு சிறப்புடன் நடந்த உத்ஸவத்தின் ஏழாவது நாளன்று மாலையில், மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. உப. வே. சேட்லூர் நரஸிம்மாசார்ய ஸ்வாமியால் நடத்திவைக்கப்பட்ட கந்தப்பொடி உத்ஸவத்தில் ஸ்ரீ தேசிகன் ஆச்சர்யகரமான அலங்காரங்களுடனும் அளவற்ற பாண



வேடிக்கைகளுடனும், வீதிகளில் எழுந்தருளியதும், எட்டாவது நாள் தோட்டத்திற்கு எழுந்தருளி உத்ஸவங்கண்டருளினதும் ஒரு ஆச்சர்யமான காட்சியென்னத் தட்டில்லை.

ஒன்பதாம் திருநாள் ரதோத்ஸவக்கொண்டாட்டம். அன்று காலையில் ஸ்ரீதேசிகன் திருத்தேர்மேல் எழுந்தருளி, 10மணிக்குத் தேர்நிலைசேர, தமது திருமாளிகைக் கெழுந்தருளினார். அங்கு ஸ்ரீதேசிகன் திருவடிவாரத்தில் பிற்பகல் 3மணிக்கு, ஸ்ரீ. உப. வே. மஹாமஹோபாத்யாய சேட்லூர் நரஸிம்மாசார்ய ஸ்வாமியின் அக்ராஸநத்தின்கீழ், ஸ்ரீரங்கம் ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை, (சென்னைக்கிளையின்) உபாத்யக்ஷர் ஸ்ரீ. உப. வே. வித்வான் பரவஸ்து ஸ்ரீநிவாஸாசாரிய ஸ்வாமி ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திகளின் பெருமையைப்பற்றியும் இத்திவ்யஸூக்திகளில் சிலர் கூறும் அவத்யங்கள் இல்லை யென்றும் இந்த ஸபை ஏற்பட வேண்டியிருந்த காரணங்களைப் பற்றியும் ஸபையின் நோக்கங்களையும் அதன் ஆவச்யகதையைப்பற்றியும் மிக விரிவாக ஓர் உபந்யாஸம் செய்தருளினார். பின் ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்யஸ்வாமி ஸ்ரீதேசிகதிவ்ய ஸூக்திகளில் அகாரணமாகத் தலையிட்டுப் பூர்வபக்ஷிகள் செய்யும் அநீதிகளுக்கு உடனே பரிஹாரம் தேடவேண்டுவது அவச்யமென்றும், இதனால் இச்சபைக்குப் போஷகர்களாகவும் அங்கத்தினர்களாகவும் சேர்ந்து, அதைப் பலப்படுத்துவது அவச்யமென்றும் கூறினார். இதை யாவரும் ஏகமனதுடன் ஏற்றுக்கொள்ள பலர் ஸபைச்கு அங்கத்தினர்களாகச் சேர்ந்தார்கள். இவ்வூர் மீமாம்சா சிரோமணி ஸ்ரீமான் சடகோப ராமாநுஜாசார்யரும், ஸ்ரீ. உப. வே. சித்ரகூடம் விஜயராகவாசார்யரும் முறையே தென்னாற்காடு ஜில்லா, வட - தென்பாகங்களுக்கு ஷை ஸபைக்கு அங்கத்தினர் முதலியோரைச் சேர்க்க ஏஜண்டுகளாக நியமிக்கப்பட்டார்கள்.

மறுநாள் ஸ்ரீதேசிகன் தமது திருநக்ஷத்ரமான ச்ரவணத்தில் ஸூர்யோதயத்தில் மலைமேல் எழுந்தருளி ஸ்ரீஹயக்ரீவனையும், பக்ஷி ராஜனையும், மங்களாசாஸநம் செய்து மிகப் பெரியதோர் ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியுடன், மலையிலிருந்து கீழே எழுந்தருளினார். அக்காட்சியை ஸேவிப்பது கண்கள் படைத்தன் பயனென்று கூறுவது மிகையாகாது. பிறகு மலையிலிருந்து கீழே இறங்கிய தேசிகன் ஸ்ரீதேவநாதனையும், தாயாரையும், ஆசார்யர்களையும், அந்தந்த ஸந்நிதிக்கு எழுந்தருளி, ஒவ்வொருவர் விஷயமாகவும் தாம் அருளிச்செய்த ஸ்தோத்ரங்களை விண்ணப்பஞ்செய்யும் ஸ்ரீவைஷ்ணவர் திரளோடு மங்களாசாஸநம் செய்து, பின்பு தமது ஸந்நிதியைச் சேர எழுந்தருளி அங்கிருந்து ஒரு திருப்பல்லக்கில் தமது திருமாளிகைக்கு எழுந்தருளினார். அங்கு முன்பு, தாமே கட்டியருளிய திருக்கிணற்றின் தீர்த்தத்தால் நிறைந்த பூர்ண கும்பங்கள், குடை, சாமரம் முதலிய வரிசைகளுடன், கருடநதி தீரத்திற்கெழுந்தருளி, அங்கே கட்டப்பட்டிருக்கும் மண்டபத்தில் திரு மஞ்சனங் கண்டருளி, கருட நதியில் தீர்த்தம் ஸாதித்து, அனைவரும் அவப்ருத ஸ்நாநம் செய்ய, எல்லாருடனும் ஸந்நிதிக்கு எழுந்தருளினார். அங்கே பெருமாளும் தாயாரும் இம்மஹாசார்யனது ஸந்நிதியில் எழுந்தருளியிருக்க, அவர்களுக்குப் பக்கத்தில் ஸ்ரீதேசிகனும் எழுந்தருளியிருந்தார். இரவு பத்து மணிவரையில் யாவர்க்கும் ஸேவைஸாதித்துச் சாத்துமுறையானவுடன், விஜயதசமியை முன்னிட்டுக் குதிரைவாகனத்தில் கருட நதிக்கெழுந்தருளி உத்ஸவம், கண்டருளினார். திரும்பிக் கோயிலுக்கு எழுந்தருளியபின்பு, ஸ்ரீதேசிகனுக்குப் புஷ்ப பல்லக்கு மஹோத்ஸவம் நடைபெற்றது. இதில் ஸ்ரீதேசிகன், ஸ்ரீதேவநாதனைப்போல் ஸேவை ஸாதித்தார். மறு நாள் உதயத்தில் த்வஜாவரோஹணமும் மட்டையடி உத்ஸவமும் நடந்தன. பின்பு விடாயாற்றி உத்ஸவம் பலநாள் வரையில் கண்டருளுவதுண்டு.

இவ்வூரில் இவ்வுத்ஸவம் இதேமாதிரி பெருமையுடன் அவிச்சிந்நமாக நீடூழிகாலம் நடைபெற வேண்டு மென்றும், தூப்புல் முதலிய மற்றைத் திவ்ய தேசங்களிலும், இதேபோல் உத்ஸவங்கள் விமர்சையாக நடைபெற வேண்டுமென்றும், அநுக்ரஹிக்குமாறு ஸ்ரீ நிகமாந்த குருவையும், ஸ்ரிய:பதியான ஸர்வேச்வரனையும் பன்முறையும் வணங்கி. ப்ரார்த்திக்கிறோம்.

(தேசிக பக்தன்.)

ஸ்ரீ:

ஸ்ரீயை நம:

# ஸம்பாதகரின் குறிப்புகள்

'யோऽந்த: ப்ரவிச்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலசக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ச்ச ஹஸ்தசரணச்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

**டாக்டர் வெஸ்ட்காட் என்பவரின் உபந்யாஸம்**

சென்ற அக்டோபர் மீ 28உ திங்கள்கிழமை திநம், சென்னை கவர்ன்மெண்ட் ஹௌஸ் 'பாங்க்வெடிங் ஹால்' என்று சொல்லப்படும் ஸ்தலத்தில், 'ஆங்க்ளிகென் சர்ச்' என்னும் பெயருடைய பெரியதொரு கிருஸ்த்வ ஸமாஜத்தின் நூறுவது ஆண்டு நிறைவின் கொண்டாட்டம் நடைபெற்றது. அப்பொழுது நமது ராஜதானியின் கவர்னராகிய லார்ட் எர்ஸ்கைன் அக்ராஸநம் வஹித்தார். கவர்னர் முகவுரை முடிந்தவுடன், அப்பொழுது அங்கு வந்திருந்த மடாதிபதிகளுள் [பிஷப்புக்களுள்] சிலர், அந்த ஸமாஜத்தின் ஆதி சரித்ரத்தையும் இவ்வளவு காலமாக அந்த ஸமாஜத்தாரால் ஜகத்திற்குச் செய்யப்பட்டுள்ள உபகாரத்தையும் பற்றி பஹுவாகப் புகழ்ந்து பேசி, இனி தங்களாற் செய்யப்படவேண்டும் கார்யங்களைப் பற்றியும் சிற்சில ஆலோசனைகளை ப்ரஸ்தாவித்தார்கள், அதன் பிறகு இந்தியா முழுவதற்கும் பெரிய மடாதிபதியாக [மெட்ரபாலிடனாக] இருக்கும் டாக்டர் வெஸ்ட்காட் என்பவர் முடிவுரையாக ஒரு உபந்யாஸம் செய்தார். அதில் அவர் சில விஷயங்களைப் பற்றி ஆக்ஷேபார்ஹமாகப் பேசியிருக்கிறபடியால் அந்தப் பேச்சின் குண தோஷங்களை நாம் இவ்விடத்தில் கொஞ்சம் விசாரிக்க ப்ரவர்த்திக்கின்றோம்.

அவர் பேசியிருப்பது என்னவென்றால், 'லோகத்தில் மிதஜ்ஞர்களாயிருக்கும் ஜநங்களுக்கு நல்ல ஜ்ஞாநத்தைப் பெற்றிருப்பவர்களெல்லாரும் ஜ்ஞாநத்தைப் போதிக்கவேண்டும் என்பது அவச்யமே. ஆனால், அவர்கள், கேவலம் இந்த லோக வாழ்க்கை ஸம்பந்தமான ஜ்ஞாநத்தை மாத்ரம் போதித்து அதை மாத்ரம் அபிவ்ருத்தி செய்துகொண்டு, பரலோகம் தைவம் என்பவை முதலிய விஷயங்களின் ஜ்ஞாநத்தை அநாதரித்துப் போனார்களேயானால், அது ஜகத்தின் ச்ரேயஸ்ஸுக்குக் காரணமாகமாட்டாது. ஜகத்தின் உண்மையான ச்ரேயஸ்ஸானது தைவ விஷயமான ஜ்ஞாநத்தின் அபிவ்ருத்தியைச் சார்ந்ததே. அந்த ஜ்ஞாநமின்றி, கேவலம் ஐஹிக ஸுகத்தை வ்ருத்தி செய்து கொடுக்கக்கூடிய பூத சாஸ்த்ர ஜ்ஞாநம் மாத்ரம் ஓங்கி வளர்ந்தால், அது பெரிய தீமைகளையே விளைவிக்கும் என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆகையால் ஜகத்தின் க்ஷேமத்தைத் தேடும் பெரியோர்களெல்லாரும், ஜநங்களுக்கு நல்லுணர்வைக் கொடுக்கக்கூடிய ஆத்ம ஜ்ஞாநத்தைப் பரவச் செய்து அது வழியாகச் சித்த சுத்தியைத் தேடமுயலுதல் வேண்டும்.' இவ்வாறு பேசிவிட்டு, இதற்கு மேல், அவர், கிருஸ்த்வ மதத்தில் போதிக்கப்படும் தைவ ஜ்ஞாநமே ஜநங்களுக்குச் சரியான மநோபாவத்தை உண்டு பண்ணக்கூடியதென்றும், அதன் அபிவ்ருத்தியே எல்லாரும் பரஸ்பரம் ஸௌஹார்த்தத்துடன் வாழ்வதற்குச் சரியான காரணமாகுமென்றும், ஆகையால் கிருஸ்த்வப் பாதிரிமார்கள் மாத்ரமின்றிக்கே மற்றுமுள்ள கிருஸ்த்வர்களும் மஹாஜநங்களுக்குக் கிருஸ்த்வ மதத்தைப் போதித்து அந்த மதத்தை எல்லாரும் தழுவும்படி பலமான முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்றும் சொல்லி தமது உபந்யாஸத்தை முடித்தார்.

இந்த உபதேசத்தின் பூர்வ பாகத்திற் சொல்லப்பட்டிருக்கும் விஷயத்தை நாம் மிகவும் ஆமோதிக்கிறோம். தைவ ஜ்ஞாநமின்றி கேவலம் லௌகிக ஜ்ஞாநம் ஓங்கி வளர்வது ஒருகாலும் தேச க்ஷேமத்தின் பொருட்டு ஆகமாட்டாது. லௌகிக ஜ்ஞாநம் மாத்ரம் ஓங்கி வளர்ந்தால், அந்த ஜ்ஞாநத்தை ஆதாரமாகக் கொண்டு எல்லாரும் தம்தம் ஸுகத்தை வ்ருத்தி செய்து கொள்வதற்கும் அது வழியாக தம்தம் பெருமையைத் தேடிக் கொள்வதற்குமே ப்ரவர்த்திப்பார்கள். அது, ஜநங்களுக்குள் ஸ்பர்த்தையையும் கலஹத்தையும் வ்ருத்தி செய்யுமே தவிர்த்து ஒற்று

மையை உண்டு பண்ணமாட்டாது. இப்பொழுது ஜகத்தில் நடைபெறும் நடவடிக்கைகளைப் பார்த்தால் இதன் உண்மை நன்கு விளங்கும். பூத சாஸ்த்ர ஜ்ஞாநத்தை மேன் மேல் வளர்த்தி, அதைக்கொண்டு ஆகாச ஸஞ்சாரம் அசரீர வாணீ வெடிகுண்டு விஷக்காற்று இம்மாதிரி வித்யையில் தேர்ச்சி பெற்றவர்களாய், ஜநங்கள், பரஸ்பரம் யுத்தம் செய்து கொண்டு ஒருவருடைய சொத்தை ஒருவர் அபஹரிப்பதிலும் ஒருவரை ஒருவர் ஹிம்ஸிப்பதிலுமே ப்ரவர்த்திக்கிறார்களன்றோ? 'நாம் எல்லாரும் ஜகத் பிதாவாகிற பகவானுடைய ப்ரஜைகள்; ஆகையால் நாம் எல்லாரும் பரஸ்பரம் ஹிதத்தைச் செய்து கொள்ளுதல் வேண்டும். அப்படி ப்ரவர்த்திப்பதே அந்தப் பிதாவுக்கு ஸந்தோஷத்தை ஜநிப்பிக்கும். அவனுக்கு அநபிமதமான பரஸ்பர ஹிம்ஸையில் நாம் ப்ரவர்த்தித்தால் அந்தப் பிதாவின் மநஸ் சீறுமே. அது நமக்கு ச்ரேயஸ்கரமாக மாட்டுமோ?' என்னும் ஜ்ஞாநம் ஸ்வல்ப மேனும் இவர்களுடைய மநஸ்ஸில் இருக்கும் பக்ஷத்தில், இந்த யுத்தம் நேருமோ? இந்த ஜந நாசம் தான் ஸம்பவிக்குமோ? இந்த ஜ்ஞாநம் இக்காலத்தில் அஸ்தமித ப்ராயமாகவே இருக்கின்றது. எல்லாரும் தம்தம் அர்த்த லாபத்தையும் காம போகங்களையுமே பெரியவைகளாக நினைக்கிறார்கள். பிறர்களை நசிப்பித்து அதனால் தாம் க்ஷேமம் பெறுவதிலேயே பெரும்பாலும் எல்லாருக்கும் நோக்கம் இருக்கின்றது. இம்மாதிரியான கெட்ட எண்ணம் ப்ரவஹித்துவரும் இக்காலத்தில், தைவமென்று ஒன்று உண்டு என்னும் ஜ்ஞாநத்தை ஜநங்களுக்குள் பரவச் செய்வதே எல்லாருக்கும் முக்ய தர்மமாக வேண்டும் என்று ஒருவர் உபதேசித்தாரேயானால், அந்த உபதேசத்தை நாம் புகழவேண்டாவோ?

அவர் இவ்வளவே சொல்லி அவருடைய உபந்யாஸத்தை முடித்திருந்தால், அவருடன் எவ்வித சச்சரவுக்கும் நமக்குக் காரணம் இருக்கமாட்டாது. அவருடைய மநோரதம் அவ்வளவுடன் நிற்காமல் ந்யாயத்திற்கு விஞ்சி ஓடி இருக்கிறபடியால் மாத்ரம் அவருடைய உக்திகளை நாம் கண்டிக்கும்படி ஸம்பவிக்



கின்றது. அவர்களால் கொண்டாடப்படும் தைவமே உண்மையான தைவமென்றும், அந்தத் தைவத்தை ஆச்ரயிக்காதவர்களுக்கு நல்ல உணர்வு உண்டாகமாட்டாதென்றும், ஆகையால் இதுவரையில் கிருஸ்த்வ மதத்தில் சேராதவர்களை இப்பொழுதாவது சேரும்படி செய்வதே தமது முக்ய தர்மமாக இருத்தல் வேண்டுமென்றும், அவர் பேசியிருக்கிறார். இம்மாதிரி பேசுவது அவருடைய உதாரமான மநோபாவத்தை ஸூசிப்பிக்கவில்லை என்றே நாம் சொல்வோம். பகவான், தத்வத்தைச் சிற்சில வகுப்பினருக்கு மாத்ரம் தெரிவிக்கிறான் என்று நினைப்பது அல்பமான சேதஸ்ஸின் லக்ஷணமன்றோ? எல்லாருக்கும் பிதாவாக இருக்கும் பகவான் அந்தந்த ப்ரஜைகளுக்குத் தக்கபடி தத்வத்தை விளக்கி அவரவர்கள் அந்தந்த வழியாக ச்ரேயஸ்ஸை அடையும்படி யன்றோ ஸங்கல்பித்திருக்கிறான்? நிற்க, கிருஸ்து மத ப்ரவர்த்தகர்களால் மஹா ஜநங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கும் தத்வ ஜ்ஞாந ப்ரகாரத்தைக் காட்டிலும், ஹிந்து மத மஹர்ஷிகளால் வெளியிடப்பட்டுள்ள ஜ்ஞாநத்தின் ரீதி ஒரு விதத்திலும் குறைந்ததன்று என்று நிஷ்பக்ஷபாதிகளான பாச்சாத்ய பண்டிதர்களே சொல்லியிருக்கிறார்கள். இவையெல்லாவற்றையும் அநாதரித்து கிருஸ்து மதமொன்றே ஜநங்களுக்கு ச்ரேயஸ்கரமான மதமென்று நினைத்து அந்த மதத்தை எல்லாரும் சேரவேண்டுமென்று ஒருவர் உபதேசம் செய்ய ப்ரயத்நப்பட்டால், அவரைப் பக்ஷபாதமற்றவரென்றாவது அவர் செய்ய முயலும் காரியம் ச்லாகிக்கத் தகுந்த கார்யமென்றாவது நாம் எப்படி சொல்லத் துணிவோம்?

பாதிரிமார்களோ வேறு கிருஸ்த்வர்களோ தமது கிருஸ்துவ மதத்தைப் பிறருக்கு போதிப்பதை நாம் கொஞ்சமேனும் ஆக்ஷேபிக்கவில்லை. கிருஸ்துவ மதத்தின் போதநத்தால் ஜநங்களுக்கு நல்ல ஜ்ஞாநம் ஜநிக்கக்கூடும் என்பதையும் நாம் மறுக்கவில்லை. அந்த மதத்தின் போதநத்தால் மாத்ரம் நல்ல ஜ்ஞாநம் ஜநிக்கும் என்று சொல்வதை நாம் பலமாக ஆக்ஷேபிக்கிறோம். அப்படிச்சொல்வது வஸ்து ஸ்திதிக்கு விருத்தம். வஸ்து ஸ்தி

திக்கு விருத்தமாக உபதேசிப்பது ந்யாயத்திற்கு ஒத்ததாக மாட்டாது. நிற்க, மத விஷயத்தில் ஸாக்ஷாத்தாகவோ பரம்பரையாகவோ நிர்பந்தத்தைச் செய்வது பாபமே ஆகும். ஏனென்றால், ஒவ்வொருவருக்கும் தம் தம் பிறப்பால் ஏற்பட்டுள்ள மதமே முதல் முதலில் சரியான மதமாக மாட்டும். மதம் என்பது பிறவி போல நம்மால் அறியப்பட்க்கூடாத சிற்சில காரண விசேஷங்களாலேயே ஒவ்வொருவனுக்கும் ஸம்பவிக்கின்றது. அப்படி நமக்கு புலப்படாத காரணங்களால் நமக்கு நேரும் ஸம்பவங்களெல்லாம் பகவத் ஸங்கல்பத்தால் ஏற்பட்டவையென்றே, பகவானுடைய ஆளுகையை ஒத்துக்கொண்டிருக்கும் நாம் எல்லாரும் அங்கீகரித்தல்வேண்டும். அப்படி பகவத் ஸங்கல்பத்தால் ஏற்படும் கார்யங்களெல்லாம் நம்முடைய நன்மைக்கு ஸாதகங்களாக இருக்குமே தவிர்த்து அவை ஒருகாலும் பாதகங்களாகமாட்டா. ஆகையால் அந்தக் கார்யங்களை நாம் பலாத்கரித்து மாற்றுவது என்பது அதர்மமே. ஆனால், பகவான் நமக்கு தேஹத்தையும் அதன் அநுபந்திகளையும் கொடுத்திருப்பதுபோல விவேகத்தையும் கொடுத்திருக்கிறான். அந்த விவேகம் சரியான பரிபாகத்தை அடைந்த பிறகு அதைச் சரிவர ப்ரயோகித்து நாம் மத ஆராய்ச்சிகளைச் செய்வதில் ஒருவித தோஷமுமில்லை. அப்படி ஆராய்ச்சி செய்து அதன் பலமாக, தோஷதுஷ்டங்களாகத் தென்படும் மதங்களைக் கைவிடுவதும் குணவத்தாகத் தென்படுமவைகளைக் கைப்பற்றுவதும் நமது விவேகத்திற்கு அநுகுணமான கார்யமே ஆகும். இம்மாதிரி கார்யங்களை நாம் கொஞ்சமேனும் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் இம்மாதிரி ஹேதுவொன்று மின்றிக்கே, ஒருவன் கேவலம் அர்த்த லாபத்தை உத்தேசித்தாவது காம போகங்களை உத்தேசித்தாவது ஆக்ரஹ ப்ரயுக்தமாகவாவது மத மாறுதலைச் செய்யும் பக்ஷத்தில், அவனை அல்ப புத்தி உடையவனென்றே நாம் சொல்வோம். அம்மாதிரியான மத மாறுதலுக்கு ஸாக்ஷாத்தாகவோ பரம்பரையாகவோ பஹிரங்கமாகவோ ரஹஸ்யமாகவோ யாராவது ஸஹாயம் செய்தால் அவர்களை மஹத்தான அக்ரமம் செய்பவர்களென்றே நாம் பலமாகக் கண்டிப்போம்.



புலரித்துயி லுணர்த்தும்படி வத்திற்பரன் பொலியா
வலகற்றெளிர் மனைதோறிடு முபகாரமு மடையா
மலமற்றிடு தீர்த்தம்பலர் மகிழ்விற்கொள வருளா
நலமுற்றௌிர் நவமத்தினின் மாவாலய நடந்தான். 147

நின்றங்குயர் நிமிரும்புட் பகத்தேரினி லிவர்ந்தே
மன்றன்மல ரவள்பூமகண் மருங்கெய்துற முன்னம்
மின்றங்கிடைச் சனகன்மக ளுடன்ராகவன் மேவிப்
பொன்றங்குவி மானத்தொடு போனானெனப் போகி. 148

துவசஞ்செறி தெருவெங்கணுந் தோன்றிப்படர்ந் தந்தித்
திவசம்மவ பிருதம்புரிந் ததன்பின்மறு தினமே
யவசங்களை புட்பயாகத் தருஞ்செய்கையு மாற்றி
நவசந்திர நுதலாரொடு நணுகும்பரை நோக்கா. 149

இனிநீர்நும தகஞ்சென்றுறை கிற்பீரென விசையாப்
பனிநீரரு ளொழுகுங்கடைக் கண்பார்வையிற் பகரா
நனிநீர்முகில் படியேழர ணளியின்வலம் வந்தே
தனிநீருறு மோங்காரவி மானத்துறை தந்தான். 150

கோயிற்றிரு மலைகச்சியை முதலாகிய குலவு
நேயத்துறு தனகோயில்க டொறுமித்திரு நிமலன்
மேயற்கரு விழவித்தகை வருடந்தொறு மேவாப்
பாயிப்பெரும் படியார்நலம் பருகத்திகழ் கிற்கும். 151

பொய்கைக்கிள ரடியாரெழு வாயாயொளிர் புனிதர்
மெய்கற்றனை வோருந்திரு மாமன்பத மிடைவான்
செய்கைக்குறுந் தமசீடர்கள் வழியிற்பயின் மிருகத்
தெய்தப்பிற விலங்கேவையு மீர்க்குஞ்செய லெனவே. 152

அன்னோர்தமை யருளித்தம தழகார்பிர பந்த
மென்னும்பல சினையெங்கணு மெய்தித்தழை தருவின்
மன்னுங்கனி திருநாடென மனமுன்னுபு யோகந்
தன்னின்னெறி தவறாதது தழையப்படி தந்தார். 153

ஆண்டாள் வைபவம் முற்றிற்று.

## *உறையூர் நாய்ச்சியார்

### 15-வது சருக்கம்

தன்கலை யலைக்கட றனக்கரிய போது
மன்பினொரு மாமறைய னண்டைநவில் குற்றம்
பின்பவனி றந்தமக வைத்தருபி றங்க
லென்பெரிய மாமணியெ னக்கரிய பேறும். 1

இன்மணிகொ ழிக்குமலை யேறுதட மோங்கும்
பொன்னியது தென்புறமி ரும்புவிபு ரக்கும்
கொன்னவில யிற்செனியு றைந்துமகிழ் கொள்ளு
நன்னகர மொன்றுறையூ ரென்னவெழின் மன்னும். 2

பத்திமணி மாடமிசை வைத்தமணி பாயு
மத்துநிற வென்முழுது மம்பரந திக்கண்
ணித்தியமி லங்கவதி லந்தரணி நீடு
மொத்தவெயி லென்றுதிகி ரிப்புண்மய லொன்றும். 3

காந்துமணி பூமியிடை யுப்பரொளி காலுஞ்
சேர்ந்திடுமு டுத்திரளின் செய்யநிழ லின்றேன்
மாந்தளிர்ம லர்க்கணைம தன்சிலைவ ளைக்க
வீழ்ந்தொளிர தன்பருவ வெண்டரள மானும். 4

நீடுமணி மாடமிசை யைந்தருவி னீழல்
வாடுமிடை யார்களொடு வானவர்க ளென்றும்
பாடலுட னாடல்வளைந் தங்குறையும் பண்பா
லாடுவர தற்குறையூ ரென்னுமெழி னாமம். 5

வேறு

இன்ன நன்னக ரிரவியின் மரபினி லெழுந்த
தன்ம வன்மனின் குலத்தினிற் றராபதி யொருவ
னொன்ன லார்மணி வாயில்வா யுறங்கவும் பொலிந்து
மன்னு மேழுல கொருங்குறப் புரந்தனன் மாதோ. 6

* இது தொண்டரடிப்பொடி யாழ்வார் வைபவத்தைத் தொடர்ந்து வருதல்வேண்டும். [ஆண்டாள் வைபவத்துக்குப் பிந்தி அச்சிடவேண்டிய ஷை தொண்டரடிப் பொடியாழ்வார் வைபவம், 8-வது சருக்கமாக முந்தி அச்சிட்டிருத்தல் பிழையென்பது முன்னரே அறிவிக்கப்பட்டது நேயர்கள் கவனிக்கத்தக்கது.]



கந்தடு ங்களிற் றவன்புயக் கந்தினிற் சுமையை
யந்த வாயிரம் பணவர விறையுற வமைத்துப்
புந்தி யாலவன் பொருவருங் குணகணம் புகழ்ந்து
மைந்து றுந்தன சிரங்களை மகிழ்வொடு துளக்கும். 7

வீறு மன்னவன் சீர்த்தியி னெங்கணும் வெளுக்க
வேறு நீலவம் பரமத னிடைநனி யிலக
நாறு பைந்துழாய் மணிவணன் பாற்கட னடுவட்
டேறு மின்றுயில் புரிந்தொளிர் திறத்தினைப் பொருவும். 8

பேண லார்தமை வயங்கொளப் பெரும்படை யெடுப்பிற்
சேணி லாங்குர கதங்களிற் செறிந்தெழு துகளின்
மாணி லாங்கருங் கடலெலாம் பங்கமாய் மற்றுங்
காண லாங்கரித் திரண்மதக் கலுழியிற் கழுமும். 9

மற்று மின்னன மாண்பளப் பிலனவன் றவத்திற்
பெற்ற னன்கம லாகரந் திகழ்வுறப் பிறந்த
கற்ற தூப்புலன் பரவதற் கனகமும் பொழிந்த
பொற்ற தாமரைப் பூமக டனையக ளெனவே. 10

அந்த விந்திரை யொருபகற் சிலதிய ரடரக்
கொந்தி ளங்குழைச் சினைபொதுள் குளிர்பொழில் குறுகிச்
செந்த ளிர்க்கரச் கொடுமலர்த் திரள்பல கொய்து
சிந்தை யின்படி யுலவினள் சிறையனந் திகைக்க. 11

ஆங்கு மாமறைக் ககோசர வரங்களின் வேட்டம்
பாங்கி னாடுறப் படர்தலு மவனெழிற் படிவந்
தாங்கு மாமையிற் படிந்தவே றனதிரு விழியும்
வாங்கு மாறுரு தவன்மயல் வளர்தரத் தயங்கி. 12

தைத்த வாள்விழி வலிதினிற் பெயர்த்தவள் வாங்கிப்
பைத்த பாம்பக லல்குலார் பரிந்துசூழ் போதத்
தத்து நீள்கொடி மந்திரம் புகுந்துதன் றாதைக்
கெத்திறத்தினு மெனையவற் களித்தியென் றிசைத்தாள். 13

ஆறு பாதமுண் டமிழ்தரு நறவொழு கலங்க
னாறு திண்புயன் செவியுற நனியிறும் பூதின்
மீறி யின்களிப் பினுமவண் மிழற்றிய திறமே
சாறி திற்புவி யெங்கணு மிலையெனச் சாற்ற. 14

மும்மை சாலுல கெங்கணுஞ் செவிடுற முரச
மிம்மெ னத்தெழித் தெழுப்பல சிறப்பொடு மகளைச்
செம்மை சாலர வணைத்திரு வரங்கனின் செங்கை
யம்ம லர்தழு வுறமறை முறைப்படி யளித்தான். 15

பத்து முப்பதோ டறுபது செறிந்திடும் பார
மொத்த தண்டுலம் பைம்பொனிற் புரிந்தவை யுடனே
சித்தி ரத்தெழில் செறிதரு மரம்பையர் சிவணும்
முத்த வெம்முலை நூற்றுவர் தமையவட் குதவி. 16

மருக னாமணி வண்ண னாமரங் கனுக் களவில்
குரும ணிச்சுடர் மண்டபங் கோபுரங் குலவுங்
கருமு கிற்குலந் துஞ்செயின் முதலன கனகத்
தருமை யிற்புரிந் துதவினன் பொருளெலா மவற்கே. 17

பின்ன ரப்பெரும் பிணைய னாளரங் கனேர் பெருகும்
பொன்ன கன்மரு மந்தனை மகிழ்வுறப் புல்லி
மின்னு மாமணி யிடையொளி மிளிர்வது கடுப்பத்
தன்ன மும்வரை யாதருந் தனிச்சுகந் துய்த்தாள். 18

## திருப்பாணாழ்வார்

### 16-வது சருக்கம்

குயிலென் னவளர்த் தொருகோ குலமார்
மயிலன் னமருங் கருமா னினியார்
பயில்கொள் குரவைக் கிறைபா தமலர்
மயிலீர் தருமன் னுபெருஞ் சுகமே. 1

முன்னம் புகன்மூ தெயில்சூழ் தருமப்
பென்னம் பெருநன் னகர்பீ டுபெறுஞ்
சென்னெல் மலிநீள் குலையிற் செயிலோர்
பன்னன் முனிபா ணரெழுந் தனரே. 2

காரார் மதிகார்த் திகையிற் கமழுஞ்
சீரா ருமுரோ ணியிலெந் திருமா
லோரா ரகன்மார் பகவின் மறுவே
யாரா வமுதா யவரா யதரோ. 3



முந்நூ றொருநாற் பதுமூன் றுமிடைந்
தெண்ணுங் கலிதுன் மதியென் வருடத்
தந்நுண் மதியா ரவதா ரமதாய்ச்
செந்நெல் வயலின் னொளிசெய் துறவே. 4

ஒருதம் பதியார் முனமோங் குயர்நோன்
பரிதிற் செயுமக் குறையுண் டதனான்
வருபா ணர்களின் மரபிற் பிறவி
மருவா வறமன் னியபுண் ணியரே. 5

அம்மா பழனத் தடமாங் கடைபோழ்
திம்மா மகவின் னெழிற்கண் டுமகிழ்ந்
தம்மா வரிதந் ததிதென் றணவாய்த்
தம்மா கரமேந் திநடந் தனரே. 6

சேயின் றியுமுன் றவளச் சிசுவின்
வாயின் முலைவைத் திடவும் மமுதே
பாயும் பொழுதம் முலைபா ணர்பிரா
னாய்விற் பருகா மலமர்ந் தனரே. 7

வேறு

கண்டு பாணர் கருங்குழ லாளறு
மண்டு தீம்பய மாந்தப்பு கட்டலு
முண்ட தின்புற வோர்ந்ததி:விம்மிதங்
கொண்டு நாளுங் கொடுத்தன ளன்னதே. 8

தூய பாலத ருந்தியத் தூயவர்
சேய ஞானஞ்செ ழிக்கவு டன்செழித்
தேயு மாக்கலை யாவையு மேன்றனர்
மாய வன்னருண் மன்னிய பான்மையால். 9

கான லோலன் கருணா கரன்குணா
மான முற்று மமுதிற் றலைப்பெயுந்
தேனை மானத் தெவிட்டறு யாழுட
னூனு முள்ளு முருகிடப் பாடினார். 10

பிரம ஞானியர் பெட்புட னெங்கணும்
வரைவி லாதுவ ழங்குத லுண்பரால்
பரம பாவனர் பாணரின் பாலுமித்
தரும சீலர் பருகித்த யங்கினார். 11

ஆயி னும்முல கத்திய லண்மியே
தீய புன்பறைச் சேரியு றைந்ததால்
தூய தன்மையர் தூர விலகவே
றூய நால்வகை யோரைய கன்றனர். 12

திருவ ரங்கன் றிகழ்மணி மந்திர
மருகி யம்மலர்த் தாடொழு மாறுரு
துருகி நாளு மொழுகுறுங் காவிரிக்
கரைசெ றிந்து கமழும் மணல் கொடு. 13

பூங்க ரங்களி னேழெனும் பொன்னெயி
லோங்க மாடி யொளிரும் பிரணவந்
தாங்கு மின்னுரு வத்துரு தாங்குமா
றுங்க தற்கிடை யாற்றிவி மானமும். 14

அதனி டைத்திரு மாதின ரங்கனைத்
தைதம ணிப்பணை நாகணை தன்னக
மிதமு றத்திகழ் கிற்கவி ழைத்தியா
ழுதுக ரங்கொட கங்களி கூரவே. 15

பாடு முன்பரந் தாமனைப் பண்பினம்
பாடு வானெனப் பாடவு நாளுமவ்
வீட ருள்பெரு மானகம் விம்மியே
நாட ருந்துயி னண்ணிம கிழ்வனால். 16

ஈங்கு நாளு மிவரிழைத் தார்கையி
லாங்க ரங்கன் றிருப்பணி யாற்றுவோ
னேங்கு லோகசா ரங்கமு னியென்பான்
பாங்கின் மஞ்சனத் தீர்த்தம் பரித்திட. 17

துப்பி தழ்முலைத் தொய்யில் மகளிரும்
முப்பு ரிப்புய முந்துகு லத்தரும்
மைப்பு யற்கிணை மன்னுக யங்களு
மொப்பி லின்னுமு யர்பரி வாரமும். 18

சூழ்ந்து போதரச் சொல்லரும் பல்லியந்
தாழ்ந்தி டாதொலி தந்திடத் தண்புன
லாழ்ந்து பாய்தரு மாடக வாற்றினிற்
சூழ்ந்தி ருந்தவச் சுந்தரார்க் கிட்டினான். 19

கிட்டி யப்புறம் போகெனக் கேழ்கரங்
கொட்ட வன்னவர் கொண்டல் வணன்பதத்
திட்ட சிந்தைய ராகியி யன்மறந்
தட்ட வங்கயோ கந்தனி லார்ந்தரோ. 20

குற்றி போலவர் நின்றகு றிப்புணர்
வுற்று வெஞ்சினத் தன்னவ னோர்கலி
னெற்றி மேலவர் வீசிட நெஞ்சுணர்ந்
தெற்ற பாரத மென்றகன் றோடினர். 21

செய்ய புண்ணீ ரொழுகிடச் செந்தவ
ரைய தாளென் றகன்றது மம்முனி
துய்ய நீர்படிந் தங்கந்து லங்குற
மையி லாறிரண் டம்மண்ம ணந்தரோ. 22

பொற்ற சும்பினிற் பூம்புனன் மொண்டுமா
மத்த கத்தினின் மங்கையர் சாமரை
பற்றி வீசப் பரந்தகு டைநிழ
லுற்றி யங்களி கறங்கிட வூர்ந்தனன். 23

முன்ன ரேதிருப் பாணரு மூதெயின்
மன்னு தன்னில யத்தைம ணந்துற
வின்ன ருள்கொ டிருந்தவ ரங்கனுந்
துன்னி னன்சினந் தொல்பணி யானகம். 24

அந்த வேலை யளவில்சி றப்பொடும்
வந்த சாரங்க மாமுனி வான்முடி
மந்தி ரத்துட்பு குந்தும ணிக்கடந்
தன்ற லைப்புறந் தாங்கி யருகியே. 25

பாம்ப ணைப்பரன் பள்ளிய றைக்கணி
யாம்ப சும்பொற்க வாடம டைந்துறத்
தீம்பி தென்கொலெ னத்தன திண்கரத்
தேம்ப விற்பல காலிடித் தெற்றினன். 26

முட்டி யுந்திற வாதுற மொய்ம்பினிற்
கட்ட ழிந்துக ருத்துவெ ருக்கொளா
மட்ட விழ்துள வத்தொடை மாயவா
புட்ட தென்பிழை யென்றுப ரவியே. 27

ஒன்று மோர்கில னென்றங்கு ணங்களும்
பொன்றி கழ்கத வங்களும் பொள்ளென
நன்று நீங்கந னிமகிழ்ந் துட்புகுந்
தென்ற னையக னின்முக நோக்கினன். 28

வேறு

வைகறை யிற்பெரு வண்கயம் விண்ட செங்கம லத்தலர்மேல்
கைகளொ ராயிரங் காணும ருக்கன் செங்கதிர் பாய்வதென
வைகம ழெந்தைய லர்ந்தமு கத்தே யார்ந்திழி செங்குருதி
மைகிளர் மேனியில் வீழ்தர னோக்கி மங்கிய சிந்தையனாய். 29

ஆரண னேபரி பூரண னேயன் றைவரை யாண்டவனே
காரண னேயிந் நீசனி ழைத்த காய்வினை யைக்கருதா
தேரண வாவித் தீயனை யாள்வா யென்றவன் கண்கலுழா
நாரண வென்றும னேக முரைத்தா னடிவ ணங்கினனால். 30

தாளடை கிற்பவர் தம்வய மாகுந் தன்மையெ ழிற்றிருமான்
மூளுசி னந்தணிந் தோரடி யார்மேன் முந்துறு மாவெசமாய்த்
தோளில வன்றனை நீகொடு முன்னந் துன்னுக விங்கெனவும்
நீளவு மம்முனி மிக்கசி நப்பின் மேவினன் காவிரிவாய். 31

மேவிய வர்க்கரு காயிரு கைகண் மீதுகு வித்தெழலு
மாவடி யேனோர் நீசன டாதே நீரரு காயுறலென்
நேவென வோட வந்தண னைய வெந்தமை யாள்கவென
வாவலி னோடிவி ழுந்தவர் தாளின் னங்கை மறித்துடனே. 32

முப்புரி நூல்செறி தோளி லிருத்தி முன்னரும் பின்னருமா
யற்புத வாரண வோதையு நானு தூரிய வாரவமு
முப்புற விம்மவெ ழுந்தகல் வீதி யுள்ளன முற்றநடந்
தொப்பி லரங்கன் சன்னிதி யிற்சென் றெண்பத மிட்டனனே. 33

விட்டதும் வெம்பிய கன்றனை யாவின் வெம்முலை பற்றுவபோன்
மட்டவி ழுந்துள வத்தொரு மாலின் மண்முன ளந்தபதந்
தொட்டொளி சேர்தரு தாமுடி காறுந் தோன்றுமெ ழின்முழுது
மிட்டமு டன்பரு கிக்கணி லந்த வெல்லையில் சீர்பலவும். 34

பாடிய ருஞ்சுவை பாயும் மமல னாதிபிரா னெனமண்
ணாடியு யும்வண மோரெழி னூலை நற்றமி ழாரணமென்
ருடிய கங்களி கூரவு மண்டர் மாடியு ணர்விலிகள்
வீடுற வையம ரங்க னெழிற்பொன் மேனிக லந்தனரே.

எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும் இங்கிலீஷ்
டாக்டர்களும் பிறரும் கொண்டாடும்

# சார்ங்கதர ஸம்ஹிதை

ஆயுர்வேத சாஸ்திரத்தின் ஸகல ஸாராம்சங்களும் அடங்கிய மிகப்
பிராசீன வைத்தியக் கிரந்தம்.

வைத்தியரத்னம்

**பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,**

ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்யர் அவர்களால்
ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.
சீர்திருத்திய மூன்றாம் பதிப்பு

**மூன்று கண்டங்களும் 32 அத்தியாயங்களும் அடங்கியது.**

வைத்திய பரிபாஷை முதலியவைகள்.

1. பூர்வகண்டத்தில்:—(1) வைத்திய பரிபாஷைகள், (2) ஓஷதி முதலியவற்றின் விவரணம், (3) நாடீ பரீக்ஷாதிகள், (4) தீபந-பாசநாதி குண விவரணம், (5) சரீரதத்துவாதிகள், (6) உணவு உட்செல்லும் வகை முதலியது, (7) ரோகவிவரணம் என்னும் ஏழு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

ஔஷத முறைகள்.

2. மத்திம கண்டத்தில் :—(1) ஸ்வரஸ முறைகள், (2) க்வாத-கஷாய முறைகள், (3) பாண்ட கஷாயமுறைகள், (4) ஹிமகஷாய முறைகள், (5) கல்கமுறைகள், (6) சூர்ணமுறைகள், (7) குளிகை-மாத்திரை முறைகள், (8) லேஹ்ய முறைகள், (9) ஸ்நேஹ-தைல-கிருத-முறைகள், (10) ஸந்தாந ஆஸவாரிஷ்ட-முறைகள், (11) தாது-லோஹ-பாஷாணாதி-சுத்தி பஸ்மாதி முறைகள், (12) இரஸங்கள்-இரஸ-கந்தகாதி முறைகள் என்னும் பன்னிரண்டு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

சிகித்ஸா கிரமங்கள்.

3. உத்தரகண்டத்தில் :—(1) ஸ்நேஹபாநவிதி, (2) ஸ்வேதவிதி, (3) வமநவிதி, (4) விரேசநவிதி, (5) வஸ்திவிதி, (6) நிரூஹவஸ்திவிதி, (7) உத்தரவஸ்திவிதி, (8) நஸ்யவிதி, (9) தூமபாநவிதி, (10) கண்டூஷாதி விதி, (11) லேபநாதி விதி, (12) இரக்த மோக்ஷணவிதி, (13) நேத்திர சிகித்ஸை ஆகப் பதின்மூன்று அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

வேறு விவரம்.

எளிய வசனநடை, விஷயங்கள் ஒழுங்காகவும் தலையங்கங்களோடும் அமைக்கப்பட்டிருக்கின்றன. விரிவான உரை. விசேஷ அநுபந்தங்கள். ஸகல விஷயங்களுக்கும் விஸ்தாரமான விஷய அகராதிகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| உயர்ந்த காலிகோ பைண்டு | ரூ. | 5 | 4 | 0 |
| இரண்டாந்தர பைண்டு | ரூ. | 4 | 4 | 0 |

**வைத்திய கலாநிதி ஆபீஸ்,**

11, ஆதியப்ப முதலித் தெரு, வேப்பேரி, மதராஸ்.

Registered No. M. 916.


# ஓர் ஆச்சர்யமான ஸம்வாதம்

கேளுங்கள்: பாருங்கள்: வாருங்கள்: வாங்குங்கள்:

சாஸ்திரி:—விச்வாசமுள்ளோர்க்கன்றோ சாஸ்திரமே ப்ரமாண மென்கிறார் கீதாசார்யன். "**तस्मच्छास्त्रं प्रमाणं ते**" என்று கேட்டதில்லையா?

க்ருஹிணீ:—ஆனால் என்ன?

சாஸ்திரி:—ஆசார்ய வாக்படா் கூறுவதை கேளம்மா. நீங்கள் சும்மா விருப்பது சரியல்ல.

"सूर्यादिग्रहनिग्रहापहरणं दीर्घायुरारोग्यदम्
सौभाग्योदयभाग्यवश्यविभवोत्साहप्रदं धैर्यकृत् ।
दुश्छायाचलधूलिसङ्गतिभवालक्ष्मीहरं सर्वदा
वज्राणां परिधारणं निगदितं भूतादिनिर्नाशकम् ॥



க்ருஹிணீ:—நீர் சொல்வது எனக்குப் புலப்படவில்லையே.

சாஸ்திரி:—கதிரவன் முதலான கிரகங்களின் சாபங்களைத் தடுக்கும், நீண்டாயுளையும் சரீர சுகத்தையுமளிக்கும், ஸௌமங்கல்ய நிலைமையைத் தந்திடும், ஸகல பாக்யங்களையும், வசியத்தையும், விபவங்களையும், உத்ஸாஹத்தையும் விளைவிக்கும், கெட்ட நிழல் பர்வத தூசி இவைகளின் சேர்க்கையினால் உண்டாகும் பிணியை நீக்கும், பூதம் முதலான பேய் பிசாசுகளை நிர்மூலமாக்கும்—



க்ருஹிணீ:—எது அய்யா இவைகளையெல்லாம் செய்யும்? சீக்கிரம் சொல்லித் தொலையுமய்யா! என்னமோ பாட்டுப் பாடுகிறீரே?

சாஸ்திரி:—அவஸரப்படாதே அம்மா, வைரமணிகளை '**परिधारणं**' நிரம்ப தரிப்பதேயாம்.

க்ருஹிணீ:—அட! அட! என்ன ஆச்சர்யம்! திரும்பவும் அப்பாட்டைப் பாடும். வெகு அழகாயிருக்கின்றதே, நிதானமாய்ப் பாடும். அவைகள் எங்கே கிடைக்கும்.

சாஸ்திரி:—(திரும்பவும் பாடுகிறார்)-வெகு அழகாயும் மிக்க ஸரஸமாயும் ஒரே ரேட் (விலை) உள்ளதாயும் வைரங்கள் கிடைக்குமிடம்—

க்ருஹிணீ:—உம்—

சாஸ்திரி:—ஸூராஜ்மல் லல்லுபாய் அண்டு கம்பெனி,
313, எஸ்பளனேட், மதராஸ்.

SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.


Printed by Kabeer Printing Wo ks, Triplicane, and Published by
Vankipuram S. Vasudevacharíar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.

# SRI VEDANTA DIPIKA

Vol. 24] DECEMBER 1935 [Part 6

Editors : V. V. SRINIVASA AIYANGAR, S. VASUDEVACHARIAR


# ஸ்ரீ
# வேதாந்த தீபிகை

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால்
ப்ரசுரிக்கப்படும் மாதத் தமிழ்ப் பத்ரிகை.

யுவ ஸு



கார்த்திகை மீ


பத்ராதிபர்கள் :
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்
ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்



CONDUCTED BY
**Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,**
39, MUTHIYALU CHETTY ST., VEPERY, MADRAS.

ஸ்ரீ

# விஷய ஸூசிகை.

1. ஜீவாத்மாவின் ஸ்வேச்சா ப்ரவ்ருத்தி
[ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்யர் மாம்பலம்] 257
2. ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்
[ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யர், அட்வொகேட், திருச்சி] 268
3. ஸ்ரீ க்ருஷ்ண தாதார்ய மஹா தேசிக சரிதம்
[ஸ்ரீ. உப. வித்வான் ஐயா. க்ருஷ்ண தாதாசார்யர்] 277
4. ஸ்ரீ கீதாசார்யனும் தென்குருகூர் நம்பியும்
[ஸ்ரீ. உப. ஸி. நரஸிம்மாசாரியார், அட்வொகேட், சென்னை] 283
5. மீமாம்ஸா ஸங்க்ரஹம்
[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கெ. ராமாநுஜாசார்யர், கும்பகோணம்] 289
6. கடிதங்கள் 300
7. ஸம்பாதகரின் குறிப்புகள் 306
8. திவ்யஸூரி சரிதம்
[வங்கிபுரம் கோ. ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] 185
9. ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம்
[ஸ்ரீ. உப ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்] 101

---

## விற்பனைக்குக் கிடைக்கும் புஸ்தகங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஸ்ரீ யதுநாதகத்யம் | ... | 0 | 2 | 0 |
| 2. திருப்பாவை (வ்யாக்யைகளுடன்) | ... | 2 | 0 | 0 |
| 3. க்ருஹ்ய ரத்நம் (கண்டபூஷணமும்) | ... | 1 | 0 | 0 |

கிடைக்குமிடங்கள் : —

1. மானேஜர், வேதாந்த தீபிகா ஆபீஸ்,
ராமஸ்வாமி தெரு, புதுமாம்பலம்,
தியாகராயநகர் போஸ்ட், சென்னை.

2. மானேஜர், ஸ்ரீ ஸத்வித்யா புக் டேப்போ,
1, புஜங்கராவ் தெரு,
சைதாப்பேட்டை (மதராஸ்)

ஸ்ரீ

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்கள் : { ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

ஸம்பு.24] யுவ௵—கார்த்திகை௴ [ஸஞ்சிகை 6

## ஜீவாத்மாவின் ஸ்வேச்சா ப்ரவ்ருத்தி.

[ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்]

[இது, திருவல்லிக்கேணி தமிழ் ஸங்கத்தின் ஆதரவில், சென்ற புரட்டாசி மாஸத்தில் திருவல்லிக்கேணியில் நடைபெற்ற ஸ்ரீ வைஷ்ணவ ஸதஸ்ஸிற் செய்யப் பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்]

'ஜீவாத்மா அத்யந்தம் பரதந்த்ரன். பகவானுடைய ஸங்கல்பமின்றி ஜீவாத்மாவால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. '[illegible]' [அவனன்றி ஓரணுவு மசையாது] என்றே நமது சாஸ்த்ரம் சொல்லுகின்றது. பாரதந்த்ர்யமே அவனுடைய ஸ்வரூபமென்று நமது ஆசார்யர்களும் நிர்வஹித்திருக்கிறார்கள். இப்படியெல்லாம் வஸ்து ஸ்திதி இருக்கையில், 'அவனுக்கு ஸ்வாதந்த்ர்யம் என்பது எப்படி ஸம்பவிக்கும்?' என்று ஒரு சங்கை இதைப் பற்றி ஆலோசிப்பவர்களின் மனத்தில் உதிக்கலாம். ஆனால் இம்மாதிரியான சங்கை உண்டாகும் பொழுதே பின் வருமாறு வேறொரு சங்கையும் உண்டாகக்கூடும். அதாவது 'ஜீவாத்மா எல்லா ப்ரவ்ருத்திகளிலும் அவ்விதம் கேவலம்

158258

ஈச்வரனுக்குப் பரதந்த்ரனாகவே இருந்தால், ஜீவாத்மாவினால் செய்யப்படும் கார்யங்களுக்குப் பகவானையன்றோ உத்தரவாதியாக க்ரஹித்தல் வேண்டும்? நல்ல கார்யம் செய்யும் ஜீவன்கள் நல்ல பலங்களையும் கெட்ட கார்யம் செய்யும் ஜீவன்கள் கெட்ட பலங்களையும் பெறுகிறார்களென்று சாஸ்த்ரங்கள் சொல்வது எப்படி உபபந்நமாகும்? நிற்க: நாம் எல்லாரும், நாம் நினைக்கும் பொழுதே கை கால்களை நீட்டவும் முடக்கவும் ஓடவும் பிடிக்கவும் நாமாக ஆலோசனையைச் செய்து ஒரு கார்யத்தில் ப்ரவர்த்திக்கவும் சக்தர்களாயிருக்கிறோமன்றோ? பாரதந்த்ர்ய மிருந்தால் இவை கூடுமோ?' என்பதுதான். ஜீவன்கள் ஸ்வேச்சையாகக் கார்யங்களில் ப்ரவர்த்திக்கச் சக்தர்கள் என்று ஒத்துக்கொண்டாலன்றி இந்தச் சங்கைக்கு ஸமாதாநம் ஏற்படமாட்டாது. இப்படி பரஸ்பர விருத்தம் போலத் தோன்றும் இவைகளுக்குச் சரியான ஸமாதாநம் என்ன?

இதற்குச் சரியான ஸமாதாநத்தைக் கீழ்க்கூறப்படும் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிக திவ்ய ஸூக்தியில் காணலாம்.

"இது பாரதந்த்ர்ய காஷ்டையைப் பராமர்சியாமற் சொன்னபடி…… ……………அசித்துக்கள் சப்தாதிகளை ஈச்வரன் உண்டாக்கச் சுமக்கிறாப் போலே, இவ்வளவு ஸ்வாதந்த்ர்யத்தை எடுத்துச் சுமக்கையும் இவனுக்குப் பகவத் பாரதந்த்ர்ய காஷ்டை இருந்தபடி."

அதாவது: 'ஜீவன் ஸர்வ ப்ரகாரத்திலும் பரதந்த்ரனே; ஆனால், 'இது உனக்கு இருக்கட்டும்' என்று பகவானால் கொடுக்கப்பட்டுள்ள ஸ்வாதந்த்ர்யத்தை அந்த ஜீவன், 'அது எனக்கு வேண்டாம்' என்று மறுக்காமல் அங்கீகரிக்கிறபடியால் அவனுக்கு ஸ்வதந்த்ர்யமும் உண்டு' என்று சொன்னதாயிற்று. அப்படி மறுக்காமல் அங்கீகரிப்பதே அத்யந்த பாரதந்த்ர்யத்தின் லக்ஷணமாகுமன்றோ? ஒன்றும் செய்யாமல் இருப்பது பாரதந்த்ர்யமாகமாட்டாது; சொன்னபடியெல்லாம் நடப்பதே பாரதந்த்ர்யமாகும். இதனை "[illegible] [illegible]; [illegible]" என்னும் ஸ்ரீஸாரப்ரகாசிகா வாக்யத்தால் நன்கு அறியலாம்.

தத்வமென்னவென்றால், 'பகவான் ஜீவனுக்கு ஸத்தையையும் நித்யத்வம் முதலானவைகளையும் ஸங்கல்பித்ததுபோல, ஸ்வேச்சையால் ப்ரவர்த்திக்கும் சக்தியையும் ஸங்கல்பித்திருக்கிறான். அந்தச் சக்தியைக்கொண்டு அந்த ஜீவன் நல்ல கார்யங்களைச் செய்யும் பக்ஷத்தில் அவனை அவன் அநுக்ரஹிக்கிறான்; அவன் கெட்ட கார்யங்களைச் செய்தால் அவனை நிக்ரஹிக்கிறான். ஜீவன் ஸ்வேச்சையாகவே கார்யங்களில் ப்ரவர்த்திக்கிறபடியால் அவனுக்கு ஸ்வாதந்த்ர்யம் உண்டு என்று சொல்லக்கூடும்; அந்த ஸ்வேச்சா ப்ரவ்ருத்திக்கு அபேக்ஷிதமான சக்தி முதலானவைகளை அவன் பகவானிடத்திலிருந்தே பெற்றிருக்கிறபடியால் அவன் பரதந்த்ரன் என்று சொல்வதும் உபபந்நமே.'; "[illegible]" [மாதா பிதாக்களால் உண்டு பண்ணப்பட்டும் வளர்க்கப்பட்டும் சிக்ஷிக்கப்பட்டும் த்ரவ்யத்தால் உபகரிக்கப்பட்டும் இருக்கும் புத்ரன், தன் இச்சைப்படி ஸத்கர்மத்தையோ அஸத் கர்மத்தையோ செய்தால் அந்தக் குணதோஷங்கள் எப்படி அவனையே சார்ந்து நிற்குமோ, அப்படியே இவ்விடத்திலும்.] எதற்காகப் பகவான் ஜீவன்களுக்கு ஸ்வாதந்த்ர்யத்தைக் கொடுத்து இம்மாதிரி ஆட்டுகிறான்? என்றால், அது அவனுடைய லீலாவ்யாபாரமென்றும், அது நம்முடைய நன்மையை உத்தேசித்தே செய்யப்படுகின்றதென்றும், அது அவனுடைய தயா கார்யமென்றும், சாஸ்த்ரங்களில் பஹுப்ரகாரமாக பலவிடங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன.



'இம்மாதிரி ஜீவன் ஈச்வரனிடமிருந்து ஒருவித ஸ்வாதந்த்ர்யத்தைப் பெற்றிருந்தபோதிலும், அவன், ஜந்மாந்தர வாஸனை அந்த வாஸனைக்கு அதீநமான இச்சை இவைகளுக்குப் பரவசனாக இருக்கிறபடியால் அவனை ஸ்வதந்த்ரனென்று எப்படிச் சொல்லக்கூடும்?' என்று மற்றுமொரு ஆக்ஷேபம் ஜநிக்கலாம். நமக்கு ஒரு விஷயத்தில் இச்சை உண்டாவது ஜந்மாந்தர வாஸனையினாலேயே என்பது உண்மையே. ஆனால் அந்த இச்சை ஜீவனுடைய ஸ்வதந்த்ர ப்ரவ்ருத்தி ஸாமர்த்யத்தை நசிப்பிக்கக் கூடியதன்று. பசியுடன் கூடியவனுக்கு அந்நத்தில் உத்கடமான இச்சை இருக்கையிலும், அவனுக்குக் கிடைத்திருக்கும் அந்நம் விஷம் கலந்திருக்கின்றது என்னும் ஜ்ஞாநம் அவனுக்கு ஜநித்தால், அவன் அந்த அந்நத்தை எப்படி உட்கொள்ளாமல் பரித்யஜிக்க சக்தனோ, அப்படியே ஒருவனுக்கு விஷயாநுபவத்தில் உத்கடமான இச்சை ஜந்மாந்த்ர வாஸநாதீநமாக ஸம்பவித்தாலும், அந்த விஷயாநுபவம் தீங்கைச் செய்யக்கூடியது என்னும் ஜ்ஞாநம் அவனுக்கு ஜநிக்கும் பக்ஷத்தில் அவன் அந்த விஷயாநுபவத்திலிருந்து தன்னைத் திருப்பிக்கொள்வதற்கும் சக்தியுள்ளவனே. விஷயாநுபவத்திலிருக்கும் இச்சை, அவனுடைய ஸ்வதந்த்ர ப்ரவ்ருத்தி ஸாமர்த்யத்தை நசிப்பிக்க மாட்டாது. "[illegible]". இவனுக்கு அந்த விஷயத்தை த்யஜிக்க சக்தியும் இருக்கின்றது; அதை அப்படி த்யஜிக்கக்கூடாதென்று தடுப்பாருமில்லை: சக்தியுமிருந்து தடுப்பாரும் இராமல் இருப்பது தானே ஸ்வாதந்த்ர்யம் என்பது.

இம்மாதிரியான ஸ்வாதந்த்ர்யம் ஜீவனுக்கு உண்டு என்பதற்குச் சாஸ்த்ரப்ரமாணம் என்னவென்று கேட்டால், சாஸ்த்ரங்களெல்லாம் ஜீவனைக் 'கர்த்தா' வென்று சொல்வதே போதுமான ப்ரமாணம் என்பது ப்ரத்யுத்தரம். எவன் ஸ்வதந்த்ரனாகப்ரவ்ருத்தியைச் செய்கிறானோ அவனுக்கே கர்த்ருத்வம் சொல்லக்கூடுமென்று "ஸ்வதந்த்ர꞉ கர்த்தா" என்பது முதலான வ்யாகரண வாக்யங்கள் சொல்லுகிறபடியால், கர்த்ருத்வம் எவ்வெவ்விடங்களில் பேசப்படுகின்றதோ அவ்வவ்விடங்களில் ஸ்வாதந்த்ர்யமும் இருக்கின்றது என்பது ஸித்தம். ஜீவனைக் கர்த்தாவென்று "கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்த்வாத்" [ஜீவன் கர்த்தா; ஏனென்றால்: சாஸ்த்ரங்கள் 'இதைச் செய், இதைச் செய்யாதே' என்று சொல்வதெல்லாம் சேதநன் விஷயத்தில் மாத்திரமே உபபந்நமாகுமன்றோ?] என்னும் ப்ரஹ்ம ஸூத்ரம் சொல்லுகின்றது. "க்ருதப்ரயத்நாபேக்ஷஸ்து விஹிதப்ரதிஷித்தாவையர்த்யாதிப்ய꞉" [ஜீவன் செய்யும் ப்ரயத்நத்தை எதிர்பார்த்தே பகவான் அவனை மேலே ப்ரவர்த்திப்பிக்கிறான். அப்படி இராவிட்டால் சாஸ்த்ரங்களுடைய விதி நிஷேதங்களெல்லாம் வீணாகி விடுமன்றோ?] என்னும் மற்றொரு ஸூத்ரமும் 'ஜீவன் ப்ரயத்நாச்ரயன்' என்பதை விளக்குகின்றது. அப்படி ப்ரயத்நத்திற்கு ஆச்ரயமாக இருப்பதே கர்த்ருத்வம். உபநிஷத்துக்களும்,

> "ஏஷ ஹி த்ரஷ்டா ஶ்ரோதா ......", "போத்தா கர்த்தா விஜ்ஞாநாத்மா புருஷ꞉" "விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே கர்மாணி தநுதேऽபி ச" [ஜீவனே பார்க்கிறவன்; கேட்கிறவனும் அவனே. அவனே அறிகிறவன்; கர்த்தாவும் அவனே. அவன் யஜ்ஞத்தையும் மற்றைக் கர்மங்களையும் செய்கிறான்.]

என்று அவனுக்குக் கர்த்ருத்வமுண்டு என்பதைச் சொல்லுகின்றன. பகவத்கீதையும்,

> "அதிஷ்டாநம் ததா கர்த்தா கரணம் ச ப்ருதக்விதம் ।
> விவிதாஶ்ச ப்ருதக்சேஷ்டா தைவம் சைவாத்ர பஞ்சமம் ॥"

என்று ஜீவனையே 'கர்த்தா' என்னும் சப்தத்தால் குறிக்கின்றது. இவ்விதம் நமது சாஸ்த்ரங்களெல்லாம் ஜீவனுக்குக் கர்த்ருத்வத்தைப் போதிப்பிக்கிறபடியால், கீழ் விவரித்திருக்கும் ப்ரகாரம் அவை அவனுக்கு ஸ்வாதந்த்ர்யமுண்டு என்பதை ஒத்துக்கொள்ளுகின்றன என்பதில் ஆக்ஷேபமில்லை. அந்த ஸ்வாதந்த்ர்யம் பகவத் ஸங்கல்பாதீநமாக இருக்கின்றது என்பதால் எப்பொழுதாவது அந்த ஸ்வாதந்த்ர்யத்திற்குப் பங்கம் நேரிடுமோவென்று சங்கிக்கவும் இடமில்லை. ஏனென்றால் 'அது பகவத் ஸங்கல்பாதீநம்' என்று



சொல்வதிலிருந்தே, 'இந்த ஸ்வாதந்த்ர்யம் ஜீவனுக்கு வேண்டாமென்று பகவானுக்கு ஒரு இச்சை தோன்றினால் அப்பொழுது அதை நிவர்த்திப்பிப்பதற்குப் பகவானுக்குச் சக்தி உண்டு' என்பதும் பெறப்படுகின்றதன்றோ? அப்படிப்பட்ட இச்சை பகவானுக்கு ஒருகாலும் ஜநிக்கமாட்டாதாகையால், அந்த ஸ்வாதந்த்ர்யம் நித்யமாகவே நிற்கும். இந்த ந்யாயத்தை ஸ்ரீதேசிகன் தாத்பர்ய சந்த்ரிகையில் 'ஜீவனுடைய ஸ்வரூப ஸ்திதிகள் பகவத் ஸங்கல்பாநுவிதாயிகள்' என்பதை விவரிக்குமிடத்தில் பின்வருமாறு விளக்கியிருக்கிறார்.

> "ஸ்வரூபஸ்தித்யோ꞉ பரமாத்மஸங்கல்பாநுவிதாயித்வே꞉ தத்ஸ்வாதந்த்ர்யம் । தத்ஸ்வாதந்த்ர்யம் ச நிவர்த்தயிதும் ஶக்தோऽபி ஸ்வாதந்த்ர்யம் । தேஷு கேஷுசித்காலேஷ்வபி ஸம்ஹாரம் ஸ்வேச்சாதீநத்வம் । "

இந்த ப்ரமாணங்களிலிருந்தே ஜீவனுக்கு ஒருவித ஸ்வாதந்த்ர்யம் உண்டு என்பது ஸித்திக்கின்றது. ஸ்ரீ கீதா பாஷ்யத்திலும் பின்வருமாறு 'ஜீவன் ஸ்வதந்த்ரனாகவே ப்ரவர்த்திக்க ஶக்தன்' என்பது அநுக்ரஹிக்கப்பட்டிருக்கின்றது.

> "பரமாத்மநா தத்தைஸ்ததாதாரைஶ்ச கரணகளேபராதிபி꞉ ஸ்வயம் ச ஜீவாத்மா ததாதாரஸ்ததாஹிதஶக்திஸ்ஸந் கர்மநிஷ்பத்தயே ஸ்வேச்சயா கரணாத்யதிஷ்டாநாகாரம் ப்ரயத்நமாரபதே । "

[ஜீவாத்மா, பரமாத்மாவினால் கொடுக்கப்பட்டுள்ள கரண களேபராதிகளைக்கொண்டு, அவனால் கொடுக்கப்பட்ட சக்தியை உடையவனாய் ஸ்வேச்சையாலேயே ப்ரயத்நத்தைச் செய்கிறான்]. இதில் ஜீவனுடைய கர்த்ருத்வம் பராபேக்ஷமென்பது பூர்வ பாகத்தாலும், ப்ரவ்ருத்தி விசேஷத்தில் அவனுக்கு ஸ்வாதந்த்ர்யம் உண்டு என்பது உத்தர பாகத்தாலும் வெளியிடப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீ பாஷ்யத்திலிருந்தும், ஜீவன் ஸ்வயமே ஸ்வேச்சாநுகுணமாகவே கர்மங்களில் ப்ரவர்த்திக்கிறான் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

"ஸ ஹி பகவாந் புருஷோத்தம꞉ ஸ்வஶாஸநத்வாத் ஜீவாநாம் ப்ர-வ்ருத்த꞉ 'ஸதாநி கர்மாணி ஸசீவநாநி, ஸதாந்யஸசீவநாநி' இதி கர்மயோக்யம் ஸம்விபாய, தத்பாவாநுகுணதேஹேந்த்ரியாதிகம் தத்ப்ரவ்ருத்திஶக்திம் ச ஸம்வேஷ்டாம் ஶாஸநேந்த்ர ப்ரதிஶ்ய, ஸ்வஶாஸநாவபோதி ஶாஸ்த்ரம் ச ப்ரதஶ்ய, அந்தராத்மதயா அநுப்ரவிஶ்ய நிய ச்ச ஸ்திதி꞉ க்ஷேத்ரஜ்ஞஸ்து தத்ஸ்வாஹிதஶக்திஸ்ஸந் ப்ருஷ்டகரணகளேபரா-திகாஸ்ததாயாரஸ்ஸ்வயமேவ ஸ்வபுத்த்யா கர்மண்யநு ப்ரவர்த்தநே

ப்ரவிஶ்ய கர்மணீ உபாதத்தே । ஶாஸ்த்ராணி ச ஸமர்ப்ப ஸாதுகர்மாணி அநுக்ருஹ்ய
யதாஶ்ரயம் ஸ்வேச்சயைவ ப்ரவர்த்தயதி ; ஶாஸநாதிவர்த்திநம் ச நிக்ருஹ்ய
பலே ப்ரயோஜயதி । அதோ ந ஸ்வாதந்த்ர்யவிரோத: ॥ ”

[பகவான் லீலையில் ப்ரவர்த்தித்தவனாய், ஸத்கர்மங்கள் எவை அஸத்கர்மங்கள் எவை என்பதைப் பிரித்து, அந்தக் கர்மங்களில் ப்ரவர்த்திப்பதற்குத் தேவையான தேஹேந்த்ரியங்கள் அவைகளை அடக்கும் சக்தி இவையெல்லாவற்றையும் எல்லாருக்கும் ஸாமாந்யமாகக் கொடுத்து, தனது கட்டளைகளைத் தெரிவிக்கும சாஸ்த்ரத்தையும் காட்டி, எல்லாருடைய உள்ளிலும் அந்தராத்மாவாக எல்லாரையும் நியமநம் செய்துகொண்டு நிற்கிறான். க்ஷேத்ரஜ்ஞர்களோவென்றால், பகவானால் கொடுக்கப்பட்ட சக்தியை உடையவர்களாய் அந்தத் தேஹேந்த்ரியாதிகளைக்கொண்டு ஸ்வயமாகவே ஸ்வேச்சை ப்ரகாரம் கர்மங்களைச் செய்ய ப்ரவர்த்திக்கிறார்கள். பகவானும் தனது கட்டளைக்கு உட்பட்டு நடப்பவர்களை அநுக்ரஹித்தும், கட்டளையைக் கடந்து நடப்பவர்களை நிக்ரஹித்தும், அவரவர்களுடைய கர்மங்களுக்குத் தக்கபடி பலத்தைக் கொடுக்கின்றான். ஆகையால் ஸ்வாதந்த்ர்யத்திற்கு எவ்வித குறைவுமில்லை.”]

‘இவ்விதம் ஜீவாத்மா ஸ்வேச்சையாகவே கார்யங்களில் ப்ரவர்த்திக்கிறான் என்பது உண்மையானால், ‘பரமாத்மாவினால் ப்ரேரிதர்களாகவே ஜீவாத்மாக்களெல்லாரும் கார்யங்களைச் செய்கிறார்கள்’ என்று சொல்லும் வாக்யங்களின் கருத்து என்ன ?’ என்று கேட்கலாம்.

“ஈஶ்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶேऽர்ஜுந திஷ்டதி ।
ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா ॥ ”

[பகவான் எல்லாருடைய ஹ்ருதயத்திலும் இருந்துகொண்டு, தேஹம் முதலிய யந்த்ரத்தில் ஏற்றப்பட்டுள்ள ஸகல பூதங்களையும் தனது விசித்ர சக்தியால் ஆட்டிக்கொண்டிருக்கிறான்] என்றும்,

“அஜ்ஞோ ஜந்துரநீஶோऽயமாத்மந: ஸுகது:கயோ: ।
ஈஶ்வரப்ரேரிதோ கச்சேத் ஸ்வர்க்கம் வா ஶ்வப்ரமேவ வா ॥ ”

[இந்த ஜந்து ஒன்றும் அறியாதது ; தனக்கு எது ஸுகமோ அதைச் செய்துகொள்வதிலும் எது துக்கமோ அதை நிவர்த்தித்துக்கொள்வதிலும் அத்யந்தம் அசக்தம்; ஈச்வரனால் ஏவப்பட்டதாய்க்கொண்டே ஸ்வர்க்கத்தையோ அல்லது நரகத்தையோ போய்ச் சேருகின்றது.] என்றும்,

“ஸ்வைஹ்யம் அஹ்ரந்தம் அஹ்ரி: கர்மஸூத்ரோபநத்தை: ।
ஊர்த்வம் விஹரஸி க்ரீடாகந்துகைரிவ ஜந்துபி: ॥ ”



[ஹே பகவந்! நீ இந்த ஜந்துக்களை, கயிற்றில் கோக்கப்பட்டுள்ள விளையாட்டுப் பந்துக்களைப்போல, ஜந்மாந்தர கர்மங்களில் அகப்படுத்தி கீழும் மேலுமாக ஆட்டுகிறாய்] என்றும், இம்மாதிரி அநேக வாக்யங்கள் ‘ஜீவாத்மாக்களெல்லாம் கேவலம் ஈச்வரனால் ஏவப்பட்டவர்களாகவே ப்ரவ்ருத்திகளைச் செய்கிறார்கள்’ என்று சொல்கின்றன என்பது உண்மையே. ஆனால் ஈச்வரனுடைய ஏவுதலானது இந்த வாக்யங்களில் தோன்றுவதுபோல, அவ்யவஸ்திதமன்று என்பது சாஸ்த்ரங்களின் உட்கருத்தைப் பார்க்குமவர்களுக்கு விளங்கும்.

அந்த வ்யவஸ்தை என்னவென்றால்—ஈச்வரன் சில கர்மங்களைத்தானே நேரில் செய்கிறான் ; மற்றும் சிலகார்யங்களை க்ஷேத்ரஜ்ஞர்களாகிற சேதநர்களைக்கொண்டு செய்விக்கிறான். ஜகத்தின் ஸ்ருஷ்டி முதலிய வ்யாபாரங்கள் அவனால் நேரில் செய்யப்படும் கார்யங்கள் ; அவைகளைத் தவிர்த்த மற்றை வ்யாபாரங்களெல்லாம் அவன் க்ஷேத்ரஜ்ஞராகிற சேதநர்களைக்கொண்டு செய்யும் கார்யங்கள். ஆகையினால்தான் அவனைக் ‘கர்த்தா’ [செய்கிறவன்] என்றும், ‘காரயிதா’ [செய்விக்கிறவன்] என்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. ஜீவாத்மாக்களைக்கொண்டு கார்யங்களை அவன் செய்வது, அசேதநமான ஒரு கருவியைக்கொண்டு கார்யங்களைச் செய்வதுபோல அன்று. ஜீவாத்மாக்கள் சேதந வஸ்துக்களானபடியாலும் அவர்களுக்கு ஒருவித ஸ்வாதந்த்ர்யம் கொடுக்கப்பட்டிருக்கிறபடியாலும், அவர்கள் அப்ரேரிதர்களாகவே கர்மங்களில் ப்ரவர்த்தித்தல்வேண்டும். ஆனால் ஈச்வரன் அவர்களைக்கொண்டு கார்யங்களைச் செய்துகொள்ளுகிறபடியால், அவர்கள் அவனுக்கு உபகரணமாகச் செய்துகொள்ளப் படுதலும் வேண்டும். இவை இரண்டுக்கும் விஷய விபாகத்தை நமது ஆசார்யர்கள் பின்வருமாறு நிஷ்கர்ஷித்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஜீவனும் ஒரு கார்யத்தில் முதல் முதலில் ப்ரவர்த்திக்கும் பொழுது ஈச்வரன் உதாஸீநனாகக் கேவலம் ஸாக்ஷியாக மாத்ரம் இருக்கிறான்; அப்பொழுது அந்த ஜீவன் அப்ரேரிதனாகவே ப்ரவர்த்திக்கிறான். உத்தர ப்ரவ்ருத்திகளில் ஈச்வரன் தனது அநுமதியைக் கொடுத்தும், ஜீவனால் செய்யப்படும் ப்ரவ்ருத்திகளின் நிஷ்பத்திக்குத் தேவையான விஷயங்களை உபஸ்தாபநம் செய்தும் இம்மாதிரி அவனை ப்ரேரிப்பிக்கிறான் ; அப்பொழுது ஜீவன் ப்ரேரிதனாக ப்ரவர்த்திக்கிறான், இதுதான் விஷய விபாகம். அதாவது: ஒவ்வொரு கார்யத்திலும் ஜீவன்களுடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈச்வரன் உபேக்ஷகனென்றும், அப்பொழுது ஜீவன் ஒருவராலும் ஏவப்படாதவனாகவே கார்யங்களில் ப்ரவர்த்திக்கிறானென்றும், உத்தரோத்தர ப்ரவ்ருத்திகளில் பகவான் அநுமந்தா-அதாவது—ப்ரவர்த்தகனென்றும், அப்பொழுது ஜீவன் பகவானால் ப்ரவர்த்திக்கப்பட்டவனாகவே கார்யங்களில் ப்ரவர்த்திக்கிறானென்றும் சொன்ன

தாயிற்று. இப்படி ஈச்வரனால் ப்ரவர்த்திக்கப்பட்டு, ஜீவன்கள் உத்தர ப்ரவ்ருத்திகளைச் செய்யும் காலத்திலும்—அதாவது: ஈச்வரன் ப்ரவர்த்தகனாக இருக்கையிலும், அந்த ஜீவன்கள், தமது சக்தியைக்கொண்டு 'இது வேண்டும், இது வேண்டாம்' என்று த்யாகம் உபாதாநம் இவைகளைச் செய்யச் சக்தர்களே; அந்தத் திறமை அவர்களைவிட்டு விலகாமலே நின்று கொண்டிருக்கின்றது. ஆனால் விஷயங்கள் உபஸ்தாபிதங்களாக இருக்கிறபடியால், அந்தத் திறமையைச் செலுத்துவது, ப்ரதம ப்ரவ்ருத்தி காலத்திற் காட்டிலும் உத்தர ப்ரவ்ருத்தி காலங்களில் கொஞ்சம் துஷ்கரமே.

இதுவிஷயமாகச் சில ஸம்சயங்கள் சிலருக்கு உண்டாகக்கூடும். 'ஜீவன் முதல் முதலில் ஒரு கார்யத்தில் ப்ரவர்த்திக்கும்பொழுது பகவான் கேவலம் ஸாக்ஷியாக—அதாவது—உதாஸீநனாக—இருக்கிறான் என்று சொல்வது அவனுடைய தயாளுத்வத்திற்குப் பொருந்துமோ? அஜ்ஞனாக இருக்கும் ஜீவன், தனக்கு அஹிதமாயுள்ள கார்யத்தில் ப்ரவர்த்தித்தால், அதைத் தடுப்பதன்றோ சக்தனாயும் தயாளுவாயும் இருக்கும் பகவானுக்கு லக்ஷணமாகும்? அப்படித் தடுக்காமல் இருப்பது தோஷமாக மாட்டாதோ?' என்பது முதல் ஸம்சயம். தடுக்காமல் இருந்தால் அது தோஷமாகும் என்பது உண்மையே. பகவான் அவ்விதம் சுத்தமாகத் தடுக்காமல் இருக்கவில்லை. சாஸ்த்ர ப்ரவர்த்தந வழியாக அவன் ஜீவன்களை அஹித ப்ரவ்ருத்தியிலிருந்து பூர்வமே ஸாமாந்யமாகத் தடுத்திருக்கிறான். ப்ரவ்ருத்தி காலத்தில் விசேஷித்துத் தடுக்காமல் இருப்பதற்குக் காரணம், 'ஜீவன்கள் ஸ்வதந்த்ரமாக அப்பொழுது ப்ரவ்ருத்தியைச் செய்யக்கடவர்கள்' என்று அவன் ஸங்கல்பித்திருப்பதே.

"ப்ரத²மப்ரவ்ருத்தௌ ஹி ப⁴க³வதோ ந நிவாரணம் । ஶாஸ்த்ரவஶ்யத்வஸித்³த்⁴யர்த²ம் ஸாமாந்யேநாஹிதப்ரவ்ருத்திநிவாரணஸ்ய க்ருதத்வாச்ச । ப்ரவ்ருத்திகாலே து விஶேஷதோ நிவாரகத்வாபா⁴வ: ஸ்வாதந்த்ர்யாச்ச" [ஶ்ரு. ப்ர.]

இரண்டாவது ஸம்சயமென்னவென்றால், 'உத்தர ப்ரவ்ருத்தி காலங்களில் ஈச்வரன் ஜீவன்களை ப்ரவர்த்திப்பிக்கிறான் என்று சொல்வதும் அவனுடைய தயாளுத்வத்திற்கு விரோதிக்கின்றதே. ஒரு ஜீவனை அஹிதரூபமான கர்மத்தில் ப்ரவர்த்திப்பிப்பது தயா கார்யமாகுமோ?' என்பது. ஈச்வரன் ஜீவனைப் புதிதாக ஒரு கார்யத்திலும் ப்ரவர்த்திப்பிக்கவில்லை; ஏற்கெனவே ஸ்வேச்சையாக ப்ரவர்த்தித்திருக்கும் ஜீவனுக்கு, அந்த ப்ரவ்ருத்தியின் நிஷ்பத்திக்குத் தேவையான விஷயங்களின் ஸந்நிதாபநத்தை மாத்ரம் செய்கிறான். இதுதான் அவன் அநுமந்தாவாக இருந்து ப்ரவர்த்



திப்பிக்கிறான் என்பதன் பொருள். இப்படிச் செய்வதும் ஜீவனால் ஸ்வேச்சையாகச் செய்யப்பட்ட ப்ரதம ப்ரவ்ருத்தியின் பலத்தைக் கொடுக்கிறபடி. ஆகையால் அதைத் தோஷமென்று எப்படிச் சொல்லக்கூடும்? தயை எப்பொழுதும் குணமாகமாட்டாது; நிக்ரஹம் எப்பொழுதும் தோஷமாக மாட்டாது. அஸ்தாந தயை தோஷம்; ஸ்தாந நிக்ரஹம் குணமே. இவ்விடத்தில் ப்ரதம ப்ரவ்ருத்தியின் பலமாகவே உத்தர ப்ரவ்ருத்திகளில் ஈச்வரன் ஸம்பந்தப்பட்டு ஜீவனை ப்ரவர்த்திப்பிக்கின்றான். அது ஸ்தாந நிக்ரஹம்; ஆகையால் தோஷமன்று. 'தயை' என்பது, தனக்கு எவ்வித ப்ரயோஜநத்தையும் உத்தேசியாமலே பிறருடைய துக்கத்தை ஸஹியாமல் இருக்கும் தன்மை. அந்தத் தயை தனது கட்டளையைக் கடந்து நடப்பவனிடமும் செய்யப்பட்டால், அது குணமாகுமோ? அவனை நிக்ரஹிப்பதன்றோ குணம்?

"வைஷம்யே ஸதி காருண்யாவிஷய: கிந்நாம க்ருத்யமாக்ருதீ
கிம்வோதா³ரதயா த³த்த வரதோ வாஞ்சி²தம் ஹி து³ர்க³திம் ॥"

[ஈச்வரன் பக்ஷபாதமற்றவன்; அவனுக்கு ஆகவேண்டிய கார்யமொன்றுமில்லை. ஆகையால், அவன் கர்மாநுகுணமாகவே பலத்தைக் கொடுக்கிறான். அந்தக் கர்மங்கள் ஒருவனுக்கு இருப்பதுபோல மற்றொருவனுக்கு இராமற்போனால், ஈச்வரன் செய்யக்கூடியது என்ன? ஈச்வரன் உதாரனே; வேண்டிற்றெல்லாம் கொடுப்பவனே. ஆனால் ஒருவன் தனக்கு துர்க்கதியைக் கேட்டால் அதை அவன் கொடுப்பனோ?]

மூன்றாவது ஸம்சயமென்னவென்றால், 'உத்தர ப்ரவ்ருத்திகளில் ஈச்வரன் விஷயோபஸ்தாபநங்களை மாத்ரம் செய்து ப்ரவர்த்திப்பிக்கிறான் என்று சொல்வது சில ச்ருதி வாக்யங்களுக்கும் ஸ்ம்ருதி வாக்யங்களுக்கும் விரோதிக்கின்றதே!

"ஏஷ ஹ்யேவ ஸாது⁴ கர்ம காரயதி தம், யமேப்⁴யோ லோகேப்⁴ய உந்நிநீஷதி; ஏஷ ஏவாஸாது⁴ கர்ம காரயதி தம், யமதோ⁴ நிநீஷதி"

[ஈச்வரன், ஒருவனை நல்ல கார்யத்தைச் செய்வித்து, அது வழியாக அவனை உயரத் தூக்குகிறான்; மற்றொருவனைக் கெட்ட கார்யத்தைச் செய்வித்து அவனைக் கீழே தள்ளுகிறான்] என்று ச்ருதியும்,

"தாநஹம் த்³விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராத⁴மாந் ।
க்ஷிபாம்யஜஸ்ரமஶுபா⁴நாஸுரீஷ்வேவ யோநிஷு ॥"

[அந்தப் பாபாசாரர்களுக்கு நான் மேன்மேல் ஆஸுரமான ஹீந ஜந்மங்களைக் கொடுத்து அவர்களைக் கீழேயே தள்ளுகிறேன்] என்று ஸ்ம்ருதியும்

சொல்லுகின்றன. இதைப் பார்க்கும்பொழுது, ஈச்வரன், கேவலம் ஏற்கெனவே ப்ரவர்த்தித்தவர்களை மேன்மேல் ப்ரவர்த்திப்பிப்பது மாத்ரமின்றிக்கே, ஏற்கெனவே ப்ரவர்த்தியாமல் இருக்குமவர்களையும் தன்னுடைய இஷ்ட ப்ரகாரம் புதிதான கார்யங்களில் ப்ரவர்த்திப்பித்து அந்தக் கார்யங்களுக்குத் தக்கபடி பலங்களையும் கொடுக்கிறான் என்றன்றோ ஏற்படுகின்றது? இது எப்படி அவனுடைய பக்ஷபாத மின்மையையும் தயாளுத்வத்தையும் போதிப்பிக்கும்?' என்பதுதான். ஈச்வரன் சிலரை இம்மாதிரி புதிதான கார்யங்களில் ப்ரவர்த்திப்பிப்பது உண்டு. அது எவ்விடத்தில் என்றால், அதிமாத்ரம் தன்னுடைய ஆநுகூல்யத்திலே அல்லது அதிமாத்ரம் தன்னுடைய ப்ராதிகூல்யத்திலே ஏற்கெனவே ப்ரவர்த்தித்திருப்பவர்கள் விஷயத்தில் மாத்ரமே என்பது ப்ரத்யுத்தரம். நாம் எவ்வளவு அநுகூல ப்ரவ்ருத்தி செய்தபோதிலும், அது நாம் அபேக்ஷிக்கும் பரம புருஷார்த்தத்திற்கு மிகவும் அநநுகுணமே. அநுகுணமாக அநுகூல ப்ரவ்ருத்தி செய்பவர்களே பரம புருஷார்த்தத்திற்கு அர்ஹர்கள் என்று ஒரு நியமம் இருக்கும் பக்ஷத்தில், இந்த ப்ரபஞ்சத்தில் ஒருவருமே அந்தப் பலத்திற்கு அர்ஹராக மாட்டார். ஆகையால், ஈச்வரன், உண்மையான அநுகூல ப்ரவ்ருத்தியைச் சக்திக்கு வஞ்சனையின்றிச் செய்வதிலேயே வ்யவஸ்திதர்களாய் எவர் ப்ரவர்த்திக்கிறார்களோ அவர்கள் விஷயத்தில், தானே அவர்களைப் புதிதான அநுகூல ப்ரவ்ருத்திகளில் ப்ரவர்த்திப்பித்து அது வழியாகத் தன்னிடம் அவர்களைச் சேர்த்துக்கொள்ளுகிறான். இதைத்தான் கீழ்க்கூறப்பட்டுள்ள வாக்யங்கள் சொல்லுகின்றன.

“𑌦𑌦𑌾𑌮𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌤𑌂 𑌯𑍇𑌨 𑌮𑌾𑌮𑍁𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇”

[நானே ப்ரீதிபூர்வகமாக அவர்களுக்கு உயர்ந்த புத்தியோகத்தைக் கொடுக்கிறேன். அவர்கள் அதைக் கொண்டு என்னை அடைகிறார்கள்] என்பதற்கும் இதுவே தாத்பர்யம்.

அதிமாத்ரம் அநுகூல ப்ரவ்ருத்தி செய்பவர்களிடம் இம்மாதிரி பகவான் விசேஷித்து அநுக்ரஹிப்பது ச்லாக்யமே யாயினும், அதிமாத்ரம் ப்ரதிகூல ப்ரவ்ருத்தி செய்பவர்களைத் தானே இன்னும் அதிக ப்ராதிகூல்யத்தில் மூட்டி இன்னும் கீழே விழும்படி செய்விக்கிறான் என்பது ச்லாகிக்கத் தகுந்ததாகுமோ? என்று கேட்கலாம். ‘இப்படிச் செய்வது பாபிஷ்டர்களை நிக்ரஹிக்கும் தர்மமே ஆகும். இந்த நிக்ரஹமும் சீக்ரத்தில் அவர்கள் உஜ்ஜீவிப்பதற்கு ஸாதகமாவதால் இது அவனுடைய தயா கார்யமே’ என்பது தான் அதற்கு ஸமாதாநம். மேன்மேல் துஷ்கர்மங்களைச் செய்து இன்னும் அதிகமாகக் கர்ம பலங்களைச் சுமத்திக் கொள்ளும் ஜந்மம்



தங்கி நிற்பதைக் காட்டிலும், கர்ம பலம் சுமராத நிஹீந ஜந்மங்கள் வருவது முடிவில் நல்லதே. ஸத்கர்மாநுஷ்டாநத்திற்கு யோக்யமான ஜந்மங்களை மறுபடியும் சீக்ரத்திலேயே பெறுவதற்கு இது நல்ல மார்க்கமாகுமாகையால் இதைத் தயாகார்யம் என்று சொல்லுவதற்குத் தட்டில்லை.

இவ்விதம் பகவான், தானே புதிதான கர்மங்களில் ஜீவன்களை ப்ரவர்த்திப்பிக்கும்பொழுது அவனை ‘ப்ரயோஜயிதா’ என்று பெரியோர்கள் சொல்வார்கள். இந்த ப்ரயோஜயித்ருத்வத்தைப் பற்றி ஸ்ரீகீதா பாஷ்யத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் பின்வருமாறு அநுக்ரஹித்திருக்கிறார்.

“𑌏𑌤𑌤𑍍𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌮𑍍 । 𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑍍𑌯𑍇 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇, 𑌤𑌮𑌨𑍁𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵𑌾𑌤𑌿-𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑍇𑌷𑍁 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌰𑍁𑌚𑌿𑌂 𑌜𑌨𑌯𑌤𑌿 । 𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌾𑌤𑌿𑌕𑍂𑌲𑍍𑌯𑍇 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃, 𑌤𑌂 𑌨𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑍇𑌷𑍁 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌰𑍁𑌚𑌿𑌂 𑌜𑌨𑌯𑌤𑌿 ।”

இதிலிருந்து ஏற்பட்டது என்னவென்றால், பகவான் க்ஷேத்ரஜ்ஞர்களைக்கொண்டு கார்யங்களைச் செய்யும்பொழுதெல்லாம், அவர்களுடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் உபேக்ஷகனாகவும் [ஸாக்ஷி], உத்தர ப்ரவ்ருத்தியில் அவர்கள் பகவானுடைய அநுமதியின்றி ப்ரவர்த்திக்க அசக்தர்களாதலால், அப்பொழுது அநுமந்தாவாகவும் [𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌕𑌃], சில வ்யக்தி விசேஷர்களின் விஷயத்தில் ப்ரயோஜயிதாவாகவும் [𑌅𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌕𑌃] இருக்கிறான் என்பதுதான். பரமாத்மாவால் செய்யப்படும் ப்ரேரணம் இம்மாதிரி வ்யவஸ்திதமாக இருக்கிறபடியால், இதில் ஒருவித அநுபபத்தியுமில்லை என்பதை நாம் காணலாம்.

(தொடரும்.)

# ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்

[ஸ்ரீ. உ.வே. A. V. கோபாலாசார்யர், M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

[7-வது ஸ்லோகத்தின் தொடர்ச்சி]

த்ராகீயஸா ஸுசரிதேந द्राघीयसा सुचरितेन—வெகு நீண்ட நல்ல (ஆசையில்லாத : பலத்தை உத்தேசிக்காத) அநுஷ்டாநத்தால். தீர்க்கம் என்றால் நீண்ட என்று பொருள். இந்தப் பதத்திற்கு, 'மற்றொன்றைக் காட்டிலும் அதிக தீர்க்கமான' என்று பொருள். எதைக்காட்டிலும் அதிகமென்றால், உலகத்தார் எல்லாரைக்காட்டிலும் அதிகமான என்றபடி. ப்ரஹ்மாவின் ஒருபகல் நம்முடைய ஆயிரம் யுகமென்றும், அவருடைய ஒரு ராத்ரி நம் ஆயிரம் யுகமென்றும் கீதை. இப்படி நூறு வர்ஷம் அவராயுஸ் என்றால், அவர் எல்லாரைக் காட்டிலும் தீர்க்கமான ஆயுஸ்ஸுடையவர். அவர் எத்தனையோ நீண்ட காலம் நிஷ்காமமாய்ச் செய்த வ்ரத நியமாதி ஸுசரிதத்தின் பரிபாகத்தால். யோகஸூத்ரத்தில் வைராக்யம் முதலியவற்றைத் தீர்க்க காலம் ஆதரத்தோடும் இடைவிடாமலும் அப்யஸித்தால் அது த்ருடமாகும் என்று பணித்துளது. அங்குள்ள 'தீர்க்க காலம்' என்னும் சப்தத்தையும் ஸ்வாமி நினைப்பூட்டுகிறார். யோக சாஸ்த்ரமும் ஹிரண்ய கர்ப்பர் (ப்ரஹ்மாவின்) சாஸ்த்ரம் தான். 'ஸுசரிதேந' என்பதால் தபஸ்ஸும் வித்யாதாநமும் காட்டப்படுகின்றன. நான்கு முகங்களால் எப்போதும் நான்கு வேதங்களையும் கோஷித்துக்கொண்டிருக்கும் ப்ரஹ்மாவுக்கு வேதாநுவசநம் என்னும் அத்யயநத்திற்குக் குறைவில்லை. இத்தனையும் அவர் நிஷ்காமமாய் ஆசையில்லாமல் ஸ்வயம் ப்ரயோஜநமாய்ச் செய்தது 'ஸுசரிதம்' என்று சொல்லப்பட்டது. முன் சொன்ன உபநிஷத்தில், 'வேதாநுவசநத்தால், தாநத்தால், யஜ்ஞத்தால், தபஸ்ஸால்' என்று ஸாதநத்தைக் காட்டுவதைப்போல இங்கும் 'ஸுசரிதத்தால்' என்று வைத்தார். அந்த ஸ்ருதியில் 'அறிய ஆசை' என்பதற்குக் 'காண ஆசை' என்ற பொருளையும் காட்ட 'ஸுசரிதேந த்ருஷ்ட:' என்று அடுத்தாற்போல் 'ஸுசரிதத்தால் கண்டார்' என்ற பதச்சேர்த்தியால் காட்டினார்.

த்ருஷ்ட: दद्रशे—கண்டார் : காணப்பெற்றார். 'பரமாத்மா பார்க்கப்பட வேண்டும்.' 'த்ரஷ்டவ்ய:'—'சக்ஷுஸ்ஸும்' த்ரஷ்டவ்யனும் நாராயணனே. ச்ரோத்ரமும் கேட்கப்படவேண்டியவனும் நாராயணனே என்பது உபநிஷத்து. 'அவன் காணப்பட்டவுடனே ஸர்வ கர்மங்களும் நாசமடையும்; ஸர்வ ஸம்சயங்களும் தொலையும்; ஹ்ருதயத்தின் முடிச்சு தெறிக்கும்' என்று



ச்ருதி சொல்லுகிறது. அந்தத் துர்த்தர்சமான வஸ்துவைக்கண்டாரென்பதைக் காட்ட 'த்ருஷ்ட:' என்கிறார். பரதாழ்வான் சித்ரகூடத்தில் ஜடாதாரியாய் ராமன் திருவடிகளில் 'ஆர்ய' என்று கதறிக்கொண்டு மூர்ச்சிதராய் விழுகையில், பரதருடைய சடைக்கோலமும் சுத்தி ரூபமான தேஜஸ்ஸும் யுகாந்தத்தில் ஸூர்ய தேஜஸ்ஸைப்போல் துர்த்தர்சமாய் இருந்ததைத் 'த்ருஷ்டராமோ துர்த்ருச:' 'दद्रशे रामो दुर्दर्शं' என்று ருஷி பணித்தார். அதுபோல் இங்கே ப்ரஹ்மா, துர்த்தர்சமான (காண அரிதான) ப்ரஹ்மத்தைக் கண்டார். த்ருவர் பெருமாளைக் கண்டபொழுது, 'த்ருஷ்ட்வா' (தான்மட்டும் பார்த்து ஸந்தோஷித்தார்) என்று ருஷி சொன்னார். இங்கே ப்ரஹ்மா "உலகத்துக்கெல்லாம் பிதாமஹராகையால் தாம் இத்தனை காலம் தவம் செய்து அச்வமேதமும் செய்து புத்ரனை தமக்கு அத்புதமாகப் போருளானுக ஸேவை ஸாதித்த பெருமாளை எல்லோருக்குமாக, 'நீர் இப்படியே ஸ்தாவர ப்ரதிஷ்டையாய் எழுந்தருளியிருந்து கல்பகோடிகாலம் இப்படியே ஸகல ப்ராணிகளுக்கும் ஸேவை ஸாதித்தருளவேண்டும்' என்று ப்ரார்த்தித்து அப்படியே நிற்கச் செய்தார். த்ருவர் பெருமாளும் ப்ரஹ்லாதர் பெருமாளும் உடனே அந்தர்த்தாநமாய் விட்டார்கள். ப்ரஹ்மாவென்னும் புத்ரனுக்கு இந்த ஸத்யவ்ரத க்ஷேத்ரத்தில் யாக வேதியில் ச்யாமளமான அக்நியாக அவதரித்து, அவர் ப்ரார்த்தனைக்கு இணங்கி, ஸகல ஜநங்களும் தம்மை ஸேவித்து உஜ்ஜீவிக்கும் கருணையின் பரிபாகத்தால் அப்படியே எழுந்தருளியிருக்கிறார்.

வேதா: वेधाः—உலகத்தை ஸ்ருஷ்டிக்கும் உமது புத்ரன் தன் ஸ்ருஷ்டியில் சேராத உம்முடைய திவ்ய திருமேனியை ஸேவித்தார். விசித்ரமான உலகத்தைப் படைத்த சில்பிக்கு உம்முடைய திருமேனி அத்புதமும் காணாததுமான காட்சியாயிருந்தது. யாகங்களை உலகத்திற்கு விதிக்கும் ப்ரஹ்மா பழுதில்லாமல் முறைப்படியே யாகத்தையும் மற்றைக் கர்மங்களையும் அநுஷ்டித்திருப்பார். அவர் அநுஷ்டாநமெல்லாம் ஸுசரிதமாகவேயிருக்கும். உலகத்திற்குத் தபஸ்ஸுக்காக வரம் கொடுப்பவர். மோக்ஷப்ரதனை இந்த வரதப் பெருமாளை ஸேவிக்கப்பெற்றார். அவருக்கும் துர்லபமான வரமான உத்க்ருஷ்ட மோக்ஷத்தை அளிப்பவரல்லவோ வரதன்!

தம் த்வாம்—तम् त्वां—ப்ரஹ்மாவின் அச்வமேதத்தில் ப்ரஹ்மாதிகள் அத்புத ரஸத்தை அநுபவிக்கும்படி ஆவிர்ப்பவித்த அதே திருமேனியோடு கூடின உம்மை. அநேக ஆயிரம் யுகங்களான தீர்க்க காலம் ஸுசரிதங்களைச் செய்து அச்வமேதத்தையும் யஜித்து, உம்முடைய புத்ரன் காணப்பெற்ற உம்மையே. (ஸகல ப்ராணிகளிலும் யாதொரு வேதாநுவசநமும் யஞ்ஜமும் தாநமும் தபஸ்ஸுமில்லாமலும் ச்ரவண மநந நிதித்யாஸநங்கள் இல்லாம

னும் பக்தியோக மில்லாமலும் எளிதில் காணப்பெறுகிறார்கள்) பகீரதன் தவம் செய்துகொண்டுவந்த கங்கையால் எல்லோரும் உய்வதுபோல.

கரீஶ **करीश**—யானைப்ரபுவே!—ஆனைமலை ப்ரபுவே! ஆனைகளின் பெருமாள் அல்லவோ நீர்? ப்ரஹ்மா முதலிய உத்க்ருஷ்டரென்றும் திர்யக்கென்றும் பேதம் பாரா பெருமாள் அல்லவோ நீர். ப்ரஹ்மேஶாதிகளுக்கும் நீர் ஈஶன்; கரிகளுக்கும் நீர் ஈஶன். பரமபத நாதன் என்ற பெயரிலும் கரீஶன் என்ற பெயரை அல்லவோ நீர் உகந்தீர்?

தே கருணாபரிணாமத: **ते करुणापरिणामत:**—உம்முடைய கருணையின் பரிபாகத்தால். எங்கள் ஸுக்ருத பரிபாகத்தால் அல்லவென்று தாத்பர்யம். ப்ரஹ்மாவுக்கு யுககோடிகாலம் ஸுசரிதத்தின் பரிபாகத்தால் உம்முடைய ஸேவை கிடைத்தது. வெறும் ப்ராணிகளாகிய எங்களுக்கு ஸுசரித லேசம் இல்லாவிடினும், க்ஷணகாலமேனும் தபஸ்ஸில்லாவிடினும் நாங்கள் எல்லோரும் காணப் பெறுகிறோம். ப்ரஹ்மாவுக்கு நீண்டகால ஸுசரிதத்தின் பரிணாமமாக (பரிபாகமாகப்) பலம் கிடைத்தது. அவருக்கு ஸுசரிதம் ஸாதநம். எமக்கு உம்முடைய கருணை ஒன்றே ஸாதநம். உம்முடைய கருணையின் பரிபாகத்தாலேயே யன்றி, ஸுசரிதமேயில்லாத எமக்கு ஸுசரித பரிபாகத்திற்கு ப்ரஸக்தி ஏது? 'தே'—(உம்முடைய) என்பதால் எம்முடைய ஸாதநம் ஒன்றுமில்லை யென்று ஸூசிக்கிறார். இப்பெருமாளுடைய திருமேனி கருணையின் பரிணாமமே. திருமேனி கருணாமயம். கருணை ஞானம் என்னும் த்ரவ்யங்களே இப்படித் திருமேனியாகப் பரிணமித்திருக்கின்றன. பெருமாளும் கருணாமயர்; திருமேனியும் கருணையின் பரிணாமம். 'பகவான் எப்படி யதாத்மகரோ யந்மயரோ அவருடைய திருமேனியும் ததாத்மகமே தந்மயமே' என்று ப்ரமாணம். இந்தப் பெருமாள் விஷயத்தில்

'ஸா கிம் த்வமேவ தவ வேதி விதர்க்கடோலாம்'

'सा किं त्वमेव तव वेति वितर्कडोलां'

என்று மேலே ஸாதிக்கப்போகிறபடி ஸ்வரூபமும் திருமேனியும் இரண்டும் அருள்மயமாய் இருப்பதால் ஒன்றோ வேறோ என்று நிர்ணயிப்பது கடினமாகிறது. இரண்டும் ஒரே அருள் த்ரவ்யம். திருமேனியோடு கூடிய நீர் கருணைக் கடலானதாலும், கருணைக்கு எல்லையில்லாததாலும் எப்படி ஸகல ப்ராணிகளும் உம்முடைய தர்சநத்தை அடையாமற் போகக்கூடும்? ஒரு ப்ராணியாவது காணக்கூடவில்லை யென்றாலும் கருணைக்கு எல்லை வந்துவிடுமே. நீரும் உம்முடைய திருமேனியும் கருணையால் அநந்தர். ஆழ்வான் இந்தப் பெருமாளின் ஸ்தவத்தில் 'அத்திகிரிபதியே! உலகத்தில் குணங்



களின் பெருமையால் குணிகள் மங்களத்திற்கு இருப்பிடமாவர்; உம்முடைய விஷயத்தில் தத்வம் இதற்கு நேர் விபரீதம். ஸத்யம், ஜ்ஞாநம், பலம், வீர்யம், சக்தி முதலிய குணங்கள் உம்மிடம் இருப்பதால் அவை மங்களத் தன்மையை அடைகின்றன. இல்லாவிட்டால் அவையெல்லாம் அசுபமும் தோஷமு முள்ளவைகளுமேயாகும்' என்று ஸாதித்தார். இந்தப் பெருமாள் கருணையின் மூர்த்தியாதலாலும், ஸ்ரீ தேசிகன் தயா சதகத்தில் ஸாதித்தபடி தயையோடு சேர்ந்தால்தான் ஞானம், பலம், வீர்யம், சக்தி முதலிய குணங்கள் குணமாகும், இல்லாவிடில் அவை தோஷமாய்விடு மாதலாலும், இக்கருணைக்கடற் பெருமாள் விஷயத்தில் இவரோடு சேருவதால் குணங்கள் நிறம் பெற்றுச் சுபமாகு மென்பது திண்ணம். இவரிடம் குணங்கள் இருப்பதென்றால், கருணையோடு சேர்ந்திருப்பதென் றுதான் பொருள். கருணைதானே இவர். ஆழ்வான் ச்லோகத்தையும் தயாசதக ச்லோகத்தையும் சேர்த்துப் பார்த்தால் இவ்வர்த்தம் தெளிவாகிறது. அங்கே திருவேங்கட முடையானுடைய தயாகுணம். இங்கே பெருமாளே தயை. ஏதோ காருண்ய ராசி யென்று முதல் ச்லோகத்திலேயே கருணைக் கடலென்று தயாகுணமாகவே பேசினார்.

பூதாநி **भूतानि**—ப்ராணிகள். மநுஷ்யர் மாத்ரமல்ல; எல்லா ப்ராணிகளும் இப்பெருமாளைக் கண்டு உஜ்ஜீவிக்கப் பெறுகிறார்கள் என்பதால், இதற்கு யாதொரு அதிகாரமே வேண்டியதில்லை. சேதநரான ப்ராணியாயிருந்தால்மட்டும் போதும். கருணை கரைபுரண்டு வெள்ளமிடுகையில், அது மேடுபள்ளம் பார்க்குமோ? சைதந்யமே யில்லாத அசேதநம் மட்டும் தான் காணாது.

ஹந்த!—**हन्त**! அத்புதம்: ஸந்தோஷம்.

நிகிலாநி—**निखिलानि** எல்லாம். (எல்லாப் பூதங்களும்) கிலம் என்பது குறைவைச் சொல்லும். குறைவில்லாமல் பரிபூர்ணராய். உம்மைக் காணப்பெற்ற பின்னும் குறைவுண்டோ? உம்மைக் காணப்பெற்றவர் நிகிலர், கிலமில்லாதவர்; பூர்ணரே. பூதங்கள் என்னும் பதத்திற்கே ஸங்கோசமில்லாமல் 'எல்லாப் பூதங்கள்' என்று பொருள் சொல்லிவிடலாம். உம்மை 'நிபாலயந்தி' பார்த்துக்கொண்டு, அதனால் கிலம் (குறைவு) இல்லாதவராக—பூர்ணராக—ஆகிறார்கள். 'நிபாலயந்தி ஸந்தி' என்று க்ரியாபத மில்லாமல் நிகிலாநி ஸந்தி' என்று பொருள் கொள்ளலாம். பெரிய கத்யத்தில் 'ப்ரணதார்த்திஹர!' என்று கூப்பிட்டதும் 'நிகிலஜந்து,' 'ஸமஸ்த நிகில நியந்த' 'நிகிலஜகத்' என்று காண்கிறோம்.

நிஶாமயந்தி—निशामयन्ति (மாம்ஸக்கண்களால்) பார்க்கிருர்கள். மாம்ஸ சக்ஷுஸ்ஸை யுடையவன் அவரைக் காணப்பெறமாட்டான் என்பது ஶ்ருதி. தம் த்வா—அந்த ஶ்ருதி சொன்ன உம்மை எல்லாரும் இந்தக் கண்ணுலேயே பார்க்கிருர்கள். ஸம்ஸ்க்ருதபாஷையில் நிஶமநம் என்ருல் கேட்பது, ச்ரவணம் செய்வது என்று பொருள் நிஶமநத்தை நீட்டி நிஶாமநம் என்று படித்தால் அதற்குப் 'பார்ப்பது' என்று பொருளாகிறது. ச்ரவணம் என்பது நீண்டால் 'தர்ஶநஸமாநாகாரம் ஆகிறது.' என்கிற தத்வத்தை ஸம்ஸ்க்ருத பாஷை காட்டுகிறது. ப்ரஹ்மா பெருமாளிடமே ஶ்ரவணம் (நிஶமநம்) செய்தார். அதையே தீர்க்க காலம் நிஷ்காமமான கர்மாநுஷ்டாநத்தோடு த்யாநம்செய்து, பிறகு (நிஶாமநம்) தர்ஶநம் என்னும் பலத்தை அடைந்தார். எங்களுக்கு நிஶமநமே யில்லாமல் முதலிலேயே தீர்க்கமான நிஶாமநம் (தர்ஶநம்) உம்முடைய அருளென்னும் ஸாதநத்தால் அநாயாஸமாகக் கிடைத்துவிடுகிறது. ப்ரஹ்மாவினுடைய தீர்க்க தபஸ்ஸால் அவர் பெருமாளிடம் கேட்ட நிஶமநம் நிஶாமநமாக நீண்டது. அது எமக்கு முதலிலேயே உம்முடைய நீண்ட அருளாலே நீண்டுவிட்டது. எமக்கு நிஶமநம் என்னும் ஹ்ரஸ்வமே கிடையாது. ஆரம்பத்திலேயே தீர்க்கம்தான். ஹ்ரஸ்வம் என்பது விஶம். எமக்கு ஹ்ரஸ்வம் (விஶம்) இல்லை. நாம் அநாயாஸமாக உம் அருளால் நிகிலரே. ப்ரஹ்மா அந்தக் காலத்தில் கண்டார் என்பதை நாம் இதிஹாஸ புராணங்களால் அறிகிருேம். அது எமக்குப் பரோக்ஷம். அதைக் காட்ட அங்கே 'த்ருஶ்யே' என்று லிட்டை ப்ரயோகித்தார். இங்கே எல்லோரும் கண்டு உஜ்ஜீவிப்பது வர்த்தமாந ப்ரத்யக்ஷம். ப்ரஹ்மா அக்காலத்தில் ஸேவித்தார். நாங்கள் ஸர்வகாலமும் ஸேவிக்கிருேம். எல்லா ப்ராணிகளும் ஸேவிப்பதை நேரில் பார்க்கிருேம். ஸர்வ காலமும் எங்கிருந்தாலும் விச்சேத மில்லாமல் வரதனைத் தாம் ஸேவித்துக்கொண்டிருப்பதாகக் கடைசியில் 'நிரந்தரம் நிர்விஶத:' 'निरन्तरं निर्विशतः' என்கிற ஶ்லோகத்தில் ஸாதிக்கப்போகிருர். இதைக் காட்ட இங்கே ஸர்வ காலத்திலும் பார்த்து அநுபவிப்பதைச் சொல்லக் கூடிய லட்டை ப்ரயோகிக்கிருர்.

இங்கே ஸ்வாமி நெஞ்சில் ஓடும் சில ப்ரமாணங்களையும் அபூர்வ விஷயங்களையும் காட்டுவோம். பூர்வார்த்தத்தில் பரத்வத்தையும் பக்தியென்னும் ஸாதநத்தையும், உத்தரார்த்தத்தில் ஸௌலப்ய காஷ்டையையும், பெருமாளுடைய அருளென்னும் ஸாதநத்தையும் ஸாதிக்கிருர். 'யம்' என்று பூர்வார்த்தம் ஆரம்பம். 'தம்' என்று உத்தரார்த்தம் ஆரம்பம். 'த்ருஶ்யே' என்று முதற்பாதியின் முடிவு. 'நிஶாமயந்தி' என்று பிற்பாதியின் முடிவு. 'தன்னுடைய ஸ்வசரிதத்தாலே' என்று முதற்பாதியில் ('தன்னுடைய') என்பது அர்த்தஸித்தம். பிற்பாதியில் அதற்கு எதிர்த் தட்டாக



'தே' (உம்முடைய) என்கிருர். 'யம் த்ருஶ்யே' 'தம் த்வாம் நிஶாமயந்தி' என்னும் இரண்டாம் வேற்றுமை ப்ரயோகத்தால் பார்க்கிற ஜீவன் வேறு, பார்க்கப்படும் பரமாத்மா வேறு என்பதைக் காட்டுகிருர். 'கர்மகர்த்ருவ்யபதேஶாச்ச' என்கிற ஸூத்ரம் நினைப்பூட்டப் படுகிறது.

'தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந தபஸாऽநாஶகேந'

'तमेतं वेदानुवचनेन ब्राह्मणा विविदिषन्ति यज्ञेन दानेन तपसा अनाशकेन.

என்கிற ச்ருதியை யஜ்ஞாதி ச்ருதியென்பர். அது ப்ரஹ்ம த்யாநத்துக்கு அங்கமான பலத்தில் ஆசையில்லாத இந்நான்கையும் அங்கங்களாக விதிக்கிறது. இங்கே 'யஜ்வா' என்பதால் 'யஜ்ஞேந' என்கிற ச்ருத்யுக்த ஸாதநத்தைக் காட்டினுர். 'தம் ஏதம்' என்று ச்ருதியில் இருப்பதை இங்கே 'தம் த்வாம்' என்று மாற்றினுர். அதை இதுபோல் ப்ரகாசிக்கப் பண்ணி ஸாக்ஷாத்கரிக்க வேண்டுமென்று ச்ருதியின் ஆசை. அது என்பது தெரியாதது. இது என்பது எதிரில் ப்ரத்யக்ஷமாகத் தெரிவது. அந்த ஆசையை இந்தப் பெருமாள் தம்முடைய கருணையினுல் நாம் எதிரே நின்று 'ஓ! கரீசனே! உம்மை' என்று கூப்பிடும்படி அருளுகிருர் என்பதை ஸ்வாமி அழகாகக் காட்டுகிருர்.

'யத்தத் அத்ரேஶ்யம் அக்ராஹ்யம்......நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் தத் அவ்யயம் யத் பூதயோநிம் பரிபஶ்யந்தி தீரா:'

'यत्त तदद्रेश्यं अग्राह्य......नित्यं विभुम् सर्वगतं सुसूक्ष्मं तदव्ययं यद्भूतयो-नि परिपशयन्यि धराः

என்று முண்டகோபநிஷத் இங்கே நினைக்கப்படுவது திண்ணம்.. 'எது கண்களுக்கு அத்ருச்யமோ அந்த பூதகாரணப் பொருளைத் தீரர்கள் நன்ருக எங்கும் பார்க்கிருர்கள். ஸ்வலாபத்தில் அத்ருச்யமாய் இருப்பது நன்ருய்ப் பார்க்கப்படுகிறதென்று அந்த ச்ருதி சொன்னபடியே இங்கும் பேச்சு. 16-வது ச்லோகத்தில் இந்த ச்ருதி பதங்களையே

'நித்யம் பரம் வரத ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம்'

'नित्यं परं वरद सर्वगतं सुसूक्ष्मं'

என்று அமைக்கப் போகிருர். இங்கே பெருமாள் அக்நியாக அவதரித்தவர்.

'ப்ரஹ்மாக்நௌ ப்ரஹ்மணா ஹுதம்' 'ब्रह्माग्नौ ब्रह्मणा हुतं'

இங்கே ப்ரஹ்மமே அக்நியானார். ஹவிஸ்ஸை ஹோமம் பண்ணினவர் ப்ரஹ்மா. ஹவிஸ்ஸைப் பக்ஷிப்பதற்காக யாகத்தில் அக்நியை ஆஹ்வாநம் பண்ணுவார்கள். இங்கே பெருமாளே அக்நியாக ஆவிர்ப்பவித்தார். அக்நி தேவதூதனென்றும், தேவதைகளுக்குள் அக்நி கீழ்ப்பட்டவரென்றும் விஷ்ணு எல்லாத் தேவர்க்கும் மேற்பட்டவரென்றும் வேதம் சொல்லுகிறது. இந்தத் தேவாதி ராஜன் (விஷ்ணு) அக்நியாக வரலாமோ? அக்நி என்கிற சப்தத்திற்கு யாஸ்க நிருக்தத்தில் சொல்லப்பட்ட 'அக்ரம் நயதி' அக்ரணீர்பவதி (நம்மை மேலே நயநம் செய்கிறார்) என்கிற பொருளைக் கொள்ள வேணும். நம்மை மோக்ஷாதிகாரிகளாகச் செய்யப் பேரருளால் பரமபதத்திலிருந்து இங்கே அவதரித்த பெருமாள் இவர்.

'ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி:' 'सक्षद्प्य विरोधं जैमिनिः'

என்கிற ஸூத்ரத்திலும் பாஷ்யத்திலும் 'மேலே நயநம் செய்கிறது' என்கிற குணம் ப்ரஹ்மத்தினிடத்தில் நிருபாதிகமாயும் காஷ்டாகதமாயும் இருப்பதால், அக்நி சப்தம் அவரை ஸாக்ஷாத்தாகவே சொல்லுவதில் விரோதமில்லையென்று கூறப்பட்டது. அந்த ஸூத்ரம் பரப்ரஹ்மமான தேவாதிராஜன் ஸாக்ஷாத்தாக அக்நியாக அவதரித்ததில் விரோதமில்லையென்பதையும் ஸாதிக்கும். ஸூத்ரங்கள் விச்வதோமுகமென்றும் ஸர்வதோமுகமென்றும் சொல்லப்படும் எல்லா விஷயத்திலும் ஸூத்ர ந்யாயங்கள் பொருந்தும். முதல் ச்லோகத்திலேயே ச்யாமளமான அக்நியாக அவதரித்ததை ஸாதித்தார். ஆத்ம ஹவிஸ்ஸை நேராகத் தாம் வாங்கவேண்டிய படியாலும், அதற்கு ஆள் வைக்க முடியாததாலும், அக்நியாகவே அவதரிக்க வேணுமென்பதை முன்பே காட்டினோம். இவர் வேதப் பெருமாள். 'அக்நிமீளே' என்று ருக்வேதாரம்பம்.

'ஆஹூயமாநமநபாயவிபூதிகாமை:'

'आहूयमानमनपायविभूतिकामैः'

என்று முடிவிலும் நித்ய விபூதியை அபேக்ஷிப்பவரால் ஆஹ்வாநம் பண்ணப்படுகிறவரென்று கூறப்போகிறார். ஸாமவேதத்தில் முதல் தசதி (பத்து ஸாமங்கள்) அக்நியை ஹவிர்ப்பக்ஷணத்திற்காக ஆஹ்வாநம் பண்ணுவன. 'அக்ந ஆயாஹி வீதயே' (ஹவிஸ்ஸை அமுது செய்ய வாரும்.) நீர் பர்ஹிஸில் (யாகத்தில்) தர்ப்பத்தில் உட்காரும். நீர் (விச்வேஷாம் ஹித:) எல்லோருக்கும் ஹிதர்; மித்ரனைப் போல் ப்ரியர்; எல்லா அராதியிடமிருந்து எம்மைக் காப்பாற்ற வேண்டும். (எல்லா ஆர்த்தியையும் ஹரணம் செய்யவேண்டும்). 'அராதி' என்பதற்குக் கொடுக்க மனமில்லாத க்ருபணன் என்றும் பொருள். அவன் வரதனுக்கு நேர் எதிரி.



'ஆதே வத்ஸோ மநோ யமத் பரமாச்சித் ஸதஸ்தாத் । அக்நே த்வாம் காமயே கிரா ।

'आते वत्सो मनो यमत परमाच्चित्सघस्थात् अग्नेत्वां कामये गिरा ।'

என்று எட்டாவது ஸாமம். அதில் 'வத்ஸ:' என்பது குழந்தையைச் சொல்லலாம். [உம்முடைய குழந்தையாகிய ப்ரஹ்மா உம்மை எல்லாவற்றிற்கும் மேற்பட்ட பரமபத ஸ்தாநத்திலிருந்து இங்கே வரும்படி உம் திருவுள்ளத்தை ஸ்தோத்ரத்தால் இசையச் செய்தார். உம்மை ஸ்தோத்ரத்தால் அடைய நான் ஆசைப்படுகிறேன்.] இந்த ஸாமம் ப்ரக்ருத அர்ச்சாவதாரத்திற்கும், இந்த ஸ்தோத்ராவதாரத்திற்கும், இந்த அவதார ச்லோகத்திற்கும் நேராக ஒட்டும். 10-வது ஸாமத்தின் முடிவில்

'தேவோஹ்யஸி நோ த்ருசே' 'देवोह्यसि नोदशे'

என்று உள்ளது. எங்கள் கண்ணுக்கு (தர்சநத்துக்காக) நீர் தேவனாக ஜ்வலிக்கிறீர். 'காருண்யபரிணாமத:' என்னும் பதத்தில் 'தஸில்' என்பது எல்லா விபக்திகளுக்கும் பொருந்தும். இரண்டாம் வேற்றுமையாக வைத்துக்கொண்டு கருணையை உபாதாந த்ரவ்யமாகக் கொண்டு அறிவு பரிணமமான உம்மை—என்று பொருள் கொள்ளலாம். பரிணமம் என்பதற்குப் பரிபக்வம், பரிபாகம், காஷ்டை என்றும் பொருள். உம்முடைய கருணையின் காஷ்டையால்—உம்முடைய கருணையின் காஷ்டையாகிய திருமேனியை. 'தமேதம்' என்கிற ச்ருதியில், 'வேதாத்யயநத்தால்' என்பதை ப்ரஹ்மசாரிகளுக்கும், 'யஜ்ஞேந' என்பதை க்ருஹஸ்தர்களுக்கும் 'தாநேந' என்பதை வித்யாதாநம் செய்யும் வாநப்ரஸ்தர் களுக்கும் 'தபஸா' என்பதைத் தபஸ்ஸை ப்ரதாநமாகவுடைய ஸந்யாஸிகளுக்குமாகப் பிரித்துச் சொல்லுவதுண்டு. ப்ரஹ்மா விஷயத்தில் இந்நான்கும் சேரலாம். ச்ருதியில் வேதாத்யயநத்தை முதலில் சொல்லியிருந்தாலும் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட யஜ்ஞத்தைத்தான் முதலாக எடுத்து ஸூத்ரக்காரர் இந்த ச்ருதியை யஜ்ஞாதி ச்ருதி என்று பெயரிட்டார். ஸூத்ரக்காரர் யஜ்ஞத்தை முக்யமாக முதலாக எடுத்ததால், ஸ்வாமியும், 'யஜ்ஞ' என்பதை முதலில் வைத்தார். 'ஸ்வாராதிதம்' என்பதால் மற்ற மூன்றையும் வாங்கி விடலாம். இந்த யஜ்ஞாதி ச்ருதி க்ருஹஸ்தர்கள் விஷயமென்று ஸ்ரீபாஷ்யம். க்ருஹஸ்த தர்மத்தில் யஜ்ஞம் முக்யமானதால் அதை ஸூத்ரக்காரர் முதலாக எடுத்தார். 'ஸ்வாராதிதை:' என்னும் பதத்தில் 'ஸு' என்பது அநுஷ்டாநத்தின் நன்மையை (உயர்வைக்) காட்டும். என்ன நன்மை? என்ன உயர்வு? ஆசையில்லாமல் (பலத்தைக் கோராமல்) செய்வது தான். ஆசையில்லாமல் என்பதைக்காட்ட ச்ருதி 'அநாசகேந' என்றது. 'ஸு' என்பதால் ஸ்வாமி அதைக் காட்டினார்.

'ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:'
'आत्मावा अरे द्रष्टव्यः श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यः ।

என்பது ச்ருதி. அங்கே 'த்ரஷ்டவ்ய:' (பார்க்கப்படவேண்டும்) என்று முதலில் சொல்லி யிருப்பது முடிவான பலமென்றும், பார்க்கப்படவேண்டு மென்பது பலத்தின் அநுவாதமென்று அத்வைதார்த்தம். 'யதோ த்ரஷ்டவ்ய: தத: ச்ரோதவ்ய' என்று பொருள். பார்ப்பதென்னும் பலம் வேண்டுமானல் பெரியாரிடம் வேதார்த்த மூலமாக ப்ரஹ்ம ஸ்வரூபத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேணும். ஆசார்யன் உபதேசித்தது கூடுமோ கூடாதோ என்கிற அஸம்பாவநா சங்கைகளையும் விபரீத பாவநைகளையும் போக்குவதற்காக, கேட்ட அர்த்தத்தை யுக்திகளால் ப்ரதிஷ்டாபநம் செய்துகொண்டு (மநநம் செய்து) அதையே அநவரதம் ஏகாக்ரமாய் த்யாநம் செய்யவேணும். அத்வைதார்த்தம் இப்படி. நமக்கு ஸ்ரவணம் ராக ப்ராப்தம். மநநம் அதை த்ருடப்படுத்த. அதற்கும் விதி வேண்டியதில்லை. த்யாநத்தால் ப்ரஹ்ம தர்சநம் வருமென்பது அபூர்வமாய் சாஸ்த்ரத்தால் விதிக்கப்படுகிறது. ஆகையால் நிதித்யாஸநத்தில் விதி. அந்த த்யாநம் தெளிவாய்த் தர்சநத்தைப் போல் இருக்கவேணுமென்ற தெளிவை த்யாநத்தின் விசேஷணமாக 'த்ரஷ்டவ்ய:' என்பது விதிக்கிறது. இது நமது பக்ஷம். ஆயினும் ப்ரஹ்ம தர்சநம்தான் பலமென்பதில் ஸந்தேஹமில்லை. 'தஸ்மிந் த்ருஷ்டே பராவரே' என்கிற ச்ருதியில் தர்சநம்தான் பலமென்பது நமக்கு ஸம்மதம். 'ஸதா பச்யந்தி' என்கிறபடி ஸதா ப்ரஹ்மதர்சநம் மோக்ஷம்.

இந்த வரதப்பெருமாள், ஆர்த்தியைப் போக்கிப் பலத்தை உடனே கொடுத்துவிடவேண்டுமென்று தம் பேரருளால் மிகுதியும் த்வரிக்கிறார். இவர் ப்ரஸாதத்திற்கு முன்பேகூட பலமுண்டாகி விடுகிறது. முதலிலேயே தர்சநம் என்னும் பலம் ஸித்தித்துவிடுகிறது. நம் ஸாதநாபேக்ஷைகூட இல்லை. அதைக் காட்ட ப்ரஹ்மவித்யாலேசமுமில்லாத எல்லா ப்ராணிகளும் பலமாகிய தர்சநத்தை உடனே பெற்றுவிடுவார்கள் என்கிறார். இந்தப் பெருமாள் விஷயத்தில் 'ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய:' என்ற ச்ருதியிலும் முதலில் உள்ள தர்சநம், முதலிலேயே இவர் பேரருளால் வந்து விடுகிறது. அதனால் அதற்கு ஸாதநங்களான ஸ்ரவணாதிகள் அநாவச்யகமாகி விடுகின்றன. பெருமாள் எல்லோருக்கும் கருணையால் தர்சநம் கொடுக்கையால், ச்ரவணாதி ஸாதநங்களுக்கு அவகாசமேயில்லை. இதுவும் கருணையின் பரிணாமம் என்று காட்டுகிறார். ப்ரணதார்த்திஹரனையும் வரதனையும் இருப்பவர் பேரருளாளன். பேரருளின் ஸ்வபாவம் ஆர்த்தியைப் பரிஹரிப்பதும் அபேக்ஷித வரங்களை அநுக்ரஹிப்பதும். இதுதான் பேரருளின் ஸ்வரூபமென்று இந்த மூன்று திருநாமங்களால் ஏற்படுகிறது. அந்தரதிகரணத்தில்



ஸ்ரீ பாஷ்யத்தில், 'ஆகையால் இந்த ஸ்வாபாவிகமான திவ்ய ரூபத்தையே உபாஸகரை அநுக்ரஹிப்பதற்காக அவர்கள் நினைப்புக்குத் தக்க ஆகாரமாகப் பரமகாருணிகரான பகவான் தேவமநுஷ்யர் சரீரத்தைப்போன்ற உருவமாகத் தம்மைத் தம் இச்சையினாலேயே செய்துகொள்கிறார்' என்பதை அநுஸரித்துக் 'கருணா பரிணாமத்தால்' என்று கூறப்பட்டது. 'ரூபோபந்யாஸாச்ச' 'வ்யாப்தேச்ச' என்ற இரண்டு ஸூத்ரங்களையும் இங்கே ஸ்வாமி நினைக்கிறார். 'தம்மையே ஒரு அத்புத ரூபவிசேஷமாகச் செய்துகொள்கிறார்.' 'ததாத்மாநம் ஸ்வயமகுருத' அந்த ரூபத்திற்கு உபாதாந த்ரவ்யம் என்ன? 'காருண்யபரிணாமத:' என்பது அதற்குப் பதில். அதைத்தான் 'காருண்யபரிணாமத:' என்று ஸாதித்தார். ஹேது என்கிற அர்த்தமும் த்விதீயார்த்தமும் கிடைப்பதற்காகத் 'தஸில்' ப்ரயோகித்தார். 'ஸ்வயம் ஸமுதிதமான உம்முடைய அமுதத் திருமேனியை 'ஸதா பச்யந்தி' என்பதுபோல் 'ஸதா நிர்விசேம' எப்பொழுதும் இடைவிடாமல் ஸேவித்துக்கொண்டு இப்பூலோகத்திலேயே நித்ய ஸூரிகளின் ஆநந்தத்தை நாங்கள் அநுபவிக்கவேணும்; முகுந்தனே!' என்ற அநுபவத்தைக்காட்ட இங்கேயும் 'நிர்விசந்தி' என்றார்.

---

# ஸ்ரீக்ருஷ்ண தாதார்ய மஹாதேசிக சரிதம்.

[ஸ்ரீ. உப. ஐயா. க்ருஷ்ண தாதாசார்யர்]

ஸ்ரீபேரருளாளன் திருவாடிவாரத்திலிருந்து ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்யும்போது ப்ராஹ்ம முஹூர்த்தத்தில் யோகத்தை முடித்து, அபிகமந ஸங்கல்பாநந்தரம் ஸ்தோத்ராநுஸந்தாநத்தோடே பெரியதிருவீதிவலம் எழுந்தருளி, ஸந்நிதி திருவநந்த ஸரஸ்ஸிலே நீராட்டம் செய்தருளி, மேலண்டைக்கரையில் ஸ்ரீ வராஹநயினார் ஸந்நிதி தென்புறத்திலிருக்கும் அறையில் ப்ராத:கால கர்த்தவ்ய க்ரியைகளை அனுஷ்டித்து, பிறகு ஸ்ரீ வராஹநயினார், திருவாழியாழ்வான், (திருநந்தவநத்திலே) பெரியாழ்வார், தொண்டரடிப்பொடிகள், திருப்பாணழ்வார், (கீழ்த் திருவீதியிலே) நம்மாழ்வார் மதுரகவிகள் ஸ்ரீமந்நாதமுனிகள், திருமங்கைமன்னன், திருமழிசைப்பிரான், குலசேகரப் பெருமாள், ஆளவந்தார், எம்பெருமானார், முதலாழ்வார்கள், ஸ்ரீ தாததேசிகன், ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேசிகன் இவர்களை மங்களாசாஸநம் செய்துகொண்டு, ஸந்நிதிக்குள்ளே எழுந்தருளி ஸ்ரீ சக்ரவர்த்தித்திருமகன், சிறியதிருவடிநயனார், திருவநந்தாழ்வான், கருமாணிக்கப்பெருமாள், திருக்கச்சிநம்பிகள், திருமடைப்பள்ளி நாச்சியார், கண்ணன், ஸ்ரீ பெருந்தேவித்தாயார், பெரியதிருவடி, ஸ்ரீ அழகியசிங்கர், சூடிக்கொடுத்த நாச்சியார், அம்மாள் கோஷ்டியில் உள்ள ஆசார்யகோஷ்டி, மலையாள நாச்சியார், ஸ்ரீ தேப்பெருமாள் இவர்களை யதாக்ரமம் அவ்வோ ஸ்தோத்ரங்களாலே மங்களாசாஸநம் செய்துகொண்டு திருமாளிகைக்கு எழுந்தருளி உபாதாநஸங்கல்பம் பண்ணி ஸம்ப்ரதாய க்ரந்த ப்ரவசநம் செய்தருள்வர்.

இப்படி 65 திருநக்ஷத்ரங்கள், ஸ்ரீ ஸ்வாமி ஸகல கலா வல்லபராய், ஸகல ஜந வந்த்யராய், ஸ்ரீமத் தேசிக ஸம்ப்ரதாயத்தை ஸர்வதோமுகமாக நிர்வஹித்து வந்தார். 66-ஆவது திருநக்ஷத்ரத்திலே ஆவணி மாஸத்தில் நம் பேரருளாளன் திருப்பவித்ரோத்ஸவத்துக்கென்று திருவத்தி மாமலையிலிருந்து கீழே எழுந்தருளி, ஸ்ரீ ஸ்வாமியைப் பெரியவீடு வரும்படி நியமிக்க, ஸ்ரீ ஸ்வாமியும் அதி ஸந்தோஷத்தோடு 'நாயந்தே' என்று விண்ணப்பிக்க, ஸ்ரீ பேரருளாளனும் அன்றிரவில் ஒரு சரீர விச்லேஷ நிமித்தத்தை உண்டாக்க, ஸ்ரீ ஸ்வாமியும் அதனை யறிந்து யோக ஸங்கல்பம் பண்ணி, அன்று முதலாக ஆறு தினங்கள் ஸர்வேந்த்ரியோபாதி பண்ணி, நிரந்தரம் சுபாச்ரய சிந்தநபரராயிருக்க, ஸ்ரீபாதத்து முதலிகள் எல்லாரும் அருளிச்செயல் ஸ்தோத்ராதி அநுஸந்தாநங்களாலே பெரிய திருநாளாக, அந்த ஆறு தினங்களையும் நடத்த ஏழாவது நாள் புரட்டாசி சுக்ல ஷஷ்டியில் திருப்பவித்ரோத்ஸவம் தீர்த்த தினத்தன்று ஸாயங்காலம் ஸ்ரீ பேரருளாளன் திருவீதி அலங்கரிக்கும் வ்யாஜத்தாலே ஸ்ரீ ஸ்வாமி திருமாளிகை வாசலிலே எழுந்தருளி அர்ச்சக முகமாய்த் திருமாலையும் திருவடிகளில் சாத்தின திருத்துழாயும் ப்ரஸாதித்து, 'வாரீர்' என்று ஓலைப் புறத்திலே கேட்டுப் போகிற மாத்ர மன்றிக்கே எல்லாரும் கண்ணாலே காணலாம்படிக்குத் தானே ப்ரதானனாய் சரீர விச்லேஷத்தைப் பண்ணிவைத்து, ஸ்ரீபாதத்து முதலிகள் எல்லாரும் 'சூழ் விசும்பணி முகில்' தொடங்கி ஆழ்வார் அருளிச் செய்த க்ரமத்திலே தன்னுடையச் சோதி புகுவித்துத் திருமாமணி மண்டபத்திலே அந்தமில் பேரின்பத் தடியரோடிருத்தி, போயினால் எத்திசைச் சென்றும் பிணைகொடுக்கிலும் போகவொட்டாதபடி சித்தம் சிறுகாலையில் ப்ரார்த்தித்த மநோரதங்களையெல்லாம் தந்து, 'நவ வந்தனாவது ஏதே' என்னப் பண்ணியருளினார்.

ஸ்ரீ பாதத்து முதலிகள் ஆசார்ய வியோகத்திலே போரதுக்கப்பட்டுத் திருக்குமாரரைக் கொண்டு மறுநாள் ஆளவந்தார்படி தொடக்கமாகத் திருமேனிக்குச் செய்ய வேண்டுமவை யெல்லாம் செய்து, ப்ரஹ்ம ரதம் ஏற்றி, திருப்பள்ளிபடுத்தி, அவப்ருத ஸ்நாநம் செய்து, உபவாஸமிருந்து, 12-நாளும் யதாசாஸ்த்ரம் ஔர்த்வ தைஹிக கைங்கர்யங்கள் நடத்தி, மறுநாள் திருவத்யயநோத்ஸவம் வேதபாராயணம் அருளிச்செயல்கள் ஸ்ரீ தேசிகப்ரபந்தம் இதிஹாஸ புராணங்கள் ஸ்ரீ பாஷ்யகீதா பாஷ்யங்கள் திருவாறாயிரப்படி த்வாத்ரிம்சத் ரஹஸ்யங்கள் மற்றும் தத்வமுக்தா கலாபம் முதலாக ஸித்தாந்த க்ரந்தங்கள் ஸ்தோத்ரங்கள் இவைகள் அநுஸந்தாந புரஸ்ஸரமாக விசேஷமாக நடத்தி, ததீயாராதநமும் தக்ஷிணைதாநங்களும் பண்ணி, ஆசார்ய வியோக துக்கத்தாலே மூன்று ஸம்வத்ஸரங்கள் ஸ்ரீபாஷ்யாதி ப்ரவசநங்கள் பண்ணாமலிருந்து; அநந்தரம் தாங்களே தேறி, ஆச்ரயித்த முதலிகளுக்கு ஸ்ரீ பாஷ்யாதிகளை ப்ரஸாதித்து ஸம்ப்ரதாயத்தை நிர்வஹித்து வந்தார்கள்.

ஸ்ரீ க்ருஷ்ண தாதார்ய மஹா தேசிக சரிதம் முற்றிற்று.

உதிதம் ஸ்ரீக்ருஷ்ணதாதார்ய சரிதம் வரதாஹ்ருதம் |
தஸ்மாச்சாவேதவல்லீவ ச்ருத்யாதர்ஷம் ஸமாஹ்ருதம் ||

இதி ஸ்ரீதேசிக வம்சார்ணவ ஸுதாகரஸ்ய
ஸ்ரீக்ருஷ்ண தாதகுரோ: சரிதம் ஸமாப்தம் |



## ஸ்ரீ க்ருஷ்ண தாத தேசிகன் வாழித் திருநாமம்.*

| | |
|---|---|
| கச்சிநக ரருளாளர் கழல் பணிந்தோன் | வாழியே |
| கலைவலவர் பலர்தொழுத கழலிணையோன் | வாழியே |
| அச்சுவையி னமுதொக்கு மணிமொழியோன் | வாழியே |
| ஐப்பசியி லாயிலியத் தவதரித்தோன் | வாழியே |
| நிச்சலுமாழ் வாரருளே நினைந்து நைந்தோன் | வாழியே |
| நிகமாந்த தேசிகனார் நிதியெடுத்தோன் | வாழியே |
| சிச்சரசுத் திருளனைத்தும் சிதைத்தொழித்தோன் | வாழியே |
| ஸ்ரீ கிருஷ்ண தாதகுரு சேவடிகள் | வாழியே |

ஆரண நூல்வாழ வருளிச் செயல்வாழ
சீரணிசீர் தூப்புற்கோன் சீர்வாழ—தாரணியில்
மன்னுபுகழ் சீகிருட்டண தாதமஹா தேசிகனே
இன்னுமொரு நூற்றாண் டிரும்.

### திருநாள் பாட்டு.

வாரண வெற்பினில் வாழரு ளாளர்தம் வாழ்ச்சி வளர்ந்திடு நாள்
வஞ்சனை விஞ்சிய மாயி மதங்களை மாய்த்து மறுத்திடு நாள்
ஆரண தேசிக ராதிதலத் தினி லர்ச்சை யமைந்திடு நாள்
அன்புட னெம்பெரு தேத்திடு மாதர மழகு பொலிந்திடு நாள்
ஏரணி கீர்த்தி யிராமா நுசமுனி யின்னுரை யேய்ந்திடு நாள்
இந்நிரை மீதினில் மந்தர் வரைந்திடு நிந்தை குலைந்திடு நாள்
பூரண பொற்குண புட்குழி கிட்டண தாதய தேசிகனார்
பூதல மேவிய வைப்பசி யாயிலி யத்திரு நாளதுவே.

## மற்றொரு வாழித் திருநாமம்.

வாழிமறை மௌளிகுரு வாழிச்சிதரு மாதகவால்
வாழுமணி சிக்ருட்ண தாதகுரு—வாழியவன்
பெருதரும் வேதாந்த தேசிகனார் பெருவுரைகள்
தேரும்படி யுரைக்குஞ் சீர்.

| | |
|---|---|
| சீராரும் நாதமுனி செழுங்குலத்தோன் | வாழியே |
| சித்தாந்தம் சிதையாதே செய்தளித்தோன் | வாழியே |
| பாராளத் தேசிகனைப் பாலித்தோன் | வாழியே |
| பாங்கநகத் தூப்புனகர் பகையறுத்தோன் | வாழியே |

---

* இந்த வாழித் திருநாமம், தேசிகன், தாததேசிகன் வாழித் திருநாமங்கள் அநுஸந்தித்த பிறகு அநுஸந்திக்க வேண்டும்.

தீராத மயல்தீர்த்துத் தெளிவித்தோன் வாழியே
பெரியவரென் றெத்திசையும் பேர்பெற்ருேன் வாழியே
ஏரார்ந்த வைப்பசியா யிலியத்தோன் வாழியே
தாரார்ந்த ஸ்ரீகிருட்ண தாதகுரு வாழியே

பேருளா ளன்வாழ பேரணிதூப் புல்வாழ
சேரரிய வேதாந்தச் சீர்வாழ—ஸ்ரீமகனூர்
மன்னுகு லம்வாழ ஸ்ரீக்ருட்ண தேசிகனே
இன்னமொரு நூற்ருண் டிரும்.

## மற்ருெரு திருநாள் பாட்டு

சந்தமு டன்மறை மௌலியி ரண்டும் சீரொடு வாழ்வுறு நாள்
சார்ந்துபு றச்சம யப்பர வாதிகள் சீலமி ழந்திடு நாள்
பந்தம றத்தருள் தேசிக ஞர்திரு மொழிகள் விளங்கிடு நாள்
பார்தனி லோங்கிடு தூப்புல்ந கர்ப்பகை யின்றியி லங்கிடு நாள்
கந்தம லர்மகள் புதல்வன் திருக்குல மோங்கிடு முத்தம நாள்
காணு தம்முத லாகிய வித்தைகள் பலவும் புகழ்பெறு நாள்
சிந்தும லர்ப்புட் குழியப் பாவெனும் பெரியவர் தோன்றிடு நாள்
சீரியர் வாழ்ந்திடு மைப்பசி யில்வரு யாயிலி யத்திரு நாளே.

## மங்களாசாஸந ஸ்தோத்ரம்.

ஶ்ரிதாநாம் ஶ்ருதஸம்ஸேவ்ய: ப்ரணதாநாம் ஹிதம் ஜநம் |
ஶ்ரீஶைலேஶம் க்ருஷ்ணதாதார்யம் வந்தே தாஸ்யாம் நமோநம: |
அக்ஷீண காருண்ய தாதார்ய வம்ஶவாரிதி சந்த்ராம்ஶவே |
ஶ்ரீக்ருஷ்ண தாதயார்யாய குருவர்யாய மங்களம் ॥ 1 ॥
ஸுதந்த்ர ஸாம்ப்ரதாயஞ்ச குருபாராஜ்ய ஹேதவே |
ஸ்வதாரஸ்வயம் காருண்யா அவதீர்ணாய மங்களம் ॥ 2 ॥
ஶ்ரீஶேஷவம்ஶஜே விஷ்ணோ ஶேஷாஹிய ஶுபே |
தத்ரா அவதீர்ணாய நித்யாராதாய மங்களம் ॥ 3 ॥
ஶ்ரீவாதநகலஶார்ய ஶ்ரீவத்ஸாங்க ஸுதர்ஶயே |
ஶ்ரீதேஶிக தாதாய தநூஜாய மங்களம் ॥ 4 ॥
ஸர்வஶாஸ்த்ரார்த ஸாரஜ்ஞ ஸர்வஶக்தி ஶ்ருதே |
ஸந்தோஷாவிஷ்ட ஹவ்யவாஹஸந்தாய மங்களம் ॥ 5 ॥
ப்ரபந்த குரு வீக்ஷாய வேதவேதாந்த ஸம்பதே |
த்ரயீந்த ஸம்ப்ரதாய ஜயஸம்பாதாய மங்களம் ॥ 6 ॥



விஶ்வோத்க்ருஷ்ட விவாத விதூஷணி ஸர்வதா |
விதுஷாம் ஶ்ரேயஸேதாய விஶ்வதோஷாய மங்களம் ॥ 7 ॥
நிகமாந்த குருதத்வ ஸந்தோஷ மஹநீய ஸம்பத: |
ஸகலஸ்ய குருதேஷாம் ஶ்ரீவத்ஸாதே நித்ய மங்களம் ॥ 8 ॥
தேவாதிராஜ ஶ்ரீகார்ய கார்ய கருணா ஹேதவே |
ஸமஸ்த காஞ்சீ க்ருதஸ்ய க்ருதக்ருத்யாய மங்களம் ॥ 9 ॥
ஶ்ரீவாத்ஸ்ய ராமாநுஜ க்ஷேத்ர வம்ஶகாருண்ய விஷ்ணு: |
ஸகலகுணாஸ்ய ஸம்பந்த ஶாந்தாய மங்களம் ॥ 10 ॥
ஸாங்க்ருதீ ஸூத்ராதி ஸமஸ்த க்ருதத்வ ஸாரத: |
வேதாந்த விஶேஷம் த்ருஷ்டஸ்ய வ்யவஸ்தே ப்ரமாண மங்களம் ॥ 11 ॥
ஶாரீரக யதீஶோக்தா த்ரயஞ்ச குருஸேவயா |
குரு த்ரயாத்த ஸேவேதி விதக்ருத்யாய மங்களம் ॥ 12 ॥
ஸுஜ்ஞ ஜ்ஞாநஸம்ஸாரம் ஸத்ய ஸாக்ஷி வீக்ஷணாய |
ஸேவ்யாத்ரா ஜ்ஞ ஸம்ஸார ஸாரம் தஸ்ய மங்களம் ॥ 13 ॥

ஶ்ரீமதே க்ருஷ்ண தாதார்ய குருவே ஸர்வமேதவே |
ஶ்ரீகாந்த நித்யவாஸாய ஶ்ரீஸ்வாமிஜய: மங்களம் ॥ 14 ॥
தத்ராஸநாத்ர ஸ்திதம் க்ருஷ்ண தாதார்ய மங்களம் |
ய: படேத் ப்ரயாஸக்த்யா தஸ்ய ஸர்வத்ர மங்களம் ॥ 15 ॥
ஸ்லோகம் ஶ்ரவணம் ஜீயாத் தேஶிகாஸ்ய ஜயம் தத: |
திவ்ய தேஶாஸ்ய ஶோபாந்தாம் கவிதோஷ ஶாஸ்த்ரம் ॥ 16 ॥

॥ ஸ்ரீ: ॥

ஶ்ரீ க்ருஷ்ணதாத ஸம்ஶ்ரீ ந்ருபதி பங்கஜ ஷட்பத: |
வாக்குராஜ தேவாய ஸ்வாமி ஸ்வாமி ஜ்ஞாநஸூரி ॥
அக்ஷீணகாருண்ய தாதார்ய வம்ஶாப்தி விதுர்த்விநே |
ஶ்ரீக்ருஷ்ண தாதயார்யாய குருவர்யாய மங்களம் ॥ 1 ॥
ஶ்ரீவேங்கட தநூஜாய ஶ்ரீநிவாஸ வேதே |
யதிராஜ ஜயவேதி யதிஶிஷ்யாய மங்களம் ॥ 2 ॥
தத்ர ஶ்ரேஷ்ட அவதீர்ணாய ஸஹாநுஜிய வத்ஸரே |
பஞ்சவிம்ஶதி வர்ஷாத்த ஸர்வ விதுஷாய மங்களம் ॥ 3 ॥
ஸர்வஶாஸ்த்ர தேஶிக ஸம்ப்ரதாய பாலோத்தமே: |
ஸாமாயாய கரணாய ஸர்வஜ்ஞாயாஸ்து மங்களம் ॥ 4 ॥

[illegible] ।
[illegible] ‖ 5 ‖
[illegible] ।
[illegible] ‖ 6 ‖
[illegible] ।
[illegible] ‖ 7 ‖
[illegible] ।
[illegible] ‖ 8 ‖
[illegible] ।
[illegible] ‖ 9 ‖
[illegible] ।
[illegible] ‖ 10 ‖
[illegible] ।
[illegible] ‖ 11 ‖
[illegible] ।
[illegible] ‖ 12 ‖
[illegible] ‖ 13 ‖
[illegible] ।
[illegible] ‖ 14 ‖
[illegible] ।
[illegible] ‖ 15 ‖
[illegible] ।
[illegible] ‖ 16 ‖
[illegible] ।
[illegible] ‖ 17 ‖
[illegible] ।
[illegible] ‖ 18 ‖
[illegible] ।
[illegible] ‖ 19 ‖
[illegible] ।
[illegible] ‖ 20 ‖
[illegible] ।
[illegible] ‖ 21 ‖

# ஸ்ரீ கீதாசார்யனும் தென்குருகூர் நம்பியும்

[ஸ்ரீ. உப. வி. நரஸிம்மாசார்யர், அட்வோகெட், சென்னை]

"அந்தமில் ஆதியம் பகவன் வணக்குடைத் தவநெறி" என்றும் "ஞானவிதி" என்றும் "பண்டே பரமன் பணித்த பணிவகை" என்றும் ஸ்ரீ பகவத்கீதா சாஸ்த்ரத்தை நம்மாழ்வார் முதல் இடை கடையாகப் பல் படிகளால் புகழ்ந்து பேசுவர். வேதாந்த சாஸ்த்ரங்களில் ஒன்றான ப்ரஹ்ம ஸூத்ரங்கள் தத்வபரமாயும் உபாஸநபரமாயும் இருக்கும். தத்வம் என்றால் உண்மை. உபாஸநம் என்பது உபாயம். அதாவது: உண்மையான பரமாத்மாவை அடையும் வழி. நம்மாழ்வார் ச்ருதிகளினால் சொல்லப்படும் பரப்ரஹ்ம ஸ்வரூபத்தை "சுடர்மிகு சுருதியுளிவையுண்ட சரனே" என்று முதல் திருவாய்மொழியிலும், அதை அடையும் உபாயமாகிற ஆத்ம ஸமர்ப்பண க்ரமத்தை இரண்டாந் திருவாய்மொழியிலும் வெகு விலக்ஷணமாகச் சொல்லிப்போந்து, மற்றுமுள்ள பாசுரங்களினால் அவன் குணங்களில் ஈடுபட்டு, பாகவத சேஷத்வ பர்யந்தமான பகவத் சேஷத்வமாகிற கைங்கர்யமே பரம புருஷார்த்தம் என்று அறுதியிட்டார். வேத புருஷன் "ப்ரஹ்மணே த்வா மஹஸ ஓமித்யாத்மானம் யுஞ்ஜீத" என்பதை, ஆழ்வார், "உம்முயிர் வீடுடையானிடை வீடுசெய்ம்மினே" என்று சொல்லி, அவ்வளவோடு நிற்காமல், அந்த ஆத்ம ஸமர்ப்பண க்ரமம் பாகவத கைங்கர்யத்திலேதான் முடியும் என்பர். "அவனடியார் அடியே கூடும் இது வல்லால் விடுமாறு என்பது என்?"

ஆசார்ய ஹ்ருதயக்காரர் ஸ்ரீ கீதையிலும் திருவாய்மொழியிலும் 15-பரம தத்வார்த்தங்கள் உள்ளன என்கிறார். அவை 1. தத்வ விவேகம் 2. நித்ய அநித்யத்வம் 3. நியந்த்ருத்வம் 4. ஸௌலப்யம் 5. ஸாம்யம் 6. அஹங்காரதோஷம் 7. இந்த்ரிய பலம் 8. மந ப்ராதாந்யம் 9. கரண நியமநம் 10. ஸுக்ருதிபேதம் 11. தேவாஸுர விபாகம் 12. விபூதியோகம் 13. விச்வரூப தர்சநம் 14. ஸாங்க பக்தி 15. இருவகை ப்ரபத்தி என்பன. இவற்றுள் :

1. தத்வ விவேகம் என்றால் உண்மைப் பொருள் உணர்தலாம்.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்பார் தமிழ்ப் புலவர் தலைவர். நம் தர்சநத்தில் தத்வம் மூன்றும் ஒன்று. அவை அசித் என்கிற மூலப்ருக்ருதியும், சித் என்கிற ஜீவாத்மாவும், ஈச்வரன் என்கிற பரமாத்மாவும். இவற்றை முறையே

"சூழ்ந் தகன் றாழ்ந் துயர்ந்த முடிவில் பெரும் பாழேயோ" என்றும்
"சூழ்ந் ததனிற் பெரிய பரநன்மலர்ச் சோதீயோ" என்றும்
"சூழ்ந் ததனிற் பெரிய சுடர்ஞான வின்பமேயோ"

என்றும் வைதிக கோஷ்டியில் அபியுக்தரான ஆழ்வார் பரிஹரித்துப் போருவர். ஆயினும் சித்தும் அசித்தும் ஈச்வரனுக்கு ஶரீர ஸ்தாநத்தில் நிற்றலால் மூன்றும் சேர்ந்தது ஒன்றேயாம். ஸ்வரூப பேதத்தால் அவ்வொன்றையே மூன்றாகவும் சொல்லலாம். ஆனால் ஜீவன் இல்லாவிடில் தேஹம் எப்படி நிலைபெறாதோ அப்படியே ஈச்வரன் இல்லாவிடில் சித்தும் அசித்தும் நிலைபெறா. "எத்தேவர் வாலாட்டும் எவ்வாறு செய்கையும் அப்போதே ஒழியும்" என்றும், "நின்னலா விலேன் காண்" என்றும் நிர்வஹிப்பர். ஆகையால் இந்தத் தர்சநம் விசிஷ்ட அத்வைதம் எனப் பேர் பெற்றது.

ஸ்ரீகீதாசார்யன்,

"ந த்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜநாதிபா:"

என்று நானும் நீயும் இந்த ராஜாக்கள் அனைவரும் நித்யர்கள் என்கிற வழியாலே ஜீவபர பேதமும் ஜீவர்களுக்குள் பரஸ்பர பேதத்தையும் தர்சிப்பித்தார். இதனையே ஆழ்வார்,

"அடியே னுள்ளா னுடலுள்ளா
னண்டத் தகத்தான் புறத்துள்ளான்"
"படியே யென்னலாம் படிய னல்லன் பரம்பரன்"
"கடிசேர் நாற்றத் துள்ளாலை யின்ப துன்பக் கழிநேர்மை"
"ஓடியா வின்பப் பெருமையோ னுணர்வி லும்ப ரொருவனே"

என்று நெஞ்சுருகப் பாடுவர். "ஒன்றெனப் பலவெனவறிவரும்" தன்மைப் பெருமையதாம் நம் மதம்.

பண்டைக் காலத்துத் தமிழறிஞர் யாவரும் விசிஷ்டாத்வைத ஸித்தாந்திகளாய் ஸகுண ப்ரஹ்மோபாஸிகள் ஆவர். "நூலே கரகம் முக்கோல் மணையே ஆயுங்காலை அந்தணர்க்குரிய" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தை நோக்கின், அக்காலத்துத் துறவிகள் முக்கோல் பிடித்த முனிகளேயாம்; ஏகதண்டிகளல்லர். முக்கோல் தத்வம் மூன்றென விளக்குங் குறி. வள்ளுவரும் 'ஆதிபகவன் முதற்றே உலகு' என, சித் அசித்துக்கள் அடங்கிய உலகையும் அதற்கு முதற் காரணமான ஆதிபகவனையும் ஒப்பி உரைத்தார்போலும். 'பகவன்' என்கிற ப்ரயோகத்தால் ஸகுண ப்ரஹ்மத்திலேயே நோக்கு. இதனையே 'வாலறிவன்' என்றும், 'மலர்மிசை ஏகினான்' என்றும், 'எண் குணத்தான்' 'இறைவன்' என்றும் பல்வகையாகப் பேசுவர்.



வேதத்தின் உட்பொருளை உள்ளபடி உணர்ந்த ஆழ்வார் உபக்ரமத்திலேயே,

"உடல்மிசை யுயிரெனக் கரந் தெங்கும் பரந்துளன்"

என்று இந்தத் தர்சநத்தை ஶாரீரிக ஶாஸ்த்ரமாக நிர்வஹிப்பர். இந்த நிர்வாஹம் அதிரஸமாயும் தத்வ ஹித புருஷார்த்த ப்ரதிபாத்யமாயும் இருக்கும். 'சரீரமாகிற உடலும் சரீரியாகிற உயிரும் எப்படி வேறுபட்டிருக்குமோ, அப்படியே தத்வமும் வேறுபட்டிருக்கும்' என்கிற தத்வத்ரயத்தையும், ஒவ்வொரு ஶரீரமும் அதிலுள்ள அங்கங்கள் யாவும் நிலைக்க வேண்டுமானால் ஶரீரியாகிற ஆத்மாவின் இட்டவழக்காய் அதனைக் கால்கட்டிப் பிழைக்க வேண்டுவதுபோல் நாமும் எம்பெருமானுக்கு அநந்யார்ஹ சேஷத்வமாய் அவன் அடிக்கீழ் அமர்ந்து புகுதலே ஹிதம் (உபாயம்) என்றும், ஒவ்வொரு அங்கமும் தந்தாமுக்குள்ள ஸ்வதர்மாநுஷ்டாநத்தைச் செய்வதனின்றும் ஒரு அங்கம் மற்றோர் அங்கத்திற்கு உதவி புரிந்து அவையனைத்தும் சேர்ந்து அச்சரீரிக்குத் தொண்டு புரிவதுபோல் ப்ரீதிகாரிதமான பாகவத கைங்கர்யமாகப் பர்யவஸிக்கிற பகவத் கைங்கரியமே பரம புருஷார்த்தமென்பதை இச்சாரீரிக ஶாஸ்த்ரத்தின் வாயிலாக விளக்குவர். இந்த ரஹஸ்யம் தெரிந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாவரும் பரதுக்கம் ஸஹியாமல் அநர்த்தப்படும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர்கள் ஆவர். இதுதான் இவர்கள் ஸ்வரூபம். "ஒருவனுக்கு வைஷ்ணவத்வம் உண்டு இல்லை என்பது தனக்கே தெரியுங்காண் என்று ஜீயர் பலகாலும் அருளிச் செய்வர். பிறர் அநர்த்தம் கண்டால் ஐயோ! என்று இருந்தானாகில் நமக்குப் பகவத் ஸம்பந்தமில்லை என்று இருக்க அடுக்கும்". ஆகையால் தத் சேஷத்வம் ததீய சேஷத்வ பர்யந்தம் மானால்தான் ஸித்திக்கும்.

2. நித்ய அநித்யத்வம்.

"அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தா: ஶரீரிண:
அநாஶிநோ(அ)ப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்யஸ்வ பாரத"

என்று ஸ்ரீகீதையில் ஆத்மா அழிவில்லாதது என்றும் ஶரீரங்கள் அழிகையே ஸ்வபாவமாக உடையன என்றும் உபதேசித்தார். இதனையே ஆழ்வார்,

"மின்னின் னிலையில, மன்னுயி ராக்கைகள்
என்னுமி டத்திறை, உன்னுமி னீரே"

என்று அவற்றின் ஸ்வபாவங்களைச் சொல்லி, ஆகையால் எம்பெருமானை உபாஸியுங்கோள் என்பர். வள்ளுவர்,

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு"

என்பர். ஆகையால் அநித்யாநுபவங்களைக் கைவிட்டு நித்யாநுபவங்களிலே கண்ணோக்கவேண்டும்.

3. நியந்த்ருத்வம்—அதாவது: ஸகல பூதங்களின் ஹ்ருதயத்தில் நித்ய வாஸம் செய்துகொண்டு அவற்றின் ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கும் காரணம் ஸர்வேச்வரனே என்பதாம்.

“𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌹𑍃𑌦𑍍𑌦𑍇𑌶𑍇𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿
𑌭𑍍𑌰𑌾𑌮𑌯𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍂𑌢𑌾𑌨𑌿 𑌮𑌾𑌯𑌯𑌾”

என்று ‘ஸகல ப்ராணிகளின் ஹ்ருதயத்தில் தானே நித்யவாஸம் செய்துகொண்டு, அவைகளின் கர்மாநுகுணமாக யந்த்ரத்தில் ஏற்றிய வஸ்துக்களைப் போல் தேஹ ஸம்பந்தங்களை நானே உண்டு பண்ணுகிறேன்’ என்றார் ஸ்ரீ கீதையில். இதனையே ஆழ்வாரும்,

“மனனக மலமற மலர்மிசை யெழுதரும்” என்றும்
“நின்றன ரிருந்தனர் கிடந்தனர் திரிந்தனர்
நின்றில ரிருந்திலர் கிடந்திலர் திரிந்திலர்’

என்பர். வள்ளுவரும் “மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்” என்பர். “ஒரு குருவி பிணைத்த பிணை ஒருவரால் அவிழ்க்கப் போகிறதில்லை; ஸர்வ சக்தி கர்மாநுகுணமாகப் பிணைத்த பிணையை அவனையே கால்கட்டி அவிழ்க்கவேணும்” என்பது வ்யக்தம்.

4. ஸௌலப்யம்—யாவருக்கும் ஸர்வ ஸுலபனாயிருக்கை.

“𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑌂 𑌸𑍁𑌲𑌭𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃”

என்று ஸ்ரீ கீதாசார்யனும்,

“பத்துடை யடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய வித்தகன்”

என்று ஆழ்வாரும் ஸாதிப்பர். ஆகையால் எம்பெருமான் ஆச்ரித ஸுலபனாகையால் ஸாபராத ஜந்துக்களுக்கும் அப்புகலிடம் மிகவும் எளிதாம். இது நோக்கியே வள்ளுவரும் ‘அறவாழி அந்தணன்’ என்றார்.

5. ஸாம்யம்—பக்ஷபாதம் இல்லாமல் இருக்கை.

“𑌸𑌮𑍋𑌽𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌨 𑌮𑍇 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌯𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌨 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃”

நான் யாவருக்கும் ஸமானமாய் இருப்பவன் என்று ஸ்ரீகீதாசார்யன் உபதேசித்தார். இதனையே ஆழ்வாரும்

“கொள்கை கொளாமை யிலாதான், எள்கலி ராக மிலாதான்
விள்கை விள்ளாமை விரும்பி, உள்கலந் தார்க்கோ ரமுதே” என்பர்.

இதனையே வள்ளுவரும் “வேண்டுதல் வேண்டாமை இலாதான்” என்பர்.



6. அஹங்கார தோஷம்—“𑌅𑌹𑌂𑌕𑌾𑌰 𑌵𑌿𑌮𑍂𑌢𑌾𑌤𑍍𑌮𑌾 𑌕𑌰𑍍𑌤𑌾𑌹𑌮𑌿𑌤𑌿 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇” என்று கீதாசார்யன் ஸாதித்ததை,

“நீரநும தென்றிவை, வேர்முதல் மாய்த்து
இறைசேர்மின் உயிர்க்கதின், நேர்நிறை யில்லே”

என்று ஆழ்வாரும் பணித்தார். இதனை

“யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்” என்று வள்ளுவரும் கூறினர்.

7. இந்திரியபலம்—“𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑍀𑌨𑌿 𑌹𑌰𑌨𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑌭𑌂 𑌮𑌨𑌃” என்று கீதாசார்யன் அருளிச்செய்ததை,

“விண்ணுளார் பெருமாற் கடிமை செய்வாரையும் செறுமைம்புலனிவை
மண்ணு ளென்னைப் பெற்றா லென்செய்யா மற்று நீயும் விட்டால்
பண்ணுளாய்க் கவிதன்னுளாய்ப் பத்தியினுள்ளாய்ப்
பரமீசனே வந்தென்
கண்ணுளாய் நெஞ்சுளாய் சொல்லுளாய் ஒன்று சொல்லாயே”

என்று ஆழ்வாரும்,

“சுவையொளி யூறோசை நாற்ற மென்றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு”

என்று வள்ளுவரும் கூறுவர்.

8. மநப்ராதாந்யம்—

“𑌅𑌸𑌂𑌶𑌯𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌮𑌨𑍋 𑌦𑍁𑌰𑍍𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 𑌚𑌲𑌮𑍍”

என்று கீதாசார்யன் ஸாதித்ததை ஆழ்வார்,

“மனத்தை வலித்து” என்றும்,

அடங்கெழில் சம்பத்து, அடங்கக்கண் டீசன்
அடங்கெழி லஃதென் றடங்குக உள்ளே”

என்றும் ஸாதித்தார். இதனை,

“மனத்துக்கண் மாசிலனாத லனைத்தற
னாகுல நீர பிற”

என்பர் வள்ளுவர்.

9. கரணநியமநம்—அதாவது யாவத் கரணங்களையும் வெளிப்போகாமல் அடக்கி எம்பெருமானிடத்தில் செலுத்துகையாம்.

“𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌸𑌂𑌯𑌮𑍍𑌯 𑌯𑍁𑌕𑍍𑌤 𑌆𑌸𑍀𑌤 𑌮𑌤𑍍𑌪𑌰𑌃
𑌵𑌶𑍇 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾”

என்று கீதாசார்யனும்,

"உள்ள முரைசெயல், உள்ளவிம் மூன்றையும்
உள்ளிக் கெடுத்திறை, உள்ளி லொடுங்கே" என்று ஆழ்வாரும்,

"இருமைவகை தெரிந்து ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்றிவ் வுலகு"

என்று வள்ளுவரும் கூறுப.

10. ஸுக்ருதிபேதம்—பலவிதமான புண்யசாலிகள்.

"சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோऽர்ஜுந ।
ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ, ஜ்ஞாநீ, ச பரதர்ஷப ॥"

என்று கீதாசார்யன் சொன்னதை ஆழ்வார் விஸ்தரித்து 'ஒருநாயகமாய்' என்கிற திருவாய்மொழியில் ஐச்வர்ய காமனையும், 'குறுகு மிக வுணர்வத்தொடு' என்கிற திருவாய்மொழியில் ஜிஜ்ஞாஸுவான கைவல்ய காமனையும், 'குணங்கொள் நிறைபுகழ் மன்னர்' என்று அபூர்வ ஐச்வரிய காமனையும், 'திருநாரணன்தாள் காலம் பெறச் சிந்தித் துய்ம்மினோ' என்று பகவத் சரணாகதியான காமனையும் சொல்லி, உய்யும் வகை திருநாரணன் தாளல்லது மற்றில்லை என்று நிஷ்கர்ஷிப்பர்.

11. தேவாஸுரவிபாகம்,

12. விபூதியோகம் (அதாவது: உபய விபூதி நாதத்வம்)

13. விச்வரூபதர்சநம்—இவை யாவர்க்கும் தெரிந்த விஷயமாகையால் விரித்துரைத்தல் வேண்டா.

14. ஸாங்கபக்தி—அங்கத்தோடு கூடின பக்தி.

"மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு ।
மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத்பராயண: ॥"

என்று ஸ்ரீகீதாசார்யனும்

"மாலை நண்ணித் தொழுதெழுமினோ வினைகெடக்
காலைமாலை கமலமல ரிட்டுநீர்"
"புனைந்தகண்ணி நீர் சாந்தம் புகையொடேந்தி வணங்கினால்"

என்று ஆழ்வாரும் பணிப்பர்.

15. பக்தியை அங்கமாக வுடையதும், ஸ்வதந்த்ரத்வேநவுமான ப்ரபத்தி இருவகை.

இந்த பக்தி ப்ரபத்திகளில் அநேக விஷயங்கள் அடங்கியுள்ளதால் இவ்யாஸம் பெருகும் என்றஞ்சி விடுத்தோம். அதனைப் பின்னால் விளக்குவோம்.

---

# மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உ.வ. வி. செ. ராமாநுஜாசார்யர், கும்பகோணம்]

(சென்ற புரட்டாசி மாஸத்து ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

## மூன்றாவது பாதம்

191. முதல் இரண்டு பாதங்களில் வேதத்தில் சொல்லப்பட்ட கர்மங்களை யார் செய்கிறது என்றும், அவைகளை எப்படிச் செய்கிறது என்றும் விசாரிக்கப்பட்டது. இந்தப் பாதத்தில் கர்மங்களுக்கு ஏற்பட்ட எல்லா அங்கங்களுடன் அவைகளைச் செய்ய முடியாவிட்டால், முடியாத அங்கங்களை விட்டுவிடலாமா? என்று விசாரிக்கப்படுகிறது.

192. கீழே 184-வது பாராவில் அக்நிஹோத்ரம் என்பது நித்யம் என்று சொல்லப்பட்டது. அதினுடைய எல்லா அங்கங்களுடன் சேர்த்து அதைச் செய்யவேண்டுமே; சில அங்கங்களைச் செய்யமுடியாவிட்டால், அவைகளை விட்டுவிடலாமா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—எல்லா அங்கங்களுடன் கூடிய முக்யமான கர்மம் பலனைக் கொடுக்கும். அவைகளில் ஏதாவது குறைந்தால் பலன் கிடைக்காதே.

ஸித்தாந்தம்—அக்நிஹோத்ரம் முக்யமான கர்மம். அதை விதிக்கிற வாக்யத்தில் ஜீவனத்தை (உயிரோடிருப்பதை) நிமித்தமாகச் சொல்லியிருக்கிறது. அந்த நிமித்தம் இருக்கும்போது முக்கியமான கர்மத்தை விட முடியாது. அங்கங்களோ வேறு வாக்யங்களால் விதிக்கப்பட்டவைகள். ஏதாவது அங்கம் முடியாததா யிருந்தால், அதை விட்டுவிட்டுச் செய்யக் கூடிய அங்கங்களுடன் சேர்த்து முக்யமான கர்மத்தைச் செய்யவேண்டும். (அதி-1)

193. கீழே சொன்ன நியாயம் காம்ய கர்மங்கள் விஷயத்தில் வருமோ என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—வரும்.

ஸித்தாந்தம்—அங்கம் குறைந்தால், ஆசைப்பட்ட பலன் உண்டாகாது. எல்லா அங்கங்களுடன் கூடின கர்மம் பலனுக்கு ஸாதநமாக வேதம் சொல்லுகிறது. முக்யமான கர்மத்தை விட்டால் எப்படிப் பலன் கிடைக்காதோ. அப்படியே அங்கத்தை விட்டாலும். இன்னது பலனைக் கொடுக்

கும் என்பது வேதத்தைக்கொண்டே அறியவேணும். ஆகையால் முக்யமோ அங்கமோ எதெது சொல்லப்பட்டிருக்கிறதோ அவைகளில் ஒன்று குறைந்தாலும் பலன் உண்டாகாது. ஓர் ஊருக்குப்போக வண்டி ஸாதநம். சக்ரம் அச்சு முதலானவைகளுடன் சேர்ந்துதான் அது ஸாதநமாகும். ஆகையால் எல்லா அங்கங்களுடன் சேர்த்து கர்மங்களை எப்போது செய்ய முடியுமோ? அப்போதுதான் காம்ய கர்மங்களைச் செய்யவேண்டியது.

(3) ஒருகேள்வி—நித்யமான கர்மங்களிலும் ஏன் இப்படிச் சொல்லக்கூடாது? பதில்-அதற்கு ஜீவநம் நிமித்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வீடு எரிந்துபோனால் அதை நிமித்தமாக வைத்துக்கொண்டு 'க்ஷாமவதீ' என்கிற இஷ்டி விதிக்கப்படுகிறது. உலகத்திலும் பசித்தவன் சாப்பிடுகிறான். பசி நிமித்தம் அப்படியே ஜீவனம் இருக்கிறவரையில் கர்மத்தைக் கட்டாயம் செய்யவேண்டும்.

(3) மறுபடி கேள்வி—ஜீவநம் எப்படி நித்திய கர்மங்களுக்கு நிமித்தமோ, அப்படியே பலனில் ஆசையும் நிமித்தம். அதிருக்கும்போது அதைக் கொடுக்கும் கர்மத்தை ஏன் செய்யவேண்டாம் என்று. பதில்—காம்ய கர்மத்தைச் செய்யாமல்போனால், ப்ரத்யவாயமில்லை (குற்றமில்லை). நித்ய கர்மத்தைச் செய்யாவிட்டால் குற்றமுண்டு.

(4) இன்னுமொரு கேள்வி—காம்ய கர்மத்தைச் செய்யாமல்போனால், வரும் என்று வேதம் சொல்லுகிற ப்ரத்யவாயம் இல்லாமல்போனாலும் பலன் உண்டாகவில்லை என்கிற கெடுதல் இருக்கிறதே? பசித்தவன் சாப்பிடாமலிருந்தால் ராஜாவின் தண்டனையில்லை ஆனாலும் பித்தம் அதிகமாய் கஷ்டமுண்டாகுமே என்று. பதில்—பலன் உண்டாகவேணுமானால், எப்படி அது உண்டாகுமோ, அப்படி அதை ஆசைப்பட்டவன் முயற்சி செய்யவேண்டியது. பலன் எல்லா அங்கங்களுடன்கூடின கர்மத்தால் கிடைக்கும் என்று கீழே சொல்லப்பட்டது. நித்ய கர்மத்தைப் பலனுக்காக விதிக்கவில்லை. ஜீவனம் என்கிற நிமித்தமிருந்தால்தான். அப்படி யிருப்பதால், அங்கங் குறைவு இருந்தாலும், நிமித்தத்தைக்கொண்டு நைமித்திகத்தைச் செய்யவேண்டியது என்பது போய்விடாது. ஆகையால், அங்கக் குறைவு இருந்தாலும் அதைச் செய்யவேண்டியது. செய்யாவிட்டால் ப்ரத்யவாயம் உண்டென்றும், ப்ராயச்சித்தம் செய்யவேண்டும் என்றும் சாஸ்திரம் சொல்லுகிறது. காம்யங்களைச் செய்யாவிட்டால், ப்ரத்யவாயமுமில்லை, ப்ராயச்சித்தமும் செய்யவேண்டாம். ஆகையால் முதல் பாராவில் சொன்ன முடிவு அசைக்கப்படாமல் நிற்கிறது. (அதி—2)



194. நித்யகர்மத்தைச் செய்யக்கூடிய அங்கங்களுடன் செய்யவேண்டியது என்றும், முடியாத அங்கத்தை விட்டுவிடலாம் என்றும் சொல்லப்பட்டது. யாகத்துக்கு வேண்டிய திரவியம் இல்லாவிட்டால், அதில்லாமலே செய்யலாமா? அல்லது அதற்குப் பதிலாக வேறொரு த்ரவியத்தை வைத்துக்கொண்டு அதைச் செய்யவேண்டுமா? என்பது இந்தப்பாதத்தில் பாக்கி அதிகரணங்களால் விசாரிக்கப்படுகிறது. இப்படி வைத்துக்கொள்ளுகிற த்ரவ்யத்துக்கு ப்ரதிநிதி என்று பெயர்.

195. முதலில் த்ரவ்யங்களுக்கு ப்ரதிநிதியை வைத்துக்கொள்ளலாமா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—கூடாது. வேதம் ஒரு த்ரவ்யத்தையும் ப்ரதிநிதியாகச் சொல்லவில்லையே.

ஸித்தாந்தம்—ப்ரதிநிதியை வைத்துக்கொள்ளவேண்டியது. விதிக்கப்பட்ட கர்மத்தை த்ரவ்யமில்லாமல் செய்யமுடியாது. ஆகையால் ஒரு த்ரவ்யத்தை வைத்துக்கொண்டு அதைச் செய்யவேண்டியது என்று பொதுவாய் ஏற்படுகிறது. வ்ரீஹீயைக்கொண்டு புரோடாசத்தைப் பண்ணு என்பது நியமவிதி; அதைக்கொண்டே செய்யவேண்டியது என்று. அது அகப்படாமல்போனால் அந்த விதி உதாஸீநமாயிருக்கிறது. அப்போது வ்ரீஹியைக்கொண்டே செய்யவேண்டுமென்கிற நியமம் போய்விடுகிறது. ஆனபோதிலும் ஒருத்ரவ்யத்தை வைத்துக்கொள்ளவேணும் என்று பொதுவாய் ஏற்பட்டதைத் தடுக்கமுடியாது. பொதுவாய்ச் சொன்னபோதிலும் ஏதாவது ஒன்றைச் சொல்லுகிறது என்று ஒரு பிரமாணம் இருக்கிறது. அதை அநுஸரித்து ஒரு த்ரவ்யத்தைப் பிரதிநிதியாக வைத்துக்கொள்ளவேண்டியது. த்ரவியம் அகப்படவில்லை யென்று கர்மத்தை விடக்கூடாது. (அதி—4)

196. த்ரவ்யத்துக்கு ப்ரதிநிதி இருப்பதுபோல, தேவதை, அக்னி, மந்த்ரம், ஸம்ஸ்காரம் இவைகளுக்கு ப்ரதிநிதிகளுண்டா என்று ஸந்தேஹம்.

பதில்—இல்லை. முக்யமான த்ரவ்யத்தாலே ஆகவேண்டிய கார்யத்தை ப்ரதிநிதியாக வைத்துக்கொள்ளுவது செய்யுமானால், அதை ப்ரதிநிதியாக வைத்துக்கொள்ளலாம். அப்படியில்லை. தேவதை என்பது உத்தேச்யம் மாத்திரமன்று. விதிவாக்யங்கள், அக்னி இந்திரன் முதலான சொற்களைச் சொல்லி, அந்தச் சொற்களால் சொல்லப்பட்டதை உத்தேசித்து யாகங்களைச் செய்யும்படி சொல்லுகின்றன. அந்தந்த இடங்களில் அந்தந்தச்

சொல்லால் சொல்லப்பட்டதுதான் தேவதை. ஆகையால் வேறொன்று தேவதையாயிருக்கமுடியாது. தேவதையல்லாததை தேவதையாக வைத்துக் கொண்டு அதற்குக் கொடுப்பது யாகமன்று. ஆகையால் விதிக்கப்பட்ட தேவதையின் காரியம் வேறொன்றால் முடியாது. ஆஹவநீய அக்னியில் ஹோமஞ் செய்வதற்கு ப்ரயோஜநம் அத்ருஷ்டம். அது வேறொன்றால் கிடைக்கும் என்று ப்ரமாணமில்லை. வ்ரீஹிக்குப் பதிலாக நீவாரத்தை ப்ரதிநிதியாக வைத்துக்கொள்ளும்போது, புரோடாசம் செய்யப்படுவது த்ருஷ்டமான ப்ரயோஜநம். அதை எல்லாரும் பார்க்கிறோம். மந்திரம் செய்யும் வேலை செய்யப்போகும் கர்மத்தின் தேவதை முதலானவைகளைக் காட்டுவது. இது த்ருஷ்டப்ரயோஜனம் தான். இந்தக் காரியமானது த்யானத்தாலேயும் செய்யப்படும். ஆனால் மந்திரத்தை உச்சரிக்கும்படி சொல்லியிருப்பதால், ஏற்பட்ட மந்திரத்தையே சொல்லவேண்டியது. வேறு மந்த்ரத்தாலாவது வேறு சொற்களாலாவது அந்தக் காரியம் முடியாது. மேலும் ஒரு மந்திரத்துக்கு ப்ரதிநிதியை வைக்கிறவன் அதின் அர்த்தத்தை நினைக்க வேண்டும். அப்போது மந்திரத்தின் கார்யம் ஆய்விட்டதால், ப்ரதிநிதி வேண்டியதில்லை. ஒரு ஸம்ஸ்காரம் செய்யும் கார்யத்தை வேறு ஸம்ஸ்காரம் செய்யக்கூடும் என்பதற்கு ப்ரமாணமில்லை. அதற்கும் ப்ரதிநிதி இல்லை (அதி—5—சா—473)

197. யஜமாநனுக்கு ப்ரதிநிதியுண்டா என்று ஸந்தேஹம்.

பதில்—கிடையாது. என்ன காரணத்தால் ப்ரதிநிதியைத் தேடுகிறது. யஜமாநன் இறந்து போய்விட்டானா? தேசாந்த்ரம் போயிருக்கிறானா? அல்லது வேறு வேலை செய்துகொண்டிருக்கிறானா? என்று கேட்கவேண்டும். அவன் இறந்துபோய்விட்டான் என்றால், அகப்படாத த்ரவ்யத்துக்கு ப்ரதிநிதியைத் தேடுவதுபோல யஜமாநனுக்குப் ப்ரதிநிதியை எவன் வைத்துக் கொள்ளுகிறது. எவன் அத்வர்யு முதலானவர்களை ஏவுகிறது. பத்தினி செய்யலாமே என்றால், அவளுக்கு ஸ்வாதந்த்ரியமில்லை; அவளுக்கு அக்னியுமில்லை. தேசாந்த்ரம் போய்விட்டான், அல்லது வேறு வேலை செய்து கொண்டிருக்கிறான் என்றால், அவன் பலனை அடைகிறவன்; அவனுக்குச் சில ஸம்ஸ்காரங்கள் செய்யவேண்டியது. இவைகளை வேறொருவன் செய்து கொள்ளுவதால் யஜமாநனுக்கு எப்படி யோக்யதை உண்டாகும். (அதி—7)

198. இம்படி த்ரவ்யத்துக்கு மாத்ரம் ப்ரதிநிதி உண்டென்று முடிவு செய்தபிறகு, எதை ப்ரதிநிதியாக வைத்துக்கொள்ளலாம் என்பது விசாரிக்கவேண்டியது.

1. முதலில் "சௌத்ரம் சரும் நிர்வபேத் ஸ்ரீகாம:" என்பது ஒரு வாக்யம். இதின் பொருள்—ஸம்பத்தை ஆசைப்படுகிறவன் பயறினால்



சரு செய்து நிர்வாபம் செய்யவேண்டியது என்பது. பயறு அகப்படாவிட்டால் உளுந்து முதலானவைகளை ப்ரதிநிதியாக வைத்துக்கொள்ளக் கூடாது. ஏன் என்றால், "அயஜ்ஞியா வை மாஷா: அணகா: கோத்ரவா:" என்று உளுந்து முதலான மூன்று தானியங்கள் யஜ்ஜத்துக்குத் தகுந்தவைகள் அல்ல என்று சொல்லியிருக்கிறது. இதனால் அவைகள் ப்ரதிஷித்தங்கள் என்பது ஏற்படுகிறது. ஆகையால், வேதம் வேண்டாம் என்றது ப்ரதிநிதியாகக் கூடாது. (அதி—6)

(2) வ்ரீஹி (நெல்) அகப்படாமல் போனால், யவத்தையாவது வைத்துக் கொள்ளலாமா என்பது ஸந்தேஹம்.

பதில்—கூடாது. வ்ரீஹியையாவது, யவத்தையாவது வைத்துக் கொண்டு யாகம் செய்யலாம் என்று வேதம் சொல்லுவதால் வ்ரீஹியை த்ரவ்யமாக வைத்துக் கொண்டவனுக்கு யவம் கிடையாது (அதி—12)

வ்ரீஹியை கொண்டே யாகம் செய்கிறேன் என்று ஸங்கல்பம் செய்தவனுக்கு வ்ரீஹிதான் யாகத்துக்கு அங்கம், யவம் அங்கமன்று. வ்ரீஹியைக் கொண்டு யாகம் செய்கிறேன் என்று ஸங்கல்பித்த பிறகு, யவத்தை உபயோகப்படுத்தினால், 'நாந்ருதம் வதேத்' (பொய் சொல்லக்கூடாது) என்ற யாகத்தின் அங்கமான ப்ரதிஷேதத்தை மீறினவனாவன் (சா—477)

(3) பின்னை எதை ப்ரதிநிதியாக வைத்துக் கொள்ளலாம் என்றால், முக்ய த்ரவ்யத்துக்கு மிகவும் ஒத்திருப்பதை எடுத்துக் கொள்ள வேண்டும். ஏன் என்றால் "வ்ரீஹிபிர்யஜேத" என்கிறவாக்யம், வ்ரீஹி ஜாதி புரோடாசத்தைச் சொல்லவில்லை. வ்ரீஹி ஜாதியால் அதின் அவயவங்கள் காட்டப்படுகின்றன. அவைகள் தான் புரோடாசத்தைச் செய்கின்றன. அவைகள் தான் முக்யமான த்ரவ்யம். அவைகள் வ்ரீஹியைப் போலிருக்கும் நீவாரத்தில் அதிகமாக இருக்கின்றன. ஒன்றின் அவயவங்கள் இன்னொன்றில் அதிகமாயிருப்பதால் இரண்டுக்கும் ஒற்றுமை (ஸாத்ருச்யம்). (அதி—1 )

அவயவங்கள் தான் சேர்ந்து ஒரே விதமாகி, அவைகளையுடைய த்ரவ்யத்தின் பெயரால் சொல்லப்படுகின்றன. அவைகளில் ஜாதி என்பது இருந்து கொண்டு, மற்ற வஸ்துக்களிலிருந்து அவைகளைப் பிரிக்கிறது. அவயவங்களும் அவைகளையுடையதும் (அவயவி) வேறு அன்று. ஸத்ருசமான த்ரவ்யத்தை ப்ரதிநிதியாக வைத்துக் கொண்டால், முக்யமான த்ரவ்யத்தின் வெகு அவயவங்கள் அகப்படும். சில அவயவங்களும் ஜாதி மாத்ரம் அகப்படாமல் போகும். ஸத்ருசமில்லாததை ப்ரதிநிதியாக வைத்துக்கொண்

டால், எல்லா அவயவங்களும் ஜாதியும் போய்விடும். ஆகையால் ஸத்ருச மானதையே ப்ரதிநிதியாக எடுத்துக் கொள்ள வேண்டியது (சா—476)

(199) 'யதி ஸோமம் ந விந்தேத, பூதீகாநபி ஷுணுயாத்' என்று ஒரு வாக்யம் இருக்கிறதே; ஸோமத்துக்கு ஸத்ருசமாயிருப்பதால், பூதீகத்தை ப்ரதிநிதியாக கீழே சொன்ன நியாயத்தாலே வைத்துக் கொள்ளலாமே, இந்த வாக்யத்தின் ப்ரயோஜநம் என்ன என்று ஸந்தேஹம்.

பதில்—பூதீகம் போல் ஸத்ருசமான த்ரவ்யங்கள் அநேகமிருக்கலாம். அவைகளில் பூதீகத்தைத்தான் ப்ரதிநிதியாக வைத்துக் கொள்ளவேண்டியது என்று நியமவிதி. பூதீகத்தைப் புதிதாய் விதிக்கிறது என்று கொள்ளுவதைக் காட்டிலும், நியமவிதியாகக் கொள்ளுவதில் லாகவம் இருக்கிறது. (அதி-13)

ஸத்ருசமாயிருப்பது ப்ரதிநிதியை வைத்துக் கொள்ளுவதற்குக் காரணம் அன்று. முக்ய த்ரவ்யம் அகப்படா விட்டால், ஏதாவது ஒன்றை ப்ரதிநிதியாக வைத்துக் கொள்ள வேண்டும். ஆகையால் முக்ய த்ரவ்யம் அகப்படாமையே காரணம். ஸத்ருசமாயிருப்பது மற்ற வஸ்துக்களை விட்டு ஸத்ருசமானதையே எடுப்பதற்கு காரணம். ஸத்ருசமான வஸ்துவைத் தேடும் போது, இந்த வசநம் வந்து பூதீகத்தையே வைத்துக் கொள் என்று விதிக்கிறது, (சா—477)

200. முக்யமான த்ரவ்யம் அகப்படாமல் போனால், ப்ரதிநிதியை வைத்துக் கொள்ளுகிறது என்று கீழே தீர்மானிக்கப்பட்டது. முக்ய த்ரவ்யம் இருக்கிறது. ஆனால் கொஞ்சமாயிருக்கிறது; அல்லது ஸம்ஸ்காரங்களைப் பெற்றுக் கொள்ளத்தகுதியில்லை; அப்போது என்ன செய்கிறது? என்று ஸந்தேஹம்.

(1) முக்யமான ஹவிஸ்ஸுகளுக்கு வேண்டிய வ்ரீஹி (நெல்) இருக்கிறது; ஆனால் அது ஸ்விஷ்டக்ருத் யாகம்.; இடாபக்ஷணம் இவைகளுக்குப் போதாது. பதில்—வ்ரீஹியைக் கொண்டு புரோடாசத்தைச் செய்ய வேண்டிய தாகையால், ப்ரதான யாகங்களுக்கு உதவுகிறது. ஆகையால் அதை விட்டு விடக்கூடாது. முக்யமான யாகங்களுக்குக் குறைவில்லாமைக்காக வ்ரீஹியை வைத்துக் கொள்ள வேண்டியது, அதில்லாமையால் மற்ற வியாபாரங்கள் முடியாத போனால் அவைகளை விட்டு விடலாம். ஆகையால் ப்ரதிநிதி கூடாது. (அதி—21)

(2) யூபத்துக்கு முக்யமானது வதிரம். அது மெலிதாயிருப்பதால், எட்டுப் பட்டையுள்ளதாகச் செதுக்கத் தகுந்ததன்று. கதிரம் என்பது பருத்ததாயிருப்பதால், தக்ஷணம் முதலான ஸம்ஸ்காரங்களுக்குத் தகுந்தது. எதை வைத்துக்கொள்ளுகிறது என்றால், முக்யமானது கிடைத்தால்



அதற்குக் குணமில்லாமையைப் பொறுத்துக்கொள்ளலாம். ஆகையால் பருமனான கதரத்தை விட்டுவிட்டு மெலிதான வதிரத்தையேஎடுத்து கொள்ளவேண்டியது. (அதி—19)

ஸம்ஸ்காரங்ள் த்ரவ்யத்துக்காக ஏற்பட்டவைகள். அவைகளுக்கு வேறு ப்ரயோஜனமில்லை. அவைகளுக்காக த்ரவ்யத்தை விடுவது ந்யாயமன்று. ஸம்ஸ்காரமில்லாத யூபத்தில் பசுவைக் காட்டலாம். த்ரவ்யத்தோடு விரோதிப்பதால், ஸம்ஸ்காரங்களை விட்டுவிடவேண்டியது. (சா—479)

(3) முக்யமான வதிரம் பசுவைக் கட்டுவதற்கும் தகுந்ததாக இல்லாவிட்டால் அன்றோ? அப்போது அதை விட்டுவிடவேண்டியதுதான். அதை வைத்துக்கொள்ளுவதில் ப்ரயோஜநமில்லையே. (அதி—20)

201. முக்யமான த்ரவ்யம் அகப்படாமல் ப்ரதிநிதியை வைத்துக் கொண்டு, கர்மங்களை ஆரம்பித்த பிறகு, முக்யமான த்ரவ்யம் கிடைத்தால் என்ன செய்கிறது என்று ஸந்தேஹம்.

1. நீவாரத்தை வைத்துக்கொண்டு ஸங்கல்பத்தைச் செய்தபிறகு வ்ரீஹி அகப்பட்டது. ஸங்கல்பம் வீணாய்ப் போகாமைக்காக, நீவாரத்தைக் கொண்டே யாகத்தைச் செய்து முடிக்கிறதா? பதில்—வ்ரீஹி முக்யமானது. அதினால் வேதம் சொன்ன ப்ரயோஜனம் கிடைக்கும். ஆகையால் ஸங்கல்பத்தை பாதித்து, வ்ரீஹியைக்கொண்டே கர்மத்தைச் செய்யவேண்டியது. (அதி—16)

சக்திக்குத் தகுந்தபடி சாஸ்த்ரம் சொன்னதைச் செய்கிறேன் என்று ஸங்கல்பம் செய்யவேண்டியது. ப்ரதிநிதியின் ஸ்வரூபத்தைச் சொல்லிச் செய்யக்கூடாது. முக்யமான த்ரவ்யம் அகப்பட்டபிறகு ப்ரதிநிதியைக் கொண்டு கர்மத்தைச் செய்வது சாஸ்த்ரம் சொன்னபடி நடந்ததாகாது. (சா—478)

(2) யூபத்துக்காக வதிரம் அகப்படாமல், கதிரத்துக்கு தக்ஷணம் முதலான ஸம்ஸ்காரங்கள் செய்யப்பட்டன. பிறகு வதிரம் அகப்பட்டது. பசுவை கதரத்தில் இன்னம் கட்டவில்லை. என்ன செய்கிறது என்றால்,பதில்-வதிரம் முக்யமாயிருப்பதால், அதற்கு தக்ஷணம் முதலான ஸம்ஸ்காரங்களைச் செய்யவேண்டியது. அப்போது ஸம்ஸ்காரங்களைப் பெற்ற முக்யமானது கிடைப்பதால், ஸம்ஸ்காரங்களைப் பெற்ற ப்ரதிநிதியைத் தள்ளிவிடவேண்டியது (அதி—17)

பசுவை யூபத்தில் நியோஜநம் செய்த பிறகு வதிரம் கிடைத்தால், அதில் மறுபடியும் நியோஜனம் செய்கிறதா என்றால், செய்யக்கூடாது.

நியோஜநம் முக்யமான கர்மம். அதற்கு குணம் யூபம். குணத்தை அநுஸரித்து முக்யமான கர்மத்தைத் திருப்பிச் செய்வதுகூடாது. (அதி—18)

மூன்றாவது பாதம் முற்றிற்று.

## நான்காவது பாதம்.

202. இந்தப் பாதத்திலும், ஐந்தாவது பாதத்திலும் ப்ராயச்சித்த விஷயமான அதிகாரம் விசாரிக்கப்படுகிறது. எந்த நிமித்தம் உண்டானால், ப்ராயச்சித்தமான நைமித்திகத்தை யஜமாநன் செய்யவேண்டியது என்பது.

முதலில், தர்சபூர்ணமாஸ இஷ்டியில் ஹவிஸை அவதாநம் செய்த பிறகு, அதற்குக் கெடுதி உண்டானால், மறுபடியும் மீதியிருக்கும் புரோடாசத்திலிருந்து அவதாநம் செய்யலாமா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—செய்யலாம். "மத்₄யாத₃வத்₃யதி பூர்வார்தா₄த₃வத்₃யதி" என்கிற வாக்யங்களின்படி அவதானம் பண்ணும் இடங்களான நடுவும் கீழ் பாதியும் மீதியிருக்கும் புரோடாசத்திலிருக்கின்றன.

ஸித்தாந்தம்—சொன்னபடி அவதானம் செய்யக்கூடாது. முழு புரோடாசத்தின் நடுவும் கீழ்ப்பாதியும் ஹவிஸை எடுக்கும் இடங்களாகச் சொல்லப்பட்டன; மீதியிருக்கும் புரோடாசத்தின் பாகங்கள் அன்று. முக்யமான ஹவிஸுக்குக் கெடுதிவந்துவிட்டால், நெய்யை ப்ரதிநிதியாக வைத்துக்கொண்டு யாகத்தைச் செய்யவேண்டியது. அப்படியே வேதம் சொல்லுகிறது—"யஸ்ய ஸர்வாணி ஹவீம்ஷி நஶ்யேயு: து₃ஷ்யேயு: அபஹரேயுர்வா ஆஜ்யேந தா தே₃வதா: பரிஸங்க்₂யாய யஜேத" என்று. இந்த வாக்யத்தில் ஸர்வ என்கிற சொல் நிமித்தத்துக்கு விசேஷணமாயிருப்பதால், அதைச் சொல்லுவதில் கருத்து இல்லை. ஆகையால், கெடுதி கொஞ்சத்துக்கிருந்தாலும், மழுவதுக் கிருந்தாலும் நெய்யைக் கொண்டு செய்யவேண்டியது (அதி 1).

முழு புரோடாசத்தில் நடுவிலிருந்து ஹவிஸை எடுக்க வேண்டியது. அதற்குக் கீழிருக்கும் பாகம் அவதானத்துக்குத் தகுந்ததன்று. அது ஹவிஸ்ஸு அன்று. ஹவிஸ்ஸாக இருந்ததற்கு கெடுதி வந்து விட்டது. அப்போது வேறு ஹவிஸை உண்டு பண்ணவேண்டியது. நியாயப்படி அது இன்னொரு புரோடாசமாகஇருக்கவேண்டும். சொன்ன வாக்யத்தால் நெய் எடுத்துக் கொள்ளப்படுகிறது. (சா. 481)

203. இடாபக்ஷணத்துக்காகவும் ப்ராசித்ர பக்ஷணத்துக்காகவும் அவதாநம் செய்யப்பட்டவைகளுக்குக் கெடுதி உண்டானால், பாக்கியிருக்கும் புரோடாசத்திலிருந்து மறுபடியும் அவதாநம் செய்யலாமா? என்று ஸந்தேஹம்.



பதில்—கூடாது. மீதியிருக்கும் புரோடாசத்தைப்பரிதிகளை அக்னியில் சேர்க்கும் காலத்தில் பக்ஷணம் செய்ய வேண்டியது. இவ்விதமான ப்ரதிபத்தி கர்மம் இருப்பதால், அதைத் தொடக்கூடாது. த்ரவ்யமில்லாமையால் இடாபக்ஷணமும் ப்ராசித்ர பக்ஷணமும் கிடையாது. (அதி 2)

ஒரு கேள்வி—வேறு புரோடாசத்தை என் செய்யக் கூடாது—என்று.

பதில்—இவைகள் மீதியிருக்கும் ஹவிஸுக்கு ப்ரதிபத்திகர்மம். வேறு த்ரவ்யத்தைக் கொண்டு அவைகளைச் செய்வதில் ப்ரயோஜனமில்லை.

கீழே செய்த தீர்மானம் ஸ்விஷ்ட க்ருத்யாகத்துக்கு அவதாநம் பண்ணினதற்கு கெடுதி உண்டாகும் விஷயத்திலும் வரும். ஆனால், அதினால் அபூர்வம் உண்டாக வெண்டியதாகையால், கீழ் பாராவில் சொன்னபடி அந்தயாகத்தை நெய்யைக் கொண்டு செய்யலாம். இடாபக்ஷணத்துக்காக அவதாநம் பண்ணப்பட்டது ஹவிஸு அன்று. ப்ரதிபத்தி தவிர வேறு அபூர்வமும் அதினால் உண்டாகிறதில்லை. ஆகையால் இடாபக்ஷணத்தை விட்டுவிட வேண்டியது. என்பது அதன் பொருள் (சா—482)

204. "பி₄ந்நே ஜுஹோதி" என்று ஒரு வாக்யம் இருக்கிறது. புரோடாசம் செய்வதில் உபயோகப்படும் கபாலம் பிந்நமானால் ஹோமம் செய்ய வேண்டியது என்பது அதன் பொருள். பின்னமாவது என்ன என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—அந்தச் சொல்லுக்கு முழுவதும் உடைந்து போவது என்பது பொருள். உடைந்து போகக்கூடிய பதார்த்தங்களில் ஒன்றின் மேல் ஒன்று படுவதால் ஏதாவது அணுபேர்ந்துபோகும். அது எப்போதும் உண்டாகுமாகையால் நிமித்தமாகாது. எப்போதாவது உண்டாவது நிமித்தம். ஆகையால் இரண்டாய் போவதுதான் நிமித்தம். அப்போது தான் ஹோமம்.

ஸித்தாந்தம்—ஒன்றினால் ஒன்று தேய்க்கப் படும்போது, பின்னமாயிற்று என்கிற அறிவு உண்டாகிறதில்லை; தேய்க்கப்பட்டது என்கிற புத்தி தான் உண்டாகிறது. இங்கே பேதநம் நிமித்தம். கொஞ்சம் உடைந்து போவதும் எப்போதாவது உண்டாகும், அது நிமித்தமாகலாம். ஆகையால் முழுவதும் உடைந்தாலும், கொஞ்சம் உடைந்தாலும் ஹோமமுண்டு. (அதி 4, சா—483)

205. இந்த வாக்ய விஷயத்தில் வேறொரு பூர்வபக்ஷம். அதாவது—விதிக்கப் பட்ட ஹோமம் ஸம்ஸ்காரம். முழுவது முடைந்தால், எதற்கு ஸம்ஸ்காரம் செய்கிறது? ஒன்றோடு ஒன்று தேய்வதால் உண்டாகும் கொஞ்சமான பங்கமும் பின்னமாவது தான். ஆகையால் ஒன்றோடொன்று

தேய்வதற்கும் ஹோமம் செய்யவேண்டியது. இதற்குப் பதில்—நீர் சொன்னபடியானால், "ஹிரு" என்கிற சொல் ஸம்ஸ்காரத்தைப் பெறுவதைச் சொல்லவேண்டும். அத்துடன் அதற்குச் சக்தி போய்விட்டது. நிமித்தத்தைச் சொல்லாது. அப்போது ஹோமம் நைமித்திகமாக இருக்காது; நித்யமாய் விடும். கபாலம் பிங்கமாவது எப்போதாவது உண்டாவதாகையால், ஸம்ஸ்காரம் செய்வது அநித்யம். ஒரே விஷயம் நித்யமாயும் நித்யமல்லாததாயும் ஆகும். அது கூடாது (அதி—4).

206. புரோடாசமான ஹவிஸ்ஸு கபாலங்களில் இருக்கும் போது சாம்பலாய் போய் அதைக் கொண்டு யாகத்தை முடித்தால், அந்த யாகத்தை மறுபடியும் செய்யவேண்டும் என்று ஓர் விதியிருக்கிறது. இங்கே ஸந்தேஹம்–204வது பாராவில் சொன்னபடி முழுவதும் சாம்பலானாலும், ஒரு பாகம் சாம்பலானாலும் யாகத்தைச் செய்யவேண்டியதா? என்று.

பதில்—காய்ந்த கபாலங்களில் புரோடாசத்தை வைத்து, மேலே தணலால் மூடும்போது, ஏதாவது ஓர் பாகம் எவ்வளவு கொஞ்சமாவது சாம்பலாய்ப் போவதைத் தடுக்கமுடியாது. அது எப்போதும் உண்டாவதால் நிமித்தமாகாது. முழுவதும் சாம்பலாவது தான் நிமித்தம். அப்போது தான் இந்த ப்ராயச் சித்தமான இஷ்டியைச் செய்யவேண்டியது. (அதி—5)

207. "யஸ்ய உபயம் ஹவிரார்த்திம் ஆர்ச்சேத் । ஐந்த்ரம் பஞ்சசராவம் ஓதநம் நிர்வபேத்" என்று ஒரு வாக்யம். அதின் பொருள், இரண்டு ஹவிஸ்ஸுகளும் கெட்டுப்போனால் ஐந்துவாணாய் கொண்ட நெல்லை நிர்வாபம் செய்து இந்த்ர தேவதையின் யாகத்தைச் செய்ய வேண்டியது" என்பது. இந்த ஹவிஸ்ஸுகள் தர்சயாகத்தைச் சேர்ந்த பாலும், தயிரும். இங்கே ஸந்தேஹம். ஒரு ஹவிஸ்ஸு கெட்டுப் போனாலும் இந்த ப்ராயச் சித்தத்தைச் செய்யவேண்டியதா? "உபயம்" என்கிற சொல்லின் கருத்து என்ன? அதைச் சொல்லுவதில் கருத்து உண்டா? என்று.

பதில்—'யஸ்ய ஹவிரார்த்திம் ஆர்ச்சேத்' என்று மாத்ரம் சொன்னால், எது கெட்டுப் போயிற்று என்று கேள்வியுண்டாகும். நிமித்தம் சொன்னதாக ஏற்படாது. ஹவிஸ்ஸு என்கிற சொல்லைச் சேர்க்க வேண்டியது. அதைச் சொல்லுவதில் கருத்து உண்டு. அதைக் கொண்டே நிமித்தம் ஏற்படுகிறது. "உபய" என்கிற சொல்லைச் சேர்ப்பதில் கருத்தில்லை. அதைச் சேர்க்காமல், ஹவிஸ்ஸு கெட்டுப் போனால் என்று மாத்ரம் சொன்னால், பால் கெட்டுப் போவதற்கும் ப்ராயச்சித்தமுண்டாகும்; தயிர் கெட்டுப் போவதற்கு முண்டாகும். இப்படி உண்டாவதைத்தான் 'உபய' என்கிற சொல் சொல்லுகிறது. (அநுவாதம் செய்கிறது) ஆகையால் ஒன்று கெட்டாலும், இரண்டு கெட்டாலும் இதைச் செய்ய வேண்டியது (அதி—6)



"யஸ்ய சுஷ்டம் ஆர்ச்சேத்" என்கிற வாக்யத்தால் ஏதோ ஒன்று என்று தோன்றுகிறது. அது நித்யம்; நிமித்தமன்று. ஏனென்றால் எவனுக்கும் எப்போதும் ஏதாவது கெட்டுப் போகிறது. அப்படியே "யஸ்ய ஹவி" என்றாலும், ஹவிஸ்ஸு எப்போது இருப்பதால் நிமித்தமாகாது. ஆகையால், ஹவிஸ்ஸு என்பதற்கு. சுஷ்ட விசேஷணமாக வேணும். அதாவது கெட்டுப் போன ஹவிஸை என்று. இதனாலேயே நிமித்தம் ஏற்படுவதால், "உபய" என்கிற சொல் நிமித்தத்தின் ஸ்வரூபத்தில் சேரவில்லை.

(2) ஆர்த்தியை யடைந்த (சுஷ்டவிசிஷ்டம்) ஹவிஸ்ஸு நிமித்தமன்று; உபயவிசிஷ்டம் ஹவிஸை நிமித்தம் என்று சொல்லுகிறீரோ, அதுவும் நித்யம். யஸ்ய உபயம் சுஷ்டம் என்று சொல்லுகிறீரோ. அதுவும் கூடாது உபயம் என்றால், அந்த இரண்டு என்ன என்று கேள்வி உண்டாகும். ஆகையால் ஹவிஸ்ஸு சுஷ்ட என்கிற இரண்டு சொற்களும் கட்டாயம் வேண்டும்.

(3) கீழே சொன்ன படியானாலும் "உபய" என்கிற சொல் கிட்ட இழிப்பதால், அதுடன் சேர்ந்த ஹவிஸ்ஸு ஆர்த்தியோடு சேருகிறது. தனியாய்ச் சேர்கிறதில்லை - என்று சொல்லுகிறீரோ, அதுவும் கூடாது. எப்படி ஹவிஸ்ஸு என்கிற சொல் "சுஷ்டம்" என்பதிலிருக்கும் ஆக்யாதத்துடன் சேருகிறதோ. அப்படியே "உபய" என்கிற சொல்லும். "ஹவிஸ்ஸு' உபய" என்கிற இரண்டும் ஸமஸ்தபதமன்று, ஸமஸ்தபதமாயிருந்தால், ஒன்றோடொன்று கட்டயம் சேரும். அப்படியிங்கேயில்லை. ஒருவாக்யத்திலுள்ள, பெயர் சொற்களுக்கு ஒன்றோடொன்றுக்கு ஸம்பந்தமில்லாவிட்டால், ஆக்யாதத்துடன் தான் சேர்கை. அப்போது வாக்யம் - யஸ்ய ஹவிராதஷ்டி, யஸ்ய உபயமாதஷ்டி" என்று இருக்கும். இரண்டு நிமித்தங்களையும் கொண்டு ப்ராயச் சித்தம் ஏற்படும். "அருணயா பிங்காக்ஷ்யா ஏகஹாயந்யா ஸோமம் க்ரீணாதி" என்கிற வாக்யத்தில் க்ரியை விசேஷ்டமாயிருந்தது. மற்றவைகள் அதற்கு விசேஷணங்களாயிந்தன, ஆகையால், அவைகளுக்கு ஒன்றோடொன்று ஸம்பந்தமிருந்தது, இங்கேயோ ஹவிஸ்ஸும் உபயம் என்பதும் விசேஷ்யங்கள்; அவைகளுக்குக் கிரியை விசேஷணம், ஒவ்வொரு விசேஷ்யத்துக்கும் கிரியை ஆவிருத்தி பண்ணிச் சேர்க்கவேண்டும், அப்போது வாக்ய பேதம் ஏற்படும். மேலும், ஹவிஸ்ஸு ஆர்த்தி நிமித்தமானால் அது பாலுக்கு மாத்ரம் வரலாம், அல்லது தயிருக்கு மாத்ரம் வரலாம். எங்கள் கக்ஷி ஜயிக்கிறது. (சா—485)

நான்காவது பாதம் முற்றிற்று.

ஸ்ரீ:

# கடிதங்கள்

(1)

## ஸ்ரீ ஹயக்ரீவ வித்யாமந்திரம் :

### இந்த மந்திரத்தின் கொள்கைகளும் நோக்கங்களும் :

1. ஸம்ஸ்க்ருத ஜ்ஞானத்தையும், கலையையும் அபிவிருத்தியுடன் முன்னேற்றம் அடையச்செய்வதும் அதை ப்ரசாரம் செய்வதும். 2. தற்கால ஞானவிவ்ருத்தியை அநுஸரித்த முறையில் இக்கலையை வெளிப்படுத்துவது. 3. ஸம்ஸ்க்ருத ஞானத்திலும் கலையிலும் விசேஷ சிரத்தையையும் உத்ஸாகத்தையும் அளிப்பது.
இந்தக் கொள்கைகளையடைய உபாயங்களாவன:—

1. இலவச பாடசாலையை நடத்துவது. 2. ப்ரதி வாரமும் ஸம்ஸ்கிருத ஸம்பந்தமான விஷயங்களைப் பற்றித் தகுந்த அறிஞர்களைக் கொண்டு ப்ரஸங்கங்களை நடத்தி வைப்பது. 3. வித்வான்களின் மஹாநாடுகளை நிறுவுவது. 4. வாக்வன்மைப் போட்டிகளையும் மனப்பாடப் போட்டிகளையும் நடத்தி, அவற்றில் வெற்றி பெற்றவர்களுக்குத் தக்க பரிசளிப்பது. 5. மத ஸம்பந்தமானவும், ஸந்த்யாவந்தனம் முதலிய அநுஷ்டானங்களைப் பொருத்தும், குறுகிய காலத்தில் போதனை செய்ய ஏற்பாடு செய்வது. 6. ஆங்கில வித்தியாசாலை மாணவர்களுக்கு அவரவர் பள்ளிக்கூட ஸம்ஸ்க்ருத வித்யாப்யாஸத்தில் உதவியளிப்பது. 7. மேற்குறிக்கப்பட்டவையும் மற்றும் இம்மாதிரி அநேக நோக்கங்களையும் பெறுவதின் பொருட்டுப் பண உதவி தேடுவது முதலியவைகளைச் செய்வது.

தற்காலம் இவ்வித்யாசாலையில் மூன்று பண்டிதர்கள் (M. A. பட்டம் பெற்ற ஒருவர், மற்றும் ஹைகோர்ட் வக்கீல்கள் இருவர், ஆகிய மூவரின் ஆலோசனை பெற்று) போதனை யளித்து வருகிறார்கள். முற் கூறியபடி பள்ளிக்கூட மாணவர்களுக்கு இலவசமாக அவர் ஸம்ஸ்க்ருத பாடங்களில் பயிற்சி யளிப்பதுடன், ஸர்வகலாசாலையில் நடைபெற்றவரும், சிரோமணி பரீட்சைக்குரிய ராஜாங்க ஸம்ஸ்க்ருத ப்ரவேச பரீட்சைக்கு மாணவர்கள் தயாரிக்கப்படுகின்றனர். இம்மாதிரியான வித்யாசாலைகளை ஏற்படுத்தி நடத்துவது மிகுந்த கௌரவத்தை யளிக்கக்கூடியதே யாயினும், பொருளாதாரச் சுணக்கமும், ராஜ்ய கஷ்டங்களும், மிகுந்த விக்காலத்தில் மிகுந்த சிரமத்திலும், அதிகப் பணச் செலவாகு மாகக்கூடிய இக்கலா ஸம்பந்தமான காரியங்கள் உத்ஸாகக் குறைவினால் நடத்த முடியாவண்ணம் யருறுகின்றன. ஆயினும் இத்தகைய நற்செய்கைகளைத் தொடர்ந்து விடாமுயற்சியுடன் நடத்துவது தான் நமது கடமை. ஷை வித்யா மந்திரத்தை ஆரம்பித்தது முதற்கொண்டு பல பொதுநல உணர்ச்சியுள்ள பென்ஷன் உத்யோகஸ்தர்களும் மற்றும் சில கலைவான்களும் மிகுந்த ஆதரவளித்து வருகிறார்கள். சிற்க: இம்மந்திரம், பொதுஜனங்களின் பரிவையும் பரிபூர்ண உதவியையும் மேன்மேலும் பெற்று, ஸம்ஸ்க்ருதாபிமானிகளுக்குத் தகுந்த முறையில் பயன் படத்தக்க நீண்ட ஆயுளுடன் விளங்கும்படி ஸ்ரீ ஹயக்ரீவ னருள் புரிவாராக.

18-11-35 } ஸ்ரீ ஹயக்ரீவ வித்யாமந்திர நிர்வாஹகர்கள்.



(2)

## ஸ்ரீ வேதாந்ததேசிக பக்த ஸபா—மதுரை.

### நான்காவது வருஷோத்ஸவ அறிக்கை.

ஷை ஸபையின் நான்காவது வருஷோத்ஸவம் மதுரையில் மேல் வெளி வீதியில் மார்வாடி தர்மசாலையில் 1935 ௵ செப்டம்பர் ௴ 21, 22 தேதிகளில் நடைபெற்றது. 21உ காலையில் 8 மணிக்கு, திருக்குடந்தை கவர்ன்மெண்டு காலேஜ் ஹைஸ்கூல் ப்ரின்ஸிபால், ஸ்ரீ. உ.ப. ஸ்ரீநிவாஸ பாட்ராசாரிய ஸ்வாமி, M.A., பல வித்வான்களுடன் தர்மசாலைக்கு எழுந்தருளினர். அப்போது ஸபைக்குச் சுமார் 300 பேர் வரை வந்திருந்தார்கள். பகவத் ப்ரார்த்தனையும், (ஸம்ஸ்க்ருதத்தில்) ஸ்வாகத விஜ்ஞாபநமும் ஸ்ரீ உ.ப. சிரோமணி லக்ஷ்மணய்யங்கார் ஸ்வாமியால் விஜ்ஞாபித்துக் கொள்ளப்பட்டன. பின்னர் ஸ்ரீ. உ.ப. அட்வகேட். கே. ராமய்யங்கார் ஸ்வாமி முதலியோர் ப்ரேரேபிக்கப் பலராலும் ஆமோதிக்கப் பெற்று, ஸ்ரீ. உ.ப. ஸ்ரீநிவாஸ பாட்ராசாரிய ஸ்வாமி ஆக்ராஸநம் வகித்தார். பின்னர் ஸபையின் நான்காவது வருஷ அறிக்கையானது, ஸபையின் கார்யதரிசி ஸ்ரீ. உ.ப. வக்கீல். மாடபூசி. V. K. ஸ்ரீநிவாஸாசாரிய ஸ்வாமியால் விஜ்ஞாபிக்கப் பெற்றது. பின்னர், அக்ராஸநாதிபரின் ப்ரவசநம் ஆனபின், குடவாசல் வித்யாரத்நாகரம் ஸ்ரீ. உ.ப. நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி, ஜீவேச்வர தத்வத்தைப்பற்றி 3 மணி நேரம் வெகு அழகாக இனிய சொற்களால் உபந்யஸித்தார். பிறகு மாலை 2 மணிக்கு, தத்தங்குடி வித்வான் ஸ்ரீ. உ.ப. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி நம் மஹாதேசிகனின் வைபவத்தைப்பற்றி, அது மிக அழகாயும் ராமாயணத்திற்கு ஸத்ருசமாயும் இருக்கிறது என்னும் விஷயத்தை உபந்யஸித்தார். பின்னர், மதுரை அட்வகேட், V. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, அத்வைதத்தைப் பற்றியும், திருக்குடந்தை ஸ்ரீ. உ.ப. வே. அக்நிஹோத்ரம் ராமாநுஜதாதாசாரிய ஸ்வாமி 'வைதிக மதமும் வர்ண வ்யவஸ்தையும்' என்பதைப் பற்றியும், சோழவந்தான் ப்ரஹ்ம ஸ்ரீ. சங்கர சாஸ்திரிகள் 'ஸீதாகல்யாணம்' என்பதைப்பற்றியும், விசேஷமாக காத்யாயந ஸூத்ர விவாக மந்த்ரங்களின் விசேஷ அர்த்தங்களைப் பற்றியும் உபந்யஸித்தார்கள். அன்றும், மறுநாளும், மத்யானம் 4 மணிக்கு ஷை தர்மசாலா மானேஜர் பண்டிட் கௌரிசங்கர் ஸ்ரீமாலி என்பவர், வந்திருந்தவர்களுக்குச் சிற்றுண்டி கொடுத்து உதவினர்.

மறுநாள் 22உ ஒப்பிலியப்பன் சிரோமணி ஸ்ரீ. உ.ப. நவநீதம் ஸ்ரீ ராமதேசிகாசார்ய ஸ்வாமி, 'அமலனாதிபிரான்' ஸ்ரீஸூக்திகளுக்கு விசேஷ அர்த்தங்கள் ஸாதித்து உபந்யஸித்தார். ஸ்ரீ அக்நிஹோத்ரம் ஸ்வாமி வைதிக விவாஹத்தின் பெருமையைப் பற்றியும், அதன் பெருமையைப்பற்றி பாச்சாத்ய பண்டிதர்கள் சொல்லியிருக்கிற விஷயங்களையும் எடுத்து நன்றாக உபந்யஸித்தார். பின்னர், ஸ்ரீ. உ.ப. வித்வான் நெரூர் நாராயண அய்யங்கார் ஸ்வாமி 'ஸீதையின் தத்வம்' என்பதைப் பற்றியும், குடவாசல் வித்யாரத்நாகரம் ஸ்ரீ. உ.ப. நரஸிம்மாசாரிய ஸ்வாமி, 'ஸத்வித்தையின் ஸ்வரூபம்' என்பதில் அத்வைதம், விசிஷ்டாத்வைதம், இரண்டிலுமுள்ள ரீதிகளையும்

மிகவும் எளியநடையில் உபந்யஸித்தார்கள். ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசாரிய ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் கவிதையைப் பற்றியும், ஸ்ரீ. உப. ரெ. அப்பு அய்யங்கார் ஸ்வாமி 'கோதாஸ்துதி' என்பதைப் பற்றியும், விமர்சையாக உபன்யஸித்தார்கள். அன்று மாலை 5 மணிக்கு வித்வான்களையும், அக்ராஸநாதிபரையும், மற்ற அங்கத்தினர்களையும் வைத்து ஒரு குரூப் போடோ (Group Photo) எடுக்கப்பட்டது. பிறகு அக்ராஸநாதிபர் உபந்யாஸ விஷயங்களைப் பற்றியும், வேதத்தின் பெருமையைப் பற்றியும் உசிதமாகவும் நேர்த்தியாகவும் ப்ரவசநம் செய்தபின்னர், அட்வகேட். ஸ்ரீமான் என். நடேசைய்யர் அவர்கள் வந்தனோபசாரம் செய்தருளினார். பின்னர், அட்வகேட் N. R. கிருஷ்ண ஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி வந்திருந்த வித்வான்களுக்கும் பிறர்க்கும் வந்தனோபசாரம் செய்தார். அக்ராஸநாதிபருக்கும் வித்வான்களுக்கும் மாலை முதலானவைகள் ஸமர்ப்பித்து, எல்லோருக்கும் சந்தநம் வெற்றிலை பாக்கும் வழங்கப் பெற்று, வருஷோத்ஸவம் பகவத் க்ருபையால் பூர்த்தி யடைந்தது.

மாடபூசி. வீ. கி. ஸ்ரீநிவாஸாசாரியர்
(கார்யதர்சி)

---

(3)

## திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

### ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் உத்ஸவம்.

இச்சங்கத்தின் ஆதரவில் ஷை மஹோத்ஸவத்தை முன்னிட்டு 27-9-35-வெள்ளிக்கிழமை திருவல்லிக்கேணி தெளிசிங்கப் பெருமாள் கோவில் தெரு தவன உத்ஸவ பங்களாவில் மாலை 3-30 மணிமுதல் 6-மணி வரை அட்வகேட் ஸ்ரீமான் ஆர் கேசவய்யங்கார் ஸ்வாமி "ஸ்ரீ விசிஷ்டாத்வைதம்" எனும் விஷயத்தைப்பற்றி ஓர் உபந்யாஸம் செய்தார். அவ்வமயம் சென்னை அட்வகேட் கீ. நரஸிம்மாசாரிய ஸ்வாமி அக்ராஸநம் வஹித்தார்.

அதே இடத்தில் 29-9-35.ல் ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணி முதல் 7 மணி வரை ஒரு ஸபை நடந்தது. ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி தலைமையின் கீழ்ப் பண்டித பூஷணம் ஸ்ரீ உப. வே. தில்லையம்பூர் சக்ரவர்த்தியாசாரிய ஸ்வாமி "ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனும் தமிழும்" என்பது பற்றி மிக அழகாக உபந்யஸித்தார்.

ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமி திரு நக்ஷத்ர தினமான 3-10-35.ல் வியாழக் கிழமை வெங்கடரங்கம் பிள்ளை தெரு, சங்கக் காரியாலயமான 'ஸ்ரீரங்க விலாஸத்தில்' ஒரு ஸதஸ் நடந்தது. அது, மாலை 6-30 மணிக்கு ஆரம்பமாயது. அப்போது சென்னை கவர்ன்மெண்டு அபிவிருத்தியிலாகா உதவி காரியதரிசி ஸ்ரீமான் ராமஸ்வாமி அய்யங்கார் தலைமை வஹித்தார். ஸ்ரீமான் லக்ஷ்மி நரஸிம்மாசாரிய ஸ்வாமி "ஸ்ரீ ஆதிவண் சடகோபயதீந்த்ர மஹாதேசிகனுடைய வைபவமும் அருளிச் செயல்களும்" எனும்



விஷயத்தை வெகு அழகாக எளிய நடையில் மிக அருமைப்பாடு தோன்ற உபந்யஸித்தார். ஸ்ரீமான் சே. ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரிய ஸ்வாமியும் பின்னர் வெகு விமரிசையாகப் பேசினார். காரியதரிசி வழங்கிய வந்தனோபசாரத்துடன் ஸபை இரவு 9-15 மணிக்கு இனிது முடிந்தது.

### ஸரஸ்வதி பூஜைக் கொண்டாட்டம்.

6-10.35—ஞாயிற்றுக்கிழமை மாலை 4-15 மணிக்குத் திருவல்லிக்கேணி தெளிசிங்கப்பெருமாள் கோவில் தெரு தவன உத்ஸவ பங்களாவில் ஸரஸ்வதி பூஜைக் கொண்டாட்டம் வெகு விமரிசையாக நடந்தேறியது. அப்போது ஸ்ரீ. திருமணி கோயில் கந்தாடை அப்பன் ஸ்வாமி தலைமை வஹித்தார். அநேக ஸ்ரீ வைஷ்ணவர்கள் வந்திருந்தனர். கடவுள் வாழ்த்துக்குப் பின்னர் அக்ராஸநர் முதலில் ஸ்ரீமத் ராமானுஜனைக் குறித்து மங்கள ச்லோகத்தை எடுத்துக்கொண்டு அதன் அர்த்தத்தைத் தெளிவாக விளக்கினார். பின்னர் வித்யத்நாகர கொடவாசல் ஸ்ரீ. உப. வே நரஸிம்மாசாரிய ஸ்வாமி "ஸ்ரீ விசிஷ்டாத்வைதம்" எனும் விஷயம் பற்றி விரிவான ஓர் அரிய உபந்யாஸம் செய்தார். பேத அபேத ச்ருதி வாக்யங்களை ப்ரதாநமாகக்கொண்டு த்வைத அத்வைத ஸித்தாந்தங்கள் ஏற்பட்டன வென்று கூறி, விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் பேதா பேத தத்வங்களைக் கடக ச்ருதி வாக்யங்களால் ஸமர்த்தித்துள்ள வழியை யெடுத்துக்காட்டி, வேதாந்தத்தின் தத்வஹித புருஷார்த்தங்களை நன்கு எடுத்துரைத்தார். தலைவர் முடிவுரையில், உபந்யாஸகர் கூறியதை அநுவதித்து ஒரு ச்லோகத்தால் சுருங்கச் சொல்லி விளக்கினார். ஸ்ரீமான். சே. லக்ஷ்மீ நரஸிம்மாசாரிய ஸ்வாமி வந்தனோபசாரம் அளிக்க, ஸபை இரவு 7 மணிக்கு இனிது கலைந்தது.

### ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் மஹோத்ஸவம்.

12-10-35-சனிக்கிழமை மாலை 4-30 மணி முதல் 7 மணி வரை வெங்கடரங்கம்பிள்ளை தெரு ஸ்ரீரங்க விலாஸத்தில் பண்டித பூஷணம் தில்லையம்பூர் ஸ்ரீ. உப.வே. சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி "ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த குருபரம்பரா ப்ரபாவம்" எனும் விஷயம் பற்றி ஓர் அரிய பெரிய உபந்யாஸம் செய்தார். அநேக அன்பர்கள் கேட்டு மகிழ்ந்தனர். திரிமதஸ்தர்களுக்கும் நாராயணனே பரமாசாரிய னென்றும், ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய குருபரம்பரையின் விசேஷத்தை விளக்கியும், குரு, ஆசாரியன் என்ற பதங்களின் விசேஷார்த்தத்தையும், ஆசாரியர்களாகிற மாலையில் நாயக மணியாக நிற்பவர் ஸ்ரீ ராமாநுஜரென்றும், அவ்விராமாநுஜரின் தரிசநத்தை நிகமாந்த மஹா தேசிகன் பலவகையால் பண்படுத்தினாரென்றும் வெகு அழகாக உபந்யாஸத்தில தெரிவித்தார்.

13-10-35—ஞாயிற்றுக் கிழமையிற் பகல் 3-30 மணிக்கு, தெளிசிங்கப் பெருமாள் கோவில் தெரு தவன உத்ஸவ பங்களாவில் ஒரு வித்வத் ஸதஸ் நடந்தது. அவ்வமயம் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி தலைமை வகித்தனர். காரியதரிசி யவர்கள் தலைவராக இருக்குமாறு அன்று வேண்டிய காலை, அய்யங்காரவர்கள் அன்று ஸதஸுக்கு அத்யக்ஷராக இருப்பது மிகப் பொருத்தமான தென்றும், கோயில், திருமலை, பெருமாள் கோவில் என்ற ஸ்ரீ வைஷ்ணவ முப்பதிகளில் நடுவில் நின்ற திருமலை

யீசன் திருவேங்கட முடையான் கண்டாம்சாவதாரரான தேசிகன் மஹோத்ஸவத்துக்கு நம்முடைய (வி. வி) ஸ்ரீநிவாஸன் தலைமை பெற்றிருப்பது மிகவும் பாராட்டத் தக்கதென்றும் கூறினர். தலைவர் முன்னுரையில், அன்றுள்ள உபந்யாஸங்கள் அனைவரும் கேட்டு நன்கு ஆலோசிக்கத் தக்கனவென்றும், தமக்கு அவற்றைக் கேட்க ஆவல் மிகுதி இருந்ததனாலேயே தலைமை வஹிக்க இணங்கியதாகவும் கூறினர்.

ஸ்ரீமான் ஸ்ரீ. வாஸுதேவாசாரிய ஸ்வாமி, "ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தப்படி ஜீவாத்மாவின் ஸ்வதந்த்ரேச்சை" என்ற விஷயத்தையும், ஸ்ரீமான் கோட்டாலம் வேணுகோபாலாசாரிய ஸ்வாமி "ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தமும் ஆசார்யர்களும்" எனும் விஷயத்தையும் பற்றியும் வெகு அழகாக நன்கு உபந்யஸித்தார்கள். தலைவர் முடிவுரையில், இவ்வுபந்யாஸங்களின் ஸாராம்சத்தை வெகு ஸங்க்ரஹமாக எளிய உதாரணங்களைக் கொண்டு நன்கு நிலை நாட்டினர். சங்கக் காரியங்களை நன்கு பாராட்டிக் கூறினர். கார்யதர்சி வழங்கிய வந்தனோபசாரத்துடன் ஸபை இரவு 7-15 மணிக்கு இனிது முடிந்தது.

## திவான் பஹதூர் டி. ஆர். இராமசந்திரய்யரவர்களின் மரணநுதாபம்.

27-10-35—ஞாயிற்றுக் கிழமை மாலை 4-15 மணிக்குத் திருவல்லிக்கேணி தவண உத்ஸவ பங்களாவில் ஒரு பெருங் கூட்டம் நடை பெற்றது. மயிலாப்பூர் அட்வகேட் திருப்புகழ் மணி பிரம்ம ஸ்ரீ. டி. எம். கிருஷ்ணசாமி அய்யரவர்கள் தலைமை வஹித்தார். பண்டித பூஷணம் தில்லையம்பூர் ஸ்ரீ. சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி, கோடி கந்யகாதாநம் காஞ்சி குமார தாதாசார்ய ஸ்வாமி, சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அநந்தராம தீக்ஷிதரவர்கள், ஸ்ரீமான் யதுநாதாசாரியர் முதலிய த்ரிமத ஸம்ப்ரதாய வித்வான்கள் வந்திருந்து ஸபையை விசேஷமாக அலங்கரித்தனர். தலைவர் முன்னுரையில், ஸ்ரீ இராமசந்திரய்யரவர்களைக் குறித்து வெகுவாகப் புகழ்ந்து, ஹைகோர்ட்டில் அவகாசம் உண்டான ஸ்வல்ப காலங்களிற் கூட அங்கு வரும் ஜூனியர் வக்கீல்கட்கும் மதபோதனை, புராண இதிஹாஸங்களின் உயர்வு; இவற்றை அய்யரவர்கள் நன்கு போதிப்பதுண்டென்றும் எடுத்துக் கூறினர்.

ஹிந்து ரிலிஜஸ் எண்டௌமெண்டு போர்டு மாஜி கமிஷனர் ஸ்ரீமான் என் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, மதராஸ் அட்வகேட்டுகளில் தலைவரும், ஸநாதநிகளனைவரும் ஸம்மதித்த தலைவரும், அகில இந்திய ப்ராஹ்மண மஹா ஸபையின் அத்யக்ஷருமாக இருந்த திவான் பகதூர் டி. ஆர். இராமசந்திரய்யரின் மரணத்தால் பொதுவாக ஹிந்துக்களுக்கும் விசேஷமாக வைதிகர்களுக்கும் பரம நஷ்டம் வந்துள்ளதை இக் கூட்டம் மிக மன வருத்தத்துடன் குறிக்கின்றதென்றும், இவ்வநுதாபத் தீர்மானத்தைச் சேர்மன் அய்யரவர்களின் குடும்பத்தாருக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் ப்ரேரேபிக்கையில் அய்யரவர்களின் குணாதிசயங்களை நன்கு எடுத்துரைத்தார். அதை அநுவதித்து எம். எம். அநந்தராவ் அவர்களும், சேங்காலிபுரம் தீக்ஷிதரவர்களும் நன்கு பேசத் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.



## அகில இந்திய ப்ராஹ்மண மஹா ஸபையைப் புதிப்பித்தல்.

பின்னர் ஸ்ரீமான் எம். எம். அநந்தராவ் அவர்கள், இக் கூட்டமானது அகில மஹா ஸபையை அடியிற்கண்ட ஸபா நாயகர் முதலியோரோடு கூடிப் புதிப்பிக்க ப்ராஹ்மண இந்திய வேண்டுமென்ற தீர்மானத்தைப் பிரேரேபித்தார்.

I. அக்ராஸநாதிபதி:—

அட்வகேட் திருப்புகழ்மணி பிரம்ம ஸ்ரீ. டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர்.

II. உப அக்ராஸநாதிபதிகள்:

1. ராவ்ஸாஹிப் ஸ்ரீமான் பி. வி. ரங்கசாமி அய்யங்கார்
2. ஸ்ரீமான் கீ. நரஸிம்மாசாரியர்
3. ஸ்ரீமான் எம். எம். அநந்தராவ்
4. ராவ் பஹாதூர் ஸ்ரீமான் எ. ஹனுமந்தராவ்

III. காரியதரிசியும் பொக்கிஷதாரரும்.

ஸ்ரீமான் ப. ரெ. திருமலை அய்யங்கார்

IV. கமிட்டி மெம்பர்கள்

1. ஸ்ரீமான் எ. வெங்கடாசார்யர்
2. ,, ஆர். ஸந்தாந கிருஷ்ணய்யங்கார்
3. ,, ஆர். கேசவய்யங்கார்.

இன்னும் சேர்த்துக் கொள்ள வேண்டிய ஐந்து பேர்கள்.

ஸ்ரீமான்கள் ஆரணி சுப்பராவ், என். ஸ்ரீநிவாஸாசாரியர் ஆகிய இவர்கள் இதை ஆமோதிக்க, ஏகமனதாய்த் தீர்மானம் நிறைவேறியது.

தலைவர் முடிவுரையில் அய்யரவர்கள் இராமபிரானைக் குல தெய்வமாகக்கொண்டு மனப்பூர்வமாக வழிபட்டு வந்தவரென்றும், அவர் மஹா வைதிக ஸார்வ பௌமரென்றும் மிகப் புகழ்ந்து கொண்டாடி, ப்ராஹ்மணர் பழைய உயரிய நிலைபெற மிகப் பாடுபட வேண்டுமென்றும் வெகு அழகாகக் கூறினர். காரியதரிசி வழங்கிய வந்தனோபசாரத்துடன் ஸபை இரவு 7 மணிக்கு இனிது கலைந்தது.

திருவல்லிக்கேணி 28—10—35 } ரெ. திருமலை ஐயங்கார், கார்யதர்சி

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸம்பாதகரின் குறிப்புகள்.

[illegible] ।
[illegible]
[illegible] ॥

பகவத் விசேஷ்டிதத்தைப் பற்றி நாம் என் சொல்வோம்? இந்த ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டி, ஸம்ஹாரம், இவைகளுக்குப் போல ரக்ஷணத்திற்கும் பகவானே கர்த்தா. ஆகையால் இந்த ஜகத்தில் அவன் நடத்தும் கார்யங்க ளெல்லாம் முடிவில் அந்த ஜகத்தின் ரக்ஷணார்த்தமாகவே இருத்தல் வேண்டும். ஆனாலும், இக்காலத்தில் நடக்கும் நடவடிக்கைகளை ஊன்றிப் பார்க்கும்போது நமது மநஸ் நடுக்க முறுகின்றது. இன்னும் கொஞ்ச காலத்திற்குள் ஜகத்தின் ஸ்திதி எவ்விதம் பரிணமிக்குமோ வென்று நாம் பயப்படுகிறோம்.

*ஸொவியெட் ரஷ்யாவில் தாம்பத்யத்தின் ஸ்திதி.*

ஐரோப்பா கண்டத்தில் 'ரஷ்யா' என்று ஒரு தேசம் உண்டு. நாம் இருக்கும் இந்த ஆசியா கண்டத்திலும் அது விஸ்தாரமாக வ்யாபித்திருக்கின்றது. அதன் விஸ்தீர்ணம் நமது இந்தியாவைக் காட்டிலும் பல மடங்கு அதிகம். அதில் வஸிக்கும் ஜநங்களின் தொகையும் நமது தேசத்தில் ஆஸேது ஹிமாசலத்திற்குள் வஸிக்கும் ஜநங்களின் தொகையைக் காட்டிலும் மிகவும் ஏராளமானது. ஸ்வல்ப காலம் முன்வரையில் அது ஒரு அரசனால் ஆளப்பட்டு வந்தது. சற்றேறக்குறைய இருபது வர்ஷ காலமாக அது குடியரசாக மாறி ஜநங்களாலேயே பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. அந்த ஜநங்களுள் வ்யாபகர்க ளெல்லாரும் நாஸ்திகர்களாக இருக்கிறபடியால், அந்த ராஜ்யத்திலிருந்து ஆஸ்திக்யம் என்பதே பஹிஷ்காரம் செய்யப்பட்டு, அதிலிருக்கும் ஜநங்க ளெல்லாரும் தைவம் என்னும் நினைவு கூட இராமலே வளர்ந்து வருகிறார்கள். தைவத்தைப் பற்றிப் பேசுவதும் ராஜ சிக்ஷைக்கு அர்ஹமான குற்றமாகின்றதாம். ஆதலால், பண்



டக் கால ரீதியை அநுஸரித்து வர்த்திக்க விரும்பும் வ்ருத்தர்களும் தவத்தைக் கைவிட்டே நிற்கிறார்கள். ப்ரத்யக்ஷம் ஒன்றே ஸம்பத்தக்க தன்பதும், ஜநங்க ளெல்லாரும் இந்த லோகத்தின் போகங்களை எவ்வித வ்யத்யாஸமுமின்றி அநுபவிக்கும்படி பரஸ்பரம் நடந்து கொள்வதே ப்ரதாநமான தர்மமென்பதும் அவர்களுடைய கொள்கைகளுள் முக்யமானவை. இந்தக் கொள்கைகளை அநுஸரித்தே அந்தத் தேசத்தின் பரிபாலநம் இருபது வர்ஷ காலமாகச் செய்யப்பட்டு வருகின்றது. அதன் பலமாக, அந்தத் தேசத்தில் ஜநங்க ளெல்லாரும் எவ்வித கஷ்டமுமின்றி ஸௌக்யத்துடன் ஜீவித்து வருவதாகவே அந்தத் தேசம் போய் வந்தவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால், இந்த இருபது வர்ஷ காலத்திற்குள் ஜநித்து வளர்ந்து வந்திருக்கும் பாலர்களுக்குத் தைவத்தைப் பற்றிக் கேட்கவோ படிக்கவோ அவகாசம் கொஞ்சமேனும் இராததால், அந்த நினைவின் கந்தமே அவர்களுக்கு இல்லையாம்.

இதைப் பற்றி நாம் அவ்வளவாகச் சோகிக்கவில்லை. மற்றுமொரு விஷயமே எம்மைப் பெரிதும் வருத்துகின்றது. அந்தத் தேசத்தில் வழங்கி வரும் ஸ்த்ரீ புமான்களுடைய தாம்பத்ய முறைகளும் ஸர்க்கார் அதீநங்களாக இருக்கிறபடியால், அந்த விஷயத்திலும் ஜநங்களுக்கு ஒருவித நிர்ப்பந்தமும் கூடாதென்று எண்ணி, அந்த ராஜ்ய ப்ரவர்த்தகர்கள் அந்தத் தேசத்தில் வஸிக்கும் ஸ்த்ரீ புமாங்க ளெல்லாரையும் ஸ்வச்சந்தமாக வர்த்திக்கும்படி விட்டு விட்டார்களாம். விவாஹம் என்னும் ஸம்ஸ்காரமே அந்தத் தேசத்தில் இல்லையாம். ஒரு ஸ்த்ரீயும் ஒரு புமானும் சேர்ந்து தம்பதிகளாக வர்த்தித்து வருவதற்கு அவர்களுடைய இச்சையே நியாமகமாம். இருவருக்கும் மநஸ் ஒத்திருக்கும் வரையில் அவர்கள் தம்பதிகளாகச் சேர்ந்து வஸித்து வரும் விஷயத்தில் அந்தத் தேசத்துச் சட்டம் உதாஸீநமாக இருப்பது போல, அவர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து மறுபடியும் வேறு வ்யக்திகளுடன் தாம்பத்யம் கொண்டாடி வரும் விஷயத்திலும் அந்தச் சட்டம் மிகவும் உதாஸீநமாகவே இருக்கின்றதாம். பக்ஷிகளும் ம்ருகங்களும் தாம்பத்யத்தை வஹிப்பது போலவே அங்குள்ள ஜநங்களும் வஹித்து வருவதாக நாம் அறிகின்றோம். இதை ஆலோசிக்கையில் மாத்ரம் நமக்கு அளவற்ற சோகம் ஜநிக்கின்றது. விவேகிகளான ஜநங்களும் விவேகமற்ற திர்யக்குக்கள் போல நடக்கும் காலமும் ஸம்ப

வித்து விட்டதென்றே நாம் துக்கிக்கிறோம். இந்த நடவடிக்கையின் பர்யவஸாநம் எவ்வளவு தூரம் போகுமென்பதை ஒருவரும் ஆலோசிக்கவில்லை.

“ ஸ்த்ரீஷு து³ஷ்டாஸு வார்ஷ்ணேய ”

என்று ஸ்த்ரீகளுக்குத் தோஷம் ஸம்பவிக்கும் காலத்தையே ஜகத்தின் நாச காலமாகப் பகவான் சொல்லியிருக்கிறான். அந்த நாச காலம் நமக்கு ஸமீபித்து விட்டது என்பதே நம்முடைய சோகத்திற்கு முக்யமான காரணம்.

அமெரிகா தேசத்தில் ‘கம்பானியனேட்’ (Companionate) விவாஹங்களென்று சில விவாஹங்கள், அங்கிருக்கும் பாலர்களுக்குள் நடந்து வருகின்றன வென்று கேள்விப்பட்டு நமது தேசத்திய பாலர்களுள் சிலர் அம்மாதிரி விவாஹத்தை இந்தத் தேசத்திலும் பரவச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஸ்வல்ப காலத்திற்குள் அவர்களுடைய மநோரதம் பூர்த்தியாகி விடுமென்று நினைப்பதற்கு ஹேதுக்களும் பஹுவாகக் காணப்படுகின்றன. ஸ்வாச்சந்த்யத்தில் ஸ்வல்ப குறைவுடன் கூடிய இந்த விவாஹ முறையே நம் சிறுவர்களுடைய மநஸ்ஸை இவ்வளவு ஆவர்ஜ்ஜநம் செய்கின்றதென்றால், விச்ருங்கலமாக ம்ருகங்கள் போல எல்லாரும் வர்த்திக்கலாம் என்னும் ஆசாரம் பெரியதொரு தேசத்தில் ஸகல ஜநங்களாலும் அநுஷ்டிக்கப்பட்டும் பெரியோர்களால் ஆமோதிக்கப்பட்டும் வருகின்றது என்பது நமது சிறுவர்களுக்குத் தெரிய வரும் பக்ஷத்தில் அவர்களுடைய புத்தி அந்த வழியில் ப்ரவேசிக்க மாட்டாது என்று எப்படிச் சொல்லக் கூடும்?

“ ஸம்ஸர்க³ஜா தோ³ஷகு³ணா ப⁴வந்தி ”

[தோஷங்களும் குணங்களும் பரவுதற்கு ஸம்ஸர்க்கமே ப்ரதாந காரணம்] என்பது பாலர்கள் விஷயத்தில் அதிமாத்ரம் ஒத்ததன்றோ? ‘நமது குழந்தைகள் ஸம்ஸர்க்கத்தால் இம்மாதிரி திர்யக் போல வர்த்திக்கும் தோஷத்திற்குப் பாத்ரமாகி, பதியென்றும் பத்நியென்றும் குலமென்றும் குடும்பமென்றும் பந்துக்களென்றும் இம்மாதிரியான ஸம்பந்த நியமமொன்று மிராமல் திரியப் போகிறார்கள்’ என்னும் நினைவு எந்தக் கடிநஹ்ருதயனைச் சலிப்பிக்கமாட்டாது? கலியின் கோலாஹலத்தை இப்படிப் பட்டதுதானென்று சொல்லக்கூடவில்லை. பகவானுக்கு ஜகத்தை ஸம்ஹ



ரிப்பதற்கு ஸங்கல்பம் தோன்றினால், இம்மாதிரி சித்ர வதை செய்யாமல், ப்ரளயாக்நியையும் ப்ரளய மேகங்களையுங்கொண்டு ஆத்யந்திகமாக ஏககாலத்தில் நசிப்பிக்கக்கூடாதோ? மநஸ்ஸால் நினைப்பதற்குக்கூட அஸஹ்யமாயிருக்கும் இம்மாதிரி விகாரங்களையெல்லாம் உண்டுபண்ணித் தான், நசிப்பிக்க வேண்டுமென்று ஒரு நியமமும் வேண்டுமோ?

நிகழும் நவம்பர் மீ 23௳ வெளிவந்துள்ள ‘ஹிந்து’ பத்ரிகையில் ‘ரஷ்யா’ தேசத்தின் வ்ருத்தாந்தத்தை அறிந்திருக்கும் ஜே. எம். குமரப்பா என்னும் பெயருடைய ஒரு வித்வாந், இந்த விஷயத்தைப் பற்றி விஸ்தாரமாக எழுதி யிருக்கிறார். இந்த ஸ்திதியைப் பற்றி அவர் சோகித்து எழுதவில்லையே யாயினும், இந்த நடவடிக்கை தாத்காலிகமாக ஜநங்களுக்குள் ஒரு அசுத்தியை உண்டுபண்ணு மென்பதை மாத்ரம் அவர் ஒத்துக்கொண்டிருக்கிறதாகவே தெரிகின்றது. ஆனால் அப்படி அசுத்தி நேர்வது, இப்பொழுது நமது சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ள பழைய ஸம்ஸ்காரத்தின் பலமேயாம். இந்த ஸம்ஸ்காரம் இன்றி இனி ஜநித்து வளர்ந்து வரப் போகும் பாலர்களின் காலத்தில் அம்மாதிரியான அசுத்தி ஒன்றும் இராமலே ஒரு தெளிவு ஏற்பட்டு விடுமாம். அது என்ன தெளிவோ நமக்குத் தெரியவில்லை. படித்தவர்களே இவ்விதம் அபிப்ராயத்தைக் கொள்ளும் பக்ஷத்தில் நாம் நமது குறையை யாரிடம் தெரிவித்துக்கொள்ளக் கூடும்? தைவமே ஶரணம்.

“ க்லீபாவிஷ்டேஷு கல்கேஷு து³ஷ்டிதாஸு
து³ஷ்டாஸ்வஶேஷாஸு ததா² து³ஹித்ருஷ்வபி ।
ஸ ஏஷ தஸ்யாவஸரஸ்ஸம்ஸாரஃ
ப்ராயஶ்சித்தீயஸம்ஶோதவ ந: ॥ ”

* * *

ஜந்மாந்தர ஜ்ஞாநம்.

ஜீவாத்மாக்களெல்லாம் நித்யர்களென்றும், அவர்கள் ஒரு சரீரத்தை விட்டு விலகின பிறகு தம் தம் கர்மங்களுக்குத் தக்கபடி வேறொரு சரீரத்தை அடைகிறார்களென்றும், அப்படி ஒரு சரீரம் விட்டு மற்றொரு சரீரம் போகையில் அவர்கள் பகவந்மாயையின் ப்ரபாவத்தால் தமது ஜந்மாந்தர ஜ்ஞாநத்தை இழந்து விடுகிறார்களென்றும் நமது சாஸ்த்ரங்கள் சொல்லு

கின்றன. ஸ்ரீ பாகவதத்தில் கபில பகவாந், தமது மாதாவாகிற தேவ ஹூதிக்குத் தத்வோபதேசம் செய்து வருகையில், கர்ப்பத்தில் வஸிக்கும் சிசுக்களுக்கு அங்கு வஸிக்கும் காலத்தில் ஜந்மாந்தர விஷயமான ஜ்ஞாநம் தெளிவாக ப்ரகாசித்துக்கொண்டிருக்கின்றதென்றும், அந்தக் கர்ப்பத்தை விட்டுப் பூமியில் விழுந்தவுடன் அந்த ஜ்ஞாநம் மறைந்து விடுகின்றதென்றும் உபதேசித்திருக்கிறார்.

"𑌤𑌤𑍍𑌰 𑌲𑌬𑍍𑌧𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍍𑌦𑍈𑌵𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌜𑌨𑍍𑌮𑌶𑌤𑍋𑌦𑍍𑌭𑌵𑌮𑍍"

[கர்ப்பத்தில் வஸிக்கும் பொழுது சிசுக்கள், பகவத் க்ருபையால், தமது பூர்வ ஜந்மங்களின் ஜ்ஞாநத்தைப் பெற்றவர்களாயிருக்கிறார்கள்] என்பதும்

"𑌵𑌿𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑌿 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌣 𑌨𑌿𑌰𑍁𑌚𑍍𑌛𑍍𑌵𑌾𑌸𑍋 𑌹𑌤𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 ।

[அந்தச் சிசுக்கள் கர்ப்பத்திலிருந்து வெளிவரும் பொழுது அந்த ஜ்ஞாநமெல்லாவற்றையும் இழந்தவர்களாகவே வெளிவருகிறார்கள்] என்பதும் அவ்விடத்தில் தென்படும் வாக்யங்கள். யோகிகளுக்கும், வேறு விசேஷ அநுக்ரஹம் பெற்றுள்ள சில வ்யக்திகளுக்கும், அந்த ஜ்ஞாநம் ப்ரகாசிக்கின்றதென்றும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஸாமாந்ய ஜநங்களிடத்தில் அது ப்ரகாசித்ததாக நாம் இது பர்யந்தம் கேட்டதில்லை. இப்பொழுது, வடக்கில் இருக்கும் டில்லி [Delhi] என்னும் நகரத்தில் ஒன்பது வயதுள்ள ஒரு பெண் குழந்தைக்கு அம்மாதிரியான ஜ்ஞாநம் முழுவதும் தெளிவாக ப்ரகாசிப்பதாக் கேள்விப்படுகிறோம். இது பெரியதொரு ஆச்சர்யமே.

இந்தப் பெண் பால்யம் தொடங்கிக் கொஞ்சம் ப்ரமம் பிடித்ததுபோல இருந்ததாம். தனது தாய் தந்தையர்களும் மற்றுமுள்ளோரும் தன்னிடம் பேசும்பொழுதெல்லாம், அந்தப் பெண், தனது க்ருஹம் மதுரையில் [Muttra] இருக்கின்றதென்றும், அவ்விடத்தில் தனது பர்த்தாவும் ப்ரஜையும் மற்றைப் பந்துக்களும் இருக்கிறார்களென்றும், அவ்விடம் தன்னைக் கொண்டுபோய் விடவேண்டுமென்றும் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருந்ததாம். அந்த வேண்டுகோளை அவர்கள் அநாதரித்திருக்க, அதைப் பற்றி மிகவும் சோகித்திருந்த அக்குழந்தையைப் பார்த்து, அக் குடும்பத்தின் ஸுஹ்ருத் ஒருவர், அந்தக் குழந்தை சொல்லும் அடையாளங்களையுடைய குடும்பமொன்று மதுரையில் உளதோவென்பதை விசாரித்த பொழுது, அப்படி ஒரு குடும்பம் இருப்பதாகவும், அந்தக் குடும்பத்தின் யஜமாநனுக்குச் சற்றேறக்குறையப் பத்துப் பன்னிரண்டு வர்ஷங்களுக்கு முன் பத்நீ ஒருவள் இருந்து ஒரு புருஷ ப்ரஜையைச் சிறிய சிசுவாக விட்டுவிட்டு காலம் சென்று விட்டதாகவும் தெரிய வந்ததாம். அந்தக் குடும்பத்தாருக்கு இந்தச் செய்தியைத் தெரிவித்து, அந்த ஸுஹ்ருத் அவர்களை டில்லிக்கு வரவழைத்தபொழுது அந்தக் குழந்தை அவர்களைப் பார்த்து, 'இவர் தான் எனது பர்த்தா; இந்தப் பையனே எனது குழந்தை' என்று சொல்லிக்கொண்டு அவர்களிடம் ஓடி அவர்களை விட்டுப் பிரிய மனமிராமல் அழுதுகொண்டே இருப்பதாக வ்ருத்தாந்தம் வெளிவந்திருக்கின்றது. இந்த விஷயத்தைப் பரிசோதித்துப் பார்க்கவேண்டுமென்று அநேக பெரியோர்கள் இதம் பரமாக ப்ரவர்த்தித்து, இதைப்பற்றித் தீர விளங்க விசாரித்தார்களாம். அவர்களெல்லாரும், அந்த ஸமாசாரம் முழுவதும் உண்மையே என்றும், அதில் ஸவல்பமேனும் எவ்வித மோசமும் இல்லையென்றும் நிர்ணயித்திருக்கிறார்கள். அவர்களுள் கிருஸ்தவ மதத்தைச் சேர்ந்த பாதிரி ஒருவர். அவர், இதன் உண்மையைப் பற்றி த்ருப்தி அடைந்தவராய், இனித் தாம் ஜந்மாந்தரம் உண்டு என்பதை நம்ப வேண்டுமென்றே தீர்மானித்து விட்டதாகவும் பத்ரிகைகளில் வெளிவந்திருக்கின்றது. ப்ரதி திநமும், அநேக ஜநங்கள், அந்தப் பெண்ணைப் பார்க்க வேண்டுமென்று பற்பல விடங்களிலிருந்து கூட்டம் கூட்டமாக அவ்விடம் போகிறார்களாம். அந்தப் பெண் இப்பொழுது பிறந்திருக்கும் ஜாதி, ஜந்மாந்தரப் பிறப்பின் ஜாதியைக் காட்டிலும் வேறுபட்டதாக இருக்கிறபடியால், எவ்விதம் அந்தப் பெண்ணின் மநோரதத்தை நிறைவேற்றிவைக்கக்கூடும் என்பதை அறியாதவர்களாய் அங்குள்ள பெரியோர்கள் என்ன செய்யலாம் என்று ஆலோசித்துக் கொண்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது. இவையெல்லாம் உண்மையாக இருந்தால், அந்தப் பெண்ணுக்கு, நம் ஒருவராலும் அறியப்படக்கூடாத யோக்யதா விசேஷமொன்று இருக்கின்றதென்றே சொல்லவேண்டும்.

சிற்சில ஸமயங்களில், நமக்குத் தெரிந்துள்ள காரணமொன்றுமின்றிக்கே, புதிதான ஒரு வஸ்துவைப் பார்த்தவுடனே, அல்லது சிற்சில சப்த

விசேஷங்களைக் கேட்டவுடனே ஒருவிதமான ஔத்ஸுக்யம் தமக்கு உண்டாவதை ப்ராயேண எல்லாரும் அநுபவித்திருக்கலாம். அது ஜந்மாந்தரத்தில் ஏற்பட்ட ஸௌஹார்த்தம் முதலியவையடியாக உண்டாகின்றது என்று மஹா கவிகள் முதலிய பெரியோர்கள் சொல்லி யிருக்கிறார்கள்.

"ரம்யாணி வீக்ஷ்ய மதுராம்ஶ்ச நிஶம்ய ஶப்தாந்
பர்யுத்ஸுகீபவதி யத் ஸுகிதோ(அ)பி ஜந்து: ।
தச்சேதஸா ஸ்மரதி நூநமபோதபூர்வம்
பாவஸ்திராணி ஜநநாந்தரஸௌஹ்ருதாநி ॥"

[கண்ணுக்கு அழகான ரூபங்களையும் காதுக்கு இனிமையான சப்தங்களையும் உணரும் பொழுது, நாம் சிற்சில ஸமயங்களில் ஒரு ஔத்ஸுக்யத்தை அடைகிறோம். அப்படிப்பட்ட ஔத்ஸுக்யத்தை உண்டாக்கக் கூடிய வேறொரு காரணம் அப்பொழுது தென்படாமல் இருப்பதால், அப்படி உத்ஸுகராவது, தமது மனத்தின் உள்ளில் மறைவாக நிற்கும் ஜந்மாந்தர அநுபவங்கள் உத்புத்தமாவதாலன்றோ?] என்பது மஹாகவி காளிதாஸனுடைய வாக்யம். தேசாந்தரத்து மஹா கவிகளும்,

"Our birth is but a sleep and a forgetting ;
The soul that rises with us, our life's star,
Hath had elsewhere its setting,
And cometh from afar ;
Not in entire forgetfulness,
And not in utter darkness,
But trailing clouds of glory, do we come
From God, who is our Home."

அம்மாதிரியே தமது அநுபவத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இவ்விதம் மினிமினிப் பூச்சிபோல சிற்சில காலங்களில் அந்த ஜ்ஞாநம் ஸ்புரிப்பதைத் தவிர்த்து, அது தெளிவாகத் தொடர்ந்து ப்ரகாசிப்பதை நாம் இதுவரையில் கேட்டதில்லை. இந்த டில்லி வ்ருத்தாந்தம், விசித்ரங்களான பகவத் விசேஷ்டிதங்களுள் ஒன்று.



யத் துஷ்க்ருதம் நியதஸந்நத்தமசிந்த்யஶக்தி
தத்கிம் வத ஸ்ரஜதி ஜந்துஷு அக்ருதபாகதேயாந் ।

---

னுடைய ஜ்ஞாநம் சில ஸமயங்களில் சில பாபங்களின் ஆக்ரமணத்தால் ப்ரகாசியாமல் இருந்த போதிலும், வேறு சில ஸமயங்களில் சில ஸுக்ருதங்களின் பலமாக ப்ரகாசித்து நிற்கும். இதைத்தான் ஸத்வ குணம் மேலிடும் காலமென்றும் வேறு குணங்கள் மேலிடும் காலங்களென்றும் வேதாந்திகள் சொல்வார்கள். இதை நாம் நம்முடைய அநுபவத்திலேயே காணலாம். தெளிவு ஏற்படும் காலங்களில் நாம் நமது விவேகத்தைக் கொண்டு சாஸ்த்ரம் சொல்லும் வழியில் சென்றால், அது வழியாக நமக்கு நன்மை கிடைக்கும். 'யார் பக்கல் எப்படிப்பட்ட ஸுக்ருதம் கிடக்கின்றது, அது எப்பொழுது பலிக்கின்றது' என்பதைக் கண்டவர்கள் யார்? ஆகையால் ஒருவன் பாபத்தில் மூழ்கியிருக்கின்றானென்னும் காரணத்தால் அவனுக்குத் தெளிவுகாலம் வரமாட்டாது என்றும் அவனுக்கு ஒரு பொழுதும் மோக்ஷம் லபியாது என்றும் சொல்வது சரியன்று. ஆகையால்தான் நமது புராணங்களில் நாம், மஹா பாபிகளென்று நம்மால் நினைக்கப்படும் சிலருக்கு அசிந்திதமாக ஜ்ஞாநப்ரகாசம் ஏற்பட்டு நல்ல கதி ஸம்பவிப்பதையும், மஹா புண்யவான்களென்று நினைக்கப்படும் மற்றும் சிலருக்கு எதிர்பாராமல் ஜ்ஞாநஸங்கோசம் ஸம்பவித்துத் துர்க்கதி நேர்வதையும் பார்க்கிறோம். ஸுக்ருத துஷ்க்ருத விசேஷங்கள் எப்படி எப்பொழுது ஒருவனுடைய ஜ்ஞாநத்தை ஆக்ரமிக்கின்றனவென்று சொல்வதற்கு ஒருவரும் சக்தராகமாட்டார்.

[ப-ரை] ஜந்துஷு - ப்ரஜைகளிடம், நியதஸந்நத்தம் - எப்பொழுதும் நன்றாகக் கட்டப்பட்ட ஸ்வரூபத்தை உடைய, அசிந்த்யஶக்தி - [நம்மால்] சிந்திக்கப் படக்கூடாத சக்தியுடன் கூடிய, அயம் பாப்மா - [ஜந்மாந்தர] பாபமென்னும் இந்த வஸ்துவானது, கதம் - எப்படிப்பட்டது? வத - சொல். அஹோ - ஆஶ்சர்யம். யத் - எந்தப் பாபமானது, அக்ருதபாகதேயாந் - நல்ல பாக்யம் செய்யாத சிலரை, அதிவேலவேலம் க்ருபாஜலநிதிம் அபி - கரை புரண்டு பெருகும் உன்னுடைய க்ருபா ஸமுத்ரத்தையும், உல்லங்கயதி - [ஸுலபமாகவே] தாண்டுவிக்கின்ற தன்றோ?

பகவானுடைய க்ருபையானது கரைபுரண்டு நிற்கும் பெரியதொரு ஸமுத்ரம்; எல்லாரையும் ஆக்ரமித்துத் தனக்குப் பாத்ரமாக்கிக் கொள்ளும் திறமை யுள்ளது. அப்படிப்பட்ட க்ருபைக்கும் அகப்படாமல்,

ஊவம் ஸஊா ஸகஞ ஜநுஸ ஸாவராயம்
க்ஷாஜூஸஜூஹொ தஊஹிஸமயிவிராஜோ தாக 
॥ 61

அதன் ஸ்பர்சமின்றிக்கே நம்முடைய பாபம் நம்மை அந்த ஸமுத்ரத்தின் அக்கரைக்குக் கொண்டுபோய் சேர்த்து விடுகின்றதே. இந்தப் பாபத்தின் பலத்தையும் சக்தியையும் பற்றி நாம் என் சொல்வோம் ? என்று ஆச்சர்யப் படுகிறார். மஹா பாபம் செய்திருப்பவர்களே அந்த க்ருபைக்குப் பாத்ர மாகாமல் அந்த க்ருபா கார்யமான சாஸ்த்ரம் முதலியவைகளே அநாதரித்து நிற்பார்கள் என்று சொன்னதாயிற்று.

61. இந்தத் தயைக்கு உந்மேஷத்தைக் கொடுக்கும் 'க்ஷாந்தி' என்னும் குணத்தை அநுஸந்திக்கிறார். மற்றவர்கள் செய்யும் குற்றங்களைப் பொறுத்துப் போவதான குணத்தை 'க்ஷாந்தி' என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட பொறுமை பகவானிடத்தில் அளவற்றதாக இருக்கின்றதென்று சொல்லுகிறார். அப்படிப் பகவான் பொறுமைசாலியானால், ஏன் எல்லாருடைய விஷயத்திலும் அந்தப் பொறுமையை அவர் செலுத்தாமல் இருக்கிறார் ? என்று கேட்கலாம். எல்லாரிடமும் குணதோஷம் வாசியறச் செலுத்தப்படும் பொறுமை சரியான பொறுமையாக மாட்டாது. எவரெவர்கள், 'நாம் அபராதம் செய்துவிட்டோமென்றும், இனி அம்மாதிரி செய்யக்கூடாதென்றும் சாஸ்த்ரம் சொல்லும் வழியிலேயே இனி நடக்க வேண்டு' மென்றும் உணர்ந்து உறுதியையாவது செய்கிறார்களோ, அவர்கள் விஷயத்தில் மாத்ரம் செய்யப்படும் பொறுமையே சரியான பொறுமையாகு மாகையால், அப்படியே பகவான் பொறுத்துப் போகிறார் என்பதே அந்தச் சங்கைக்கு ஸமாதாநம்.

[ப - ரை] யக [கிஸ்விஷமு] - எந்தப் பாபமானது, ஜூஹகஞ நியுதாநுஹவெஉவி - ப்ராஹ்ம கல்பத்தால் லக்ஷகல்பகாலம் அநுபவிக்கப் பட்ட போதிலும், சுநாமஜூமு - நசிப்பிக்கப்படமாட்டாதோ, தக கிஸ்விஷமு - அப்படிப்பட்ட பாபத்தை, ஜநு: - ஜந்துவானது, உஹ - இந்த ஸம்ஸாரத்தில், க்ஷணாயெஊ - அரை க்ஷணத்திற்குள்ளாக, ஸூஜதி - செய்துவிடுகின்றது. வஊவமு - இம்மாதிரி, ஸஊா - எப்பொழுதும், ஸகஞஜநுஸ - ஸகல ஜந்மங்களிலும், ஸாவராயமு - குற்றங்களைச் செய்து கொண்டிருக்கும், [ஜநுமு - ஜந்துவை], தஊஹிஸமயிவிராஜோ தாக - அந்தப் பாபத்தில் இருக்கும் ஆபிமுக்யத்தின் ஒழிவால் மாத்ரமே, க்ஷாஜூஸி க்ஷமா விஷயமாய்ச் செய்து கொள்ளுகிறாய். சுஹொ - ஆச்சர்யம்.



க்ஷாந்திஸ்தவெயமியதீ உஹதீ கயஞ
உஹொஜூஹொ கவயி கூ தாஜ்ஞிவஜ்ஞெஷ ।

அநாதி காலமாக ஸம்ஸரித்து வரும் நாம் இந்த க்ஷண பர்யந்தம் எவ்வளவு பாபங்களைச் செய்திருக்கிறோம் என்பதைக் கணக்கிடப் பார்த்தால், அவை கணக்கில் அகப்படுமோ ? இவ்வளவு கர்மங்களையும் நாம் அநுபவித்தே நசிப்பிக்கவேண்டுமென்றால், இனி வரப் போகும் காலம் முழுவதும் தான் அதற்குப் பர்யாப்தமாகுமோ ?

" சுநுஹவித உவளஹாஜூமாவிகாயு: "

[நம்முடைய கர்மங்களெல்லாவற்றையும் அநுபவிப்பதானால், அதற்கு இனி வரப்போகும் காலம் முழுவதுமே போதாது] என்றன்றோ ஆசார்யர்கள் அநுக்ரஹித்திருக்கிறார்கள் ? பஹு காலமாகச் சுமந்து கிடக்கிறபடியால் இந்தப் பாபம் அவ்வளவு அதிகமாக இருக்கின்றதோ வென்றால், அதுவுமில்லை ; ஒரு அர்த்த க்ஷணத்திற்குள் நம்மாற் செய்யப்படும் பாபமே அவ்வளவு அதிகம். இப்படி ஒவ்வொரு ஜந்மத்திலும் ஒரு க்ஷணம் காலம் கூட ஒழிவின்றிக்கே, ஸகல ஜந்மங்களிலும் நாம் செய்துவரும் அபராதங்களைக் கணக்கிட்டால், அதன் ஆதிக்யம் அளவில் அகப்படுமோ வென்று ஆச்சர்யப்படுகிறார்.

ஸாவராயமு - இவ்விடத்தில் 'அபராதம்' என்பது பகவதாஜ்ஞாதிலங்கநத்தையே குறிக்கின்றது. சாஸ்த்ரம் சொல்வதெல்லாம் பகவதாஜ்ஞை. அவைகளைக் கடந்து நடப்பதே அபராதம்.

தஊஹிஸமயிவிராஜோ தாக - 'இனி நாம் அபராதங்களைச் செய்யக் கூடாது' என்னும் உறுதி செய்துவிட்டால், பகவான், நம்மால் இந்த க்ஷண பர்யந்தமாகச் செய்யப்பட்டுள்ள அபராதங்களெல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளுகிறான் ; அதாவது : அந்த அபராதங்களால் ஏற்பட்டிருக்கும் நிக்ரஹ ஸங்கல்பத்தை நிவர்த்திப்பித்துக் கொள்ளுகிறான். இந்த க்ஷமைக்கு அம்மாதிரியான உறுதி மாத்ரம் போதுமோவென்றால், இப்படிப் பட்ட அநுதாபமும் உறுதியும் ஸம்பவித்தால், அவை சரியான ப்ராயச்சித்தாதிகளில் பர்யவஸித்து உபாய பூர்த்தியைச் செய்விக்குமாகையால் அவை மாத்ரம் இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கின்றன.

62. இந்த ச்லோகம் முதலாக மூன்று ச்லோகங்களால் பகவானுடைய 'வாத்ஸல்யம்' என்னும் குணத்தை அநுபவிக்கிறார். 'வாத்ஸல்யம்' என்பது ஒரு ஸ்நேஹ விசேஷம் ; அது, நாம் வாத்ஸல்யத்தை யாரிடம் செய்கிறோமோ அவரிடம் எவ்வித தோஷமிருந்த போதிலும் அந்தத் தோஷங்க

இத்தம் ஸ்வதோ நிகிலஜந்துஷு நிர்விசேஷம்
வாத்ஸல்ய மாத்மபஜநேஷு கதம் குணஸ்தே ॥ 62

---

ளெல்லாவற்றையும் அநாதரிக்கும்படி செய்யும். பகவான் தன்னை ஆச்ரயிப்பவர்களிடம் அம்மாதிரியான வாத்ஸல்யத்தைச் செய்கிறான். 'ஸமாச்ரிதவத்ஸல:' என்றன்றோ அவனை மஹர்ஷி புகழ்ந்திருக்கிறார்? இந்தக் குணத்தைக் கீழ்க் கூறப்பட்டுள்ள 'க்ஷாந்தி' என்னும் குணத்தின் பராகாஷ்டை (எல்லை நிலம்) என்றும் சொல்வார்கள். இந்த ச்லோகத்திற் சொல்லப்படும் விஷயமாவது:—'எல்லா ஜந்துக்களிடத்திலும் எவ்வித விசேஷமின்றிக்கே, அவர்கள் உன்னை ஆச்ரயித்தவர்களாக இருந்தாலும், அப்படி இராவிட்டாலும், நீ வாத்ஸல்யத்தைச் செய்கிறாயன்றோ? அப்படி இருக்கையில் சரணாகதர்களிடம் நீ வத்ஸலனாய் இருக்கிறாய் என்று உன்னைப் புகழ்வது ஒரு புகழ்ச்சி ஆகுமோ?' என்பதுதான். இந்த வாத்ஸல்யம் என்பது க்ஷாந்தியின் எல்லை நிலமேயாதலால், க்ஷாந்தியைப் பற்றி முதல் பாதியில் ப்ரஸ்தாவித்து மற்றொரு பாதியில் வாத்ஸல்யத்தைப் பேசுகிறார்.

[ப - ரை] இயதீ மஹதீ - இவ்வளவு பெருமையை யுடைய, இயம் தவ க்ஷாந்தி: - உன்னுடைய இந்தப் பொறுமையானது, த்வயி க்ருதாஞ்ஜலிஸம்ச்ரயேஷு - உன்னிடத்தில் அஞ்ஜலிபந்தமாகிற கவசத்தைச் செய்பவர்களிடம், கதம் ஸம்மோஹ்யது - எப்படி மோஹத்தை அடையும் [எப்படிப் பலியாமல் போகும்]? அஹோ - ஆச்சர்யம். இத்தம் - இவ்வாறாக [க்ஷாந்தி போலவே], நிகிலஜந்துஷு - எல்லா ஜந்துக்களிடத்திலும், ஸ்வதோ நிர்விசேஷம் தே வாத்ஸல்யம் - இயற்கையாகவே பக்ஷபாத லேசமின்றி நீ செய்யும் வாத்ஸல்யமானது, ஆத்மபஜநேஷு - [உன்னிடத்தில்] ப்ரீதி செய்யும் ஜநங்களின் விஷயத்தில், கதம் குண: - எப்படி [புகழத் தகுந்த] குணமாகும்?

தன்னிடம் ப்ரீதி செய்பவர்கள் ப்ரீதி செய்யாதவர்கள் இவர்களெல்லாரிடத்திலும் வத்ஸலனாயிருக்கும் உன் விஷயத்தில் 'நீ ப்ரீதி செய்பவர்களிடம் வத்ஸலனாயிருக்கிறாய்' என்று சொல்வது ஒரு ஏற்றமாகுமோ? என்பது தாத்பர்யம். எவர்கள் ப்ரீதி செய்யாமல் இருக்கிறார்களோ அவர்களிடத்திலும் நீ வத்ஸலனாய் இருக்கிறாய் என்று சொல்வதன்றோ புகழ்ச்சியாகும்? அதாவது - பகவான் எல்லா ப்ராஜைகளிடத்திலும் வத்ஸலனாக இருக்கையிலும், பக்தர்களிடம் விசேஷித்த வாத்ஸல்யத்தைச் செய்கிறான் என்று சொன்னதாயிற்று. இது அடுத்த ச்லோகத்தில் விளங்கும். 62



விச்வம் தியைவ விரசய்ய நிசாய்ய பூய:
ஸஞ்ஜஹ்ருஷஸ்ஸதி ஸதாச்ரிதவத்ஸலத்வே ।

---

63. ப்ரளய காலத்தில் சேதநரெல்லாரும் அசேதந ப்ராயர்களாகத் தன்னிடத்தில் லயித்திருப்பதைப் பார்த்துப் பகவான், ஸர்வ ஸாதாரணமாக ஒரு ஸ்நேஹ விசேஷத்தைச் செய்தே, அவர்களுக்குக் கரண களேபரங்களைக் கொடுத்து, ஸ்ருஷ்டி என்னும் வ்யாபாரத்தைச் செய்து, பிறகு அந்த ஸ்நேஹ விசேஷத்தாலேயே ஏவப்பட்டவனாய்க் கொண்டு, கேவலம் தனது ஸங்கல்ப மாத்ரத்தாலேயே ஜகத்தின் ஸம்ரக்ஷணத்தையும் ஸம்ஹாரத்தையும் செய்து வருகிறான். இவ்விதம் ஸகல ஜந்துக்களிடமும் நிர்விசேஷமாக ஸ்நேஹத்தைச் செய்யுமவன், அங்கிருந்தபடி தனது ஸங்கல்ப மாத்ரத்தாலே கஜேந்த்ரனை ரக்ஷியாமல் அவனுடைய கதறுதலைக் கேட்கத் தாங்காதவனாய்த் தனது பக்தனாகிற அந்த ஆழ்வான் கதறினவுடன், பரிவட்டங்களையுங் கொண்டு அரை குலையத் தலைகுலைய வந்து விழுந்து, கஜேந்த்ரனுடைய காலைத் தனது கையால் ஸ்பர்சித்து, அதன் க்ராஹத்தைப் போக்கினான். இது சரணாகதனிடம் செய்யப்படும் விசேஷித்த நீர்மையன்றோ? ஜகத் ஸ்ருஷ்டி முதலியவற்றைக் கேவலம் ஸங்கல்ப மாத்ரத்தால் செய்த அவனுக்கு இந்தக் கஜேந்த்ரனை ஸங்கல்பமாத்ரத்தால் ஸம்ரக்ஷிப்பது அசக்யமாகுமோ? பக்தர்களிடம் அவன் செய்யும் விசேஷ வாத்ஸல்யமன்றோ இவ்விதம் அவனை ஓடி வரும்படியும் காலைத் தொடும்படியும் செய்தது? என்று பகவானுடைய வாத்ஸல்யாதிசயத்தை இந்த ச்லோகத்தால் அநுபவிக்கிறார்.

[ப - ரை] தியைவ - கேவலம் [தனது] ஸங்கல்ப மாத்ரத்தாலே, விச்வம் - இந்த ப்ரபஞ்சம் முழுவதையும், விரசய்ய - ஸ்ருஷ்டித்து, நிசாய்ய - வளர்த்து, ஸஞ்ஜஹ்ருஷ: - ஸம்ஹரித்தும்; ஸதாச்ரிதவத்ஸலத்வே ஸதி - பக்தர்கள் விஷயத்தில் வாத்ஸல்யம் உண்டாகும்பொழுது, மதோத்கடப்ருஹிதேந - கஜேந்த்ரனுடைய கர்ஜ்ஜநத்தால் [கர்ஜ்ஜநத்தைக் கேட்டவுடன்], ஸரஸீம் - [அந்தக் கஜேந்த்ரன் இருந்த ஸரஸ்ஸின் கரைக்கு] வந்து, பாதம் - [அந்தக் கஜேந்த்ரத்தின்] காலை, பராம்ருசஸி ச - தொட்டும் இருக்கிற, தவ - உனக்கு, கா ஈக்ஷா - என்ன எண்ணம்? [இப்படிச் செய்வதில் உன் கருத்து என்ன?]

இந்தக் கேள்வியின் தாத்பர்யம் என்னவென்றால்:—'ஆச்ரிதன் விஷயத்தில் உன்னுடைய வாத்ஸல்யம் அவ்வளவு அதிசயிதம்' என்பதே. 'கேவலம் ஸங்கல்ப மாத்ரத்தால் ஜகத் ஸ்ருஷ்டி முதலியவைகளைச் செய்யும் உனக்கு, கஜேந்த்ரனை ஸம்ரக்ஷிப்பது அந்த ஸங்கல்ப மாத்ரத்தால்

ஸுஜ்ஞாக்ஷஸத்வ மஹோத்3ப4வரூபித்3ருத

பாத3ம் பராமருஶந்நஶோபவி அ ஸா உநிஷ்ட ॥ 63

யஃ கஶ்சிதே3வ யதி3 கிஞ்சந ப4வ்ய ஜந்து-

ர்ப4வ்யோ ப4ஜேத ப4க3வந்தமநந்யசேதா: ।

---

ஸாத்யமன்றோ ? ' என்பதைக் காண்பிப்பதற்காகவே இந்த ச்லோகத்தின் முதல் பாதியில் ஜகத் வ்யாபாரம் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கிறது.

" க்3ராஹக்3ரஸ்தம் க3ஜேந்த்3ரம் தம் க்3ராஹம் ச ஜலாஶயாத் ।
உஜ்ஜஹாராப்ரமேயாத்மா தரஸா மது4ஸூத3ந: ।
ஸ்த2லஸ்த2ம் தா3ரயாமாஸ க்3ராஹம் சக்ரேண மாத4வ: ॥ "

[பகவான், அந்த ஸரஸ்ஸுக்கு வந்தவுடன், முதலையால் பிடிக்கப்பட்டிருந்த யானையையும் முதலையையும் ஸரஸ்ஸிலிருந்து கரையில் இழுத்துப் போட்டு, கரையிலிருந்த அந்த முதலையைத் தனது சக்ராயுதத்தால் பிளந்தான்] என்பது விஷ்ணு தர்மத்தின் வாக்யம். பகவான் கஜேந்த்ரத்தின் காலைத் தனது கையால் ஸ்பர்சித்தான் என்பது ஆழ்வார்களின் அநுபவம். 63

64. ' யானை திர்யக் ஜாதியைச் சேர்ந்ததன்றோ ? அதன் விஷயத்தில் இவ்வளவு வ்யாமோஹம் பகவானுக்கு உசிதமாகுமோ ? ' என்று ஜங்கிக்கும் ஸங்கைக்கு இந்த ச்லோகத்தால் ஸமாதாநம் சொல்லுகிறார். 'சரணாகதன் திர்யக் ஜாதியாக இருந்தாலும், ஸுதுராசாரனாக இருந்தாலும், வேறு தோஷங்களால் நிறைந்தவனாக இருந்தாலும், அவனைப் பகவான் பக்தனென்னும் காரணத்தால் மாத்ரம் மிக உயர்ந்த பதவியில் சேர்ப்பிக்கிறான். அது அவனுடைய ஸ்வபாவம்' என்பது தான் ஸமாதாநம். ' இந்த ஸமாதாநம் ந்யாயத்திற்கு ஒத்ததாகுமோ ? பக்தி செய்கிறவன் கெட்ட நடவடிக்கையற்றவனாக இருத்தல் வேண்டாமோ ? கெட்ட நடத்தையிலிருந்து ஒழிவது பக்திக்கு அங்கமன்றோ ? அங்கத்திற்கு வைகுண்யம் நேர்ந்தால் அங்கிக்கு ஸாத்குண்யம் ஸித்திக்குமோ ? ' என்று ஒரு சங்கை இவ்விடத்தில் ஜங்கிக்கலாம். அங்க வைகுண்யம் இருக்கலாமென்பது ஆழ்வானுடைய திருவுள்ளமன்று. ' ஒருவன், ஸுதுராசாரனாக இருந்தாலும், பகவானிடத்தில் பக்தியைச் செய்தால், அந்தப் பக்தியின் மஹிமையால் உடனே அந்தத் துராசாரங்களெல்லாம் நீங்கி, அவன் ஸதாசாரனாகி, அது வழியாகப் பகவதநுக்ரஹத்திற்குப் பாத்ரமாவான்' என்பதே திருவுள்ளம். ஸ்ரீ பகவத் கீதையிலும்,



ஸ்தா2நே ஹ்யேவ ப4ஜதாம் ஹிவாம் ஸூமி ஸ்வம்

தஸ்ஸாக்ஷாத்3 தே3வி ஹைவ ரூப மஹோ ஸ்வேதஷ்ணீயே: ।

---

" அபி சேத் ஸுது3ராசாரோ ப4ஜதே மாமநந்யபா4க் ।
ஸாது4ரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக்3வ்யவஸிதோ ஹி ஸ: ॥ "

என்று பக்தனைக் கொண்டாடுகையில், அடுத்த ச்லோகத்தால்

" க்ஷிப்ரம் ப4வதி த4ர்மாத்மா "

[அவன் சீக்கிரத்தில் நன்னடத்தையுடன் கூடினவனாக ஆகிவிடுகிறான்] என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ' துச்சரித விரதி பக்திக்கு அங்கமே. அந்த விரதி, பக்தியின் ப்ரபாவத்தால் உண்டாகிவிடு மாகையால், அங்க பூர்த்திக்குக் குறையில்லை ' என்பதே கருத்து. இந்த ச்லோகத்தில் ஆழ்வான் அநுக்ரஹித்திருப்பதை ஆதாரமாகக் கொண்டு ஒருவன், தான் பகவானுடைய பக்தன் என்னும் தைர்யத்தால், துச்சரிக்கும் பக்ஷத்தில், அவன் பக்தனே யாவான் ; அவன் ஆழ்வானுடைய திவ்ய ஸூக்தியின் கருத்தைச் சரியானபடி க்ரஹித்தவ னல்லன்.

[ப - ரை] ப4வ்யோ யஃ கஶ்சிதே3வ ஜந்து: - உன்னிடத்தில் பக்தி செய்வதற்குத் தகுந்த] மங்களகரமான ஸ்வபாவத்தை யுடைய ஏதேனும் ஒரு ஜந்துவானது, ப4க3வந்தம் த்வாம் - பகவானா யிருக்கிற உன்னை, அநந்ய-சேதா: - மற்றொன்றிலும் மநஸ்ஸைச் செலுத்தாததாய், கிஞ்சந ப4ஜேத-யதி3 - கொஞ்சம் உபாஸிக்கும் பக்ஷத்தில், தம் - அந்த ஜந்துவை, ஜாத்யா-அயம் - இவன் இந்த ஜாதியைச் சேர்ந்தவன், வ்ருத்தேந அயம்:-இந்த நடத்தையுடன் கூடியவன், ஈத்3ருக் - இவ்வளவு குணமுடையவன், இதி அவ்யவஸாய - என்று ஒருவித விசாரமும் செய்யாமலே, வைநதேய ஸமம் - கருடாழ்வானுக்கும் ஸமமாக, உரீகரோஷி - அங்கீகரிக்கிறாய், அஹோ ப3த - என்ன ஆச்சர்யம்.

பகவான் தனது பக்தர்களைத் தனக்கு ஸமமாகவே செய்கிறான் என்று உபநிஷத்துக்கள் சொல்ல, இவ்விடத்தில் கருடாழ்வானுக்கு ஸமமாக அங்கீகரிக்கிறான் என்று சொல்லப்பட்டிருப்பதன் தாத்பர்யம், தனக்கு அவ்வளவு ப்ரீதி பாத்ரமாகச் செய்து கொள்ளுகிறான் என்பதே. பகவானுக்குத் துல்யமான போகத்தை அநுபவிக்கையிலும், பகவானுடைய ப்ரீதியையும் அநுபவிக்கிறான் என்பதைக் காண்பிப்பதற்கு, அவனுடைய பரம ப்ரீதி பாத்ரர்களா யிருப்பவர்களுள் ஒருவரை நிர்த்தேசித்தே சொல்ல வேண்டு மன்றோ ?

உத்க்ருஷ்டம் ததோ ஹி பரமம் தவ ஸௌசீல்யமாஹு:-
ஸ்வஸ்மாத் அஸூயைவ விதுஷாம் பரமம் உதஞ்சத் ॥ 65

---

65. பகவானுடைய 'ஸௌசீல்யம்' என்னும் குணம் இதில் அநுபவிக்கப்படுகின்றது. பெரியோர்கள் தம்மைக் காட்டிலும் மிகத் தாழ்ந்தவர்களா யிருக்குமவர்களுடன் எவ்வித குறைவுமின்றிக்கே ஹார்த்தமாக ஸம்ச்லேஷித்தார்களே யானால், அப்படி ஸம்ச்லேஷிக்கும் குணத்தை 'ஸௌசீல்யம்' என்று சொல்வார்கள். சக்ரவர்த்தித் திருமகன் குஹனுடனும் சபரியுடனும் வாநரர்களுடனும், கண்ணன் கோபிமார்களுடனும் எவ்வித வ்யத்யாஸ புத்தியுமின்றி ஸம்ச்லேஷித்தது அந்த அவதாரங்களைச் செய்த பகவானுடைய ஸௌசீல்யத்தை விளக்குகின்றது. தன்னையும், தனதென்று சொல்லப்படும் எல்லாவற்றையும், தன்னால் ஸம்ச்லேஷிக்கப்படுமவர்களுடைய ப்ரயோஜநத்திற்காகவே உபயோகப்படுத்துவதே எவ்வித வ்யத்யாஸ புத்தியுமின்றி ஸம்ச்லேஷிப்பதன் லக்ஷணமாகும். தன்னை ஆச்ரயிப்பவர்களிடம் பகவான் அப்படியே செய்கிறான் என்பது இந்த ச்லோகத்தாற் சொல்லப்படுகின்றது. இவ்விடத்தில் விபவம் ரூபம் குணம் இவைகளை ஸாமாந்யமாக உதாஹரித்து, இவையெல்லாம் பக்தர்கள் அதீநங்களாகச் செய்யப்பட்டிருக்கின்றன வென்றுமாத்ரம் அநுஸந்திக்கிறார். ஸ்ரீ வரதராஜ ஸ்தவத்தில் இன்னும் விஸ்தாரமாகத் தனது திவ்ய மங்கள விக்ரஹம் முதலியவைகளும் உதாஹரிக்கப்பட்டு அநுஸந்தாநம் செய்யப்படுவது மிகவும் மநோஜ்ஞமாக இருக்கின்றது.

"சேஷாஸநாதி பரிபர்ஹ விபூஷணாஸ்த்ர்யாதி
ஸர்வம் குணாஸ்ச ஜ்ஞாநபலசக்த்யாதயஸ்ச ।
பரமபதம் அண்டத் திவ்ய ஸ்வரூபம் ஸ்வகீயம்
வரத! ஸகலம் ஸ்வாச்ரிதார்த்தம் அகரோ: ॥

[சேஷ சேஷாஸநர் முதலான பரிஜநங்கள், சத்ர சாமரம் முதலிய பரிச்சதங்கள், கிரீட குண்டலம் முதலிய பூஷணங்கள், சங்க சக்ரம் முதலிய ஆயுதங்கள், ஜ்ஞாந சக்தி முதலிய குணங்கள், ஸ்ரீ வைகுண்டமென்னும் லோகம், ப்ரஹ்மாண்டம், திவ்யமங்கள விக்ரஹம், ஸ்வரூபம் இவை யெல்லாவற்றையும், ஹே வரத! ஸமாச்ரயண தசை முதலாக அநுபவ தசை பர்யந்தமாக ஆச்ரிதர்களின் சேஷங்களாகவன்றோ செய்திருக்கிறாய்]. இந்த வரதராஜஸ்தவ ச்லோகம் விபவாவதார ப்ரகரணத்தில் அநுக்ரஹிக்கப்பட்டிருக்கிறபடியால், அந்த அவதாரத்திலேயே இந்த ஸௌசீல்யம் மிகவும் ப்ரகாசிக்கின்றது என்று நினைக்கவும் இடமுண்டு.



# திருமங்கையாழ்வார்.

## 17-வது சருக்கம்.

சகடுதைத் தூலி னோடு மருதிறத் தவழ்ந்து பாம்பி
னருமணிச் சுடிகை யேறி நடம்புரிந் தைவர்க் காக
விகலுறுங் குருடன் சேய்பா லெழுந்தருந் தூதா யிந்த
மகிதனை யளந்த தாள்கண் மறந்திடேம் பிறந்தி டேமால். 1

கரம்பயில் சகரன் மைந்தர் கனமகப் புரிவிக் காக
வுரம்படத் தொட்ட வீழ்பா லுததியின் மேல்பாற் பொன்னி
மரம்பயில் கரையி லன்ன மரைமல ருறங்க நாரை
யரம்பையில் வதியு மாலி நகரென வுளதென் றுங்கே. 2

அன்றரும் தவப்பேற் றானே யலரவ னடார்ந்து வீறு
மன்றலங் கூவி ளங்கண் மலிதரு பொழிலி னுங்கே!
கன்றொரு குணிலாக் கள்ளக் கனிதனை யுகுத்த தேவாற்
குன்றிரு குருக்கண் மார்பிற் குளித்திடப் புல்ல லுற்றான். 3

அதனிரு புடையு மின்னு மணிமணி யார மென்னத்
ததைவுற மலரு நீல நீரசங் களிலே தங்கும்
விதவளி பருக வீழ்ந்து பாய்நற வுடனே பாயுஞ்
சிதைவறு நூபு ராப காவெனுஞ் சிறந்த வாறே. 4

அதனரு கான்றன் சாப மகற்றிய விமலை கேள்வன்
மிதமறு கருணை பாயு மென்மலர்க் கடைக்கண் பாயச்
சுதைபரு கமர ரூரின் சுந்தர மிடைந்த வோரூர்
பதலையி னரவ மாறு மங்கையென் றொளிரும் பண்பின். 5

அம்மணி மலைநேர் மாட வணிபல நிரைந்த வூரிற்
செம்மணிக் கோலன் சென்னிச் சேனையின் றலைவ னீலன்
மும்மையேழ் முறையார் தன்னன் மரபினர் முன்னும் பின்னுஞ்
செம்மைசேர் தரவோர் செல்வ மைந்தனைப் பயந்தான் மன்னோ. 6

இவ்வுகத் தொருமுந் நூற்றுத் தொண்ணூறோ டிணைந்த வெட்டா
மொவ்வறு நளவாண் டொண்மைக் கிருத்திகை மதிநாண் மாயன்
றிவ்விய தனுவின் பாக மாயுதித் திட்ட வந்தச்
செவ்விய சிறுவன் றானே கலியனென் றிசைக்குஞ் சீரான். 7

அத்திரு மங்கை யாழ்வா னவதரித் திடலு மாழி
நித்திரை நிமலன் செய்ய கடைக்கணின் னமுதி னாட்டச்
சித்திர பானு வெய்ய வரணியிற் செறியு மாபோ
லெத்திறத் தகையு மன்னோ ரிடங்குடி யிருந்த மாதோ. 8

பங்கையா மதன னென்று மாற்றலர் மறலி யென்றும்
மங்கிய வறிஞர் வானத் தலர்ந்தவைந் தருவே யென்றும்
பொங்கிய புலவர் நான்கின் கவிபாடும் புலவ ரென்று
மெங்கணு மவரை யேத்தி யிசைத்தனர் களிப்பின் மிக்கார். 9

மலர்க்கரத் தொளிரு மங்கை மன்னவ னயில்வா ளொண்ணார்
சொலற்கரும் வனப்பு வாய்ந்த சுரிகுழன் மகளிர் கண்க
ளலைத்திழி யருவி யேய்க்கு மஞ்சனங் கலந்த நீரின்
விலக்கருந் தமது சீர்த்தி வெண்முளை வளர்க்கு மாதோ. 10

உலம்பொரு திரண்ட தோளா ருக்கமு முரனுங் கண்ட
வலம்படு மபய னன்னார் வயிற்சிறி தவனி பார
நலம்பட வளிக்க வைத்தா னனில மதனின் முற்றும்
பலம்படு மவர்தண் முத்தக் கவிகையுட் பட்ட தாங்கே. 11

காற்றினுங் கடிய மாவின் றிரள்களுங் கடம்பாய் கன்ன
மாற்றடக் கரமாத் தோடும் வெகுளியின் விழிக்க மாணார்
தோற்றொழி வலத்த வாளின் றொகைகளு மருளும் பொன்னி
னாற்றல்சா லவர்தங் கோயி லளவொழிந் தடரு மாதோ. 12

தாளுதுந் தகைய னீர்மே னடப்பவ னிழலின் மாய்வான்
றோலாத வழக்க னென்னு நால்வராந் துணைவர் துன்னக்
கோளாரு மசலை யெங்குங் குறைவுறு துவந்து போற்ற
வாளாலே வலிய டக்கிப் பகையினை வலிதின் வாழ்ந்தான். 13

இன்னண நிகழ விங்கே யில்லறம் பருக வாழ்வான்
கன்னலின் குதலை வாய்ந்து கனமணிக் குழையைப் போழ்ந்து
மன்னகன் றரிப ரந்து மானின மருளுங் கண்கண்
மின்னிய வொருமின் னன்னாண் மணந்ததை மிழற்று கிற்பாம். 14

திருமங்கைக் கருகி னங்கூ ரென்றருந் திருநா மத்தை
மருவிய புரியொன் றுண்டு மகிமையை யறைத றேற்றாங்
கரியிறை புரந்த காயா வண்ணனத் தலத்தி லொன்றோ
டருகிய வீரைந் தாய சினகரத் தமரு மென்றும். 15



உலகெலாம் புகழ வாங்கின் னமுதெனு முதகந் தேக்கி
மலர்தரு குமுத நீல மரைபல வொழுகுந் தேனை
விலகிடா தருந்தி மையல் விம்முற வளியி னீட்டங்
குலவுமோர் குளமும் வெள்ளைக் குளமெனும் பெயரின் மன்னோ. 16

உம்பர்தம் பதிது றந்தவ் வுததியை யுறழு நீரிற்
சம்பர விளையாட் டிற்கே தலைப்பெயு மமர மாதர்
தம்பதச் சதங்கை யோதை தனிநடை யிரண்டுங் கண்டு
கும்பரி னரச வன்னந் தனித்தகங் குழைந்து நிற்கும். 17

அரக்கேரி குமுத மாங்கே யளவிலா தலர்ந்த வாற்றாற்
பரப்புள சிவந்த வந்தப் பயமெலாம் பவள வாயார்
வரைக்குல நிகர்க்குங் கொங்கை வாய்ந்தகுங் குமபங் கங்கள்
கறைப்புறக் குளிப்ப மற்றுங் கமழ்வொடுஞ் சேந்த தம்மா. 18

நறுமணஞ் செறியு மந்த நாண்மல ரொன்றின் மாயோ
னுறுமன மங்கை மன்னற் கோதநீ ரவனிக் கேகென்
றறைதர முருந்தே மானு மணியிள முறுவ லாளோர்
சிறையனம் பொருவுந் தெய்வ மாதெழுந் திலகி னாளால். 19

முராரியின் முளரித் தாள்கண் முன்னியப் பதியில் வாழும்
விராவுநற் றகைய பாக வதனொரு வணிக வேந்தன்
றிவாகர னுதயஞ் செய்யத் தீம்புனல் படிய வந்தப்
புராதனப் பொய்கை போந்தப் பொருவரு மகவைக் கண்டான். 20

வந்திய னுகை யாலே வாஞ்சையி னதனை யேந்தி
மந்திரம் புகுந்து தன்னின் மனைவியின் கரத்தி லீய
விந்தையி னவடன் கொங்கை விம்மிவெண் பயமும் சோரச்
சுந்தரி யதனை யூட்டிச் சுகமுற வளர்த்தா ளன்றே. 21

பெற்றவ ரவளை நொந்து பெற்றதிற் பிரியம் விஞ்சி
நற்றவம் பழைய துண்டா னளினநே ரிவளைப் பெற்றே
மெற்றென விதயம் பொங்கிக் குமுதத்தி னெழுந்த நீரா
லுற்றநற் குமுத வல்லி யெனும்பெய ருவப்பி னிட்டார். 22

பெண்மணி யவளு மாங்கே பிரமனைப் பெற்ற தாதை
யொண்மலர்ப் பதமே யுள்ளி யொழுகுபு செழித்துக் காமன்
திண்மையா கமத்தின் வாய்மை தெரித்திடு மெவரு மோகங்
கொண்மதர்ப் பகல்கி லாத பருவமுங் கூர்ந்து நின்றாள். 23

வேறு

குரும்பைமென் முலையுங் குமிழ்செறி மூக்குங்
கொவ்வையங் கனிநிக ரிதழுங்
கரும்பினின் மொழியுங் கழைபடு புயமுங்
கமுகடை பசியபொற் கழுத்து
மரும்புகண் முல்லை நிரல்பட வமைத்த
தாமெனப் பவளவள் ளத்துள்
விரும்புறு முறுவ லொழுங்குநீ ளிருவாள்
விரையசெம் மரைமலர்க் கிடையில்.

கிடத்திய தொக்குங் கெண்டையின் விழியிற்
கிளர்தரு வெண்மதி முகமுந்
துடைத்துமின் படிமக் கலமெனத் துலங்குந்
தோமறு கபோலமுந் திங்கள்
புடைத்தெழத் தளைத்துப் பின்புறத் தடைக்கட்
பொருந்துறு மிருட்பிழம் பென்னக்
கடைக்கணைத் தகைந்து நானமும் புழுகுங்
கமழ்தரப் பொலிகருங் குழலும்.

இன்னமு மிசைத்தற் கியல்கிலா வனப்பே
யேய்ந்திடும் பிறவவ வயமு
மன்னிய வஃளின் மாணலங் கண்டு
மதர்வுறு மீன்றவ ரினியிக்
கொன்னவில் கூர்வேல் விழியிளங் குயிற்குக்
குணமுறுங் கொண்கனை மணக்கத்
தன்னிருங் குலகோத் திரஞ்சிறி தறியே
மௌனமனந் தளர்ந்தன ரிருந்தார்.

அயிற்கரத் தாளைச் செருகிய கனகக்
கிம்புரி யலங்குவெண் கோட்டுக்
கயக்குலஞ் செறியு மங்கையர்க் கிறைவர்
கயிரவத் தெழுந்தவக் கனியின்
வியப்புறு சுவையி னெழினலங் கேட்டு
வீழ்வுறு வகநனி துளங்கி
மயக்கினிற் சுழன்றம் மலர்க்குழன் மயிலை
மணந்திடும் வகைமனந் துணிந்தார்.



பாதசர் மரபிற் பிறந்தநா மந்த
வூருசன் பயந்தபைங் கிளியைக்
காதலிற் கருத லொண்ணுமோ வவனுங்
கான்முளை யிலனெனப் பகர்வ
ராதலி லனைத்து மறிதுமென் றவன்பொன்
மாளிகை யகம்புக வணிகன்
மேதக வவர்க்கோர் மிளிர்தவி சளித்து
மிழற்றினன் முகமனும் பலவே. 28

அவன செயு மாதித் தியமடைந் தாழ்வா
ரவனுலா வருமவ ளழகைக்
கவர்மனத் தினராய்க் கண்களிற் பருகிக்
கமலமார் கடவுளுந் தனது
நவமெனப் பயின்ற கைவலங் கொண்டு
நானில வனப்பெலாந் திரட்டி.
யிவளுரு வமைத்த தாங்கொலோ விவளோர்
வாசவ பிஞ்சமோ வறியேம். 29

வானவர் மகளி னெல்விடு மாழை
வல்லியின் மிளிருமிவ் வனிதை
கானுறை தவத்தோ ரடங்குமைம் பொறியின்
கவாடமே போழ்கரும் படையோ
தேனிருந் தொழுகைங் கணைமலர்க் கிழவன்
றெரித்திவண் விடுத்தசா சனமோ
வூனையு முளத்தி னுடனுருக் கிடுமென்
றாழ்ந்தனர் துணிந்தனர் மற்றும். 30

வணிகருக் கிறையைப் பணிவொடு நோக்கி
வந்திய முனிவராய் வதியு
பணிகிள ருமக்கிவ் வங்கனை மகளா
யடைந்தவா றேதென வவனு
மணியெழு வளைய மல்லடு புயத்தா
யொருதின நறும்புனல் படிய
வணுகினன் கயத்தை யதினொரு குமுதத்
துதித்திவ ளவணொளிர்ந் தனளால். 31

கண்டெடுத் திவளைக் களிப்பினின் விஞ்சிக்
காதலாய் வளர்த்துயர் கதிசேர்
மண்டலம் புகழு மகப்பெறும் பேற்றை
மன்னினன் கண்ணுவர் முன்னந்
தொண்டையந் துவர்வாய்த் துடியிடை யரம்பை
வயிறுளைந் தீன்றபைந் தோகைக்
கெண்டைநீள் விழியார் சகுந்தளை யெனுமோர்
கிளிமொழி தனைவளர்த் ததுபோல். 32

ஈங்கிவள் கருப்பு வில்லியி னுணைக்
கிணங்கியின் னேவல்செய் பருவந்
தாங்கின ளிலகா நின்றன ளெழிற்குந்
தணப்பருங் குணத்தொகை தமக்கும்
பாங்குறப் பொருந்து மோர்பதி தன்னைப்
படைத்திலன் பருவர லெய்தி
யேங்கிய மனத்தி னிருந்துளே னுலக
மியம்புதற் கிலக்கென விசைத்தான். 33

இசைத்தது கேட்டவ் வெழிற்பர கால
னிருதயங் களித் தெழ விசையே
நிசிக்கிணை யெனலா நீனிறக் குழனுந்
நேர்பெறுந் தனையையா மிவடன்
நசைக்குறு சிறப்பி னலமெனக் குளவே
னுனிவ னளினமென் கரத்தைப்
பசைப்புடன் பற்ற லொண்ணுமோ வென்னப்
பரமபா கவதனும் பரிவாய். 34

சாளரவழியா யாளரி யுறழக்
கோளரித் தவிசின்மேற் குலவும்
வேளையும் வென்ற கலியன தழகால்
விழிக்கரு விருந்துசெய் தொளிரும்
வாளையின் மிளிருங் கருங்கணி வயிற்சென்
றவர்மலர் வலக்கரம் பற்றப்
பாளைவாய் பசிய கமுகுகந் தரத்தாய்ப்
பற்றுமோ வுளமெனப் பகர்ந்தான். 35



அற்பினிற் புரந்த வையனே யகிலாண்
டங்களு முடற்புறம் பற்றிப்
பொற்புறும் புயலார் வண்ணனேர் சங்கும்
பொலிதரு திகிரியும் புயத்தி
னிற்புறப் பொறித்துநிதமொரா யிரமாம்
புனிதராம் பாகவ தர்களுக்
கிற்புகழ்த் திருமூன் றின்சுவை யடிசி
லிடுபவற் கியைவனு னென்றாள். 36

வேறு

என்றலு மங்கை மன்னவன் செவியி னேவுறி னிவ் வணமே
நன்றிழை தந்தே நான்வரு கிறபே னென்றவண் விடை மருவிச்
சென்றெழி னறையூர் நின்றிடு நம்பிச் செம்மல ரடி தொழுது
துன்றிட நாடி வேண்டின ருள்ளந் துன்னிய நசை முழுதும். 37

சீதர னந்தச் சீர்கலி யன்றோ ஸீரகமுந் திகழுந்
தீதறு பாஞ்ச சன்னிய வளையின் றிருவிலச் சினை யிலகப்
பேதைய ராருங் காணுத லின்றிப் பெட்புட னருள் புரியப்
பூதர மானும் பொற்புய வாழ்வார் பூரண வெனவா ராய். 38

சைவ மொழிந்தே பாகவ தர்கொள் சம்பிர தாய மெலாங்
கைவர வீரா றுமெழின் மண்ணங் கங்களி னன்கொ ளிர
மைவளர் மேனி மாயவ னுளாய் மன்னிய வனேவோ ரும்
வைவடி வேலார் சூழ்தர மற்றும் வாணிபன் மனை புக்கார். 39

பாகடு சொல்லாண் மண்ணிய மணியிற் பளபளெ னத்திக ழுஞ்
சேகுறு பொன்னின் மேனியி னுழ்வார் செவ்விய றிந்து மகிழ்ந்
தாகவி வாகமென் றருளது கூர வத்திரு வைப் பயந்த
மாகன கம்பொன் மாளிகை யெல்லா மாகநி றைந்தவ னும்.

சோதிட நூலோ ரோதுமொ ரோரை சூழ்ந்துற வோர்பல ரும்
போதர மோதுந் தூரிய வோதை பூமுழு தும்ப ரவ
மாதர சின்கை மங்கையர் கோன்றன் கைம்மல ரிற் பற்ற
வாதரம் விஞ்சி நீரொடு கன்னித் தானம ளித்தன னே,

ஆரண நூலி னூற்றி விவாக மன்னந டைத்திரு வோ
ரேணை தந்தவ் வுத்தமி யுள்ள மோகையு றத்தி னமு
நாரண னூர்தா னூடிவ ணங்கு மாயிரம் பாக வதர்க்
காரண வோடு நால்வகை யுண்டி யாயவி ருந் திழையா, 42

அன்றலர் செய்ய வம்புய நோகா தின்னற வம்ப ருகுந்
துன்றளி யென்னத் தோகையி னின்பத் தூநற வம் பருகி
நன்றுற வைம்பால் வேள்வியு மில்வாழ் வென்றுந டந்திட வே
கன்றென வாளைச் சிந்தைக ளித்துக் காவல்பு ரிந்தன ரே. 43

பாகவ தாரா தனமதி ழைக்கப் பண்படை தம்பொரு ளும்
போகவு நேரி யற்குத வும்பொற் கப்பமும் போய பயன்
வாகையின் மங்கை வள்ளலி ழைக்கும் வண்மைய றிந்தித யம்
வேசவு மூளா வெஞ்சின மாங்கே வெம்பியி யம்பு மரோ. 44

மங்கையின் மன்ன னங்கரு ணைக்குண் மன்னியு முய்ந் திடுவ
திங்கும றந்தே யெத்திறை யீயா தேதுமிலா துலர்கட்
கங்குதி னஞ்சோ றிட்டிறு மாந்தே யுள்ளன னூகையி னீர்
நங்கட னங்க ளிந்நொடி யேகிக் கொண்டிவ ணண்ணு மினே. 45

ஏகுமி னின்னே யென்றுசொ லத்திண் ணேவலர் சென்று சிலர்
வாகைமி டைந்த வண்பர காலன் வார்கழ லைப்ப ணியா
நாகிள வண்டுண் ணுண்மலர் மாலை நண்ணிபு யன்பணி யின்
வேகமு ரைத்தவ் வேந்தன ளித்த சாசன மீந்தன ரால். 46

கண்டவ ரந்தக் காலைய ரங்க னன்பர்க ளின் புறவே
யுண்டநி மித்த மொண்பொரு ளெல்லாம் விண்டொரு பொன்னு மிலா
தெண்டிரு வுள்ளத் தோடுறை தந்தா ராசையி னென்று மிலா
மண்டிய வெங்க தத்தெரி யிற்கண் மன்னுசி வப்புற வே. 47

வேம்புலி யன்ன தம்மரு குள்ள வீரரை நோக்கு முனம்
வெம்பியெ ழுந்தவ் வீரரெ ருத்தில வன்கர மிட்டு நையத்
தம்பெருங் கோயில் வாயில் கடக்கத் தள்ளுபு மீள வவர்
கம்பமு றக்கை காறடு மாற வோடியொ ளித் தனரே. 48

போயவர் பொன்னிச் சோழன வைக்கண் புக்குட லங்கு லையா
வாயெழ லின்றி நாகுழ றப்போய் வந்தகொ டுந்துய ரே
யாயவ னைத்து மஞ்சலி யத்த ராயுரை செய்ய வவன்
சேயம லர்க்கண் சேந்து சினந்த செய்திமி முற்றுவ தே, 49

138958

எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும் இங்கிலீஷ் டாக்டர்களும் பிறரும் கொண்டாடும்

# சார்ங்கதர ஸம்ஹிதை

ஆயுர்வேத சாஸ்திரத்தின் ஸகல ஸாராம்சங்களும் அடங்கிய மிகப் பிராசீன வைத்தியக் கிரந்தம்.

வைத்தியரத்னம்

**பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,**

ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்யர் அவர்களால்

ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

சீர்திருத்திய மூன்றாம் பதிப்பு

## மூன்று கண்டங்களும் 32 அத்தியாயங்களும் அடங்கியது.

### வைத்திய பரிபாஷை முதலியவைகள்.

1. பூர்வகண்டத்தில்:—(1) வைத்திய பரிபாஷைகள், (2) ஔஷதி முதலியவற்றின் விவரணம், (3) நாடீ பரீக்ஷாதிகள், (4) தீபந-பாசநாதி குண விவரணம், (5) சரீரதத்துவாதிகள், (6) உணவு உட்செல்லும் வகை முதலியது, (7) ரோகவிவரணம் என்னும் ஏழு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

### ஔஷத முறைகள்.

2. மத்திம கண்டத்தில்:—(1) ஸ்வரஸ முறைகள், (2) க்வாத-கஷாய முறைகள், (3) பாண்ட கஷாயமுறைகள், (4) ஹிமகஷாய முறைகள், (5) கல்கமுறைகள், (6) சூர்ணமுறைகள், (7) குளிகை-மாத்திரை முறைகள், (8) லேஹ்ய முறைகள், (9) ஸ்நேஹ-தைல-கிருத-முறைகள், (10) ஸந்தாந ஆஸவாரிஷ்ட-முறைகள், (11) தாது-லோஹ-பாஷாணாதி-சுத்தி பஸ்மாதி முறைகள், (12) இரஸங்கள்-இரஸ-கந்தகாதி முறைகள் என்னும் பன்னிரண்டு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

### சிகித்ஸா கிரமங்கள்.

3. உத்தரகண்டத்தில்:—(1) ஸ்நேஹபாநவிதி, (2) ஸ்வேதவிதி, (3) வமநவிதி, (4) விரேசநவிதி, (5) வஸ்திவிதி, (6) நிரூஹவஸ்திவிதி, (7) உத்தரவஸ்திவிதி, (8) நஸ்யவிதி, (9) தூமபாநவிதி, (10) கண்டூஷாதி விதி, (11) லேபநாதி விதி, (12) இரக்த மோக்ஷணவிதி, (13) நேத்திர சிகித்ஸை ஆகப் பதின்மூன்று அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

### வேறு விவரம்.

எளிய வசனநடை, விஷயங்கள் ஒழுங்காகவும் தலையங்கங்களோடும் அமைக்கப்பட்டிருக்கின்றன. விரிவான உரை. விசேஷ அநுபந்தங்கள். ஸகல விஷயங்களுக்கும் விஸ்தாரமான விஷய அகராதிகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| உயர்ந்த காலிகோ பைண்டு | ரூ. | 5 | 4 | 0 |
| இரண்டாந்தர பைண்டு | ரூ. | 4 | 4 | 0 |

**வைத்திய கலாநிதி ஆபீஸ்,**

11, ஆதியப்ப முதலித் தெரு, வேப்பேரி, மதராஸ்.

# ஓர் ஆச்சர்யமான ஸம்வாதம்

கேளுங்கள்: பாருங்கள்: வாருங்கள்: வாங்குங்கள்:

சாஸ்திரி:—விச்வாசமுள்ளோர்க்கன்றோ சாஸ்திரமே ப்ரமாண மென்கிறார் கீதாசார்யன். "**तस्माच्छास्त्रं प्रमाणं ते**" என்று கேட்டதில்லையா ?

க்ருஹிணீ:—ஆனால் என்ன ?

சாஸ்திரி:—ஆசார்ய வாக்படி கூறுவதை கேளம்மா. நீங்கள் சும்மா விருப்பது சரியல்ல.

**"सूर्यादिग्रहनिग्रहापहरणं दीर्घायुरारोग्यदम्
सौभाग्योदयभाग्यवश्यविभवोत्साहप्रदं धैर्यकृत् ।
दुश्छायाचलधूलिसङ्गतिभवालक्ष्मीहरं सर्वदा
वज्राणां परिधारणं निगदितं भूतादिनिर्नाशकम् ॥**



க்ருஹிணீ:—நீர் சொல்வது எனக்குப் புலப்படவில்லையே.

சாஸ்திரி:—கதிரவன் முதலான கிரகங்களின் சாபங்களைத் தடுக்கும், நீண்டாயுளையும் சரீர சுகத்தையுமளிக்கும், ஸௌமங்கல்ய நிலைமையைத் தந்திடும், ஸகல பாக்யங்களையும், வசியத்தையும், விபவங்களையும், உத்ஸாஹத்தையும் விளைவிக்கும், கெட்ட நிழல் பர்வத தூசி இதுகளின் சேர்க்கையினால் உண்டாகும் பிணியை நீக்கும், பூதம் முதலான பேய் பிசாசுகளை நிர்மூலமாக்கும்—



க்ருஹிணீ:—எது அய்யா இவைகளை யெல்லாம் செய்யும்? சீக்கிரம் சொல்லித் தொலையுமய்யா! என்னமோ பாட்டுப் பாடுகிறீரே ?

சாஸ்திரி:—அவஸரப்படாதே அம்மா, வைரமணிகளை '**परिधारण**' நிரம்ப தரிப்பதேயாம்.

க்ருஹிணீ:—அட! அட! என்ன ஆச்சர்யம்! திரும்பவும் அப்பாட்டைப் பாடும். வெகு அழகா யிருக்கின்றதே, நிதானமாய்ப் பாடும். அவைகள் எங்கே கிடைக்கும்.

சாஸ்திரி:—(திரும்பவும் பாடுகிறார்)-வெகு அழகாயும் மிக்க ஸரஸமாயும் ஒரே ரேட் (விலை) உள்ளதாயும் வைரங்கள் கிடைக்குமிடம்—

க்ருஹிணீ:—உம்—

சாஸ்திரி:—ஸூரஜ்மல் லல்லுபாய் அண்டு கம்பெனி,
313, எஸ்பளநேட், மதராஸ்.

**SURAJMAL'S**
**The Jewellers**
**313 ESPLANADE, MADRAS.**

Printed by Kabeer Printing Works, Triplicane, and Published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras